# பொருளாதாரம்

ஜி. சிதம்பரம்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—128

# பொருளாதாரம்

(புகுமுக வகுப்புக்குரியது)

ஆசிரியர்
ஜி. சிதம்பரம், எம்.ஏ., எம்.லிட்.,
விரிவுரையாளர்,
பொருளாதாரத் துறை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—July, 1966

B.T.P. No. 128

© Bureau of Tamil Publications

**Economics**

G. Chidambaram

Price Rs. 3-50

Printed by
The Ideal Printers,
Madras-6

# அணிந்துரை

( திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர் )

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், ‘தமிழிலேயே கற்பிப்போம்’ என முன்வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றுன ‘**பொருளாதாரம்**’ என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் **128**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **163** நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

**எம். பக்தவத்ஸலம்**

# முன்னுரை

சென்னைப் பல்கலைக்கழகம் வகுத்துள்ள புகுமுக வகுப்புப் பாடத் திட்டத்தினையொட்டி இந் நூலை எழுதியுள்ளேன். பாடத் திட்ட வரம்புக்கு உள்ளடக்கி எழுத முனையும்போது ஓட்டமும் சுவையும் தடைபெறுவதைத் தவிர்க்க முடிவதில்லை. பயில் வதற்குக் கடினமான ஓர் இயல் பொருளாதாரம். மேலும் பொருளாதாரம் அறிவியலின் வகையைச் சேர்வதால் விளக்கத்தில் துல்லியம் மிகவும் அவசியமாகிறது. இயலின் இயற்கையான இவ்வியல்புகளையும் புகுமுக வகுப்பில் நுழையும் மாணவ மாணவி களுடைய அறிவு நிலையையும் கருத்தில் கொண்டு பாடங்களை எளிய முறையில் — ஆனால் நுட்பம் குறையாமல் — இயன்றவரை சுவை கூட்டி வரைந்துகாட்ட முயன்றிருக்கிறேன். நூலின் அளவினைக் கருதி 'பொருளாதார அமைப்புகள்', 'பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்' என்னும் இரு சிறு தலைப்புகளை விடுத்திருக் கிறேன். ஆசிரியப் பெருமக்கள் இதனைக் கவனிக்க வேண்டு கிறேன். ஒன்றிரண்டைத் தவிர இந் நூலில் காணும் கலைச் சொற்கள் அனைத்தும் இதுகாறும் வழக்கில் இருந்துவருபவையே. இந் நூலைக் கண்ணுறும் அன்பர்களும் ஆசிரியர்களும் நூல் மேலும் சிறப்புறுவதற்கு ஏதுவான கருத்துகளை எடுத்தறிவித்தால் நன்றி யுடையவனாக இருப்பேன். இந்நூலை எழுதும் வாய்ப்பினை எனக்கு அளித்த தமிழ் வெளியீட்டுக் கழகத்திற்கு என் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

**ஜி. சிதம்பரம்**

# பொருளடக்கம்

பக்கம்

**1. பொருளாதார இயலின் விளக்கம்** ... 1

முன்னுரை—பொருளாதாரத்தின் இலக்கணம்—பொருளாதாரம் செல்வத்தைப்பற்றிய ஆய்வா?—பொருள்சார் நலத்தை அடிப்படையாகக்கொண்ட விளக்கம்—கிடைப்பருமையை அடிப்படையாகக் கொண்ட விளக்கம்—பொருளாதார இயலுக்கும் பிற சமூக இயல்களுக்கும் உள்ள தொடர்பு—பொருளாதாரம் ஓர் அறிவியலா?—பொருளாதார விதிகள்—பொருளாதார இயலின் முக்கியப் பகுதிகள்.

**2. பொருளாதார இயலில் வழங்கும் கலைச்சொற்கள்** ... 25

பொருள்கள்—செல்வம்—மதிப்பு—விலை—சந்தை.

**3. நுகர்வு** ... 33

விளக்கம்—மனித விருப்பங்களின் இயல்புகள்—விருப்பங்களின் வகைகள்—வாழ்க்கைத் தரம்—எங்கெலின் நுகர்வு விதி.

**4. பயன்பாடு** ... 41

விளக்கம்—குறைந்துசெல் பயன்பாட்டு விதி—விதியின் பயன்கள்.

**5. தேவை** ... 47

விளக்கம்—தேவை விதி—தேவையில் எழும் மாற்றங்கள்—தேவை நெகிழ்ச்சி.

**6. உற்பத்தி** 57

உற்பத்திக் காரணிகள்.

**7. நிலம்** ... 62

நிலத்தின் சில தனித்தன்மைகள்—குறைந்துசெல் விளைவு விதி—உயர்ந்துசெல் விளைவு விதியும் மாரு விளைவு விதியும்.

**8. உழைப்பு** ... 70

உழைப்புத் தேவை—உழைப்பின் அளிப்பு—மால்தசின் கோட்பாடு—உத்தம அளவு மக்கள் தொகைக் கோட்பாடு—உழைப்புத் திறன்—இந்தியாவில் மக்கள்தொகைப் பிரச்சினை.

**9. முதல்** ... 83

விளக்கம் — முதலின் வகைகள் — முதலாக்கம்—சேமிப்பும் முதல் பெருக்கமும்.

**10. தொழில் அமைப்பு** ... 89

தொழில்முயல்வோன் பணிகள்—தொழில் அமைப்பு வகைகள்.

**11. தொழில் பிரச்சினைகள்** ... 98

வேலைப் பகுப்பு—இயந்திரப் பொறிகளைப் பயன் படுத்துவதால் உண்டாகும் நன்மை தீமைகள்—தொழிலின் இடச்செறிவு—உற்பத்தி அளவுகள்—பேரளவு உற்பத்தி—சிற்றளவு உற்பத்தி.

**12. மதிப்பு** ... 116

மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகள்—சந்தை—போட்டி—போட்டியின் வகைகள்—நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயம்—சர்வாதீனத்தில் விலை நிர்ணயம்.

**18. பணம்** ... 130

விளக்கம்—பண்டமாற்று முறை — பணத்தின் தோற்றமும் வளர்ச்சியும்—பணத்தின் பணிகள்—பணத்தின் வகைகள்—நல்ல பணத்தின் இயல்புகள்.

**14. பணத்தின் மதிப்பு** ... 143

குறியீட்டு எண்கள்—ஃபிஷருடைய பண அளவுக் கோட்பாடு—பணத்துறைச் சிக்கல்கள்—பணவீக்கம்—பணவாட்டம் — இந்தியாவில் பண வீக்கம் — விலை மாற்றத்தின் விளைவுகள்.

**15. பணத் திட்டங்கள்** ... 161

தனி உலோகத்திட்டம்—இரு உலோகத் திட்டம்.

**16. பொன் திட்டம்** ... 166

தோற்றம்—பொன் திட்டத்தின் பணிகள்—பொன் திட்டத்தின் விதிகள் — பொன் திட்ட வகைகள்— பொன் திட்டம் முறிந்ததன் காரணங்கள் — பொன் திட்டத்தின் சிறப்புகள்.

**17. கடன்** 177

கடனுல் எழும் நன்மை தீமைகள் — கடன் கருவிகள்.

**18. பாங்கியல்** ... 181

பாங்கு வகைகள்—பாங்குகளின் பணிகள்—மைய பாங்கு—மைய பாங்கின் பணிகள்—ரிசர்வு பாங்கு.

**19. பன்னுட்டு வாணிபம்** ... 194

உள்நாட்டு வாணிபமும் பன்னுட்டு வாணிபமும்— பன்னுட்டு வாணிபத்தின் முக்கியத்துவம்—ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு.

**20. வாணிபக் கைக்கோள்** ... 206

தடையிலா வாணிபமும் தொழிற் காப்புக் கொள்கையும்—அயல்நாட்டு வாணிப நிலை—அயல் நாட்டுச் செலுத்துநிலை—சமநிலை கேடுற்ற அயல் நாட்டுச் செலுத்துநிலை—இந்தியாவின் அயல்நாட்டு வாணிபப் போக்கு—இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை.

**21. பொது நிதியியல்** ... 219

விளக்கம்—அரசாங்க வருவாய்—இந்திய அரசாங்கத்தின் வருவாய் — அரசாங்கச் செலவு — இந்திய அரசாங்கத்தின் செலவு.

**22. பகிர்வு** ... 226

விளக்கம்—இறுதிநிலை ஆக்கக் கோட்பாடு.

**23. வாரம்** ... 231

விளக்கம்—ரிகார்டோவின் வாரக் கோட்பாடு— கோட்பாட்டின் குறைபாடுகள்.

**24. கூலிகள்** ... 235

பராமரிப்புக் கூலிக் கோட்பாடு—கூலி நிதிக் கோட்பாடு—இறுதிநிலை ஆக்கக் கூலிக் கோட்பாடு—தேவை அளிப்புக் கோட்பாடு.

**25. வட்டி** ... 238

உற்பத்தித் திறன் கோட்பாடு—துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு—கால விருப்பெச்சக் கோட்பாடு—நீர்மை விருப்பக் கோட்பாடு.

**26. இலாபம்** ... 242

இடர் தாங்கு கோட்பாடு — உறுதியின்மை தாங்கு கோட்பாடு—இலாபத்தின் வாரக் கோட்பாடு —இலாபத்தின் கூலிக் கோட்பாடு.

**27. பொருளாதாரத் திட்டம் வகுத்தல்** ... 246

விளக்கம்—இந்தியாவில் திட்ட முயற்சி—முதல் திட்டம்—இரண்டாம் திட்டம்—மூன்றும் திட்டம்.

# 1. பொருளாதார இயலின் விளக்கம்

**முன்னுரை**

பன்னெடுங் காலமாகவே மனிதன் பொருளாதாரத்தைப் பற்றி அறிந்திருக்கிறுன். அறிஞர்கள் பலர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே மனிதனது பொருளாதார நடவடிக்கை களைப்பற்றிச் சிந்தித்து அவற்றின் தத்துவங்களை எழுதிப் போயினர். தமிழ் நாட்டில் தெய்வப் புலவன் வள்ளுவன் தனது முப்பாலில் பொருட்பால் என்ற ஒரு பாலைப் பொருளாதார வாழ்க்கை பற்றி விளக்க ஒதுக்கியுள்ளான். கிரேக்க நாட்டு அறிஞர்களான பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் 'நகர அரசில்' (City-state) மனிதனுடைய பொருளாதார வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றி எழுதியிருக்கின்றனர். பொருளாதார இயல் இவ்வளவு முற்காலத்திலேயே தோன்றிய ஓர் இயலாக இருப் பினும் முறையான வளர்ச்சி பெருமல் நின்றுவிட்டது. அரசிய லோடும், தத்துவத்தோடும், வரலாற்ருேடும் ஒன்ருக இணைந்து அவற்றின் ஒரு பகுதியாகவே நெடுங்காலமாக இருந்துவந்தது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் பொருளாதாரம் தனியானதோர் இயலாக மிளிர்ந்தது. இவ் விருநூறு ஆண்டு களில் பொருளாதாரம் என்னும் இவ் வியல் மகத்தான வளர்ச்சி பெற்று இன்று ஏனைய அறிவியல்களோடு சேர்த்து எண்ணப்பெறும் தகுதியைப் பெற்றுள்ளது.

பொருளாதாரம் என்று குறிப்பிட்ட உடனே பலவகையான வினுக்கள் மனத்தில் எழுகின்றன. செல்வந்தராக ஆவது எப்படி என்று பொருளாதாரம் போதிக்கிறதா? அல்லது சிக்கனமாக வாழும் வழியை வகுத்துத் தருகிறதா? பொருளாதாரத்தின் விளக்கம் என்ன? பொருளாதாரம் எதைப்பற்றிக் கூறுகிறது? இவை போன்ற வினுக்கள் எழுவது இயற்கை. இத்தகைய அடிப்படையான வினுக்களுக்கு நூலின் முடிவில்தான் ஓரளவுக்குத் தெளிவான விடையைப் பெற முடியும். இருந்தாலும், பொருளா

தாரம் எத்துறைகளில் ஈடுபாடு கொண்டிருக்கிறது என்பதை நூலின் தொடக்க கட்டத்திலேயே சுட்டிக் காட்டவேண்டியது அவசியமாகிறது.

பொருளாதாரத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'Economics' 'ஐகோனேமியா' (Oikonomia) என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. ஐகோனேமியா என்னும் சொல், குடும்ப நிர்வாகம் என்று பொருள்படும். ஆனல், ஐகோனேமியா என்னும் சொல்லைக் கிரேக்கர்கள் குடும்ப நிர்வாகத்தை மட்டும் குறிப்பிடும் குறுகிய பொருளில் உபயோகிக்கவில்லை. நாட்டு நிர்வாகத்தையும் அதனுள் அடக்கி அதனை ஒரு பரந்த பொருளில் உபயோகித்தனர். இதன் காரணமாகத்தான் பொருளாதாரம் நெடுங்காலமாக 'அரசியல் பொருளாதாரம்' (Political Economy) என்னும் பெயரில் அழைக்கப்பெற்றுவந்தது. அண்மைக்காலத்தில் தான் பொருளாதாரத்தை அரசியலிலிருந்து வேறுபடுத்தித் தனியானதோர் இயலாக அமைத்தனர்.

அன்றாட வாழ்க்கையில் மனிதன் எத்தனையோ பண்டங்களை வேண்டுகிருன். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இவை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இவ் வடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பெற்றால் அவனுடைய மனநிலை நிறைவு பெறுவதில்லை. மற்றும் பல புதிய பண்டங்களை வேண்டு கிருன். பசியால் நலியும் ஒருவனுக்குப் புசிக்க ஏதாகிலும் கிடைத்தால் போதும். பழையசோறு கிடைத்துப் பசியாறினல் புதிய சோறு, சூடான சோறு, சுவையான சோறு, பலவகையான சோறு, வலுவூட்டும் சோறு என்று விருப்பங்கள் பெருகிக் கொண்டே போகின்றன. காற்று மழையால் அவதியுறும் ஒருவ னுக்கு இருப்பதற்கு என்று ஒரு குடில் கிடைத்தால் போதும். ஆனல், ஒரு குடில் அமைத்ததும் அக் குடிலைப் பெருக்க, அழகு படுத்த, சுகவாழ்வுக்குத் துணையாக இருக்கும் பல சாதனங்களை அதில் பொருத்த அவன் விரும்புவான். இதைப்போன்றதுதான் உடையும் பிற பண்டங்களும். மனிதன் அன்றாட வாழ்க்கையில் விரும்பும் பண்டங்களில் பல வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களாக இருக்கலாம். மற்றும் பல போகப் பொருள் களாக (luxuries) இருக்கலாம். இவ்வாறு மனிதனுக்குப் பண்டங் களின்மீது இருக்கும் நாட்டத்தைத்தான் 'விருப்பம்' (want) என்று பொருளாதாரத்தில் குறிப்பிடுகிறோம். விருப்பங்களுக்கு எல்லையே கிடையாது. ஒன்று நிறைவேறினல் மற்றொன்று முளைக்கும். மனிதன் நாகரிக வளர்ச்சி யடையாமல் காட்டு மிராண்டியாகத் திரிந்த காலத்தில் அவனுக்கு இருந்த

விருப்பங்கள் மிகக்குறைவு. அவற்றை விரல்விட்டு எண்ணி விடலாம். நாகரிகப் படிக்கட்டில் அடிவைத்து, உந்தி, மேலே உயர உயர அவனுடைய விருப்பங்களும் பெருகிக்கொண்டே போகின்றன. எனவே, விருப்பங்களில் இருக்கும் வளர்ச்சி நாகரிக வளர்ச்சியின் அறிகுறி என்று கூறலாம். மேற்கூறிய எல்லையில்லாத விருப்பங்கள்தான் பொருளாதார நடவடிக்கைக்கு அடிப்படைக் காரணம். மனிதன் உணவை விரும்புகிருன்; உணவு உற்பத்தி யாகிறது. பண்டங்கள் பலவற்றை விரும்புகிருன்; பண்டங்கள் உற்பத்தியாகின்றன. எனவே, விருப்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளை இயக்கிவைக்கும் சக்தி என்று குறிப்பிடலாம்.

மனித விருப்பங்களுக்கு வரம்பே இல்லை. ஆனுல், மனிதன் வேண்டும் பண்டங்கள் அனைத்தும் கிடைக்குமா? கிடைப்பதில்லை. விரும்பினுல் மட்டும் பண்டங்கள் கிடைத்துவிடாது. அல்லது மந்திரத்தால் பண்டங்களைத் தருவிக்க முடியாது. இந்த நிலையை மேயர்ஸ் (Dr. Meyers) என்னும் ஆசிரியர் 'தேய்த்தால் வேண்டிய பொருள்களைத் தருவித்துக் கொடுக்கக்கூடிய அலாவுத்தீன் அற்புத விளக்கு ஒன்று நம்மில் ஒவ்வொருவரிடமும் இருந்தால் பொருளா தாரப் பிரச்சினையே தலைதூக்காது. ஆனுல், துரதிர்ஷ்டவசமாக அலாவுத்தீன் விளக்கை நாம் அரேபியக் கதைகளில்தான் காண முடிகிறது' என்று அழகாக விளக்குகிருர். மனிதன் விரும்பும் பண்டங்களை உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. அப் பண் டங்களை உற்பத்தி செய்வதற்குப் பல சாதனங்கள் (resources) தேவைப்படுகின்றன. நிலம் வேண்டும், மூலதனம் வேண்டும், உழைப்பு வேண்டும். இவை அனைத்தையும் ஒன்ருக இணைத்துத் தான் பண்டங்களை உற்பத்தி செய்யமுடியும். ஒரு நாட்டில் இச் சாதனங்கள் வேண்டிய அளவுக்குக் கிடைப்பதில்லை. எனவே, பல்வேறு வகையான பண்டங்களை வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்ய முடிவதில்லை. விருப்பங்களுக்கு எல்லை இல்லை. ஆனுல், விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான சாதனங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் கிடைக்கின்றன. எனவே, பிரச்சினை எழுகிறது. இப் பிரச்சினை ஒரு பொருளாதாரப் பிரச்சினை ஆகிறது. நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ருல் அதன் கூடவே கார் உற்பத்தியையும் பெருக்க முடியாது. ஒன்று வேண்டுமானுல் மற்றொன்றை விட்டுக்கொடுக்கவேண்டும். விருப்பங்களின் எண்ணிக்கை அளவோடு இருந்தால் அல்லது சாதனங்கள் எல்லை யில்லாமல் கிடைத்தால் பொருளாதாரப் பிரச்சினை எழவேண்டிய அவசியமேயில்லை. உண்மை நிலை இதற்கு நேர்மாருக இருப்பதால் தான் பொருளாதாரப் பிரச்சினை எழுகிறது. இது ஒரு தனி

நபருக்கும் பொருந்தும். ஒருவரிடம் 10,000 ரூபாய் ரொக்கம் இருக்கிறது. கார் ஒன்று வாங்க விரும்புகிறார். மகன் கல்லூரிப் படிப்புக்குத் தயாராக இருக்கிறான். அவன் ஐந்தாண்டுக் கால மேல் படிப்பை மேற்கொள்ளவேண்டுமானால் தந்தை கார் வாங்க முடியாது. அவர் கார் வாங்கினால் பையன் கல்லூரிப் படிப்பில் ஈடுபட முடியாது.

விருப்பங்களுக்கு வரம்பு இல்லை. சாதனங்களுக்கு வரம்பு இருக்கிறது. எனவே, சாதனங்களைச் சிக்கனப்படுத்தி மிக உயர்ந்த அளவு விருப்பங்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு மனித முயற்சி வேண்டியிருக்கிறது. இம் முயற்சிகளைத்தான் பொருளாதார நடவடிக்கை என்று குறிப்பிடுகிறோம். மனிதனிடம் விருப்பங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. தன்னுடைய முயற்சியின்மூலம் அவ் விருப்பங்களை அவன் ஓரளவுக்குப் பூர்த்தி செய்துகொள்கிறான். எனவே, வரையிலா விருப்பங்கள் (unlimited wants), கிடைப்பருமைச் சாதனங்கள் (scarce resources) இவ் விரு இயல்புகளினால் எழும் மனித முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் பொருளாதார நடவடிக்கைகள் என்று கூறலாம்.

**பொருளாதாரத்தின் இலக்கணம்** (Definition of Economics)

பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன என்று மேலே குறிப்பிட்டோம். எவையெல்லாம் பொருளாதார நடவடிக்கைகள் என்றும் அறியவேண்டும். அஃதாவது, பொருளாதார இயலின் எல்லைக்கோட்டையும், வரம்பையும் வரைந்து காட்டவேண்டும். பொருளாதார அறிஞர்கள் எதைப்பற்றியெல்லாம் கூறுகிறார்களோ அவையெல்லாம் பொருளாதாரம் என்று இலகுவாகக் கூறிவிடலாம். ஆனால், அவ்வாறு கூறுவது மேலும் பல வினாக்கள் எழுவதற்கு இடமளிக்கிறது. எவரையெல்லாம் பொருளாதார அறிஞர்கள் என்றழைப்பது என்று யாரேனும் கேட்டுவிட்டால் அது ஒரு சிக்கலான கேள்வியாகிவிடும். எந்த இயலுக்கும் திட்டவட்டமான வரையறை வகுத்துக் கொடுத்து, அதன் எல்லைகளையும் வரம்பையும் சுட்டிக்காட்டவேண்டியது மிகவும் அவசியம். இவ்வாறு செய்வது அந்த இயலின் வளர்ச்சிக்கும், அவ் வியலின் தன்மையைப் புரிந்துகொள்வதற்கும், அவ் வியலைப் பயன்படுத்துவதற்கும் துணையாக இருக்கும். பொருளாதாரத்தின் இலக்கணம் என்ன ?

பொருளாதாரத்தின் இலக்கணம்பற்றிப் பல்லாண்டுகளாக மாறுபட்ட கருத்துகள் இருந்துவருகின்றன. ஆளுக்கொரு விளக்கம் கூறுவது வழக்கமாக இருந்த காலமுண்டு. ஒவ்வொரு

பொருளாதார வல்லுநரும் அவரவர் நோக்கங்களுக்கும் அறிவாராய்ச்சிக்கும் ஏற்றவாறு வெவ்வேறு விளக்கங்களைக் கூறினர். இந்த நிலை இன்று மாறிவிட்டது என்று கூறுவதற்கில்லை. பொருளாதார இயலுக்குப் பலர் பல விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். அவை அனைத்தையும் இச் சிறு நூலில் விரிவாக ஆராய்ந்தறிவது இயலாத செயல்; அவசியமுமில்லை. அவ் விளக்கங்களில் மூன்று வகை விளக்கங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்பெறுகின்றன. இவற்றை ஆராய்வதன்மூலம் பொருளாதார இயலின் தன்மையைப்பற்றிய தெளிவான ஒரு கருத்தைப் பெறலாம். இம் மூன்று வகை விளக்கங்களும் வெவ்வேறு அடிப்படைகளில் அமைந்திருக்கின்றன. அவையாவன :

(1) செல்வத்தை (wealth) அடிப்படையாகக் கொண்ட விளக்கம்.

(2) மனிதனுடைய பொருள்சார் நலத்தை (material welfare) அடிப்படையாகக் கொண்ட விளக்கம்.

(3) கிடைப்பருமையை (scarcity) அடிப்படையாகக் கொண்ட விளக்கம்.

**பொருளாதாரம் செல்வத்தைப்பற்றிய (Wealth) ஆய்வா ?**

ஆடம் ஸ்மித் என்பவர் அழியாப் புகழ்பெற்ற ஒரு பொருளாதார வல்லுநர். பொருளாதார இயலின் தந்தை எனப் போற்றப் பெறுபவர். 1723—1790-ன் இடைக்காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்தவர். அவர் எழுதிய நூலுக்கு ‘நாடுகளுடைய செல்வத்தின் தன்மையையும் செல்வத்தை ஈட்டும் வழிகளையும்பற்றிய ஓர் ஆய்வு’ (An Enquiry into the Nature and Causes of Wealth of Nations) என்று பெயர். நாட்டினுடைய செல்வம் எதைச் சார்ந்திருக்கிறது, அச் செல்வத்தைப் பெருக்குவதற்குத் துணையாக இருக்கும் வழிதுறைகள் எவை என்று அவர் இந் நூலில் ஆய்வு செய்து விளக்கியிருக்கிறார். ஆடம் ஸ்மித் அவர்களுடைய கருத்துப்படி பொருளாதாரம் செல்வத்தைப் பெருக்குவதையே நோக்கமாகக்கொண்ட ஓர் இயலாகிறது. தன்னலம் மனிதனிடம் இயற்கையாக அமைந்த ஓர் இயல்பு. தன்னல முனைப்பால் அவன் செல்வத்தைத் தேடுகிறான். அவன் ஈட்டும் செல்வம் நாட்டினுடைய செல்வமாகிறது என்று அவர் எழுதினார். ஆடம் ஸ்மித் அவர்களைப் பின்பற்றி அவருக்குப் பின் வந்த ரிகார்டோ (David Ricardo), மில்(J.S.Mill), சீனியர் (N.W.Senior) போன்ற இங்கிலாந்தில் வாழ்ந்த கிளாசிகல்(Classical)பொருளாதார அறிஞர்களும் செல்வத்தையே வலியுறுத்திக் கூறினர். உதாரணமாக, மில் அவர்கள்

'செல்வத்தின் இயல்பு, செல்வப் பெருக்கத்தை நிர்ணயிக்கும் விதிகள், செல்வத்தின் பகிர்வு (distribution of wealth) இவற்றைப் பற்றிதான் அரசியல் பொருளாதாரத்துறையில் (Political Economy) ஈடுபாடு கொண்டுள்ள ஆசிரியர்கள் எடுத்துரைக் கிறார்கள்' என்று கூறினர்.

பொருளாதாரம் செல்வம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டது என்னும் கருத்துக்கு அக் காலத்திலேயே பலத்த எதிர்ப்பு இருந்தது. அக் காலத்தில் வாழ்ந்த ரஸ்கின், கார்லைல், டிக்கன்ஸ் போன்ற இலக்கிய மேதைகள் இக் கருத்தைக் கடுமை யாகக் கண்டித்தனர். உயர்வுமிக்க மனிதப் பண்புகள் இருக்கக் கீழ்த்தரமான தன்னல முனைப்புக்கு உயர்வு கொடுத்து, செல்வத்தை ஈட்டுவதற்கு வழிதுறைகளைப் போதிப்பதற்கு ஓரியல் வேண்டுமா என்று அவர்கள் எழுதினார்கள். பொருளாதாரம் பணத்துக்குப் பூசை செய்யும் ஓர் இயல், அது பண்புள்ள மனிதர்கள் படிப்பதற்கு அருகதையற்றது என்று இடித்துரைத் தார்கள். இதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், தெய்வ நம்பிக் கையும், அறவழி வாழ்வும் நிறைந்திருந்த காலம் அது. அத்தகைய சூழ்நிலையில் பொருள் ஈட்டுவதை மிகைப்படுத்திக் கூறும் ஓர் இயல் மனிதனுடைய நல்ல பண்புகளைக் கேடுறச் செய்யும் என்று அவர்கள் அஞ்சினர்.

இக் குற்றச்சாட்டு ஒருபுறமிருக்க, செல்வத்தை அடிப்படை யாகக் கொண்டது பொருளாதாரம் என்னும் விளக்கத்தில் உள்ள மற்றக் குறைபாடுகளைக் காண்போம். மனித வாழ்க்கை, மனித நலம் (human welfare) எப்படியிருந்தாலும் கவலை இல்லை. செல்வம் ஈட்டுவதே குறிக்கோளாக இருக்கவேண்டுமென்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித நலம்தான் குறிக்கோள். அதற்குத் துணையாகத்தான் செல்வம் அமைய முடியும். மனித நலத்துக்கு மேலான ஓர் இடத்தைச் செல்வம் பெறவே முடியாது. மேலும், பொருளாதார இயலின் ஒரு பிரிவைத்தான் இவ் விளக்கம் வலியுறுத்துகிறது. பொருளாதாரத்தில் உற்பத்தி (production), நுகர்வு (consumption), பகிர்வு (distribution) என்று பல பிரிவுகள் இருக்கின்றன (இவற்றைப் பின்னர் விரிவாகக் காணலாம்). இவற்றுள் உற்பத்திப் பிரிவுக்குதான் மேற்கண்ட விளக்கம் முக்கியத்துவம் அளிக்கிறது. உற்பத்தியைவிட முக்கியம் வாய்ந்தது நுகர்வு ஆகும். நுகர்வு இல்லாவிட்டால் உற்பத்தியும் இருக்காது. இக் குறைபாடுகள் காரணமாக, செல்வத்தை அடிப் படையாகக் கொண்ட விளக்கம் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

**பொருள்சார் நலத்தை (Material Welfare) அடிப்படையாகக் கொண்ட விளக்கம்**

பண்புள்ளவர்கள் பயில்வதற்கு அருகதையற்றது என்னும் பழிச் சொல்லிலிருந்து பொருளாதாரத்தை மீட்டு, பொருளாதாரம் ஒரு சமூக இயல் என்னும் தகுதியை அதற்குத் தேடிக்கொடுத்த பெருமை ஆல்ஃபிரட் மார்ஷல் (Alfred Marshall) என்பவரைச் சாரும். இவர் (1842—1924) கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் எழுதிய 'பொருளாதாரத் தத்துவங்கள்' (Principles of Economics) என்னும் தலைசிறந்த நூலில் பொருளாதாரத்திற்கு ஒரு புதிய விளக்கம் தந்துள்ளார். அவர் தந்த விளக்கம், 'பொருளாதாரம் அல்லது அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்னும் இயல் சாதாரண மனிதன் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு ஈடுபடுகிறான் என்பதை ஆராய்கிறது; நல்வாழ்வுக்குத் தேவையான பொருள்களை எப்படிப் பெறுவது, எப்படிப் பயன்படுத்துவது என்பவற்றோடு மட்டும் நெருங்கிய தொடர்புகொண்ட தனி நபருடைய நடவடிக்கை, சமூக நடவடிக்கை இரண்டையும்பற்றி அது ஆய்வு செய்கிறது' என்பதாகும். (Political Economy or Economics is a study of mankind in the ordinary business of life; it examines that part of individual and social action which is most closely connected with the attainment and with the use of the material requisite of well being.)

மார்ஷல் அவர்களுடைய கருத்துப்படி பொருளாதாரம் மனிதனுடைய நடவடிக்கைகளில் அக்கறை காட்டுகிறது. மார்ஷல் மனிதன் என்று குறிப்பிட்டுள்ளது ஒரு சாதாரண மனிதனைக் குறிக்கிறது. தன்னல முனைப்புள்ள, பொருள்வயப்பட்ட மனிதனை மட்டும் குறிக்கவில்லை. [இத்தகைய மனிதனைப் பொருள் வய மனிதன் (Economic man) என்று அழைப்பர்.] மனிதனுடைய நல்வாழ்வுக்கு (welfare) உணவு, உடை போன்று எத்தனையோ பொருள்கள் தேவைப்படுகின்றன. நல்வாழ்வைப் பெருக்க வேண்டுமானால் இப் பொருள்களையும் பெருக்கவேண்டும். நல்வாழ்வுக்குத் தேவையான பொருள்களை எப்படிப் பெறுவது, அவற்றை எந்த வழியில் உபயோகித்தால் அவனுடைய நலம் உயரும் என்பவற்றில்தான் மனிதன் அன்றாடம் ஈடுபடுகிறான். இந்த ஈடுபாட்டினைத்தான் பொருளாதாரம் ஆராய்கிறது. சுருங்கக் கூறினால் பொருளாதாரம் மனிதனுடைய பொருள்சார் நலத்தை—பொருளைச் சார்ந்த நலத்தை—ஆய்வு செய்வதில் ஈடுபட்டிருக்கிறது என்று மார்ஷல் கூறினார்.

இதுகாறும் அரசியல் பொருளாதாரம் என்ற பெயரில் அரசியலின் ஒரு பிரிவாக இருந்துவந்த இந்த இயலைத் தனியாகப் பிரித்துப் பொருளாதாரத்தை ஒரு சமூக இயலாக ஆக்கித் தந்தார் மார்ஷல். மார்ஷல் தந்த விளக்கம் பழைய விளக்கத்தைவிட எவ்வளவோ சிறந்தது என்பதை எளிதில் அறியலாம். செல்வத்தின் முக்கியத்துவத்தை மார்ஷல் முற்றிலும் புறக்கணித்துவிட்டார் என்று எண்ணிவிட முடியாது. மார்ஷல் கூறுவதெல்லாம், செல்வம் முக்கியம் வாய்ந்த ஒன்று; ஆனல், செல்வம் ஈட்டுவதற்குக் காரணமாக மற்றென்று அமைந்து இருக்கிறது; அது தான் மனித நலம் என்பதாகும். செல்வம், மனித நலம் இவையிரண்டின் தராதர முக்கியத்துவத்தை மார்ஷல் தெளிவாக ஆனல் உறுதியாகப் பின்வருமாறு கூறுகிருர். ‘பொருளாதாரம் ஒருபுறம் செல்வத்தைப்பற்றி ஆய்வு செய்கிறது; அதைவிட முக்கியமாக மற்றொருபுறம் மனிதனுடைய நடவடிக்கைகளுள் ஒரு பகுதியைப் பற்றி ஆய்வு செய்கிறது’. மேலும், பொருளாதாரம் சாதாரண மனிதனுடைய நடவடிக்கைகளை ஆராய்கிறது என்ருலும் சமூகத்தின் ஓர் அங்கமாகச் சமூகத்தை ஒட்டி வாழும் மனிதனுடைய நடவடிக்கைகளில்தான் அது அக்கறை காட்டுகிறது. இதனல் சமூகத்திலிருந்து பிரிந்து தனித்து வாழும் மனிதனுடைய நடவடிக்கைகள் பொருளாதார நடவடிக்கைகள் ஆகா என்று மார்ஷல் வரம்புகட்டிக் காட்டுகிருர்.

பொருளாதார இயலின் முக்கியப் பிரிவுகளாகிய உற்பத்தி, நுகர்வு, பகிர்வு ஆகிய மூன்றுக்கும் மார்ஷல் முக்கியத்துவம் அளித்திருக்கிருர். மனித நலத்துக்கு இன்றியமையாத பொருள்களை எப்படிப் பெறுவது, அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்னும் நடவடிக்கைகளில் மனிதன் ஈடுபடுகிருன் என்று குறிப்பிடும்போது மார்ஷல் நுகர்வு, பகிர்வு இவ் விரண்டையும் அதனுள் சேர்த்துத்தான் குறிப்பிடுகிருர் என்பதை அறியவேண்டும். எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு விளக்கம் தருவதன் மூலம் பழைய விளக்கத்தில் (செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட விளக்கம்) காணக்கிடந்த குறைபாட்டினை மார்ஷல் நீக்கியிருக்கிருர்.

மனித நலத்துக்கு முதலிடம் அளிக்கப்பெற்றது (மார்ஷல் தந்த) விளக்கத்தின் சிறப்பியலாகும். அவருடைய கருத்துப்படி மக்களிடையே காணும் வறுமையைப் போக்கப் பொருளாதாரம் வழிகாட்டவேண்டும். இதற்கும் ஒருபடி மேலே சென்று, இத்தகைய இன்னல்களைக் களைவதில் பொருளாதாரம் வெற்றிபெருவிட்டால் பொருளாதார இயலால் எந்தவிதப் பயனும் இல்லை

என்று கூறுகிறார். வறுமைக்குப் பொருளாதார இயலுக்குட்படாத பல காரணங்கள் இருக்கலாம். இருந்தாலும், வறுமையைக் களைவதற்குப் பொருளாதார வல்லுநர் தன் பங்கைச் செலுத்தவேண்டும். இங்கிலாந்தில் வாழ்ந்த கானன் (Edwin Cannan), பிகு (A.C. Pigou) போன்ற ஆசிரியர்களும் பொருளாதாரம் மனிதனுடைய பொருள் சார் நலத்தைப்பற்றி ஆய்வு செய்கிறது என்னும் கருத்துக் கொண்டிருந்தனர்.

பொருள்சார் நலத்தை அடிப்படையாகக்கொண்டு மார்ஷல், கானன், பிகு இவர்கள் தந்த விளக்கம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பெற்றது. அந்த விளக்கத்திற்கு நீண்டகாலமாக நல்ல செல்வாக்கும் இருந்தது. ஆனால், 'லயனல் ராபின்ஸ்' (Lionel Robbins) என்னும் பேராசிரியர் மேற்கண்ட விளக்கத்தைக் குறை கூறினார். 'பொருளாதாரத்தின் இயல்பு, உட்கருத்துபற்றிய கட்டுரைகள்' (Essays on the Nature and Significance of Economic Science) என்னும் நூலை அவர் 1931ஆம் ஆண்டில் வெளியிட்டதும் பொருள்சார் நலத்தை அடிப்படையாகக்கொண்ட விளக்கத்திற்கு இருந்த சிறப்பு மங்கத் தொடங்கியது.

பொருள்சார் நல விளக்கம் பொருளாதார இயலின் உண்மையான உட்கருத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்று ராபின்ஸ் குற்றஞ் சாட்டினார். அவர் எடுத்துக்காட்டிய இரண்டு முக்கியக் குறைபாடுகளைமட்டும் ஆராயலாம். நல்வாழ்வைப் பெருக்கும் நடவடிக்கைகளில் பொருளாதாரம் முனைந்திருக்கிறது என்பதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நல்வாழ்வைப் பெருக்காத நடவடிக்கைகள் இருக்கின்றன. அதைவிட நல்வாழ்வுக்குக் கேடு செய்யக் கூடிய நடவடிக்கைகளும் இருக்கின்றன. இவற்றையும் பொருளாதார நடவடிக்கைகளாக வகைப்படுத்தலாம் என்றால் பொருள்சார் நல விளக்கம் குறைபாடுடையது என்றுதான் பொருள். மதுவை உற்பத்தி செய்வதும், நுகர்வதும் மனிதனுடைய நல்வாழ்வைப் பெருக்குவதில்லை. சிகரெட் தயாரிப்பதால் நல்வாழ்வு பெருகுவதில்லை. நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருக்கும் போது கிடைப்பருமையான (scarce) நிலத்தில் ஏன் புகையிலையைப் பயிர் செய்யவேண்டும்? போர் மனித வாழ்வை உயர்த்துவதில்லை. போர்த்தளவாடங்கள் ஏன் பெருமளவில் உற்பத்தியாகின்றன? பொருள்சார் நலவிளக்கத்தின்படி மேற்கூறிய நடவடிக்கைகளைப் பொருளாதார நடவடிக்கைகளாகக் கருத முடியாது. இது தவறான கருத்து என்று கூறுகிறார் ராபின்ஸ்.

மேலும், பொருள்சார் விளக்கத்தின்படி பொருளாதாரம் கண்ணுக்குப் புலனாகும் பொருள்களின் உற்பத்தி, நுகர்வு, பகிர்வு

இவற்றைமட்டும்தான் குறிக்கும். பொருள்கள்மட்டுமல்லாமல் கண்ணுக்குப் புலனுகாத பலவகைப் பணிகளும் (services) இருக்கின்றன. பொருள்சார் விளக்கத்தில் இப் பணிகள் அடங்கவில்லை என்று ராபின்ஸ் குற்றஞ்சாட்டுகிருர். மருத்துவர், பொறியியலாளர், ஆசிரியர் இவர்கள் ஆற்றும் பணிகள் கண்ணுக்குப் புலனுகா. ஆனல், அவையும் பொருளாதார நடவடிக்கைகளைச் சார்ந்தவைதான். எனவே, இவ் விளக்கம் ஒருதலையான விளக்கம். எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் தன்னுள் அடக்கிய விளக்கமாகாது என்று ராபின்ஸ் கருத்துரைத்து, இக் குறைபாடுகள் இல்லாத ஒரு விளக்கத்தைத் தந்துள்ளார்.

**கிடைப்பருமையை (Scarcity) அடிப்படையாகக் கொண்ட விளக்கம்**

ராபின்ஸ் அவர்கள் 'பொருளாதாரத்தின் இயல்பு உட்கருத்து பற்றிய கட்டுரைகள்' என்னும் நூலில் பொருள்சார் நலவிளக்கத்தைத் தெளிவாக ஆராய்ந்த பிறகு பொருளாதார இயலுக்கு ஒரு புதிய விளக்கத்தைக் கொடுத்திருக்கிருர். அவர் கருத்துப்படி, கிடைப்பதற்கு அருமையான பொருள்களைப் பயன்படுத்திக்கொள்வதில் மனிதனுடைய செயல் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை ஆராய்ந்து அறிவிப்பதுதான் பொருளாதார இயலாகும். ராபின்ஸ் தந்த விளக்கம் 'கிடைப்பருமையான, மாற்றுவழிகளில் பயன்படக்கூடிய இயல்புகளைக்கொண்ட சாதனங்களைக் கையாண்டு விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள மனிதன் மேற்கொள்ளும் நடவடிக்கையை ஆராய்வதுதான் பொருளாதார இயல்' என்பதாகும். ('Economics is a science which studies human behaviour as a relationship between ends and scarce means which have alternative uses'.)

இத்தகைய ஒரு முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பதை அறிய சுவையாக இருக்கும். மனித வாழ்க்கையில் நான்கு அடிப்படையான இயல்புகள் இருக்கின்றன: (1) மனித விருப்பங்கள் எண்ணில் அடங்காதவை, எல்லையில்லாதவை; (2) விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாதனங்களோ கிடைப்பருமையானவை, மாற்றுவழிகளில் பயன்படக்கூடியவை; (3) வாழ்நாளோ குறுகியது; (4) விருப்பங்களின் முக்கியத்துவமும் மாறுந்தன்மையுடையது. இதையே ராபின்ஸ் அழுத்தந் திருத்தமாக 'வாழ்நாள் குறுகியது. இயற்கை கஞ்சத்தனமாக இருக்கிறது. நம்முடைய தோழர்களுக்கு எத்தனையோ நோக்கங்கள் இருக்கின்றன' என்று கூறுகிருர்.

ராபின்ஸ் தந்த விளக்கத்தைச் சற்று விரிவாக ஆராயலாம். மனிதனுக்கு இருக்கும் விருப்பங்கள் ஏராளம். இவ் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான சாதனங்கள் மிகக் குறைவு. மனிதனுக்குக் கிடைக்கும் காலமும் குறுகியது. சாதனங்கள் எல்லையில்லாத அளவில் கிடைத்து வாழ்நாட் காலமும் முடிவிலாது இருந்துவிட்டால் மனித இனத்தின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிவிடலாம். பொருளாதாரப் பிரச்சினையும் எழாது. சாதனங்கள் கிடைப்பருமையானவை என்பதோடு அச் சாதனங்களை மாற்றுவழிகளில் (alternative uses) பயன்படுத்தலாம். கல்லூரி மாணவனிடம் கைப் பணம் ஐந்து ரூபாய் இருக்கிறது என்ருல் அதைக்கொண்டு அவன் ஒரு நூல் வாங்கலாம்; தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்கலாம்; திரைப்படத்திற்குப் போய்வரலாம்; அல்லது நெருங்கிய நண்பர்களுடன் சென்று தேநீர் அருந்தி வரலாம். ஒரு நூல் வாங்குவதாக முடிவு செய்தால் மற்ற விருப்பங்களைத் தள்ளிப்போடவேண்டும். ஆகவே, மனிதன் தனக்கு இன்றியமையாத விருப்பங்கள் இவை என்றும், கொஞ்சம் தள்ளிப்போடக்கூடியவை இவை என்றும் பாகுபாடு செய்து அவற்றை வரிசைப்படுத்துகிருன்.

மனிதன் எத்தனையோ பண்டங்களையும் பணிகளையும் வேண்டுகிருன். எல்லாவற்றையும் அவனுல் பெறமுடியாது. எனவே, ஒருசிலவற்றைமட்டும் தேர்ந்து எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அவனுடைய சாதனக் குறைவுதான் இதற்குக் காரணம். குறைந்த அளவுள்ள சாதனங்களும் ஒரே வழியில்தான் பயன்படும் என்பதில்லை. வெவ்வேறு வழிகளில் அச் சாதனங்களைப் பயன்படுத்தலாம். எந்த வழியில் பயன்படுத்திஞல் அதிகப் பயன் கிடைக்கும் என்பதை மனிதன் கண்டறிந்து அவ் வழியில் சாதனத்தைச் செலவு செய்வதற்கு அவன் தேர்வு செய்யவேண்டியிருக்கிறது. கிடைத்துள்ள சாதனத்தைக்கொண்டு மிக உயர்ந்த அளவுப் பயனைப் பெற முயல்வதே மனிதனுடைய இயல்பாகும். ஒரு பொருளிலிருந்து பெறக்கூடிய பயனைவிடப் பிரிதொரு பொருளிலிருந்து கிடைக்கும் பயன் அதிகம் என்று தோன்றிஞல் முன்னதை விட்டுப் பின்னதைத் தேர்ந்தெடுப்பது மனித இயற்கை. மனிதன் தன்னுடைய விருப்பங்களைத் தராதரப்படுத்திப் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதுபோல அவன் தன்னுடைய சாதனப் பயன்பாடுகளையும் தராதரப்படுத்தித் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு தேர்ந்து எடுக்கும் மனித நடவடிக்கையைப்பற்றி ஆய்வு செய்வதுதான் பொருளாதார இயலாகும் என்று ராபின்ஸ் கூறிஞர்.

நாட்டுப் பொருளாதாரத்தை எடுத்துக்கொண்டாலும் இதுவேதான் நியதி. அணைக்கட்டு வேண்டுமா? அல்லது கல்வி வளர்ச்

சிக்காக அதிகத் தொகை செலவழிக்க வேண்டுமா? அரசாங்கத்தின் நிதிச் சாதனம் குறைவாக இருந்தால் இரண்டில் ஒன்றைத் தான் நிறைவேற்ற முடியும். சாதனம் என்பது நிதியை மட்டுமல்லாது மற்றப் பொருளாதாரச் சாதனங்களையும் குறிக்கும். உதாரணமாக, இந்தியாவில் மக்கள்தொகைப் பெருக்கத்தால் உணவுக்கு இருக்கும் தேவை பெருக்கமடைந்திருக்கிறது. ஆனால், உணவை உற்பத்தி செய்யக்கூடிய நில அளவோ குறுகியது. வேண்டிய அளவுக்கு நிலம் இருந்தால் உணவுப் பஞ்சம் தோன்றாது. நிலம் உணவு உற்பத்திக்கு மட்டுந்தான் பயன்படுவதில்லை. உணவுப் பற்றாக்குறை இருப்பதால் மற்ற வழிகளில் நிலம் பயன்படுவதைத் தடுத்து உணவு உற்பத்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

எனவே, எவையெல்லாம் தேர்வுக்கு (choice) உள்ளாகின்றனவோ அவையெல்லாம் பொருளாதார இயலுக்கு உட்பட்டவையாகும். இக் கருத்துக்கு மூன்று ஆதாரங்கள் இருக்கின்றன: (1) எல்லையில்லாத மனித விருப்பங்கள்; (2) கிடைப்பருமையான சாதனங்கள்; (3) சாதனங்கள் மாற்று வழிகளில் பயன்படக்கூடியவையாக இருப்பது. எந்த ஒரு நடவடிக்கையும் இம் மூன்று இயல்புகளைக் கொண்டிருக்குமானால் அது ஒரு பொருளாதார நடவடிக்கையாகிறது. சாதனங்கள் (means) என்று ராபின்ஸ் குறிப்பிட்டுள்ளது காலம், பொருளாதாரச் சாதனங்கள் இவை யிரண்டையும் குறிக்கும்.

### இவ் விளக்கத்தின் சிறப்பியல்புகள்

ராபின்ஸ் தந்த விளக்கம் மற்றெல்லா விளக்கங்களையும்விட மிகச் சிறந்தது என்று கருதப்பெறுகிறது. பொருளாதார இயலுக்கு ராபின்ஸ் ஒரு பரந்த எல்லையை வகுத்துக் கொடுத்திருக்கிறார். செல்வத்தை அடிப்படையாகக்கொண்ட விளக்கம் பொருளாதார இயலின் உண்மையான இயல்பை விளக்கவில்லை என்று கண்டோம். பொருள்சார் நல விளக்கமும் பொருளாதார நடவடிக்கைகளுள் சிலவற்றைமட்டுந்தான் உள்ளடக்கியிருக்கிறது. நலத்தைப் பேணாத நடவடிக்கைகள், கண்ணுக்குப் புலனாகா பணி நடவடிக்கைகள் இவை பொருளாதார இயலுக்குப் புறம்பானவையாகிவிடுகின்றன. ராபின்ஸினுடைய விளக்கத்தில் இக் குறைபாடுகளுக்கு இடமே இல்லை. ராபின்ஸ் கருத்துப்படி சாதனங்களைச் சிக்கனப்படுத்திப் பொருள்களை அல்லது பணிகளைத் தேர்ந்தெடுக்கும் நிலை ஏற்பட்டால் அது பொருளாதாரப் பிரச்சினையாகிவிடுகிறது. ஒரு குறிப்பிட்ட நடவடிக்கை நலம் பயக்குமா

இல்லையா என்னும் பிரச்சினை பொருளாதார இயலுக்குப் புறம்பானது.

மேலும், இவ் விளக்கம் பழைய விளக்கங்களிலிருந்த குறைபாடுகளை நீக்கியிருக்கிறதே ஒழிய அவ் விளக்கங்களின் அடிப்படைக் கருத்துகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. 'செல்வம்', 'பொருள்சார் நலம்' இரண்டும் கிடைப்பருமைப் பொருள்களால் ஆகியவைதான்.

ஓர் அறிவியலுக்கு இருக்கவேண்டிய துல்லியத்தையும், தெளிவையும் இவ் விளக்கத்தில் காணலாம். இத்தகைய சிறப்பியல்புகளைக்கொண்ட ராபின்ஸினுடைய விளக்கத்தைஏற்றுக்கொள்ளாத ஆசிரியர்களும் இருக்கிறார்கள். பொருளாதார இயலின் இலக்கணத்தைப்பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்துகொண்டுதானிருக்கும். கருத்து வேறுபாடு இயலின் வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகும்.

### பொருளாதார இயலுக்கும் பிற சமூக இயல்களுக்கும் உள்ள தொடர்பு

சமூகத்தின் ஓர் அங்கமாக, சமூகத்தோடு ஒட்டி வாழும் மனிதனுடைய நடவடிக்கைகளில் பொருளாதார இயல் ஈடுபாடு கொண்டிருக்கிறது. மனிதனுடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வரலாறு, அரசியல், உளவியல், சமூகவியல் போன்ற பிற இயல்களும் இருக்கின்றன. சமூகத்தோடியைந்த மனிதனுடைய பொருளாதார நோக்கங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கும் சமூக அமைப்பு, அரசியல் முறை, ஒழுக்க நெறிகள், வரலாற்றுச் சூழ்நிலை ஆகிய இவற்றுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இவை அனைத்திலும் ஒன்றன் போக்கு மற்றதை மாற்றியமைக்கும் தன்மையை உடையதாக இருக்கிறது. எனவே, பொருளாதார இயலுக்கும் பிற சமூக இயல்களுக்கும் உள்ள தொடர்பினை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

### பொருளாதாரமும் வரலாறும்

கடந்தகால நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி, இணைத்து, கோவையாகக் கொடுக்கிறது வரலாறு. இதனால் பொருளாதார இயலுக்கும் வரலாற்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகிறது. ஒரு பொருளாதாரக் கோட்பாடு (Economic Theory) திறன் வாய்ந்ததா இல்லையா என்பதை வரலாறுதான் மெய்ப்பிக்க முடியும். புதிதாக உருவாக்கிய ஒரு பொருளாதாரக் கொள்கை பயன் தருமா என்று அறிவதற்கு வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால்

பல உண்மைகள் கிடைக்கும். பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்குவதிலும், மாற்றியமைப்பதிலும் வரலாற்று நிகழ்ச்சிகள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருந்தன என்பதற்கு இந் நூற்றுண்டில் நடந்த இரு உலகப் போர்களும் சான்ருகும். இரண்டாம் உலகப் போர் பொருளாதாரக் கோட்பாடுகள், தத்து வங்கள், கொள்கைகள் இவை அனைத்தையும் முற்றிலும் மாற்றி யமைத்துவிட்டது. இதேபோன்று சில பொருளாதார நிகழ்ச்சி களும் நடவடிக்கைகளும் நாடுகளின் வரலாற்றையே மாற்றி அமைத்திருக்கின்றன. இங்கிலாந்தில் நடந்த 'தொழிற் புரட்சி யையும்' (Industrial Revolution), 1930ஆம் ஆண்டுவாக்கில் உலகெங்கும் நிலவிய 'பொருளாதார மந்தத்தையும்' (Economic Depression) இதற்குச் சான்றுகளாகக் காட்டலாம். எனவே, மனித வரலாறு பொருளாதார வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து வளர் வதால் பொருளாதாரம் நீங்கிய வரலாறு வெறும் வருணனையாகத் தான் இருக்க முடியும்.

**பொருளாதாரமும் சமுதாய இயலும் (Sociology)**

சமுதாயத்தின் இயல்பு, அதன் வளர்ச்சி இவற்றைப்பற்றிய இயல்தான் சமுதாய இயல். மனிதனுடைய எல்லாவித நடவடிக்கைகளையும் சமுதாய இயல் ஆராய்கிறது. அரசியல், சமய, சமூக, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் சமுதாய இயலுக்குட்பட்டதாகும். சமுதாய இயலின் ஒரு பகுதிதான் பொருளாதார இயல். சமுதாய இயலோடு ஒப்பிட்டால் பொருளா தார இயலின் எல்லைக் கோடுகள் குறுகியவை. ஆனுல், இக் குறுகிய எல்லைக் கோடுகளுக்குள் அடங்கிய மனித நடவடிக்கை களைப் பொருளாதார இயல் துருவி ஆராய்ந்து முடிவு காண்கிறது. வைத்தியத் தொழிலை மேற்கொண்ட எல்லோரும் மருத்துவர்கள் தான். ஆனுல் சில மருத்துவர்கள் மருத்துவத்துறையின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் தனித் தேர்ச்சியடைந்து, தனித் திறமை பெற்றவராக (Specialist) தொழில் நடத்துகின்றனர். இருதய நோய்களுக்கு ஒருவர், அறுவை இயலுக்கு ஒருவர், குழந்தை நோய்களுக்கு ஒருவர் என்று தொழில் நடத்துகிருர்கள். சாதாரண நோய்களுக்குச் சாதாரண வைத்தியரிடம்தான் போகிருேம். ஆனுல்,நோய் முற்றி வளர்ந்திருந்தால் அத் துறையில் தனித் தேர்ச்சி பெற்ற மருத்துவரை நாடுகிருேம். தனித் தேர்ச்சி பெற்ற மருத்துவருக்கும் ஒரு சாதாரண மருத்துவருக்கும் இருக்கிற தொடர்பு என்னவோ, ஏறக்குறைய அதே தொடர்புதான் பொருளாதார இயலுக்கும் சமுதாய இயலுக்கும். சமுதாய இயலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பொருளாதாரத் துறை சம்பந்தமான

கருத்தொன்று வேண்டுமென்றால் அவர்கள் பொருளாதார வல்லு நரை நாடவேண்டியிருக்கிறது. சமுதாய அமைப்பு ஒரு பொருளா தார நடவடிக்கையை எவ்வாறு பாதிக்கும் என்று அறியவேண்டு மானால் பொருளாதார வல்லுநர் சமுதாய இயலை நாடவேண்டி யிருக்கிறது.

**பொருளாதாரமும் அரசியலும்**

அரசு, அரசமைப்பு இவற்றோடு ஈடுபாடு கொண்டுள்ள இயல் தான் அரசியல். நெடுங்காலமாகப் பொருளாதாரம் அரசியலின் ஒரு பிரிவாக 'அரசியல் பொருளாதாரம்' என்னும் பெயரில்தான் அழைக்கப்பெற்று வந்தது. இன்று அந்த நிலை மாறி, பொருளாதாரம் ஒரு தனி இயலாக இயங்கிவருகிறது என்றாலும் அரசியல் கருத் துகள், அரசியல் அமைப்புகள் இவற்றோடு பொருளாதார இயல் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. பத்தொன்பதாம் நூற் றுண்டில் தலைசிறந்து விளங்கிய 'தலையிடாக் கொள்கை' (Laissez Faire) அக்காலத்தில் நிலவிய அரசியல் கருத்துகளின் அடிப்படையில் உருவானதுதான். இந் நூற்றுண்டின் தொடக்க காலத்திலிருந்தே அரசியல் கருத்துகள் பெருத்த மாறுதல்களுக்கு உள்ளாயின. நாடுகளும் தலையிடாக் கொள்கையைக் கைவிட்டுத் தொழில், அயல்நாட்டு வாணிபம், விவசாயம் போன்ற பொருளா தாரத் துறைகளில் தலையிட்டு அவற்றைக் கட்டுப்படுத்தவும் தலைப் பட்டிருக்கின்றன. தொழில்களைத் தேசியமயமாக்கவேண்டும் என்னும் எண்ணம் பரவலாக இருப்பதற்கு மாறுபட்டு வரும் அரசியல் கருத்துகள்தான் காரணம்.

பொருளாதார இயலுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்புக்கு இந்தியாவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியாவின் இன்றைய பொருளாதார நிலையை நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு நாட்டின் பொருளாதாரப் போக்கு எந்த அளவுக்கு அதன் அரசியல் அமைப்பைச் சார்ந்திருக்கிறது என்பது தெளிவாகும். இந்தியா அடிமை நிலையில் இருந்த காலத்தில் அந்நிய ஆட்சி இங்கிலாந்தி னுடைய நலத்தைப் பெருக்குவதையே நோக்கமாகக் கொண்ட ஒரு பொருளாதாரக் கொள்கையைக் கையாண்டு வந்தது. இதனால் இந்தியா தொழில் வளர்ச்சியில்லாமல் மூலப் பொருள் களின் ஏற்றுமதியையே நம்பி வாழும் அவலநிலையில் இருந்தது. இன்று நாம் நம் இச்சைக்குகந்த, நம்முடைய நலத்தைப் பெருக்கக் கூடிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்கும் நிலையில் இருக் கிறோம். இதனால் பல புதிய தொழில்கள் (Industries) தோன்றி

யிருக்கின்றன. நாட்டின் பொருளாதார நிலையிலும் நல்ல வளர்ச்சி யிருக்கிறது. ஒரு ஜனநாயக சோஷியலிசத்தை அமைப்பதை இந்தியா அரசியல் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. அரசாங் கத்தின் பொருளாதாரக் கொள்கையும், நடவடிக்கைகளும், ஈடுபாடுகளும் அக் குறிக்கோள் நிறைவேறுவதற்கான வழிகளில் மாற்றியமைக்கப்பெற்று வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவும், ருஷ்யாவும் அரசியல் துறையில் முரண்பாடான கருத்துகளைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று தான் இவ் விரு நாடுகளின் பொருளாதார அமைப்புகளும், கொள்கைகளும், செயல்முறைகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. முதலாளித்துவத்தை (Capitalism) ஒழித்துக் கட்டவேண்டுமென்பது கம்யூனிசத்தின் வெறி. கம்யூனிசம் பரவ ஒட்டாமல் தடுக்கவேண்டுமென்பது முதலாளித்துவத்தின் மூச்சு. அரசியல் காரணத்தால் எழுந்த பூசல் ஒரு பொருளாதாரப் போராக மாறியிருக்கிறது. பொருளாதார நிலையில் பின்தங்கிய நாடுகளுக்கு அமெரிக்கா அளித்துவரும் கடனுதவிகளையும், பி. எல். 480 (P. L. 480) போன்ற சலுகைகளையும் துருவிப் பார்த்தால் ஏழ்மை நிலையில் இருக்கும் நாடுகளில் கம்யூனிசம் பரவவொட் டாமல் தடுக்கவேண்டும் என்கிற அரசியல் நோக்கத்தையே அவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன என்பது தெளி வாகும். இவற்றையெல்லாம் நோக்கும்போது பொருளாதாரம் அரசியலிலிருந்து பிரிக்கப்பெற்றுத் தனி இயலாக இயங்கிவந்தாலும் இன்னும் அது அரசியலின் ஒரு கைப்பாவையாகத்தான் இருந்து வருகிறது என்பதை அறியலாம்.

### பொருளாதார இயலும் நெறியியலும் (Ethics)

மனித வாழ்க்கையில் நன்னெறியைப் புகட்டி மனிதன் எவ்வாறு ஒழுகவேண்டும் என்று கற்பிப்பது நெறியியல். நெறி யியலுக்கும் பொருளாதார இயலுக்கும் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பதில் பொருளாதார வல்லுநர்களிடையே கருத்து வேறுபாடு இருந்துவருகிறது. லயனல் ராபின்ஸ் (Lionel Robbins) அவர்களுடைய கருத்துப்படி ஒரு குறிப்பிட்ட செயல் நன்மை பயக்குமா தீமை பயக்குமா, நெறியானதா இல்லையா என்னும் ஆராய்ச்சி பொருளாதார இயலைச் சார்ந்ததல்ல. இக் கருத்தை மற்ற ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மனிதனுடைய நல் வாழ்வைப் பெருக்குவது குறிக்கோள் என்றால் பொருளாதார இயலை நெறியியலிலிருந்து பிரிக்க முடியாது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஹாட்ரே (R. G. Hawtrey) என்னும் ஆசிரியர் 'பொருளாதார இயல் நெறியியல் இவ் விரண்டுக்குமிடையே இருக்கும் பிணைப்பைப்

பிரிக்கவே முடியாது' என்று கூறுகிறார். மார்ஷல் அவர்கள் இதற்கும் ஒரு கட்டம் மேலே சென்று பொருளாதார இயல் நெறி யியலின் கைப்பாவை என்று அறிவிக்கிறார்.

ஆனால், நடைமுறையில் பொருளாதார இயலுக்கும் நெறியிய லுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. வருவாய் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறான் மனிதன். ஆனால், ஒருவன் எந்த வழியில் வருவாய் ஈட்டுகிறான், நல்வழியில் ஈட்டுகிறானா என்று நாம் பார்ப்பதில்லையா? ஒருவன் தன் வசம் உள்ள பணத்தைப் பாங்கியில் போட்டுவைத்தால் வட்டி கிடைக்கிறது. பாங்கி அவனுக்குக் கடன்பட்டிருக்கிறது. இதனால் அவனைக் கடன்காரன் என்று யாரும் சொல்வதில்லை. ஆனால், அவன் அதே பணத்தை ஏழை உழவன் ஒருவனுக்கு நூற்றுக்கு நூறு வட்டி விகிதத்தில் கடனாகக் கொடுத்து, உழவன் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் இருக்கும்போது அவனை வருத்தி அவனுடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தால், சமுதாயம் ஏன் அவனைக் கடன்காரன் என்று தூற்றுகிறது?

நம் நாட்டில் மதுவிலக்குச் சட்டம் நிறைவேறியதும் பல மாநில அரசாங்கங்களுக்கும் வருவாய் குறைந்துவிட்டது. நல் வாழ்வைப் பெருக்கவேண்டும். ஆகவே, வருவாய் குறைந்தாலும் கவலையில்லை, மதுவை ஒழிக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் முனையவில்லையா? இவையெல்லாம் பொருளாதார இயலுக்கும் நெறியியலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைத் தான் காட்டுகிறது.

**பொருளாதார இயலும் உளவியலும் (Psychology)**

மனிதனுடைய எண்ணப் போக்கை ஆராய்வது உளவியல். பொருளாதார இயலும் மனிதனுடைய எண்ணப் போக்கு, அவனுடைய மனநிலை இவற்றைச் சார்ந்திருக்கிறது. பொருளா தாரத்தின் அடிப்படை விதிகளான 'தேவை விதி' (Law of Demand), 'அளிப்பு விதி' (Law of Supply) போன்றவை உளவியலின் அடிப்படையில் வரையப்பெற்றவைதாம். ஒருவன் ஒரு பண்டத்தை விலை கொடுத்து வாங்கும்போது அவனுடைய மனம் எத்தனையோ கணக்குகளைப் போடுகிறது. இக் கணக்குகளை மையமாகக்கொண்டு எழுந்ததுதான் 'தேவை விதி'. பொருளா தாரத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மக்களுடைய மனநிலையை நன்றாக அறிந்திருக்கவேண்டும். விதவிதமான, கண்ணைக் கவரும் விளம்பரங்கள் வருகின்றனவே, அவை யாவும் மக்க ளுடைய மனநிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்ட வணிகர்கள் கையாளும் யுக்திகள்தாம்.

**பொருளாதார இயலும் புள்ளியியலும் (Statistics)**

பல துறைகளில் புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் திரட்டி, அவற்றை முறைப்படுத்தி ஆய்வு செய்வது புள்ளியியல் ஆகும். வளர்ந்துவரும் பொருளாதார இயலில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குப் புள்ளியியல் பெருந்துணையாக இருக்கிறது. மக்கள் தொகை, நாட்டு வருமானம், தலா வருமானம், வேலை வாய்ப்புகள், உணவு உற்பத்தி, தொழில் உற்பத்தி போன்ற துறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சியையும் புள்ளியியல் துணை கொண்டுதான் அறிகிறோம். பொருளாதாரத் திட்டத்தை மேற்கொண்டுள்ள நாடுகளில் புள்ளியியலின் உதவி இன்றியமையாத ஒன்றாகும். ஒரு திட்டத்தின் சாதனைகளைப் புள்ளியியல் துணை கொண்டுதான் விளக்குகிறோம். ஒரு குறிப்பிட்ட பொருளாதாரக் கோட்பாடு சரியானதா தவறானதா என்பதை அறியப் புள்ளியியலை ஓர் உரைகல்லாக உபயோகிக்கிறோம்.

**பொருளாதார இயலும் சட்டவியலும் (Jurisprudence)**

மக்களுடைய வாழ்க்கையை ஒழுங்குபெறச் செய்ய சட்டம் தேவைப்படுகிறது. மனிதனுடைய உரிமைகளையும் கடமைகளையும் சட்டம் வரையறுத்துத் திட்டவட்டமாகக் கூறுகிறது. பொருளாதார வாழ்க்கை ஒழுங்குக்குட்பட்டதாக இருக்கச் சட்டங்கள் உதவுகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் சிக்கலடைந்துவருவதால் பற்பல சட்டங்கள் தேவைப்படுகின்றன. பெரும்பான்மையான சட்டங்கள் பொருளாதார அடிப்படையில் இயற்றப்பெற்ற சட்டங்களேயாகும். கூட்டுக் கம்பெனி (Joint-stock company) ஒன்றை எப்படித் தோற்றுவித்து நடத்துவது என்பதைக் கம்பெனிச் சட்டம் (Company Law) வரையிட்டுக் கூறுகிறது. தொழிற்கூடங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய நலத்தைக் காப்பதற்காகத் 'தொழிற்கூடச் சட்டங்கள்' (Factory Laws) இருக்கின்றன. விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்காக விவசாய நிலவுரிமைச் சட்டம் இருக்கிறது.

**பொருளாதாரம் ஓர் அறிவியலா? (Is Economics a Science?)**

பொருளாதாரம் ஓர் அறிவியலா (Science) இல்லையா என்பதை அறிவதற்கு, அறிவியல் என்றால் என்ன, ஓரியல் அறிவியலாக வேண்டுமானால் அதற்கு என்னென்ன இயல்புகள் இருக்க வேண்டும் என்று விளக்கி, பொருளாதாரம் அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுகிறதா இல்லையா என்று காண்பது எளிதாகவும் இலக்கண ரீதியாகவும் இருக்கும். எனவே, முதலில் அறிவியலுக்கு விளக்கம் காணவேண்டும். ஒரு குறிப்பிட்ட துறை சம்பந்த

மான தகவல்களைத் திரட்டிக் கிடைத்த அறிவுத் தொகுதிதான் (Body of knowledge) அறிவியலாகும். ஓர் இயல் அறிவியலாக வேண்டுமானால், அது முக்கியமாக இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். அவையாவன : (1) முதலாவதாக, அவ்வியலுக்குப் பொதுமையான சில விதிகள் (Laws) இருக்கவேண்டும். (2) இரண்டாவதாக, அவ் விதிகள் கூறும் உண்மைகள், சரியானவையா என்று சோதனை செய்து ஒத்துப்பார்க்கக்கூடியவையாக இருக்கவேண்டும்.

பொருளாதாரம் இந் நிபந்தனைகளை நிறைவேற்றக்கூடுமானால் அதுவும் ஓர் அறிவியல் என்று கூறத் தயங்கவேண்டியதில்லை. பொருளாதார இயல் மனித நடவடிக்கைகளுள் ஒரு பகுதியில் ஈடுபட்டு, அந் நடவடிக்கைகள் சம்பந்தமான விவரங்களைத் தேடித் திரட்டி ஒழுங்குபடுத்தி, சில முடிவுகளைக் கண்டிருக்கிறது. இம் முடிவுகளைத்தான் 'பொருளாதார விதிகள்' (Economic Laws) என்றழைக்கிறோம். எனவே, பொருளாதார இயலுக்கும் பல பொதுமையான விதிகள் இருக்கின்றன. 'தேவை விதி', 'அளிப்பு விதி' இவையெல்லாம் பொருளாதார இயலின் அடிப்படையான விதிகள். பொருளாதார விதிகள் கூறும் உண்மைகளைச் சரியானவையா என்று பரிசோதனையும் செய்து பார்க்கமுடியும். உதாரணமாக, ஒரு பண்டத்தின் விலை உயர்ந்தால் அதற்கு இருக்கும் தேவை (demand) குறையும் என்று 'தேவை விதி' கூறுகிறது. சந்தைக்குப் போனால் இவ் விதி கூறும் உண்மை சரியா, தவறு என்று அறிந்துகொள்ளலாம். எனவே, ஓர் அறிவியலுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் அனைத்தையும் பொருளாதார இயல் கொண்டிருக்கிறது. இதனால் பொருளாதார இயலும் ஓர் அறிவியல் என்று உறுதியாகக் கூறலாம்.

**பொருளாதார விதிகள் (Economic Laws)**

ஒவ்வோர் அறிவியலுக்கும் விதிகள் இருக்கின்றன. பொருளாதார இயல் ஓர் அறிவியல் என்றும், அதற்கும் பல விதிகள் இருக்கின்றன என்றும் மேலே கண்டோம். பொருளாதார விதிகளின் இயல்புகள் என்ன?

அறிவியலில் விதி என்பது ஒரு செயலில் காரணத்துக்கும் விளைவுக்கும் தொடர்பு உண்டாக்கிக் கூறுவதாகும். பொருளாதார விதிகளும் இத் தன்மையுடையனவே. குறிப்பிட்ட ஒரு நிலத்தில் உழவன் மேலும்மேலும் ஆட்களை அமர்த்திக்கொண்டேபோனால் அவனுக்குக் கிடைக்கக்கூடிய விளைச்சல் பெருகிக்கொண்டே போகும் என்றாலும், அப் பெருக்கத்தின் வீதம் குறைந்துகொண்டே

போகும் என்று ஒரு பொருளாதார விதி கூறுகிறது. இவ் விதி பற்றிப் பின்னர் விரிவாக ஆராய இருக்கிறோம். இப்போதைக்கு இதை ஓர் எடுத்துக்காட்டாகமட்டும் வைத்துக்கொள்வோம். இவ் விதி உண்மையென்றாலும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்குத்தான் அது பொருந்தும். சூழ்நிலையில் ஏதாவது மாற்றம் இருந்தால் இவ் விதியும் செயற்படாது. இதனால் இவ் விதி மெய்ப்பிக்கப்பட்டு விட்டது என்று பொருளன்று; மற்ற அறிவியல்களுடைய விதிகளில் இருக்கும் துல்லியத்தைப் (exactness) பொருளாதார விதிகளில் காணமுடியாது என்றுதான் பொருள்.

விதிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். (1) பொதுமைகள் (Generalisations). இவ் விதிகள் ஒரு செயலின் காரண காரியத் தொடர்பை அறிவிப்பதால், குறிப்பிட்ட காரணங்கள் இருக்குமானால் விதி கூறும் விளைவுகளும் நிகழ்ந்தேதீரும். (2) போக்குகள் (Tendencies). குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பெற்றால் ஒரு வகையான போக்கை எதிர்பார்க்கலாம் என்று கூறுவது போக்கு விதியாகும். (3) பொதுமைகள், போக்குகள் இவை இரண்டுக்குமிடையில் காணப்படும் பல விதிகள். இவை பொதுமை இயல்பையும் போக்கு இயல்பையும் கொண்டிருக்கும்.

பொருளாதாரத்தில் பொதுமைகளும் உண்டு; போக்குகளும் உண்டு; இரண்டும் கலந்த விதிகளும் உண்டு. பொருளாதார விதிகள் எத்துணையோ அனுமானங்களை (assumptions) அடிப்படையாகக்கொண்டு வரையப்பெற்றிருக்கின்றன. பிற அறிவியல்களில் சூழ்நிலையை எளிதில் கட்டுப்படுத்தலாம். ஆனால், மனிதனுடைய பொருளாதார நடவடிக்கைகளைப் பொறுத்த அளவில், சூழ்நிலையை எளிதாகக் கட்டுப்படுத்த முடிவதில்லை. எனவே, பொருளாதார விதியைக் கூறும்போது, 'சூழ்நிலை மாறாது இருக்குமானால்' என்னும் அடைமொழியையும் சேர்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

மற்ற அறிவியல் துறைகளில் ஈடுபட்டவர்களுக்கு ஆராய்ச்சிக் கூடத்தில் காற்று, அழுத்தம், ஒளிபோன்ற இதர சூழ்நிலைகளைக் கட்டியாள முடிகிறது. ஆனால், மனிதனுடைய இயல்பை, மனப்போக்கைக் கட்டுப்படுத்துவது எளிதான காரியமன்று. எனவே, நன்றாகப் பல காலம் உய்த்துணரப்பெற்ற பொதுமைகள் பொருளாதாரத்தில் ஒருசிலதாம் இருக்கின்றன. மற்ற விதிகள் எல்லாம் 'போக்கு' பற்றிக் குறிப்பிடுபவைதாம். நாட்டில் பணப்புழக்கம்

பெருகினல் பண்டங்களின் விலைமட்டம் உயரும் என்று ஒரு பொருளாதார விதி கூறுகிறது. இவ் விதி எல்லா இடங்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடியதன்று. சூழ்நிலை மாற்றத்தால் இவ் விதிக்கு எதிர்மாறான விளைவுகள் நிகழக்கூடும். எனவே தான், மார்ஷல் அவர்கள், பொருளாதார விதிகள் என்ன நடக்கக் கூடும் என்னும் போக்கை அறிவிப்பதாகுமேயன்றிப் பிற அறிவியல்களில் உள்ள துல்லியத்தைக் கொண்டிருக்காது என்று குறிப்பிட்டார்.

**பொருளாதார இயலின் முக்கியப் பகுதிகள்**

பொருளாதார இயலில் பல பகுதிகள் இருக்கின்றன. பொருளாதார அறிஞர்கள் பொருளாதாரத்தை நுகர்வு (Consumption), உற்பத்தி (Production), மாற்று (Exchange), பகிர்வு (Distribution) என்னும் நான்கு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். இவற்றைச் சற்று விளக்கமாகக் காணலாம்.

(1) **நுகர்வு :** மக்கள் எல்லோரும் துறவிகளாக விருப்பு வெறுப்பு இல்லாமல் இருந்துவிட்டால், பொருளாதாரப் பிரச்சினையே இராது. ஆனல், கோடானு கோடி விருப்பங்களை உள்ளத்தில் நிறைத்துவைத்திருக்கும் மனிதன் தனது விருப்பங்களைத் திருப்தி செய்துகொள்வதற்காக அரும்பாடுபடுகிறான். மனித விருப்பம் திருப்தியடையும் நிலையைத்தான் ‘நுகர்வு’ அல்லது ‘துய்ப்பு’ (consumption) என்றழைக்கிறோம். மனிதனுக்கு இருக்கும் வரையில்லாத விருப்பங்கள்தாம் பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படைக் காரணமாகும். மனித விருப்பங்கள், விருப்பங்களின் தன்மைகள், விருப்பங்களுக்கும் திருப்திக்கும் உள்ள தொடர்பு, இத் தொடர்பினல் விளையும் நிகழ்ச்சிகள் இவைபற்றியும், இவை சார்ந்த சில விதிகளைப்பற்றியும் நுகர்வுப் பகுதி விளக்குகிறது.

(2) **உற்பத்தி :** மனித விருப்பங்கள் நிறைவேற வேண்டுமென்றால், பண்டங்கள் உற்பத்தியாகவேண்டும். பண்டங்கள் ஏன் உற்பத்தியாகின்றன, எவ்வாறு உற்பத்தியாகின்றன, உற்பத்திக்குத் தேவையான சாதனங்கள் அல்லது காரணிகள் (factors of production) யாவை, அக் காரணிகளின் இயல்புகள் என்ன என்பவற்றை உற்பத்திப் பகுதி விளக்குகிறது. உற்பத்தித் துறையில் காணக்கிடக்கும் விதிகளையும் இப் பகுதியில் காணலாம்.

(3) **மாற்று :** மனிதன் தான் விரும்பும் பண்டங்கள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்துகொள்ளும் நிலையில் இன்று இல்லை. நுகர்வோர் ஒரு சாரார். நுகர்வோர் அனைவரும் எழுப்பும்

தேவையினுல்தான் (Demand) பண்டங்கள் உற்பத்தியாகின்றன. உற்பத்தியாளர்கள் பிறிதொரு சாரார். உற்பத்தியாளர்கள், நுகர்வோர் இவ் விரு சாராரிடையே பண்டங்கள் மாற்றிக்கொள்ளப் பெறுகின்றன. உற்பத்தியாளர்கள் தம்முடைய பண்டங்களைச் சந்தைக்கு அனுப்புகின்றனர். பண்டம் வேண்டுவோர் சந்தைக்குச் சென்று பண்டங்களைப் பெறுகின்றனர். பண்டங்களையும் பணிகளையும், வாங்குவதையும் விற்பனை செய்வதையும் நாம் மாற்று என்றழைக்கிறோம். பண்டத்தின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகிறது என்பதை ‘மாற்று’ என்னும் பகுதி விளக்குகிறது.

(4) **பகிர்வு**: பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு உற்பத்திக் காரணிகளின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. எனவே, நிலம், மூலதனம், உழைப்பு, தொழில் முயல்வோன் போன்ற காரணிகளுக்கு ஊதியம் கொடுக்கவேண்டியிருக்கிறது. எந்த அடிப்படையில் இக் காரணிகளின் ஊதியம் நிர்ணயிக்கப்பெறுகின்றது என்பதைப் பகிர்வுப் பகுதி விளக்குகிறது.

இவ்வாறு பொருளாதார இயலை நான்கு பகுதிகளாகப் பிரிப்பது, இயலைப் பயில்வோருக்குத் துணையாகவும் எளிதாகவும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். உண்மையில் இவை நான்கும் நெருங்கிய தொடர்புடையன; ஒன்றோடொன்று இணைந்து இயங்கும் தன்மையுடையன. உதாரணமாக, நுகர்வுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. எனவே, உற்பத்தி இல்லாவிட்டால் நுகர்வு இருக்க முடியாது; நுகர்வு இல்லாவிட்டால் உற்பத்தி பயனற்றதாகிவிடும். உற்பத்தியான பண்டங்கள் சந்தைக்கு வந்தால்தான் அவை நுகர்வுக்குப் பயன்பட முடியும்; அதேபோன்று உற்பத்திக் காரணிகளும் ஒன்றுபட்டு முனைந்தால்தான் உற்பத்தி நடக்க முடியும். ஆக, பகிர்வும் உற்பத்தியும் தொடர்புடையனவாகின்றன. எனவே, நான்கு பிரிவுகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை என்பதையும், அவை அனைத்தும் ஒரே நேரத்தில் நடப்பவை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இவற்றோடு ‘பொது நிதியியல்’ (Public Finance), ‘பாங்கியல்’ (Banking) என்னும் பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் வருவாய், செலவு, கடன் இவற்றை ஆராய்ந்து அறிவிப்பது ‘பொது நிதியியல்’; பாங்குகள் ஆற்றும் பணிகள், பாங்கு தொழில் வளர்ச்சி, பாங்கு நடவடிக்கைகள், பாங்கு கொள்கை இவற்றை விளக்குவது ‘பாங்கியல்’ ஆகும்.

பொருளாதார இயலை இவ்வாறு பல பிரிவுகளாகப் பிரிப்பது தவறு என்று பல ஆசிரியர்கள் கருதுகின்றனர். பொருளாதார இயல் ஒரே கட்டுக்கோப்புடையதென்றும், அதைப் பல பகுதி களாகப் பிரிப்பதால் தன்னுடைய தொடர்புத் தன்மையை இழக்க நேரிடுகிறது என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

## பொருளாதார இயலைப் பயில்வதன் பயன்கள்

'பொருளாதாரம் இன்று அறிவாற்றல் படைத்த ஒரு சமயம் (Intellectual religion)' என்று குறிப்பிட்டார் டர்பின் என்னும் ஆசிரியர். வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், பொருளாதார இயல் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை அறியலாம். பல சாம்ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் அச் சாம்ராஜ்யங்களின் பொருளாதார நிலையோடு இணைந்திருந்தன. ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி இருந்தால், அரசியல், சமூகம், கலாசாரம், மொழி, சமயம் போன்ற ஏனைய துறைகளிலும் வளர்ச்சி தானகவே கிடைக்கும். அண்மைக் காலம்வரை இங்கிலாந்துக்கு உலகெங் கிலும் இருந்த செல்வாக்கு அதனுடைய செல்வநிலையினல் கிடைத்ததுதான். அதன் இடத்தை இன்று ஐக்கிய அமெரிக்கா ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வளவு முக்கியம் வாய்ந்த பொரு ளாதார இயலைப் பயில்வதால் பல பயன்கள் கிடைக்கின்றன.

அரசியலுக்கும் பொருளாதார இயலுக்கும் இருக்கும் நெருங்கிய ஈடுபாடு காரணமாக இன்று ஒரு குடிமகனுக்குப் பொருளாதார அறிவு மிகவும் இன்றியமையாததாகிவிட்டது. மக்களாட்சி மிளிர்ந்துவரும் இற்றை நாளில் ஒவ்வொரு குடிமகனும் அந் நாட்டு மன்னன் ஆகிருன். அக் குடிமகன் தனக்களிக்கப்பெற்ற உரிமை களையும் தனக்கிருக்கும் கடமைகளையும் சரியான வழியில் நிறை வேற்றி வரவேண்டுமென்ருல், அவனுக்கு ஓர் அளவுக்குப் பொரு ளாதார அறிவு அவசியமாகிறது. இதன் காரணமாகத்தான் பார்பாரா உட்டன் என்னும் ஆசிரியர் 'உனக்கு ஓரளவுக்குப் பொருளாதார அறிவு இருந்தால் ஒழிய நீ உண்மையான குடிமகனக முடியாது' என்று குறிப்பிட்டார்.

பொருளாதாரத் திட்டங்களை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியைப் பெருக்க விரும்பும் நாடுகளில், வெற்றி கிட்டுமா கிட்டாதா என்பது மக்களுடைய ஒத்துழைப்பைப் பொறுத்துதான் இருக்கிறது. மக்களுக்குப் பொருளாதார அறிவு இருந்தால், திட்டத்தின் பயன்களை உணர்ந்து, திட்டம் செயற்படும் காலத்தில் எழக்கூடிய எதிர்பாராத இன்னல்களையும் பிரச்சினைகளையும் கண்டு மனம் தளராமல், திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தங்க

ளுடைய ஒத்துழைப்பைத் தருவார்கள். ஜனநாயக நாடுகளில் மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாவிட்டால், திட்டம் எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்காது.

மக்களுடைய பிரதிநிதிகளாகிய அரசியல் வாதிகளுக்கும், நாடாள்வோருக்கும் பொருளாதார அறிவு மிகவும் அவசிய மாகிறது. பொருளாதார அறிவு இருந்தால்தான் தொழில், விவசாயம், வணிகம் போன்ற துறைகளுக்கு நாட்டின் பொரு ளாதார நிலைக்கு உகந்த பொருளாதாரக் கொள்கையை அவர் களால் உருவாக்க முடியும்.

வணிகத்துறையிலும் தொழில்துறையிலும் ஈடுபட்டுள்ளவர் களுக்குப் பொருளாதார அறிவு எவ்வளவு இன்றியமையாதது என்று விளக்கிக் கூறவேண்டியதில்லை. சூழ்நிலைக்கு ஏற்றவாறு இவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளையும் உடனுக்குடன் மாற்றிக் கொள்ளவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை எதிர்நோக்கி இவர்கள் செயற்படவேண்டியிருக் கிறது. பொருளாதார அறிவு படைத்த வணிகரும் தொழிலதி பரும் கட்டாயம் மற்றவர்களைவிடத் திறன் வாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

# 2. பொருளாதார இயலில் வழங்கும் கலைச்சொற்கள்

## (Economic Terms)

பொருளாதார இயலில் பயன்படும் பல சொற்கள் சாதாரண வழக்கில் இருக்கும் சொற்களேயாகும். இருந்தாலும், அவற்றை இயலில் பயன்படுத்தும்போது அவை குறிப்பிட்ட பொருள்களைத் தான் கொள்கின்றன. அவ்வாறு நாம் பயன்படுத்தும்போது அச் சொற்களைச் 'சிறப்புச் சொற்கள்' அல்லது 'கலைச்சொற்கள்' என்றழைக்கிறோம். எடுத்துக்காட்டாக, சாதாரண வழக்கில் உற்பத்தி என்னும் சொல் பொருள்களை உற்பத்தி செய்வதைத் தான் குறிக்கிறது. ஆனால், பொருளாதார இயலில் உற்பத்தி என்னும் சொல் பணிகளையும் (services) உள்ளடக்கியதாகும். மருத்துவர், பொறியியலாளர், ஆசிரியர், தொழிலாளர் இவர்கள் ஆற்றும் பணிகளும் உற்பத்தியே. எனவே, பாடத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பெறும் சில பொருளாதாரக் கலைச்சொற்களுக்கு விளக்கம் காணலாம்.

### பொருள்கள் (Goods)

மனித விருப்பங்களை நிறைவுபெறச் செய்யக்கூடியது எதுவாயிருந்தாலும், அதைப் பொருளாதாரத்தில் பொருள் என்றழைக்கிறோம். பொருள்களை 'இலவசப் பொருள்கள்' (Free goods), 'செல்வப் பொருள்கள்' (Economic goods) என்று இருவகையாகப் பிரிக்கலாம். இயற்கை சில பொருள்களை வேண்டிய அளவுக்கு அளித்திருக்கிறது. உதாரணமாக, நீர், வெப்பம், காற்றுபோன்றவை வேண்டிய அளவுக்குக் கிடைக்கின்றன. இவைகளும் மனித விருப்பங்களை நிறைவேற்றக்கூடியவைதாம். ஆனால், மனிதன் இவற்றைச் சந்தையில் பணம் கொடுத்து வாங்கவேண்டியதில்லை. இவ்வாறு இலவசமாகக் கிடைக்கும் பொருள்கள்

'இலவசப் பொருள்கள்' ஆகும். மனிதன் விரும்பும் மற்றப் பொருள்கள் கிடைப்பதற்கரியவாக இருக்கின்றன. அவற்றைப் பெறுவதற்கு மனித முயற்சி அவசியமாகிறது. மனிதத் தேவைகளுக்கு ஏற்ற அளவுக்கு அவை கிடைக்காததால், அவற்றை விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. இத்தகைய பொருள்களுக்குச் 'செல்வப் பொருள்கள்' என்று பெயர்.

இவ்விருவகைப் பொருள்களுக்குமிடையே உள்ள வேறுபாடு நிலையானதொன்று என்று கருத முடியாது. ஒரு காலத்தில் அல்லது ஓர் இடத்தில் இலவசப் பொருளாக இருக்கும் ஒரு பொருள் மற்றொரு காலத்தில் அல்லது இடத்தில் செல்வப் பொருளாக மாறக்கூடும். உதாரணமாக, ஆற்றங்கரையில் வீடு உள்ளவனுக்குத் தண்ணீர் இலவசப் பொருள். வறண்ட பகுதிகளில் வாழ்பவன் தண்ணீரை விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. மக்கள்தொகை குறைவாக இருந்த ஆதிகாலத்தில் காயும், கனியும், கிழங்கும் இலவசப் பொருள்களாக இருந்தன. ஆனால், இன்று அவை யாவும் செல்வப் பொருள்களாக ஆகிவிட்டன. எனவே, இவையெல்லாம் இலவசப் பொருள்கள், ஏனைய பொருள்கள் செல்வப் பொருள்கள் என்று வரையிட்டுக் கூற முடியாது. பொருள்களின் அளிப்பு நிலைதான் (Supply) ஒரு பொருளின் வகையை நிர்ணயிக்கும். எந்தப் பொருளின் அளிப்பு அப் பொருளுக்கு இருக்கும் தேவையைவிட (Demand) மிக அதிகமாக இருக்கிறதோ அது இலவசப் பொருளாகிவிடும். பொருளாதார இயலில் நாம் செல்வப் பொருள்களைப்பற்றித்தான் பயில்கிறோம்.

செல்வப் பொருள்களை மேலும் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (i) நுகர்வுப் பொருள்களும் உற்பத்தித் துணைப் பொருள்களும், (ii) புலனாகும் பொருள்களும் புலனாகாப் பொருள்களும் என்பனவாகும்.

### (i) நுகர்வுப் பொருள்களும் உற்பத்தித் துணைப் பொருள்களும் (Consumer goods and producer goods)

நுகர்வோருடைய விருப்பங்களை நேரிடையாகத் திருப்தி செய்யக்கூடிய பொருள்கள் 'நுகர்வுப் பொருள்கள்' (consumer goods) என்றழைக்கப்பெறுகின்றன. உணவு, உடை போன்ற பொருள்கள் மனித விருப்பங்களை நேரிடையாக நிறைவேற்றி வைப்பதால் அவை நுகர்வுப் பொருள் வகையைச் சேரும். மற்றும், பல பொருள்களால் விருப்பங்களை நேரிடையாகப் பூர்த்தி செய்ய

முடியாது. ஆனால், இப் பொருள்களின் துணைகொண்டு பிற பொருள்களை உற்பத்தி செய்யலாம். உளி, ரம்பம், கோடரி போன்ற கைக்கருவிகள், இயந்திரக் கருவிகள் போன்றவை உற்பத்திக்குத் துணையாக இருப்பதால், 'உற்பத்தித் துணைக் கருவிகள்' அல்லது 'முதற் கருவிப் பொருள்கள்' என்றழைக்கப் பெறுகின்றன.

### (ii) புலனாகும் பொருள்களும் புலனாகாப் பொருள்களும் (Material and non-material goods)

மனிதனுக்குப் புறம்பான, கண்ணுக்குப் புலனாகக்கூடிய உடை, வீடு, நிலம் போன்ற பொருள்கள் புலனாகும் பொருள்களாகும். மனித விருப்பங்களைத் திருப்தி செய்யக்கூடிய, ஆனால், கண்ணுக்குப் புலனாகாத பொருள்கள் புலனாகாப் பொருள்களாகும். மருத்துவர், ஆசிரியர், பொறியியலாளர் போன்றவர்கள் ஆற்றும் பணிகள் புலனாகாப் பொருள்களாகும்.

### செல்வம் (Wealth)

சாதாரண வழக்கில் செல்வம் என்னும் சொல் பணத்தைத் தான் குறிக்கிறது. ஆனால், பொருளாதார இயலில் செல்வத்தின் பொருள் வேறாகும். பொருளாதாரத்தில் மூன்று இயல்புகளைக் கொண்ட பொருள்கள் அனைத்தும் செல்வம் என்றழைக்கப்பெறுகின்றன. ஒரு பொருளுக்கு மனித விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய திறன் இருக்கவேண்டும். இத் திறனைப் பயன்பாடு (utility) என்றழைக்கிறோம். பயன்பாடு இல்லாத பொருளை யாரும் விரும்பப் போவதில்லை. இரண்டாவதாக, அப் பொருள் கிடைப்பருமையாக (scarce) இருக்கவேண்டும். அதாவது, அப் பொருளுக்கு இருக்கும் தேவை அப் பொருளின் அளிப்பைவிட அதிகமாக இருக்க வேண்டும். கிடைப்பருமையினால்தான் பொருள்களுக்கு மதிப்புக் கிடைக்கிறது. மூன்றாவதாக, அப் பொருள் மாற்றுக்குரியதாக—ஒருவர் மற்றொருவருக்கு மாற்றிக் கொடுக்கக்கூடியதாக—இருக்க வேண்டும். மாற்றிக் கொடுக்க முடியாத பொருள்களை யாரும் விலை கொடுத்து வாங்க முன்வரமாட்டார்கள். இம் மூன்று இயல்புகளையும்கொண்ட பொருள்கள் அனைத்தும் செல்வமாகும். பணம், நிலம், தங்கம், கடன்பத்திரம், பங்குப் பத்திரங்கள், வழக்கறிஞர் செய்யும் பணி இவை யாவும் செல்வமாகும்.

செல்வத்திற்கும் வருமானத்திற்கும் உள்ள வேறுபாட்டினை அறிந்துகொள்ளவேண்டும். செல்வத்திலிருந்து பிறப்பது வருமானம். ஒருவனுக்குச் செல்வ உடைமைகள் இருந்து, அவற்றிலிருந்து அவனுக்கு அவ்வப்போது கிடைக்கும் வருவாய் வருமானம்.

வீட்டுக்குரிய ஒருவன் வீட்டை வாடகைக்கு விடும்போது, வீடு அவனுடைய செல்வமாகும்; அவன் பெறும் குடிக்கூலி அவனது வருமானம் ஆகும்.

**செல்வ வகைகள்**

**தனி நபரின் செல்வம் :** தனி மனிதனின் உடைமைகள் அவனுடைய செல்வமாகிறது. அவனுடைய நிலம், வீடு எல்லாம் அவனுடைய செல்வம். ஓர் அறுவை வைத்தியர் தன்னுடைய சிறப்புத் திறன்மூலமாகச் செல்வம் ஈட்டிக் குவிக்கலாம். ஆனால், அவருடைய அறிவுத்திறன் மாற்றுக்குரியதாக இல்லாததால், பொருளாதாரத்தில் அது செல்வமாகாது.

**நாட்டுச் செல்வம் (National Wealth) :** ஒரு நாடு முழுவதற்கும் சொந்தமான செல்வம் நாட்டுச் செல்வமாகிறது. நாட்டுச் செல்வத்தில் பின்வரும் இனங்கள் அடங்கியிருக்கின்றன: (i) நாட்டு மக்கள் எல்லோருடைய தனிப்பட்ட செல்வம். (ii) சமூகத்திற்குப் பொதுவாக உரிய செல்வம். (iii) நாட்டு மக்களின் உழைப்புத் திறன் போன்ற கண்ணுக்குப் புலனாகாதவை. (iv) நாட்டில் உள்ள மலைகள், நதிகள், நிலவளம், கனிச் சுரங்கங்கள். இவை அனைத்தையும் கொண்டதே நாட்டுச் செல்வமாகும்

**சமூகச் செல்வம் (Social Wealth)**

சமுதாயத்துக்கு உடைமையான அனைத்தும் சமூகச் செல்வமாகும். சாலைகளும், இரயில்வேக்களும், பொதுத்துறையில் உள்ள தொழில்களும் சமூகச் செல்வமாகும். ஜனநாயக நாடுகளில் அரசாங்கத்திற்கு உரிமையாக உள்ள அனைத்தும் சமூகச் செல்வமாகிறது. சோஷியலிச அமைப்பு நாடுகளில் தனியார் உடைமை ஏற்றுக்கொள்ளப்பெறுவதில்லை. ஆதலால், எல்லா வகைச் செல்வங்களும் சமுதாய உடைமைகளாக்கப்பெறுகின்றன.

**பிரதிச் செல்வம் (Representative Wealth)**

உண்டியல்கள் (Bills of Exchange), கடன் பத்திரங்கள், பங்குப் பத்திரங்கள் போன்றவை பிரதிச் செல்வமாகக் கருதப்பெறுகின்றன. இவை யாவும் வெறும் காகிதத்தால் ஆனவைதாம். இருந்தாலும், இவற்றை வைத்திருப்பவர்களுக்குச் செல்வத்தின்மீது உரிமை கிடைப்பதால், செல்வமாக—செல்வத்தின் பிரதிநிதிகளாக—கருதப்பெறுகின்றன.

**செல்வமும் வாழ்க்கை நலமும் (Wealth and Welfare)**

செல்வத்தை, செல்வத்திற்காகமட்டும் யாரும் விரும்புவதில்லை; வாழ்க்கை நலனைப் பெருக்கிக்கொள்வதற்குச் செல்வம் துணையாக இருக்கிறது என்ற காரணத்துக்காகத்தான் எல்லோரும் செல்வத்தை நாடுகிறார்கள். மக்களுடைய நல வாழ்வு பெருகுவதற்குச் செல்வம் ஒரு கருவியாக இருப்பதால்தான், பொருளாதார இயல் செல்வத்தினுடைய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது.

அப்படியானால் எல்லாச் செல்வமும் மனித நலத்தைப் பேணிப் பெருக்குகின்றனவா என்றால், இல்லையென்றுதான் கூறவேண்டும். மது ஒரு செல்வப் பொருள்; செல்வத்தின் இலக்கணமெல்லாம் அதற்கு இருக்கிறது. ஆனால், மது அருந்துவதால் மனித நலம் பெருகுகிறது என்று சொல்வதற்கில்லை. ஆக, செல்வத்திற்கும் நலத்திற்கும் சில சந்தர்ப்பங்களில் முரண்பாடு காணப்படலாம்.

இவ்வாறான முரண்பாடு செல்வத்திற்கு நாம் வகுத்துக் கொடுத்த இலக்கணத்தால் வந்ததாகும். பெரும்பான்மையும் செல்வம், நலம் இரண்டும் ஒன்றுசேர்ந்தே இயங்குபவையாகும். செல்வம் நலத்தைப் பெருக்குமா, குறைக்குமா என்பது செல்வம் எவ் வழியில் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துதான் இருக்கிறது. செல்வத்தின் பயன்பாடு சிறப்பாக இருந்தால் மனித வாழ்க்கையும் வளமுள்ளதாக இருக்கும்.

**மதிப்பு (Value)** : மதிப்பு என்னும் சொல் பொருளாதார இயலில் சிறப்பானதொரு பொருளில் வழங்குகிறது. அன்றாட வாழ்க்கையில் இச் சொல் பல்வேறு பொருள்களைக் கொள்கிறது. பொருளாதாரத்தில் 'மதிப்பு' என்பது ஒரு பொருளுக்கு இருக்கும் மாற்று மதிப்பு (exchange value). பண்டங்களை ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளும்போது என்ன விகிதத்தில் ஒரு பண்டம் மற்றப் பண்டங்களுடன் மாற்றிக்கொள்ளப்பெறுகிறதோ, அதுவே அப் பண்டத்தின் மதிப்பாகும். உதாரணமாக, ஒரு பசுவைக் கொடுத்துப் பத்து மூட்டை நெல்லைப் பெறலாமென்றால், பசுவின் மதிப்பு பத்து மூட்டை நெல்லாகும். ஒரு பொருளுக்குப் பயன்பாடு (utility) இருப்பதால்தான் அப் பொருளுக்கு மதிப்பு ஏற்படுகிறது. ஆனால், பயன்பாடு உள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் மதிப்பு இருக்கும் என்று கூறமுடியாது. உதாரணமாக, காற்று பயனுள்ளதுதான்; இருந்தாலும் அது தேவைக்குமேல் கிடைப்பதாலும், அதை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றிக் கொடுக்க முடியாத காரணத்தாலும் அதற்கு மதிப்பு இல்லை. எனவே, செல்வப் பொருளுக்கு இருக்க வேண்டிய மூன்று இயல்புகளையும்—பயன்பாடு, கிடைப்பருமை,

மாற்றுக்குரிய தன்மை—ஒரு பொருள் கொண்டிருந்தால், அப் பொருளுக்குச் சந்தையில் மதிப்பு இருக்கும்.

**விலை** (Price) : ஒரு பொருளின் மதிப்பைப் பணத்தால் அளந்து அறிவிக்கும்போது அது விலையாக மாறுகிறது. பணம் தோன்ருது பண்டமாற்று நடைபெற்றுவந்த காலத்தில், ஒரு பண்டத்தின் மதிப்பை மற்றெல்லாப் பண்டங்களின் கணக்கிலும் குறிப்பிட வேண்டியிருந்தது. பணம் புழக்கத்திற்கு வந்ததற்குப் பிறகு எல்லாப் பண்டங்களின் மதிப்பையும் பணத்தில் குறிப்பிடுகிறேம். இதனுல், பண்டங்களின் தராதர மதிப்பை (relative value) அறிவது எளிதாகிறது. எல்லாப் பொருள்களின் மதிப்பும் ஒரே நேரத்தில் உயரவோ தாழவோ முடியாது. ஆனுல், எல்லாப் பொருள்களின் விலை உயரவும் தாழவும் கூடும். ஒரு மேசையின் விலை 40 ரூபாய் என்றும், ஒரு நாற்காலியின் விலை 20 ரூபாய் என்றும் வைத்துக் கொள்வோம். விலைமட்டம் இரட்டிப்பதாகக் கொண்டால், மேசை விலை 80 ரூபாய், நாற்காலி விலை 40 ரூபாய் ஆக மாறும். ஆனுல், மேசையின் மாற்று மதிப்பு பழைய நிலையான ஒரு மேசை=2 நாற் காலிகள் என்ற மட்டத்தில்தான் இருக்கும். இந்த வேறுபாட்டினைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும்.

விலை நிர்ணயம் பொருளாதார இயலில் ஒரு முக்கியப் பகுதி யாகும். உற்பத்தியாளர்கள், நுகர்வோர் இவ் விருசாராரில் ஒவ்வொரு சாராருக்குள்ளும், இரு சாராருக்குமிடையேயும் நடக்கும் போட்டியின் விளைவால் பண்டங்கள், பணிகள் இவற்றின் விலைகள் நிர்ணயிக்கப்பெறுகின்றன. போட்டியின் (competition) தன்மை பலவகையாக இருப்பதால், விலை நிர்ணயமும் ஒவ்வொரு வகைக்கும் ஏற்ருற்போல மாறுதல்டைகிறது.

**சந்தை** (Market) : சாதாரண வழக்கில் விற்பனையாளர்களும் பண்டங்களை வாங்குவோரும் கூடும் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சந்தை என்று கூறுகிறேம். ஒரு பண்டத்தை விற்று விலையாக்கு வதைத்தான் பொருளாதார இயலில் சந்தை என்று குறிப்பிடு கிறேம். எனவே, பண்டங்களை விற்று விலையாக்குவது சம்பந்தமாக எழும் எல்லா நடவடிக்கைகளும் சந்தை என்னும் சொல்லில் அடங்கும். பொருளாதாரத்தில் ஒவ்வொரு வகைப் பண்டத்திற்கும் ஒரு சந்தை இருக்கிறது. அரிசிச் சந்தை (Rice market), கோதுமைச் சந்தை (Wheat market), பருத்திச் சந்தை (Cotton market), பங்குப் பத்திரச் சந்தை (Share market) என்று எத்தனையோ வகைச் சந்தைகள் இருக்கின்றன.

**சந்தை வகைகள் :** சந்தையின் பரப்பைக்கொண்டும், சந்தையில் நடக்கும் போட்டியின் தன்மையைக்கொண்டும் சந்தைகளைப் பலவகைப்படுத்தலாம். சில பண்டங்களுக்குச் சந்தை குறுகியதாக இருக்கும்; மற்றும் சில பண்டங்களுக்குச் சந்தை பரவலாக இருக்கும். சந்தையின் பரப்புக்கு ஏற்றாற்போல அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**உள்ளூர்ச் சந்தை** (Local Market) : எளிதில் அழுகி அழிந்துபோகக்கூடிய காய்கறி, பால், பழம், மீன், இறைச்சி போன்ற பண்டங்களுக்குப் பெரும்பாலும் சந்தை குறுகியதாகவே இருக்கும். பெரும்பான்மையும் இப் பண்டங்கள் விளையும் இடங்களிலேயே அவை விற்பனையாகின்றன.

**நாட்டுச் சந்தை** (National Market) : சில பண்டங்களுக்குச் சந்தை நாட்டளவில் இருந்தால், அதை நாட்டுச் சந்தை என்றழைக்கலாம். மில் துணிகள், ஒரு சீராக அமைந்த ஒப்பனைப் பண்டங்கள் (toilets), மருந்து வகைகள், முக்கியமான உணவு தானியங்கள் போன்றவைகளுக்கு நாடெங்கிலும் தேவை இருக்கிறது. இதனால் இப் பண்டங்கள் நாட்டுச் சந்தையின் தன்மையைப் பெறுகின்றன.

**பன்னாட்டுச் சந்தை** (International Market) : சில பண்டங்களுக்கு உலகெங்கிலும் தேவை இருக்கிறது. இவற்றை எல்லா நாட்டினரும் வாங்குகிறார்கள்; விற்பனையும் செய்கிறார்கள். பொன், வெள்ளி போன்ற உலோகங்கள், சீராக்கப்பெற்ற (standardised) பருத்தி, கோதுமை போன்ற தானியங்கள், புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களின் பங்குப் பத்திரங்கள் (Shares) — இப் பண்டங்களுக்குச் சந்தை மிகப் பரந்து இருக்கிறது.

மேற்கூறிய சந்தை வகைகள் சந்தையின் பரப்பளவால் எழுந்தவை. சந்தையில் நடக்கும் போட்டிக்கு ஏற்றவாறு சந்தைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**நிறைவுச் சந்தை அல்லது நிறைவுப் போட்டியுள்ள சந்தை** (Perfect Market) : சந்தை முழுவதிலும் ஒரு பண்டத்திற்கு ஒரே விலை நிலவினால், அதை நிறைவுச் சந்தை என்றழைக்கலாம். பண்டத்தைச் சந்தையிலுள்ள எல்லா விற்பனையாளர்களும் 'ஒரே விலையில்தான் விற்பனை செய்வார்கள். அதேபோல வாங்குவோர் எல்லோரும் ஒரே விலையில்தான் அப் பண்டத்தை வாங்குவார்கள். எனவே, ஒரே விலை நிறைவுச் சந்தையின் அடிப்படை இயல்பாகும்.

**நிறைகுறைச் சந்தை அல்லது நிறைகுறைப் போட்டியுள்ள சந்தை** (Imperfect Market) : ஒரே வகையான பண்டத்திற்குச் சந்தையில் ஒன்றுக்கு மேலான விலைகள் நிலவினால், அதை நிறை குறைச்சந்தை என்றழைக்கிறோம். ஒரு பண்டத்தை விற்பனையாளர் களில் சிலர் ஒரு விலையிலும்,மற்றும் சிலர் வேறு விலையிலும் விற்பனை செய்வார்கள். இதேபோன்று வாங்குவோர் கொடுக்கும் விலைகளும் மாறுபட்டிருக்கும்.

**சர்வாதீனம்** (Monopoly) : மேற்கண்ட இருவகைச் சந்தை களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட விற்பனையாளர்கள் இருப்பார்கள். சந்தையில் ஒரே ஒரு விற்பனையாளர் இருந்தால், அந் நிலையைச் சர்வாதீனம் என்றழைக்கலாம்.

போட்டியின் வகைகளைப் பின்னர் விரிவாக ஆராய இருக் கிறோம்.

# 3. நுகர்வு
## (Consumption)

**விளக்கம் :** மனிதன் தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளப் பண்டங்களையும் பணிகளையும் வேண்டுகிருன். பண்டங்களுக்கும் பணிகளுக்கும் விருப்பங்களை நிறைவேற்றும் சக்தி இருக்கிறது. இச் சக்தியைப் 'பயன்பாடு' (utility) என்றழைக்கிருேம். பண்டங்களில் பயன்பாடு இருப்பதால்தான் மனிதன் அப் பண்டங்களை நாடுகிருன். உணவை வேண்டும் ஒருவன் உணவைப் பெற்று உண்கிருன். அதாவது, அவ்வுணவில் இருக்கும் 'பயன்பாட்டை' அவன் உபயோகித்து நிறைவு பெறுகிருன். இந் நிலையைத்தான் 'நுகர்வு' அல்லது 'துய்ப்பு' என்று அழைக்கிருேம். மனித விருப்பங்களை நிறைவேற்றப் பண்டங்களில் உள்ள பயன்பாட்டை உபயோகிப்பதை 'நுகர்வு' என்று விளக்கலாம். பண்டங்களில் மட்டுமின்றிப் பணிகளிலும் பயன்பாடு இருக்கிறது. எனவே, நுகர்வு என்னும் சொல் பொருளாதார இயலில் பண்டங்கள், பணிகள் இரண்டுக்கும் பொருந்தும். ஒருவன் ஒரு பழத்தை உண்ணும்போது, அவன் பழத்தை நுகர்கிருன் என்று சொல்கிருேம். அதேபோல ஒருவன் கட்டணம் கொடுத்து ஒரு நடனக் கச்சேரியை ரசித்தால், அவன் நடனத்தை நுகர்ந்தான் என்றுதான் பொருள்.

நுகர்வு பொருளாதார இயலில் ஒரு முக்கியம் வாய்ந்த பிரிவாகும். பொருளாதார நடவடிக்கைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது விருப்பங்கள் ஆகும். நாட்டில் நுகர்வு அதிக அளவில் இருந்தால்தான் உற்பத்தியும் பெருக்கமடையும். உற்பத்தியை இயக்கிவைத்து உற்பத்தி அளவை நிர்ணயிப்பது நுகர்வு. நுகர்வு இன்றேல் உற்பத்தியும் இருக்க முடியாது. உற்பத்தியேயன்றிப் பண்டங்களின் விலை நிர்ணயம், பகிர்வு போன்ற பிரிவுகளுக்கும் நுகர்வுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

இவ்வளவு முக்கியம் வாய்ந்த நுகர்வுப் பிரிவு வெகு காலமாகக் கவனிப்பாரற்று இருந்தது. ரிகார்டோ, மில் போன்ற கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் உற்பத்திப் பிரிவின்மீது அதிகக் கவனம் செலுத்தி, அப் பிரிவே மிகவும் முக்கியம் வாய்ந்தது என்று வலியுறுத்திவந்தனர். நுகர்வு என்பது தனியார் இச்சைப்படி நடக்கும் ஒரு செயல். எனவே, நுகர்வின் நன்மையையும் போக்கையும் ஆராயப் பொருளாதார ஆசிரியர்கள் முனையவேண்டியதில்லை என்று அவர்கள் கருதினார்கள். மார்ஷல் அவர்களுடைய புகழ் வாய்ந்த 'பொருளாதாரத் தத்துவங்கள்' என்னும் நூல் வெளியானதும்தான் நுகர்வுப் பிரிவு முக்கியத்துவம் பெற்றது.

**மனித விருப்பங்களின் இயல்புகள்** (Characteristics of human wants)

மனித விருப்பங்கள் எண்ணிலடங்காதவை என்பதோடு, அவை பலவகையானவையாக இருக்கின்றன. மனித விருப்பங்கள் ஒரு நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றாற்போலவும், காலத்திற்கு ஏற்றாற்போலவும், மக்களுடைய வயதுக்கு ஏற்றாற்போலவும் மாறுதலடையும் தன்மையுடையனவாயிருக்கின்றன. மனித விருப்பங்களில் எவ்வளவோ வேறுபாடுகள் இருந்தாலுங்கூட, எல்லா மனித விருப்பங்களிலும் சில பொதுவான இயல்புகள் காணப்படுகின்றன. அவற்றை ஆராயலாம்.

(1) மனித விருப்பங்கள் எண்ணிலடங்காதவை. மனித விருப்பங்களுக்கு எல்லையே கிடையாது. வாழ்க்கையில் மனிதன் எத்தனையோ பண்டங்களை விரும்புகிறான். அதற்கு அளவே இல்லை. மனிதனுடைய ஒரு விருப்பம் நிறைவேறினால் மற்றொரு விருப்பம் உடனே முளைக்கும். இது மனித விருப்பத்தின் அடிப்படை இயல்பாகும். பொருளாதார வளர்ச்சியும் மனித விருப்பங்களின் எண்ணிக்கைப் பெருக்கமும் ஒன்றோடொன்று இணைந்து செல்கின்றன.

(2) விருப்பங்கள் எவ்வளவோ இருப்பினும், மனிதனுடைய தனி ஒரு விருப்பம் திருப்திப்படுத்தக்கூடியதாகும். உணவை வேண்டும் ஒருவனுக்குச் சுவையான உணவைக் கொடுத்தால், அவனுடைய விருப்பம் (அப்போதைக்கு மட்டுமாவது) நிறைவேறுகிறது. விருப்பங்களில் காண இருக்கும் இவ்வியல்பும் முக்கியமானதொன்றாகும். இவ்வியல்பை அடிப்படையாகக் கொண்டுதான் 'குறைந்துசெல் பயன்பாட்டு விதி' **(Law of Diminishing Utility)** என்னும் விதி வரையப்பெற்றிருக்கிறது.

(3) விருப்பங்கள் தங்களிடையே ஒன்றோடொன்று போட்டியிடுந் தன்மையுடையனவாகும். ஒரு மாணவனிடம் பத்து ரூபாய் தான் கையிருப்பு இருப்பதாகக் கற்பனை செய்துகொள்வோம். அந்தப் பத்து ரூபாய்த் தொகைக்கு எத்தனை விருப்பங்கள் போட்டியிடுகின்றன. இவ்வாறு போட்டியிடும் விருப்பங்களில் அம் மாணவன் தன்னுடைய மனநிலை, பழக்கவழக்கங்கள் இவற்றிற்கு ஏற்றாற்போலச் சிலவற்றைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கிறது. ஒருவேளை கல்லூரிக்குப் புதிய மாணவராயிருந்தால், ஆசிரியர் குறிப்பிட்ட அழகான நூலை வாங்குவார். கல்லூரி வாழ்க்கையில் உருசி கண்டவராயிருந்தால், திரைப்படத்திற்குப் போகவேண்டும் என்னும் விருப்பம்தான் முதலிடம் பெறும்.

(4) சில விருப்பங்களை ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் ஒன்றாக இணைந்துதான் நிறைவேற்ற முடியும். உதாரணமாக, டென்னிஸ் விளையாட விரும்பினால், டென்னிஸ் மட்டை, பந்துகள், இடம் இவை யாவும் வேண்டியிருக்கின்றன. காப்பி அருந்த விரும்பினால் பால், காப்பித்தூள் அனைத்தும் தேவைப்படுகின்றன.

(5) சில விருப்பங்களை மாற்றுவழிகளின்மூலம் நிறைவேற்றி வைக்கலாம். பசியாக இருக்கும் ஒருவன் உணவை விரும்பினால், சப்பாத்தி, ரொட்டி, அரிசிச் சோறு இவற்றில் எது ஒன்றும் அவனுடைய பசியைப் போக்கக்கூடும்.

(6) விருப்பங்கள் மீண்டும் மீண்டும் தோன்றும் தன்மையுடையன. பசியாக இருக்கும் ஒருவனுக்கு உணவு கொடுத்தால், அவனுடைய பசி அப்போதைக்குத்தான் ஆறும்; சற்று நேரம் கழிந்து அப் பசி மீண்டும் தோன்றும்.

**விருப்பங்களின் வகைகள்**

மனித விருப்பங்களை நிறைவேற்றும் சக்தியுள்ள பொருள்களை (1) இன்றியமையாத பொருள்கள் (Necessaries), (2) வசதிக்குத் துணையான பொருள்கள் (Comforts), (3) போகப்பொருள்கள் (Luxuries) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**இன்றியமையாத பொருள்கள் :** மனிதன் உயிர்வாழச் சில பொருள்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. இத்தகைய பொருள்கள் கிடைக்காவிட்டால் மனிதன் உயிர் பிழைத்திருக்க முடியாது; அல்லது அவனுடைய உடல்நலம் தீங்குறும்; அல்லது அவன் உடல்திறனோடு வாழ முடியாது. இத்தகைய பொருள்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களாகும். இவையன்றி

சமூகத்தில் மதிப்புடன் மனிதன் உலவவேண்டுமானால், மற்றும் சில பொருள்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு தேவைப்படும் பொருள்களும் இன்றியமையாத பொருள்கள் வகையையே சேரும். எனவே, இன்றியமையாத பொருள்கள் அனைத்தையும் மூன்று உட்பிரிவுகளுக்குள் அடக்கலாம். அவையாவன :

(i) **வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள்** (Bare necessaries) : மனிதன் உயிருடன் வாழ்வதற்கு இன்றியமையாத பொருள்கள் இவ் வகையைச் சேரும். இப் பொருள்களின்றி மனிதன் உயிர்பிழைத்திருக்க முடியாது. கொஞ்சமாவது உணவு, மானம் காக்க உடை, காற்று மழையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இடம் இவை வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள்கூட நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மையுடையனவாகும்.

(ii) **உடல்திறனை வளர்க்க இன்றியமையாத பொருள்கள்** : மக்களுடைய உடல் வலிமையைப் பேணி வளர்ப்பதற்குச் சில பொருள்கள் இன்றியமையாதனவாக இருக்கின்றன. இப் பொருள்கள் கிடைத்தால் மக்கள் உடல்திறனேடும், கிடைக்காவிட்டால் உடல்நலம் குன்றியும் இருப்பார்கள். பால், தயிர், முட்டை, மீன்போன்ற ஊட்டமுள்ள பண்டங்கள், கல்வி, பயிற்சி போன்ற பணிகள் இவ் வகையைச் சேரும்.

(iii) **பழக்கத்தால் இன்றியமையாத பொருள்கள்** (Conventional necessaries) : சில பொருள்கள் பழக்கத்தால் இன்றியமையாதனவாகிவிடுகின்றன. இப் பொருள்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவையோ அல்லது மக்களுடைய உடல் திறனைப் பெருக்கக்கூடியவையோ அல்ல. சமூகத்தில் படிந்திருக்கும் பழக்கத்தால் தோன்றியவைதாம் இவை. இவற்றுள் சில மனிதனுடைய உடல் நலத்தைக் குறைக்கக்கூடியவையாகும். புத்தாண்டு, பொங்கல்போன்ற திருநாள்களில் புத்தாடை உடுத்தும் வழக்கம் இவ் வகையைச் சேரும். நகரங்களில் வாழும் மக்களிடம் காணக் கிடக்கும் புகைபிடித்தல், காப்பி அருந்துதல் போன்றவையும் இவ் வகையைச் சேரும்.

**வசதிக்குத் துணையான பொருள்கள்**

வாழ்க்கையை வசதியாக அமைத்துக்கொள்ளச் சில பொருள்கள் தேவைப்படுகின்றன. இப் பொருள்களை வசதிக்குத் துணையான பொருள்கள் என்றழைக்கலாம். வசதிப் பொருள்கள் ஓரளவுக்குத் திறமையை வளர்க்கக்கூடியவையாகும். ஆனால், அப் பொருள்

களுக்கு ஆகும் செலவுக்கு ஏற்றாற்போலத் திறமையும் வளரும் என்று கூறமுடியாது. சுவையான உணவு, பல்வகையான உடைகள், வசதிகள் அமைந்த வீடு இவை யாவும் வசதிப் பொருள்களின் வரிசையைச் சேரும்.

**போகப்பொருள்கள் :** பகட்டான வாழ்க்கை நடத்தவும், தங்களுடைய செல்வ நிலையை வெளிக்காட்டவும் செல்வர்கள் சில பொருள்களை வேண்டுகிறார்கள். இவை யாவும் போகப் பொருள்கள் ஆகும். பகட்டான உடை வகைகள், விலையுயர்ந்த கார்கள் வைத்திருப்பது, அவசியமில்லாமல் பல பணியாட்களை வைத்திருப்பதுபோன்றவை போகப் பொருள்களைச் சார்ந்தன வாகும்.

பொருள்களை மேற்கண்ட மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்றாலும், அத்தகைய பாகுபாடு நிலையானதொன்று என்று கூற முடியாது. ஒருவருக்குப் போகப்பொருளாக இருக்கும் ஒன்று மற்றொருவருக்கு இன்றியமையாத பொருளாக இருக்கக்கூடும். மருத்துவருக்குக் கார் ஓர் இன்றியமையாத பொருள்; ஒரு மாணவ ருக்கு அது போகப்பொருள். தொலைக்காட்சிச் சாதனம் (Television) இந்தியாவில் ஒரு போகப்பொருள்; அமெரிக்காவில் அது எல்லாக் குடும்பங்களிலும் சாதாரணமாக இருக்கும் ஓர் இன்றி யமையாத பொருள். இந்தியாவில்கூடச் சில ஆண்டுகளுக்கு முன்னர் வானொலிப் பெட்டி ஒரு போகப்பொருளாக இருந்தது; நாட்டில் பத்தாண்டுகளாக இருக்கும் பொருளாதார வளர்ச்சியில் அது இன்று வசதிப் பொருளாக மாறியிருக்கிறது. எனவே, இடம், காலம், நபர் இவை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் ஒவ்வொரு பொருளையும் வகைப்படுத்த முடியும்.

### வாழ்க்கைத்தரம் (Standard of living)

வாழ்க்கைத்தரம் என்பது மனிதனுடைய நுகர்வின் அடிப் படையில் எழுவதாகும். ஒருவன் நுகரும் பொருள்களையும் பணிகளையும் வைத்துதான் அவனுடைய வாழ்க்கைத்தரம் எவ்வாறு இருக்கிறது என்று குறிப்பிடுகிறோம். ஒருவனுடைய நுகர்வின் அளவே, அவனுடைய வாழ்க்கைத்தரத்தை நிர்ண யிக்கிறது. இன்றியமையாத பொருள்களைக்கூடப் பெறமுடியாத ஒருவனுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் கீழாக இருக்கிறது. இன்றி யமையாத பொருள்கள், வசதிப் பொருள்கள் இவற்றுடன்கூட ஓரளவுக்குப் போகப்பொருள்களையும் பெற்று அனுபவிக்கக்கூடிய ஒருவனுடைய வாழ்க்கைத்தரம் உயர்வாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறோம்.

தனிப்பட்ட ஒருவனுடைய வாழ்க்கைத்தரத்தை எடுத்துக் கொண்டால், அது பலவற்றைச் சார்ந்திருக்கின்றது. முக்கியமாக ஒருவனுடைய வருவாய்தான் அவனுடைய வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிக்கிறது. வருவாய் அதிகமுள்ள ஒருவன் பல பொருள்களை எளிதில் பெற்று நுகர முடிகிறது. ஏழை ஒருவனுக்கு அவசியமான பொருள்கள்கூடக் கிடைப்பதில்லை. வருவாய்மட்டுந்தான் ஒருவனுடைய வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிக்கிறது என்று கூற முடியாது. ஊதாரித்தனமாக ஒருவன் செலவு செய்தால் அவனுடைய வாழ்க்கைத்தரம் உயர்வாக இருக்கிறது என்றோ அல்லது சிக்கனமாக வாழ்பவனுடைய வாழ்க்கைத்தரம் தாழ்வாக இருக்கிறது என்றோ பொருளில்லை. வாழ்க்கைத்தரம் என்பது, கிடைத்த வருவாயிலிருந்து தன்னுடைய விருப்பங்களை அறிவோடு தேர்ந்தெடுத்துத் திருப்திசெய்துகொள்வதுதான். எனவே, ஒரே வருவாயுள்ள இரு நபர்களுடைய வாழ்க்கைத்தரம் மாறுபட்டிருக்கக்கூடும்.

ஒருவனுடைய வாழ்க்கைத்தரம் அவனுடைய குடும்பத்தின் அளவையும் பொறுத்திருக்கிறது. பெரிய குடும்பத்தைத் தாங்க வேண்டிய ஒருவனுடைய வாழ்க்கைத்தரம் கீழாகத்தான் இருக்கும். அதே வருவாயைக் கொண்ட, ஆனால், குறைந்த நபர்களைக் கொண்ட குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பில் உள்ளவருடைய வாழ்க்கைத்தரம் உயர்வாகத்தான் இருக்கும். ஒருவனுடைய வாழ்க்கைத்தரம் பணத்தின் வாங்கும் சக்தியையும் (purchasing power) பொறுத்திருக்கிறது. விலைமட்டம் உயர்ந்து பணத்தின் மதிப்பு இறங்கிவந்தால், வாழ்க்கைத்தரமும் குறைந்துவரும்.

வாழ்க்கைத்தரம் என்பது நிலையானதன்று. அது நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம், வகுப்பினருக்கு வகுப்பினர் மாறுந் தன்மையுடையது. எல்லா நாடுகளிலும் வாழ்க்கைத்தரம் ஒரே வகையாக இருப்பதில்லை. நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்ற வாறு மக்களின் வாழ்க்கைத்தரமும் மாறுகிறது. அமெரிக்காவில் வாழ்க்கைத்தரம் இந்தியாவில் இருப்பதைவிட எத்தனையோ (ஏறக் குறைய 30 மடங்கு) மடங்கு உயர்வாக இருக்கிறது. ஓர் இந்தியனுடைய தலைக்கான சராசரி ஆண்டு வருமானம் ரூ. 340 ஆகும்; ஓர் அமெரிக்கனுடைய தலைக்கான வருமானம் ரூ. 9,500 ஆகும். இந்தியாவில் தலைக்கான வருமானம் குறைவாக இருப்பதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, நாட்டின் மொத்த வருமானம் குறைவாக இருக்கிறது. இரண்டாவதாக, அவ் வருமானத்தைப் பகிர்ந்துகொள்ளும் மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. எனவே, இந்தியாவில் மக்களின் வாழ்க்

கைத்தரத்தை உயர்த்தவேண்டுமென்ருல், உற்பத்தியைப் பெருக்கி நாட்டு வருமானத்தைப் பெருக்குவதோடு, மக்கள் தொகைப் பெருக்கத்தையும் குறைக்கவேண்டும்.

வாழ்க்கைத்தரம் காலத்திற்குக் காலம் மாறுந் தன்மையுடையது. இந்தியாவிலேயே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இன்று மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதைக் காணலாம். மேலும், வாழ்க்கைத்தரம் ஒவ்வொரு வகுப்பினருக்கும் மாறுபட்டிருக்கும்.

**எங்கெலின் நுகர்வு விதி (Engel's Law of Consumption)**

டாக்டர் எர்னஸ்ட் எங்கெல் **(Dr. Ernest Engel)** என்பவர் பிரஷ்ய நாட்டுப் **(Prussia)** புள்ளிவிவரத் துறையின் தலைவராக இருந்தவர். அவர் 1857ஆம் ஆண்டில் பல வகுப்பினரின் குடும்ப வரவுசெலவுத் திட்டங்கள் **(family budgets)** சம்பந்தமான விவரங்களைச் சேகரித்தார். அவ் விவரங்களை முனைப்பாக ஆராய்ந்து சில முக்கியமான முடிவுகளைக் கண்டறிந்தார். அவர் தந்த முடிவுகள் தாம் 'எங்கெலின் நுகர்வு விதி' அல்லது 'எங்கெலின் குடும்பச் செலவு விதி' என்ற பெயரில் அழைக்கப்பெறுகின்றன. அவர் கண்ட முடிவுகள் பின்வருமாறு :

(1) ஒரு குடும்பத்தின் வருவாய் உயர உயர, அக் குடும்பம் உணவுக்காகச் செலவிடும் பணத்தின் சதவிகிதம் **(percentage)** குறைந்துகொண்டேபோகிறது.

(2) வருவாய் மாறுபட்டிருந்தாலும், எல்லாக் குடும்பங்களும் உடைக்காகச் செலவிடும் பணத்தின் சதவிகிதம் ஏறக்குறைய ஒரே நிலையில் இருக்கிறது.

(3) வருவாய் மாறுபட்டிருந்தாலும், எல்லாக் குடும்பங்களிலும் வீட்டு வாடகை, விறகு, வெளிச்சம் இவைகளுக்காகச் செலவிடப்பெறும் பணத்தின் சதவிகிதம் ஏறக்குறைய ஒரே நிலையில் இருக்கிறது.

(4) ஒரு குடும்பத்தின் வருவாய் உயர உயர, அக் குடும்பம் போகப்பொருள்களின்மீதும், கல்வி, பொழுதுபோக்கு போன்ற கலாசார இனங்களின்மீதும் செலவிடும் பணத்தின் சதவிகிதம் உயர்ந்துகொண்டேபோகிறது.

(5) ஒரு குடும்பத்தின் வருவாய் உயர உயர, அக் குடும்பம் செலவு செய்யும் இனங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும்.

இம் முடிவுகளில் இருக்கும் உண்மையைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து தெளிவாக அறியலாம் :

| பண்டங்களின் விவரம் | 100 ரூபாய் வருவாய் உள்ள குடும்பம் செலவிடும் தொகை | வருவாயில் செலவின் சதவீதம் | 200 ரூபாய் வருவாய் உள்ள குடும்பம் செலவிடும் தொகை | வருவாயில் செலவின் சதவீதம் | 400 ரூபாய் வருவாய் உள்ள குடும்பம் செலவிடும் தொகை | வருவாயில் செலவின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. உணவு | 75 | 75 | 100 | 50 | 160 | 40 |
| 2. உடை | 15 | 15 | 32 | 16 | 64 | 16 |
| 3. வாடகை, விறகு, வெளிச்சம் | 10 | 10 | 20 | 10 | 40 | 10 |
| 4. சில்லறைச் செலவு | — | — | 32 | 16 | 80 | 20 |
| 5. மற்ற இனங்கள் | — | — | 16 | 8 | 56 | 14 |
| — | 100 | — | 200 | — | 400 | — |

எங்கெலின் முடிவுகள் பல நாடுகளிலும் சோதித்து அறியப் பெற்றன. இந்தியாவிலும் பல ஆய்வுகள் நடந்தன. மேஜர் ஜாக் (Major Jack) என்பவர் வங்காளத்திலும், ஃபிண்ட்லே ஷிர்ராஸ் (Findlay Shirras) என்பவர் பம்பாய் மாகாணத்திலும் குடும்ப வரவுசெலவுத் திட்டங்களை ஆராய்ந்து பார்த்தனர். இவர்கள் கண்ட முடிவுகளும் எங்கெல் கண்ட முடிவுகள் சரியானவை என்று உறுதிப்படுத்தின.

# 4. பயன்பாடு
## (Utility)

**விளக்கம்:** மனித விருப்பத்தைத் திருப்தி செய்யக்கூடிய சக்தியைத்தான் பயன்பாடு (utility) என்று பொருளாதார இயலில் அழைக்கிறோம். பொருள்களிலும் பணிகளிலும் பயன்பாடு இருப்பதால்தான் மனிதன் தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பற்பல பொருள்களையும் பணிகளையும் நாடுகிறான். பயன்பாட்டை அளக்க முடியுமா என்பது ஒரு சிக்கலான கேள்வி. பசியாக இருக்கும் ஒருவன் உணவை விரும்புகிறான். பெரிய உணவு விடுதியில் அவன் உண்கிறான். அவனுடைய விருப்பம் திருப்தியடைகிறது. உண்ட உணவிலிருந்து அவன் பெற்ற பயன்பாடு எவ்வளவு? அவன் பெற்ற திருப்தியின் அளவை நாம் அளக்க விரும்புகிறோம். ஆனால், அது அவனுடைய உள்ளத்தில் நிகழுவதால் நம்மால் அதை அளக்க முடியாது. இருந்தாலும், அவன் உணவுக்காகக் கொடுக்கும் விலை அவன் எதிர்பார்க்கும் பயன்பாட்டைக் காட்டுகிறது என்று கூறலாம். அவன் உணவுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால், அவ்வுணவிலிருந்து அவன் பெற்ற பயன்பாடும் இரண்டு ரூபாய் அளவு இருக்கும் என்று வைத்துக் கொள்ளலாம். ஏனெனில், அவனுக்குக் கிடைக்கக்கூடிய பயன்பாடு இரண்டு ரூபாய்க்குக் குறைவாக இருந்தால், அவ்வுணவுக்கு விலையாக அவன் இரண்டு ரூபாய் கொடுக்க முன்வரமாட்டான்.

**மொத்தப் பயன்பாடு** (Total utility): ஒருவன் ஒரே நேரத்தில் மூன்று மாம்பழங்களைச் சாப்பிட்டால், மூன்று மாம்பழங்களையும் சாப்பிடுவதால் அவனுக்குக் கிடைக்கும் பயன்பாடும் மொத்தப் பயன்பாடாகும்.

**இறுதிநிலைப் பயன்பாடு** (Marginal utility): முதல் மாம்பழத்தை அவன் சாப்பிடும்போது அவனுக்குக் கிடைக்கும் பயன்பாடு அதிகமாகவும், இரண்டாவது மாம்பழத்தைச் சாப்பிடும்போது கிடைக்கும்

பயன்பாடு முதல் மாம்பழத்தைவிடக் குறைவாகவும், மூன்றுவது மாம்பழத்திலிருந்து கிடைக்கும் பயன்பாடு இரண்டாவது மாம்பழத்தைவிடக் குறைவாகவும் இருக்கும். ஒரே நேரத்தில் அவன் மூன்று மாம்பழங்களைச் சாப்பிட்டால், மூன்றுவது மாம் பழத்திலிருந்து அவன் பெறும் பயன்பாடுதான் 'இறுதிநிலைப் பயன்பாடு' ஆகும்.

**இறுதிநிலை அலகு** (Marginal unit): ஒரே நேரத்தில் அவன் மூன்று மாம்பழங்களைச் சாப்பிடும்போது மூன்றுவது மாம்பழத்தை இறுதிநிலை அலகு என்று அழைக்கிறேம். எனவே, இறுதிநிலை அலகிலிருந்து கிடைக்கும் பயன்பாடு இறுதிநிலைப் பயன்பாடாகும்.

**குறைந்துசெல் பயன்பாட்டு விதி** (Law of Diminishing Utility): மனித விருப்பங்களின் இயல்புகளை விளக்கும்போது, குறிப் பிட்ட ஒரு விருப்பம் திருப்தி செய்யக்கூடியது என்று விளக்கினேம். மாம்பழம் தின்ன ஒருவனுக்கு விருப்பம் இருந்தால், அவனிடம் மாம்பழத்தைக் கொடுத்தால், அவன் விருப்பம் அப்போதைக்குத் திருப்தியடையும். அவனிடம் ஒன்று, இரண்டு, மூன்று என்று மாம்பழங்களைக் கொடுத்துக்கொண்டே யிருந்தால், அடுத்து அடுத்து வரும் மாம்பழத்திலிருந்து அவன் பெறும் பயன்பாடு படிப்படியாகக் குறைந்துகொண்டே போகும். இவ்வாறு பயன் பாடு குறைந்துவருவதையே 'குறைந்துசெல் பயன்பாட்டு விதி' என்று அழைக்கிறேம். இவ் விதியை மார்ஷல் அவர்கள் பின் வருமாறு விளக்கினுர்: 'ஒருவனிடம் இருக்கும் ஒரு பொருளின் இருப்பு பெருக்கமடையும்போது, அவ்வாறு பெருக்கமடையும் ஒவ்வோர் அலகிலிருந்தும் அவன் பெறும் பயன் குறைந்து கொண்டே போகும்.' (The additional benefit which a person derives from a given increase of a thing diminishes with every increase in the stock that he already has). அன்றட வாழ்க் கையில் காணக்கிடக்கும் அனுபவத்திலிருந்தே இவ் விதி வகுக்கப் பெற்றிருக்கிறது.

மாலை விளையாட்டுக்குப் பிறகு ஒரு மாணவன் களைப்போடு விடுதி திரும்புகிருன் என்று கற்பனை செய்துகொள்வோம். அவன் தாகத்தோடு இருப்பானுகையால், ஏதாவது பானம் அருந்த வேண்டும் என்கிற வேட்கை அவனிடம் மிகவும் முனைப்பாக இருக்கும். ஒரு புட்டி ஃப்ருட்னிக்கை அருந்தினுல், அவனுடைய வேட்கை முனைப்பு (intensity of desire) முன்பிருந்ததைவிடக் குறைந்துவிடும். அவன் தொடர்ச்சியாக மேலும் மேலும் ஃப்ருட்னிக் குடித்துவந்தால், ஒவ்வொரு புட்டியிலிருந்தும் அவன்

பெறும் பயன்பாடு (utility) குறைந்துகொண்டேபோகும். இந்த விதி எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும். இவ் விதியைக் கீழ்க்காணும் பட்டியல் விளக்கிக் காட்டுகிறது :

| அருந்தும் ஃபுருட்னிக் புட்டிகளின் எண்ணிக்கை | மொத்தப் பயன்பாடு (Total utility) | இறுதிநிலைப் பயன்பாடு (Marginal utility) |
|---|---|---|
| 1 | 40 | 40 |
| 2 | 70 | 30 |
| 3 | 90 | 20 |
| 4 | 100 | 10 |

இப் பட்டியல் கற்பனையானது; ஒருவன் அடைகின்ற பயன் பாட்டை அளக்க முடியாது. இருப்பினும், அளக்க முடிந்தால் எவ்வாறு இருக்கும் என்னும் மேற்கோளின் (assumption) பேரில் இப் பட்டியல் அமைந்திருக்கிறது. ஃபுருட்னிக்கை நான்கு புட்டிகளோடு நிறுத்திக்கொண்டோம். பத்துப் புட்டிகளை அவன் அருந்தினால் தெவிட்டல் நிலை வந்து அவனுக்குக் குமட்டல் ஏற்பட்டிருக்கும். விவேகமுள்ள எவனும் சாதாரணமாகக் குமட்டல் ஏற்படும் வரை எதையும் அருந்துவதில்லை.

இப் பட்டியலில் இருவகைப் பயன்பாடுகளைக் காணலாம். மொத்தப் பயன்பாடு என்பது அவன் ஒவ்வொரு புட்டியிலிருந்தும் பெற்ற பயன்பாடு அனைத்தையும் சேர்த்துக் கூட்டியதாகும். மொத்தப் பயன்பாடு உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், உயரும் வீதம் குறைந்துகொண்டே போகிறது. மொத்தப் பயன் பாட்டைவிட இறுதிநிலைப் பயன்பாடுதான் நமக்கு முக்கியமாகும். ஃபுருட்னிக் அருந்தும் ஒருவன் ஒரு நிலை வந்ததும் நிறுத்திக் கொள்கிறான். சிலர் ஒரு புட்டியோடு நிறுத்திக்கொள்ளலாம். சிலருக்கு மூன்று புட்டிகளை அருந்தினால்தான் அந்த நிலையை அடைய முடியும். ஆக, இங்கு ஒவ்வொருவனும் அவனவன் பெறும் திருப்தியின் அளவுக்கு ஒப்ப இறுதிநிலை இருக்கும். அந்த நிலையில் அவன் பெறும் பயன்பாட்டை இறுதிநிலைப் பயன்பாடு என்று அழைக்கிறோம். இவ்விறுதிநிலைப் பயன்பாடு குறைந்துசெல்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம்.

குறைந்துசெல் பயன்பாட்டு விதியை ஒரு வரைபடம் மூலமாகவும் விளக்கலாம்.




படம் - 1

மேற்காணும் வரைபடத்தில் OX என்னும் இடை அச்சில் (horizontal axis) ஃபுருட்னிக் புட்டிகளின் எண்ணிக்கையைக் குறிக்கிறோம். OY என்னும் செங்குத்து அச்சில் (vertical axis) ஒவ்வொரு புட்டியிலிருந்து கிடைக்கும் பயன்பாட்டைக் குறிக்கிறோம். அருந்தும் புட்டிகளின் எண்ணிக்கை கூடக்கூட, ஒவ்வொரு புட்டியிலிருந்து கிடைக்கும் பயன்பாடும் குறைந்துகொண்டே போகிறது. இந்த நிலையை AB என்னும் வளைகோடு விளக்குகிறது. இந்த விதியின் உண்மையை மற்றொரு வகைப் படத்தின்மூலம் எளிதாக அறியலாம். ஒவ்வொரு புட்டியிலிருந்து கிடைக்கும் பயன்பாட்டை நீண்ட சதுர இணைகரங்களாக வரைந்துபார்க்கும் போது இவ் வுண்மையைத் தெளிவாகக் காணலாம்.




படம் - 2

மேற்காணும் படத்தில் உள்ள ஒவ்வொரு நீண்ட சதுரமும் மாணவன் ஒவ்வொரு புட்டி ஃபுருட்னிக்கிலிருந்து பெறும் பயன் பாட்டைக் காட்டுகிறது. தொடர்ந்து ஃபுருட்னிக் அருந்தும்போது ஒவ்வொரு புட்டியிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு படிப்படியாகக் குறைந்துகொண்டேவருகிறது என்பதை இப் படம் தெளிவாகக் காட்டுகிறது.

**சில நிபந்தனைகள் :** ஏனைய பொருளாதார விதிகளைப் போன்று குறைந்துசெல் பயன்பாட்டு விதிக்கும் சில நிபந்தனைகள் இருக்கின்றன. இவை நிறைவேறினால்தான் இவ் விதியும் செயற் படும். அந் நிபந்தனைகளாவன :

(1) நுகர்வு தொடர்ச்சியாக ஒரே நேரத்தில் நடந்தால்தான் இவ் விதி செயல்படும். நடுவில் கால இடைவெளி இருந்தால் இவ் விதி உண்மையாகாது. மாணவன் முதல் புட்டி ஃபுருட்னிக்கை அருந்தி நான்கு மணிநேரம் கழிந்து இரண்டாவது புட்டியையும், மறுநாள் காலை மூன்றாவது புட்டியையும் அருந்தினால், ஒவ்வொரு முறையும் அவன் பெறும் பயன்பாடு குறைந்துசெல்லாது.

(2) நுகரப்படும் பண்டம் ஒரே தன்மையதாகவும், பொருத்த மான ஓர் அளவிலும் இருக்கவேண்டும். ஃபுருட்னிக்கை அருந் தினால் அப் பானத்தையே தொடர்ச்சியாக அருந்தவேண்டும். முதலில் ஃபுருட்னிக்கையும், அடுத்து வேறொரு பானத்தையும் அருந்தினால் இவ் விதி செயற்படாது. மேலும், ஃபுருட்னிக்கையும் பொருத்தமான ஓர் அளவில்—ஒரு புட்டி அளவில்—அருந்த வேண்டும். ஒரு சங்கு அளவில் அருந்தினால் இவ் விதி உண்மை யாகாது.

(3) இவ் விதிக்கு விலக்கானவை சில இருக்கின்றன. சிலருக்குச் சில பண்டங்களின்மீது அடங்காத ஆசை இருக்கும். இப் பண்டங்களை இவர்கள் நுகரும்போது அவர்கள் பெறும் பயன் பாடு குறைந்துசெல்லாது. மது அருந்துகிறவன் குடிக்கக் குடிக்க இனியும் வேண்டும் என்கிறான். அவனுடைய ஆசையைத் தணிக்க முடியாது. இதுபோலவே கர்நாடக சங்கீதத்தில் பற்றுள்ளவர் களுக்கு இசையைக் கேட்கக் கேட்க மேலும் கேட்டு இன்புற வேண்டும் என்று தோன்றுகிறது. இவர்களுக்குச் சங்கீதத்தில் அலுப்பே தட்டுவதில்லை.

(4) தொல்பொருள் (antiques), தபால்தலைகள், பழங்கால நாணயங்கள் இவற்றை ஆவலுடன் சேகரிப்போர் குறைந்துசெல் பயன்பாட்டு விதிக்கு விலக்கானவர்கள் என்ற கருத்து இருக்கிறது.

இது தவறான கருத்தாகும். நேரு தலை போட்ட தபால்தலை ஒன்று அல்லது இரண்டு சேகரித்த பிறகு குறைந்துசெல் பயன்பாட்டு விதி தோன்றிவிடுகிறது. ஆனால், நேரு தலையைச் சேகரித்தபிறகு சாஸ்திரி தலை, வள்ளுவர் தலை என்று மேலும் மேலும் ஆர்வம் அதிகரிக்கிறது. இவை வெவ்வேறு பொருள்களாகும்.

இவ் விதியில் இருக்கும் இரு இயல்புகளை நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். முதலாவதாக, பயன்பாடு குறைந்துசெல்கிறது என்பதால் பண்டத்தின் தன்மை குறைந்து விடுகிறது என்று பொருளன்று. பண்டத்தின் தன்மை மாறாமல்தான் இருக்கிறது. மாறுவது நுகர்வோன் பெறும் பயன்பாடுதான். இரண்டாவதாக, பயன்பாடு எந்த வேகத்தில் குறைந்து செல்கிறது என்று இவ் விதி கூறுவதில்லை. பயன்பாடு குறைந்து செல்லும் வேகம் நுகர்வோனுடைய மனநிலை, பழக்கவழக்கங்கள், பண்டத்தின் தன்மை இவற்றிற்கு ஏற்றாற்போல மாறுந் தன்மையுடையது.

**இவ் விதியின் பயன்கள் :** குறைந்துசெல் பயன்பாட்டு விதி பொருளாதார இயலில் ஓர் அடிப்படையான விதி. இவ் விதியை அடிப்படையாகக்கொண்டு வேறு பல பொருளாதாரக் கோட்பாடுகள் வரையப்பெற்றிருக்கின்றன. தேவை விதி இவ் விதியை அடிப்படையாகக்கொண்டதுதான். தேவைக்கோடு (demand curve) கீழ்நோக்கி வலப்புறமாகச் செல்வதற்குக் குறைந்துசெல் பயன்பாட்டு விதிதான் காரணமாகும். 'நுகர்வோர் எச்சப்பாடு' (Consumer's surplus) என்னும் கோட்பாடும் இவ் விதியின் அடிப்படையில் அமைந்ததுதான். விலை நிர்ணயக் கோட்பாடுகளிலும் இவ் விதி பெரிதும் பயனுடையதாக இருக்கிறது.

பொது நிதியியல் (Public Finance) துறையிலும் இவ் விதி பயனுடையதாக இருக்கிறது. செல்வந்தர்களுக்கு வரிதாங்கு வல்லமை (taxable capacity) அதிகமாக இருக்கிறது. எனவே, நிதிமந்திரி செல்வந்தர்கள்மீது அதிகமாக வரி விதிக்கவேண்டும் என்கிற கருத்து இவ் விதியின் அடிப்படையில் எழுந்ததுதான். பணத்தையும் ஒரு பண்டமாகக் கருதினால், ஒருவனுடைய பண இருப்புப் பெருகப் பெருக, அவன் பணத்திலிருந்து பெறும் இறுதி நிலை எச்சப்பாடும் குறைவாக இருக்கும். ஏழையைவிடப் பணக்காரனுக்குப் பணத்தின் இறுதிநிலை எச்சப்பாடு குறைவாக இருக்கும். எனவே, அதிகமான வரியைத் தாங்குவது அவனுக்கு இலகுவாக இருக்கும்.

# 5. தேவை

## (Demand)

**விளக்கம்**

தேவை என்னும் சொல் பொருளாதாரத்தில் ஒரு கலைச் சொல்லாகும். அச் சொல்லை நாம் கையாளும்போது குறிப்பிட்ட ஒரு பொருளைத்தான் அது கொள்ளும். எனவே, தேவை எதைக் குறிக்கிறது என்று தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். சாதாரண வழக்கில் தேவை, விருப்பம், வேட்கைபோன்ற சொற்களில் ஒன்றுக்கொன்று அதிக வேற்றுமை இல்லை. எனக்கு ஒரு கார் தேவைப்படுகிறது. நான் ஒரு காரை (கார் வாங்க) விரும்புகிறேன். இவை இரண்டிலும் பொருளில் வேற்றுமை காண முடியாது. பொருளாதாரத்தில் இச் சொற்களை உபயோகிக்கும்பொழுது கவனமாக இருக்கவேண்டும். தேவை என்ற சொல்லின் பொருள் என்ன? வாங்கும் சக்தியுடன் (purchasing power) கூடிய விருப்பம்தான் தேவை ஆகும். ஒருவனுக்கு எத்தனையோ பண்டங்கள்மீது விருப்பம் இருக்கலாம். எல்லாப் பண்டங்களையும் அவனால் பெற முடியுமா? அவன் கைவசம் இருக்கும் பணத்திற்கு ஏற்றாற்போலச் சிலவற்றைப் பெறமுடியும்; மற்றவை பகற்கனவாகவே இருக்கும். குழந்தைக்கு நிலாமீது விருப்பம். ஏழைக்குக் கார் சவாரி செய்ய விருப்பம். இவை யாவும் விருப்பங்கள்தாம். ஏனெனில், இவை கைகூடா. ஒருவன் ஒரு பண்டத்தை விரும்பி, அப் பண்டத்தை விலை கொடுத்து வாங்குவதற்கு வேண்டிய பணமும் அவனிடம் இருந்தால்தான், அது தேவையாகிறது. தேவைக்கு மூன்று விதிகள் நிறைவேறவேண்டும். குறிப்பிட்ட ஒரு பண்டத்தை வாங்குவதற்கு ஒருவனுக்கு விருப்பம் இருக்க வேண்டும். விருப்பம் இல்லாவிடில் தேவை எழவேண்டிய அவசியமில்லை. இரண்டாவதாக, அப் பண்டத்தைக் குறிப்பிட்ட ஒரு விலையில் வாங்குவதற்கு அவன் முன்வரவேண்டும். மூன்றாவதாக, அப் பண்டத்தை வாங்குவதற்கான பணம் அவனிடம்

இருக்கவேண்டும். இம் மூன்று விதிகளும் நிறைவேறினால்தான் தேவை எழும்.

**கூட்டுத் தேவை** (Joint Demand): ஒரு செயலை நிறைவேற்ற ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேலான பண்டங்கள் தேவைப்பட்டால், அதற்குக் 'கூட்டுத் தேவை' என்று பெயர். எழுத வேண்டுமானால் பேனாவும் மசியும் ஒரே நேரத்தில் தேவைப்படுகின்றன.

**பிறப்பிக்கப்பெற்ற தேவை** (Derived Demand): ஒரு பண்டத்திற்கு எழும் தேவை மற்றொரு பண்டத்திற்குத் தேவை எழுவதற்குக் காரணமாயிருந்தால், அதற்குப் 'பிறப்பிக்கப்பெற்ற தேவை' என்று பெயர். வீட்டுக்குத் தேவை எழுந்தால் கல்லுக்கும் சுண்ணும்புக்கும் தேவை எழுகிறது. கல்லுக்கும் சுண்ணும்புக்கும் எழும் தேவை பிறப்பிக்கப்பெற்ற தேவையாகும். நிலம், மூலதனம், உழைப்புபோன்ற உற்பத்திக் காரணிகளுக்கு (factors of production) எழும் தேவை பிறப்பிக்கப்பெற்ற தேவையாகும். நெல்லுக்குத் தேவை இல்லையென்றுல் நிலத்திற்குத் தேவை இருக்க முடியாது.

**கலவைத் தேவை** (Composite Demand): ஒரே பண்டத்தைப் பல செயல்களுக்கும் பயன்படுத்த முடியுமானால், அப் பண்டத்திற்கு எழும் தேவைக்குக் 'கலவைத் தேவை' என்று பெயர். மின்சாரத்தை எத்தனையோ செயல்களுக்கு உபயோகிக்கலாமாகையால் மின்சாரத்திற்கு எழும் தேவை கலவைத் தேவையாகும்.

**தேவை விதி** (Law of Demand): ஒரு குறிப்பிட்ட விலையில் ஒரு குறிப்பிட்ட பண்டத்திற்கு இருக்கும் தேவையைத்தான் தேவை என்று பொருளாதாரத்தில் குறிப்பிடுகிறோம். ஒரு பண்டத்தின் விலை, அப் பண்டத்திற்கு இருக்கும் தேவையின் அளவு இவ் விரண்டுக்கும் உள்ள தொடர்பினை விளக்கிக் காட்டுவது 'தேவை விதி'யாகும். ஒரு பண்டத்தின் விலை மாறினால் அப் பண்டத்திற்கு இருக்கும் தேவையும் மாறுதலடையும். தேவை விதியைப் பின்வருமாறு கூறலாம்: 'மற்றக் காரணங்கள் மாருத நிலையாக இருந்தால், ஒரு பண்டத்தின் விலை இறங்கினால் தேவை விரிவடையும் (extends); விலை ஏறினால் தேவை சுருங்கும் (contracts)'. ஒரு பண்டத்திற்கு இருக்கும் தேவை அதன் விலைக்கு நேர்மாருக மாறுதலடைகிறது. பண்டத்தின் விலை அதிகமாக இருக்கும்போது அப் பண்டத்தைக் குறைவாகவும், விலை குறைவாக இருக்கும்போது அதிகமாகவும் ஒருவன் வாங்குவது சாதாரண வழக்கமாகும். சாதாரண வழக்கில் நாம் காணும் செயலைத்தான் திருத்தமாகக் கூறுகிறது தேவை விதி.

தேவைப் பட்டியல் (Demand Schedule) ஒன்றை வரைந்து தேவை விதியை விளக்கலாம். வெவ்வேறு விலை மட்டங்களில் ஒரு பண்டத்திற்கு இருக்கும் தேவையின் அளவை ஒரு பட்டியலில் அமைத்தால், அது தேவைப் பட்டியலாகிறது. கற்பனையில் எழுந்த ஒரு தேவைப் பட்டியலைக் கீழே காணலாம் :

| பண்டம் | பண்டத்தின் விலை | அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை |
|---|---|---|
| X பண்டம் | 6 ரூபாய் | 10 அலகுகள் |
| ,, | 5 ,, | 12 ,, |
| ,, | 4 ,, | 15 ,, |
| ,, | 3 ,, | 18 ,, |
| ,, | 2 ,, | 28 ,, |
| ,, | 1 ,, | 38 ,, |

தேவைப் பட்டியலில் உள்ள விவரங்களைப் படமாக்கிக் காட்டலாம். அத்தகைய ஒரு படத்தைக் கீழே காணலாம். இப் படத்தின் OX என்னும் கிடை அச்சில் பண்டத்திற்கு இருக்கும் தேவையைக் குறிப்பிடுகிறோம். OY என்னும் செங்குத்து அச்சில்




படம் -3

பண்டத்தின் விலையைக் குறிப்பிடுகிறோம். வெவ்வேறு விலை மட்டங்களில் இருக்கும் தேவையின் அளவுகளைப் புள்ளியிட்டு அப் புள்ளிகளை இணைத்தால், DD' என்னும் வளைகோடு கிடைக்கிறது. DD' என்னும் கோட்டைத் தேவைக் கோடு (demand curve) என்றழைக்கலாம்.

தேவை விதியில் இருக்கும் 'மற்றக் காரணங்கள் மாருது நிலையாக இருந்தால்' என்னும் அடைமொழியை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். மற்றக் காரணங்கள் நிலையாக இருந்தால் தான் தேவை விதி செயற்படும். மற்றக் காரணங்கள் யாவை? வாங்குவோர் வருவாயில் மாற்றம் இருக்கக்கூடாது. X பண்டத்தின் விலை 10 ரூபாய் என்றும், 400 ரூபாய் மாத வருவாய் உள்ள Y என்பவர் அவ் விலையில் 2 அலகுகளை வாங்குகிருர் என்றும் வைத்துக்கொள்வோம். X பண்டத்தின் விலை 12 ரூபாய்க்கு உயர்ந்தால், தேவை விதிப்படி Y முன்னைவிடக் குறைவாக X பண்டத்தை வாங்கவேண்டும். ஆனல், Y-யினுடைய வருவாயும் 600 ரூபாய்க்கு உயர்ந்தால், உயர்ந்த விலையான 12 ரூபாயில் அவர் முன்னைவிட அதிக அளவு X பண்டத்தை வாங்கக்கூடும். அதேபோன்று மற்றப் பண்டங்களின் விலை, அவருடைய பழக்க வழக்கங்கள், தட்பவெப்ப நிலை இவை அனைத்தும் மாருமல் நிலையாக இருக்கவேண்டும். இவற்றில் உள்ள மாற்றங்களால் ஒரு பண்டத்திற்கு இருக்கும் தேவையின் அளவும் மாறுந் தன்மையுடையதாதலால், இவை அனைத்தும் மாருதிருந்து விலை மட்டும் மாறினுல் தேவை எவ்வாறு மாறும் என்பதை விளக்குவதுதான் தேவை விதியாகும்.

குறைந்துசெல் பயன்பாட்டு விதியை (Law of Diminishing Utility) அடிப்படையாகக்கொண்டு எழுந்ததுதான் தேவை விதியாகும். ஒரு பண்டத்திலிருந்து பெறக்கூடிய பயன்பாட்டை எதிர்பார்த்துதான் ஒருவன் அப் பண்டத்திற்கு விலை கொடுக்க முன்வருகிருன். என்ன விலை கொடுப்பான் என்பது பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாட்டைப் பொறுத்திருக்கிறது. பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்துசெல்வதால், அப் பண்டத்தின் விலை குறைவாக இருந்தால்தான் அவன் அதிக அளவில் அப் பண்டத்தை வாங்குவான்.

**தேவைக் கோடு ஏன் கீழ்நோக்கிச் செல்கிறது?**

தேவை விதியை விளக்கிக் காட்டுவதற்காக வரைந்து காட்டிய தேவைக் கோடு வலப்புறமாகக் கீழ்நோக்கிச் செல்வதைக் காணலாம். சாதாரணமாக எல்லாத் தேவைக் கோடுகளும் கீழ் நோக்கித்தான் செல்லும். குறைந்துசெல் பயன்பாட்டு விதிதான் இதற்குக் காரணமாகும். ஒவ்வொருவனும் தான் கொடுக்கும் விலையின் அளவுக்காவது பண்டத்திலிருந்து பயன்பாட்டை எதிர் பார்க்கிருன். எதிர்பார்க்கும் பயன்பாடு ஒவ்வொருவருக்கும் மாறுபட்டிருக்கிறது. A என்னும் பண்டத்தின் விலை 5 ரூபாய் என்ருல், B என்பவர் அப் பண்டத்திலிருந்து எதிர்பார்க்கும் பயன்பாடு

4 ரூபாய் அளவுக்குத்தான் இருக்கிறது என்ருல், B அப் பண்டத்தை வாங்கமாட்டார். பண்டத்தின் விலை 4 ரூபாய்க்குக் குறைந்தால், B அப் பண்டத்தை 1 அலகு அளவு வாங்குவார். பண்டத்தின் விலை மேலும் குறைந்து அப் பண்டத்தின் விலையும் அப் பண்டத்தி லிருந்து B எதிர்பார்க்கும் பயன்பாடும் சமஞக இருந்தால், B இரண்டு அலகுகளை வாங்கலாம். இதன் காரணமாகத்தான் தேவைக் கோடு கீழ்நோக்கிச் செல்கிறது. பண்டத்தின் விலை குறையும்போது, முன்பு அப் பண்டத்தை வாங்காமல் இருந்த சிலர் அப் பண்டத்தை வாங்க முற்படுவர். மேலும், முன்பு அப் பண்டத்தை வாங்கியவர்களும் இப்போது அதிக அளவில் அப் பண்டத்தை வாங்குவர். நுகர்வோர் குறைந்த விலையில் அதிக அளவும், அதிக விலையில் குறைந்த அளவும் பண்டத்தை வாங்கு வார்கள் என்பதைத்தான் கீழ்நோக்கிச் செல்லும் தேவைக் கோடு காட்டுகிறது.

**தேவையில் எழும் மாற்றங்கள்**

பண்டத்தின் விலை மாற்றமடைந்தால் அப் பண்டத்திற்கு இருக்கும் தேவையும் மாறும் என்று மேலே விளக்கினேம். விலை யன்றி மற்றச் சில காரணங்களால்கூட தேவை மாறக்கூடும். விலையினுல் எழும் மாற்றங்களையும், மற்றக் காரணங்களால் எழும் மாற்றங்களையும் வேறுபடுத்திக் காட்டவேண்டும். இவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவதற்காக வெவ்வேறு சொற்களைப் பயன் படுத்துகிறேம். விலை மாற்றத்தால் தேவையில் எழும் மாற்றங்களை 'தேவை விரிவு' (extension of demand), 'தேவைச் சுருக்கம்' (contraction of demand) என்று குறிப்பிடுகிறேம். ஒரு பண்டத்தின் விலை குறைந்திருப்பதால் நுகர்வோர் அதிக அளவில் அப் பண்டத்தை வாங்கினுல், அந் நிலையைத் தேவை விரிவடைந்திருக் கிறது என்று கூறலாம். விலை ஏற்றத்தால் நுகர்வோர் பண்டத் தைக் குறைந்த அளவில் வாங்கினுல், அதனைத் தேவை சுருக்க மடைந்திருக்கிறது என்று கூறலாம். விலையில் மாற்றமில்லாமல் மற்றக் காரணங்களால் தேவை மாற்றமடைந்தால், அவற்றைத் 'தேவைப் பெருக்கம்' (increase in demand), 'தேவைக் குறைவு' (decrease in demand) என்றும் அழைக்கிறேம். தேவையை மாற்ற மடையச் செய்யும் மற்றக் காரணங்கள் யாவை என்றறியலாம்.

(1) **தட்பவெப்ப நிலையில் மாற்றங்கள்** : கால நிலையும், தட்பவெப்ப நிலையும் மாறுபட்டால் சில பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் மாறுபடலாம். குடையின் விலை மாருமல் இருந்தாலும், மழைக் காலத்தில் குடைக்கு இருக்கும் தேவை அதிகமாக இருக்கிறது.

(2) **மக்களுடைய மனநிலை, பழக்கவழக்கங்கள் :** மக்களுடைய மனநிலை மாறுந்தன்மையுடையது. பழக்கவழக்கங்களும் மாறுபடுகின்றன. இம் மாறுதல்களுக்கு ஏற்றுற்போல சில பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் மாறுபடுகிறது.

(3) **மக்கள் தொகையில் இருக்கும் மாற்றம் :** மக்கள் தொகையில் இருக்கும் மாற்றம் சில பண்டங்களின் தேவையையும் மாற்றக்கூடும். உதாரணமாக, இந்தியாவில் உணவுப் பண்டங் களின் விலை உயர்ந்துகொண்டே போனாலும், அவைகளுக்கு இருக்கும் தேவையும் பெருகிக்கொண்டேயிருக்கிறது. இந்த நிலை மக்கள்தொகைப் பெருக்கத்தினால் வந்ததேயாகும்.

(4) **வருமானப் பங்கீட்டில் இருக்கும் மாற்றம் :** ஒரு நாட்டில் வருமானப் பங்கீட்டில் இருக்கும் மாற்றம் பண்டங்களுக்கு இருக்கும் தேவையையும் மாற்றியமைக்கும். ஒரு நாட்டுச் செல்வத்தின் பெரும்பகுதி ஒருசில செல்வந்தர்களிடையே இருந்தால், நாட்டில் பெரும்பாலோர் ஏழைகளாக இருப்பார்கள். இந்த நிலை மாறி ஜனநாயக சோஷியலிசம் அமைந்தால், நாட்டின் செல்வம் எல்லா மக்களிடையேயும் சமனாகப் பங்கிடப்பெற்று, ஏழை பணக்காரனுக் கிடையே இருக்கும் வேறுபாடு குறைவாக இருக்கும். சமுதாயம் இவ்வாறு மாறும்பொழுது, செல்வத்தில் கீழ்நிலையில் இருப்பவர்கள் வேண்டும் பொருள்களுக்குத் தேவை பெருக்கமடையும். செல்வந் தர்கள் வேண்டும் பொருள்களுக்கு இருக்கும் தேவை குறையும்.

(5) **மக்களுடைய வருவாயில் இருக்கும் மாற்றம் :** நாட்டில் பொருளாதார வளர்ச்சி இருந்து மக்களுடைய வருவாயும் பெருகி வந்தால், பல பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் பெருக்க மடையும்; வருவாய் குறைந்தால் தேவையும் குறையும்.

(6) **உற்பத்தி முறையில் இருக்கும் மாற்றம் :** உற்பத்தி யாளர்கள் பல புதிய பண்டங்களைப் புனைய முற்படுகிறார்கள். புதிய பண்டங்களை அவர்கள் உற்பத்தி செய்யும்போது பழைய பண்டங் களுக்கு இருக்கும் தேவை மாறுபடுகிறது.

இவ்வாறு தேவையின் அளவை மாற்றக்கூடிய எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. தேவை விதி இக் காரணங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்வதில்லை. அவ் விதி பண்டத்தின் விலைக்கும், பண்டத்திற்கு இருக்கும் தேவையின் அளவுக்கும் உள்ள தொடர்பினைத்தான் குறிப்பிடுகிறது. இதன் காரணமாகத்தான், எச்சரிக்கையாக, தேவை விதியைக் கூறும்போது, 'மற்றக்

காரணங்கள் மாருமல் இருந்தால்' என்னும் அடைமொழியைச் சேர்த்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. மற்றக் காரணங்கள் என்பன மேற்கண்ட அனைத்தையும் குறிப்பிடுகின்றன.

**தேவை நெகிழ்ச்சி** (Elasticity of Demand)

நாம் மேலே கண்ட தேவை விதி, விலைக்கும் தேவைக்கும் உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டி, விலை உயர்ந்தால் தேவை சுருங்கும், விலை குறைந்தால் தேவை விரியும் என்று கூறுகிறது. விலை மாற்றத்தால் எந்த அளவுக்குத் தேவை மாறுபடும் என்று தேவை விதி கூறுவதில்லை. அஃதாவது, ஒரு பண்டத்தின் விலை 10 சதவிகிதம் உயர்ந்தால் அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை 10 சதவிகித அளவில் உயருமா அல்லது 80 சதவிகித அளவில் உயருமா என்று தேவை விதி குறிப்பிடுவதில்லை. எந்த அளவுக்குப் பண்டத்தின் தேவை மாறும் என்பதைக் காண 'தேவை நெகிழ்ச்சி'யைப்பற்றி (elasticity of demand) அறியவேண்டும். நெகிழ்ச்சி என்பது தேவைக்கு இருக்கும் ஓர் இயல்பாகும்.

ஒருசில பண்டங்களில் சிறிதளவு விலை மாற்றம் இருந்தால், அதன் காரணமாக அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை அதிக அளவில் மாறுபடும். இவ்வாறு இருந்தால், தேவை நெகிழ்ச்சி யுடையதாக இருக்கிறது (elastic demand) என்று பொருள். ஒரு சில பண்டங்களில் பெருமளவுக்கு விலை மாற்றம் இருந்தால்கூட தேவை சிறிதளவே மாறுபடும். இவ்வாறு இருந்தால், தேவை நெகிழ்ச்சியற்று இருக்கிறது (inelastic demand) என்று பொருள். விலைமாற்றம் இருந்து தேவை முற்றிலும் மாருமல் இருக்க முடியாது. எந்த அளவுக்குத் தேவை மாறுகிறது என்பதுதான் முக்கியமானது. தேவையின் மாற்றத்தில் இருக்கும் அளவை தேவை நெகிழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது.

சாதாரணமாகத் தேவை நெகிழ்ச்சியை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) நிறைந்த நெகிழ்ச்சியுள்ள தேவை (perfectly elastic demand); (2) நெகிழ்ச்சியே இல்லாத தேவை (perfectly inelastic demand); (3) ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியுள்ள தேவை (elasticity of demand is equal to unity); (4) ஒன்றுக்கு மேற்பட்ட நெகிழ்ச்சியுள்ள தேவை (elasticity of demand is greater than unity); (5) ஒன்றுக்குக் கீழான நெகிழ்ச்சி யுள்ள தேவை (elasticity of demand is less than unity).

ஒரு பண்டத்தின் விலை சிறிதளவுக்கு மாறுவதால் அப் பண்டத்தின் தேவை பெருமளவுக்கு மாறினால், அப் பண்டத்திற்கு

இருக்கும் தேவை நிறைந்த நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கிறது என்று கூறலாம். உதாரணமாக, ஒரு பண்டத்தின் விலை 5 சத வீத அளவில் உயர்ந்தாலோ அல்லது குறைந்தாலோ, அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை 100 சதவீத அளவில் குறைந்தாலோ அல்லது பெருகினாலோ அப் பண்டத்தின் தேவை நிறைந்த நெகிழ்ச்சியுடையதாக இருக்கிறது என்று பொருள்படும். அதற்கு நேர்மாருகப் பண்டத்தின் விலையில் 100 சதவிகித உயர்வோ அல்லது குறைவோ இருந்து, அப் பண்டத்தின் தேவை 5 சத விகித அளவில்தான் குறைகிறது அல்லது பெருகுகிறது என்ருல், அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை நெகிழ்ச்சியே இல்லாதிருக் கிறது என்று பொருள்படும்.

பண்டத்தின் விலையில் 5 சதவிகித மாற்றமிருந்து அதனால் அப் பண்டத்தின் தேவையிலும் 5 சதவிகித மாற்றமிருந்தால், அப் பண்டத்திற்கு இருக்கும் தேவையின் நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமனுக இருக்கிறது என்று கூறலாம். அஃதாவது, விலை எந்த சத விகித அளவில் மாறுகிறதோ அதே சதவிகித அளவில்தான் தேவையும் மாறும். பண்டத்தின் விலையில் 5 சதவிகித மாற்ற மிருந்து அதனால் தேவையில் 5 சதவிகித அளவுக்கு மேற்பட்ட மாற்றம் இருந்தால், அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை ஒன்றுக்கு மேற்பட்ட நெகிழ்ச்சியுடையதாக இருக்கிறது என்று கூறலாம். இந்த நிலையில் தேவையில் நெகிழ்ச்சியிருக்கிறது; ஆனால், நிறைந்த நெகிழ்ச்சியில்லை. முடிவாகப் பண்டத்தின் விலையில் 5 சதவிகித அளவு மாற்றமிருந்து அதனால் அப் பண்டத்திற்கு இருக்கும் தேவையில் 5 சதவிகித அளவுக்குக் குறைவான மாற்றம் இருந் தால், அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை ஒன்றுக்குக் குறைவான நெகிழ்ச்சியுடையதாக இருக்கிறது என்று கூறலாம். இந் நிலையில் தேவையில் நல்ல நெகிழ்ச்சி இல்லை. ஆனால், நெகிழ்ச்சியே இல்லை என்று கூற முடியாது.

**தேவை நெகிழ்ச்சி எவற்றைச் சார்ந்திருக்கிறது ?**

தேவை நெகிழ்ச்சி பலவகையானதென்று மேலே விளக்கி ஞேம். தேவை நெகிழ்ச்சி ஏன் மாறுபட்டிருக்கிறது, எவ் வகைக் காரணங்கள் தேவை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கின்றன என்று காண்போம்.

(1) வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கு இருக்கும் தேவை சாதாரணமாக நெகிழ்ச்சியற்று இருக்கும். உதாரணமாக, உணவுப் பண்டங்கள், விலை குறைவாக உள்ள துணி போன்ற பண்டங்களுக்குத் தேவை நெகிழ்ச்சி இல்லா

திருக்கும். இவை வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களாக இருப்பதால், அவற்றின் விலை என்னவாயிருந்தாலும் மக்கள் அதை வாங்கித்தான் ஆகவேண்டும். இதற்கு மாருகப் போகப்பொருள் களுக்கு (luxuries) இருக்கும் தேவை நிறைந்த நெகிழ்ச்சி உள்ள தாக இருக்கும். போகப்பொருள்களுக்கு இருக்கும் தேவையைத் தள்ளிப்போடக்கூடுமாகையால், அப் பொருள்களின் விலை குறையும்போது மக்கள் அப் பொருள்களை அதிக அளவிலும், விலை உயரும்போது குறைந்த அளவிலும் வாங்குவார்கள்.

(2) ஒரு பொருளைப் பல வழிகளில் பயன்படுத்தக்கூடுமானல், அப் பொருளுக்கு இருக்கும் தேவை நல்ல நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும். இதற்கு மின்சாரம் ஒரு நல்ல உதாரணமாகும். மின்சாரத்தை வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், விவசாயத்திலும் பல வழிகளில் பயன்படுத்தலாம். மின்சாரக் கட்டணம் குறைவாக இருந்தால் மக்கள் மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்து வார்கள்; கட்டணம் உயர்வாக இருந்தால் முக்கியமான உபயோ கங்களுக்குமட்டும் அதைப் பயன்படுத்துவார்கள்.

(3) மிகவும் விலையுயர்ந்த பண்டங்களுக்கும், மிகவும் குறைவான விலையுள்ள பண்டங்களுக்கும் தேவை நெகிழ்ச்சியற்று இருக்கும். மிகவும் விலையுயர்ந்த பண்டங்களைச் சில செல்வந் தர்கள்மட்டும்தான் வேண்டுவார்கள். அப் பண்டங்களின் விலை மாறுவதால், அவர்கள் அப் பண்டங்களை அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ வாங்கமாட்டார்கள். அதேபோலக் குறைந்த விலையுள்ள தீப்பெட்டி போன்ற பண்டங்களை மக்கள் விலைமாற்றம் காரணமாக அதிக அளவிலோ குறைந்த அளவிலோ வாங்கமாட்டார்கள். தீப்பெட்டியின் விலை 5 பைசாவிலிருந்து 6 பைசாவுக்கு உயர்வதால் மக்கள் தீப்பெட்டி வாங்குவதைக் குறைத்துக்கொள்ளமாட்டார்கள்.

(4) ஒரு பண்டத்திற்குப் பதிலிகள் (substitutes) இருந்தால், அப் பண்டத்திற்கு இருக்கும் தேவை நல்ல நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும். காப்பியும் டீயும் ஒன்றுக்கொன்று பதிலிகள். ஒன்றின் விலை உயர்ந்தால், நுகர்வோரில் பலர் ஒரு பானத்திலிருந்து மற்ருெரு பானத்திற்கு மாறிவிடுவார்கள். இதனல் அப் பண்டத் திற்கு இருக்கும் தேவை குறையும்.

இவைபோன்ற பல காரணங்கள் தேவையின் நெகிழ்ச்சியை நிர்ணயிக்கின்றன.

**தேவை நெகிழ்ச்சிக் கருத்தின் முக்கியத்துவம்**

தேவை நெகிழ்ச்சிக் கருத்து மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். பொது நிதியியல் துறையில் இக் கருத்து பெரிதும் பயன்படுகிறது. அரசாங்கச் செலவைச் சமாளிக்க நிதி அமைச்சர் பண்டங்களின்மீது வரிவிதித்து நிதி திரட்டவேண்டியிருக்கிறது. வரிவிதிக்கும்போது அவர் எத்தனையோ விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. அவர் தேவை நெகிழ்ச்சியைப்பற்றியும் அறிந்திருக்கவேண்டும். பண்டங்களின்மீது வரி விதித்து நிதி திரட்டுவதையே அவர் நோக்கமாகக் கொண்டிருந்தால், நெகிழ்ச்சியில்லாத தேவையை உடைய பண்டங்களைத் தேர்ந்தெடுத்து வரி விதிக்கவேண்டும். அப்படி விதித்தால், அவருக்குக் கிடைக்கும் வருவாய் நெகிழ்ச்சியுள்ள தேவையையுடைய பண்டங்களின்மீது வரி விதிப்பதைவிட அதிகமாக இருக்கும்.

உற்பத்தியாளர்களுக்கும் வணிகர்களுக்கும் இக் கருத்து பயனுள்ளதாக இருக்கும். அவர்கள் தம்முடைய பண்டங்களின் விலையை நிர்ணயிக்கும்போது தேவை நெகிழ்ச்சியைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் பண்டங்களுக்கு இருக்கும் தேவை நல்ல நெகிழ்ச்சியுள்ளதாக இருந்தால், அப் பண்டங்களின் விலையைக் குறைந்த மட்டத்தில் நிர்ணயிக்கவேண்டும்; இல்லாவிடில், அப் பண்டங்களை விலையாக்க முடியாது. தேவை நெகிழ்ச்சியற்று இருந்தால், விலையை உயர்மட்டத்தில் நிர்ணயிக்கலாம்.

பன்னாட்டு வாணிபத் துறையிலும் (International trade) இக் கருத்து பயன்படுகிறது. ஒரு நாடு எந்த அளவுக்குப் பண்டங்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்பது அப் பண்டங்களுக்கு அயல் நாடுகளில் இருக்கும் தேவையின் நெகிழ்ச்சியைப் பொறுத்து இருக்கிறது. இந்திய ஏற்றுமதிகளில் பெரும்பான்மையான பண்டங்களுக்கும் தேவை நெகிழ்ச்சியற்று இருக்கிறது. இவ்வியல்பு இந்திய ஏற்றுமதிகளில் உள்ள பெருங் குறைபாடு. இதை அறிந்து இந்திய ஏற்றுமதிகளை மாற்றியமைக்கவேண்டியது இன்றைய நிலையில் மிகவும் அவசியமாகிறது.

# 6. உற்பத்தி
## (Production)

இதுவரை நுகர்ச்சிபற்றி எழுதினோம். இனி நுகர்ச்சிக்கு ஆதாரமாகவுள்ள உற்பத்திபற்றிப் பார்ப்போம். உற்பத்தி இன்றேல் நுகர்ச்சி இருக்க முடியாது. ஆலையில் ஆயிரக்கணக் கான தொழிலாளர் யந்திரங்களின் துணைகொண்டு ஆடைகளை மலையெனக் குவிக்கின்றனர். காடு வெட்டி நிலம் திருத்திக் கழனியாக்கி நெல்லும் கரும்பும் உற்பத்தி செய்கிறான் உழவன். இரும்பைக் காய்ச்சி உருக்கிக் கலப்பைக்கு வேண்டிய இரும்புப் பகுதி உற்பத்தி செய்யப்பெறுகிறது. யந்திரங்களும், ஞாலம் நடுங்க வரும் கப்பல்களும், கோள்களை நோக்கி விரையும் செயற்கை ஸ்புட்னிக்குகளும் இன்று உற்பத்தி செய்யப்படு கின்றன.

இவ்வாறு செய்யப்படுவதில் எது உற்பத்தி என்ற கேள்விக்கு விடை கூற முயல்வது நல்லது. பிகு (Pigou) அவர்கள் இலக்கணப்படி, பணத்திற்கு மாற்றப்படும் பொருள்கள் செய்யப் படுமானால் அது உற்பத்தியாகும். அதாவது, இட்டலி வீட்டி லுள்ளோருக்காகச் செய்யப்படுமானால், அது 'உற்பத்தி' என்று பொருளாதாரச் சொல் வழக்கில் ஆகாது. அதே இட்டலி விற்கப்படுமானால் அது உற்பத்தி ஆகும்.

இது நமது வசதிக்காக எடுத்துக்கொள்ளவேண்டிய ஓர் இலக்கணம்தான். உண்மையில் நுகர்ச்சிக்குள்ளாகும் பண்டம் அல்லது பணி செய்யப்படுவதெல்லாம் உற்பத்தி என்றுதான் முடிவு செய்யவேண்டும். அதுதான் பொருத்தமானதாக இருக்கும். ஆனால், அதில் பலவகைப்பட்ட சிக்கல்கள் தோன்றி, அளப்பது, கணிப்பதுபோன்ற செயல்களைத் துல்லியமற்றதாகவும் சாத்தியமற்றதாகவும் செய்துவிடுகிறது. ஒரு தாயின் சேவை குழந்தைக்குக் கிடைக்கிறது. அதை மதிப்பிடுவது எப்படி?

தகப்பன் தன் பிள்ளைகளுக்காக என்னென்னவோ செய்கிறுன். அவைகளைக் கணிப்பது முடியாத காரியம். பிள்ளைகளும் குடும்பத்திற்கு எவ்வளவோ உதவிகள் செய்யக்கூடும். இவையெல்லாம் உற்பத்தி என்று ஏற்றுக்கொண்டு பார்த்தால் பல இன்னல்கள் தோன்றும் என்பதால், பணத்திற்கு மாற்றப்பெறும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றை ஆக்குவதை உற்பத்தி என்று குறுக்கி வைத்துக்கொள்வோம். ஆனல், உற்பத்தி என்று பொதுவில் பேசினல் எல்லாவகை உற்பத்தியும் சேர்க்கப்பெற வேண்டும். பொருளாதாரச் சொல்வழக்கில்மாத்திரமே இவ்வாறு குறிப்பிடுவோம்.

பொருளாக்கம் எவ்வாறு நடைபெறுகிறது? மலையில் ஒரு பெரிய மரம் இருக்கிறது. ரம்பம் முதலியன எடுத்துச்சென்று அம் மரத்தை வெட்டிக் கீழே தள்ளுகின்றனர். யானை அல்லது புல்டோசர் துணைகொண்டு வெட்டப்பட்ட மரத்தை இழுத்து வந்து, மரம் அறுக்கும் ஆலைக்குக் கொண்டுவந்து பலகைகளாக அறுக்கின்றனர். இப் பலகைகள் நகரத்தின் மரக்கடைக்குக் கொண்டுவரப்படுகின்றன. தச்சர்கள் இதை வாங்கி நாற்காலிகளாகவோ, மேசைகளாகவோ அல்லது வீட்டுக்கு வேண்டிய கதவுகளாகவோ அல்லது வண்டியாகவோ அல்லது ரயில்வே பெட்டிகளாகவோ செய்கிறுர்கள்.

இதில் மூன்றுவகைப் பயன்பாட்டு ஆக்கம் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது. ஓர் இடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு மாற்றுவதால், அவ்வாருன இடப்பெயர்ச்சியின்மூலம் அப் பொருளுக்கு 'இடப் பயன்' (place utility) அளிக்கிறுர்கள். காட்டிலுள்ள மரம் நுகர்ச்சிக்குப் பயன்படுவதற்காக அது வெட்டித் தள்ளப்பட்டு மரம் அறுக்கும் ஆலைக்கு (saw mills) வந்தாக வேண்டும். அதேபோன்று அங்கு அறுக்கப்பெறும் பலகைகள் மரக்கடைக்கு வந்தாகவேண்டும். இரண்டாவதாக, எங்கோ கிடைக்கும் இயற்கைப் பொருள்களை மனிதன் தனது உழைப்பைக்கொண்டு உருமாற்றம் செய்துதருகிறுன். நெல்லை உமி நீக்கித் தவிடு போக்கி அரிசியாக்கித் தருகிறுன். பலகையை இழைத்து நாம் அமரும் நாற்காலி செய்கிறுன். இவையெல்லாம் 'படிவப் பயன்' (form utility) என்று கூறப்படுகின்றன. மூன்ருவதாக, எப்பொழுதோ கிடைக்கும் இயற்கைப் பொருள்களை மனிதத் தேவையின்போது அளிக்கிறுன். அறுவடையாகும்போது கிடைக்கும் தானியத்தைக் கிடங்குகளில் சேமித்து ஒழுங்காக வருடம் பூராவும் கிடைக்கும்படி செய்வது 'காலப் பயன்' (time utility) ஆகும். ஆக, இவ்விதமாக இடப் பயன், படிவப் பயன், காலப் பயன் ஆகியவற்றை ஆக்குவதை உற்பத்தி என்னலாம்.

**உற்பத்திக் காரணிகள் (Factors of production)**

இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்த மனிதன் மரத்தின் கனிகளையும், கிழங்குகளையும், வேர்களையும் உண்டு பசியாறியபோது, உற்பத்திபற்றிய கவலை அவனுக்கு இருந்ததில்லை. அதே போன்று நதிப்புறத்தில் வாழ்ந்தோரும், கடல்சார் பகுதிகளில் இருந்தோரும் மீனைப் பிடித்துச் சாப்பிட்டு வாழ்ந்தனர். ஆனால், மனித நாகரிகம் வளர வளரப் பொருளாதார உற்பத்தியும் சிக்கல் உள்ளதாக ஆனது.

இயற்கையும் மனிதனும் சேர்ந்து ஆக்குவதுதான் எப்பொருளும். இவை இரண்டும் இல்லாமல் பொருளேதும் உற்பத்தி செய்ய இயலாது. இயற்கையையும் மனிதனையும் அடிப்படைக் காரணிகள் என்று அழைக்கலாம். ஆனால், நமது ஆய்விற்கு இவ்வாறுகப் பகுப்பது அதிகப் பயனுள்ளதாக இருக்காது என்பதற்காக இதை விடுத்து இன்னும் விளக்கமாகச் சொல்ல முற்பட்டனர்.

நிலம், உழைப்பு, முதல் ஆகிய மூன்று காரணிகள் உற்பத்திக்கு மூலகாரணிகளாகக் கூறப்பட்டன. பின்னர் தொழில் அமைத்தலையும் (organisation) ஒரு காரணியாகக் கருதினர்கள். தற்காலத்தில் தொழில்நுட்ப இயலையும், அதன் அறிவையும் ஒரு காரணியாகக் கருதுகிறுர்கள். வெவ்வேறு பொருளாதார அறிஞர்கள் பல்வேறு காரணிகள்பற்றிப் பேசுகின்றனர். ஆனல், இங்கு வசதிக்காக நிலம், உழைப்பு, முதல், தொழில் அமைத்தல் ஆகிய நான்கு காரணிகளையே எடுத்துக்கொள்கிறேம். இவ்வாறு நான்கு காரணிகளாகப் பகுப்பதைக் கண்டனம் செய்வாருமுண்டு. ‘நிலம்’ என்னும் தலைப்பின்கீழ்த் தஞ்சையின் காவிரியாற்றுப் படுகை நிலத்தையும், வான் நோக்கி ஓங்கி நிற்கும் பனைமரம் நிறைந்த இராமநாதபுரத்து நிலத்தையும் ஒன்ருக உற்பத்திக் காரணி என்று அழைப்பது பொருந்துமா? இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் வேறுபடும் மழை, வெப்பம், காற்று முதலியன வெல்லாம் சேர்ந்துதான் நிலம் என்று அழைக்கப்பெறுகிறது. எனவே, நிலம் என்று ஒரே தலைப்பில் உலகின் எல்லாக் கழனிகளையும் சேர்க்க முடியாது. இதேபோன்று உழைப்பு எத்தனையோ வகைப்படும். பயிற்சிபெற்ற உழைப்பாக இருக்கலாம் (skilled labour), பயிற்சி பெரு உழைப்பாக இருக்கலாம். மன உழைப்பாக இருக்கலாம் அல்லது உடலுழைப்பாக இருக்கலாம். ஆலை உழைப்பாக இருக்கலாம் அல்லது தோட்ட வேலையாக இருக்கலாம். எனவே, உழைப்பு அனைத்தையும் ஒரே சொல்லால் கூறுவது பொருந்தாது என்று கூறுகின்றனர். இதேபோன்றுதான்

முதலுக்கும். இவற்றையெல்லாம் ஒத்துக்கொள்கிறோம். இக் காரணிகள் ஒவ்வொன்றும் அந்தந்த உற்பத்தியில் பயன்படுத்தப் பெறும்போது தனித்தன்மை பெற்றவைதாம். இருப்பினும், விஞ்ஞான ரீதியான ஆய்விற்காக இவை அனைத்தையும் ஒருசில தலைப்புகளில் வைத்துக்கொண்டு ஆய்வு செய்ய முற்படுவோம்.

மேலும், தொழில் அமைத்தல் என்பது ஒரு தொழில் முயல்வோனோ, அல்லது முயல்வோரோ சேர்ந்து ஓர் ஆலையையோ, அல்லது தொழிலையோ ஆரம்பித்து நடத்துவதைக் குறிக்கிறது. உழைப்புக்கும் இதற்கும் என்ன வேறுபாடு? செயற்கையான வேறுபாடுகளை உண்டாக்கி இக் காரணி ஆக்கப்பட்டுள்ளது என்று கூறுகின்றனர். மன உழைப்பு அல்லது தொழில் அமைக்கும் உழைப்பு என்று அழைக்காமல் இதைமாத்திரம் தனிப்படுத்தியது அரசியல் காரணங்களுக்காக என்று கூறப்படுகிறது. அதே போன்று நிலமும் முதலும் ஒரே மாதிரித் தன்மையுடையன என்றும் வாதிக்கப்பெறுகிறது. இதுபற்றி விரிவாக 'நிலம்' என்னும் தலைப்பின்கீழ்ப் பார்ப்போம். இப்போதைக்கு நிலமும் முதலாகலாம், முதலும் நிலமாகலாம் என்று வாதிக்கிறவர்களுமுண்டு. இதற்குரிய சமாதானமும் முன்னதற்குக் கூறியது போன்றதே. வசதிக்காகவேதான் இவ்வாறு ஏற்றுக்கொள்கிறோம்.

உற்பத்திக் காரணிகள் ஒன்றுக்கொன்று இறுதிநிலையில் **(margin)** பதிலீடு செய்யப்படக்கூடியவை என்றும், அவை இயங்கும் தன்மை பெற்றவை என்றும் அனுமானிக்கப்படுகின்றன. அதாவது, நிலத்தில் மனித உழைப்புக்குப் பதிலாக யந்திரத்தைப் பதிலீடு செய்யலாம். அதுபோன்றே யந்திரத்துக்குப் பதிலாக மனித உழைப்புப் பதிலீடு செய்யப்படலாம். இறுதிநிலையில் நிலத்திற்குப் பதில் முதல் பதிலீடு செய்யப்பெறலாம். இவ்வாறெல்லாம் பதிலீடு செய்யப்படுவதற்குக் காரணிகள் இயங்கும் **(mobility)** தன்மை பெற்றிருக்கவேண்டும். இடப்பெயர்ச்சியற்று இருக்குமாயின், பயனளவிலாவது பெயர்ச்சி இருக்குமல்லவா? அதாவது, தஞ்சையின் செழிப்பான நிலத்தை நாம் பெயர்த்து எடுத்துச்செல்ல முடியாது. ஆனால், அங்குள்ள நிலத்தை நெல் சாகுபடிக்குப் பயன்படுத்தலாம்; அல்லது கரும்பு பயிரிடலாம். இதேபோன்று உழைப்பும் பல்வகையிலும் பலவிடங்களிலும் பயன்படுத்தப்பெறலாம். முதலும் இவ்வாறே.

ஆக, உற்பத்திக் காரணிகள் இறுதிநிலையில் பெயர்ச்சி அல்லது இயக்கம் உடையவை என்றும், அவை ஒன்றுக்குப் பதிலாக உபயோகப்படுத்தக்கூடியவை என்றும் அனுமானித்துக்

கொள்கிறோம். சில சமயங்களில் இது உண்மைக்குப் புறம்பாக இருக்கலாம். பெரிய இயந்திரம் ஒன்றில் இருவரே வேலை செய்ய முடியும் என்றிருக்கும். அதை விடுத்து ஒருவர் வேலை செய்தால் இயந்திரத்தை இயக்க முடியாதுபோகலாம்; அல்லது ஒன்றுக்கு மேல் மூன்று பேர் கூடினால் நிற்க இடமில்லாது போகலாம்; இயந்திரம் பகுக்கப்படக்கூடியதாக இராமற்போகலாம். இவ்விதப் பகுக்கப்பெற முடியாத சில காரணிகளை விடுத்து, ஏனைய காரணிகளிலெல்லாம் இவ்வனுமானம் பொருந்தும் என்று கொள்வோம்.

# 7. நிலம்

நிலம் என்று பொருளாதாரத்தில் அழைக்கப்பெறும் காரணி வெறும் மண்ணைமட்டும் குறிப்பிடுவதாகாது. மண்ணின் வளம், ஈரப்பசை, தட்பவெப்பச் சூழ்நிலை, மழை, காற்று, பனி ஆகிய இயற்கைச் சூழல்கள் அனைத்தையும் சேர்த்தே 'நிலம்' என்ற ஒரு சொல்லால் சொல்லுகிறோம்.

**நிலத்தின் சில தனித் தன்மைகள்**

நிலத்திற்கென்று சில தனித்தன்மைகள் உள்ளன. இவை காரணமாகப் பொருளாதாரத்தில் சில கோட்பாடுகள் தோன்றியமையால், அவற்றைத் தெரிந்துகொள்ளுவது நல்லது.

1. நிலம் இயற்கையில் பெறப்படும் காரணியாகும். மனிதனால் சாதாரணமாக ஓரடி மண்ணைக்கூட உண்டாக்க முடியாது. இயற்கை அளிக்கும் நிலப்பரப்பு அளவுக்குள்ளாகத்தான் ஏனைய மாற்றங்களைச் செய்துகொள்ளவேண்டும்.

2. நிலத்தின் செழுமை அழிக்கப்பெற முடியாதது. ஒரு நிலத்தில் மேலும் மேலும் சாகுபடி செய்துகொண்டேயிருந்தால், அதன் உரம் குறைந்துவிடும். ஆனால், அந்த நிலத்தைச் சிறிது காலத்துக்குத் தரிசாக விட்டுவைத்தால், அது மீண்டும் அதன் முந்தைய உரத்தைப் பெறக்கூடிய தன்மையுடையது. காற்றிலுள்ள நைட்ரஜனை நிலத்தின் சிறிய அணுக்கள் பெற்று, அதன் மூலம் உரத்தை நிலைநிறுத்திக்கொள்கின்றன. எனவே, நிலம் அழிக்கமுடியாதது.

**நிலமும் முதலும்**

1. நிலம் முதலாகுமா என்ற வாதம் நிலத்தின் இத் தனித் தன்மையால் எழுந்ததாகும். மனிதன் காடு வெட்டி, நிலந் திருத்தி, அதைப் பக்குவப்படுத்தாவிட்டால் உழும் நிலமாகுமா?

அப்படி அப்படியே இயற்கையில் சாகுபடிக்கேற்றவாறு நிலம் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. மிகவும் உழைப்பைச் செல விட்டே நிலத்தைப் பண்படுத்த வேண்டியுள்ளது. மண்ணின் செழுமைகூட இயற்கையால் கொடுக்கப்பெற்றபடி இருப்பதில்லை. மனிதன் தனக்குத் தெரிந்த விஞ்ஞான அறிவைக்கொண்டும், பட்டறிவைக்கொண்டும் நிலத்தின் தன்மையையே மாற்றுகிருன். சுவிட்சர்லாந்தில் பாறைகளாக உள்ள இடத்தில் மண்ணைச் சுரண்டிச் சுரண்டிப் பாத்தியமைத்து முந்திரி பயிர் செய்கிருன். இங்கு நிலம் இயற்கையால் விளைந்தது என்று சொல்வது பொருந்தாது. நெதர்லாந்து நாடுகளில் கடலின் நீரைச் சுவர் வைத்துத் தடுத்து அந்த நிலங்களில் பயிர் செய்கிருர்கள். கேரளாவில் குன்றுகளின் உச்சிவரை சாகுபடி செய்யப்படுவதைப் பார்க்கலாம். நிலம் மேடும் பள்ளமுமாக, மணலும் களி மண்ணுமாக இருக்கலாம். அவற்றைச் சாகுபடிக்கேற்றதாக ஆக்கக் காலமும், உழைப்பும், மூலதனமும் தேவைப்படுகின்றன. எருவிட்டு, நீர்பாய்ச்சி, நிலந் திருத்திப் பாடுபடுவதுதான் பெரிதாக இருக்கிறதேயொழிய, இயற்கையாகக் கிடைக்கும் நிலம் அவ்வளவு முக்கியமானதாகப் படவில்லை. எனவே, நிலம் முதலைப் போன்றே ஆக்கப்பட்ட ஒரு காரணி என்று வாதமிடலாம்.

2. மேலும் நிலம் அழியாதது, முதல் அழியக் கூடியது என்ற கூற்றுக்கு எதிராக, நிலம் உருவத்தில் அழியாது இருப்பினும் அதன் செழுமையும், மண்ணின் தன்மையும் அழியக்கூடியனவே. நிலத்தின் பரப்பு ஒருவேளை அப்படியே அழியாது இருந்தாலும், அதன் உரமும் செழுமையும் அழிந்துபடக்கூடியனவாகையால், அதன் உற்பத்தித் திறன் ஒழிகிறது. அப்படியாயின் நிலமும் முதலைப்போலத்தானே இருக்கிறது?

3. நிலத்தின் பரப்பு விஸ்தரிக்கப்பட முடியாதது; ஆகையால், முதலாகாது என்று கூறப்படுகிறது. ஏனெனில், முதல் பெருக்கப் படக்கூடியதாகும். நிலத்தின் பரப்பை விஸ்தரிக்க முடியா விட்டாலும், நிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்க முடிகிறது. இன்றைய விஞ்ஞானப் படைப்புகள் ஓர் இலை முளைத்த இடத்தில் ஈரிலைகளையும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிர்களையும் விளைவிக்கக்கூடியவாகின்றன. விவசாயத்தில் விஞ்ஞானத்தைப் புகுத்துவதால் இன்னும் பல மடங்கு அதிக உற்பத்தியைப் பெற முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மண்வளம் ஏறக் குறைய ஒரே மாதிரி இருப்பினும், ஜப்பானில் இந்தியாவைவிட அதிக அளவு கோதுமையோ, நெல்லோ விளைவிக்க முடிகிறது. இதற்குக் காரணம், அங்கு விவசாயத்தில் ஈடுபடுத்தப்பெறும்

உரம், நல்ல விதை, சாகுபடி முறை ஆகியவைதாம். இம் முறைகளை இந்தியாவிலும் பின்பற்றினால் இன்னும் அதிக உற்பத்தியைப் பெறமுடியும். எனவே, முதலைப்போலவே நிலத்தையும் அதன் பயன்பாட்டால் விஸ்தரிக்க முடியும்.

எனவே, நிலத்துக்கும் முதலுக்கும் அதிகமாக வித்தியாசம் ஒன்றுமில்லை என்பது தெரிகிறது. இருப்பினும், நிலத்தைத் தனி ஒரு காரணியாகப் பாவித்து நமது ஆய்வைச் செய்வது வசதியானது என்ற காரணத்தால் அதைப் பின்பற்றுகிறோம்.

**குறைந்துசெல் விளைவு விதி (The Law of Diminishing Returns)**

ஒரு காணி நிலம் வைத்திருக்கும் உழவன் தனது சாகுபடி மகசூலைப் பெருக்க அடிக்கடி முயற்சி எடுத்துக்கொள்வதுண்டு. ஓர் ஏரையும் ஓர் இணை மாடுகளையும் வைத்துக்கொண்டு சாகுபடி செய்வதை விடுத்து அதை இரட்டிப்புச் செய்தால் அவனது மகசூலும் இரட்டிப்பாகுமா? இவ்வித இரட்டிப்பு, இரட்டிப்பு மகசூலைத் தராது என்று உழவனுக்குத் தெரியும். ஆனால், அவனது மகசூல் அளவு ஓரளவுக்கு அதிகரிக்குமேயொழிய இரட்டிப்பாகாது. இவ்வாறு இரட்டிப்பாவது சாத்தியமானால் உலகில் உணவுப்பஞ்சம் ஏது? நல்ல தஞ்சாவூர்ப் படுகை நிலத்தில் சில ஆயிரம் ஏக்கர்களை எடுத்துக்கொண்டு, முதலையும் உழைப்பையும் இரண்டு பங்கு, மூன்று பங்கு, நூறு பங்கு என்று அதிகப்படுத்தி வேண்டிய அளவு தானியத்தைப் பெற்றுவிட முடியுமே! ஆனால், வாழ்க்கையில் உழவன் கண்ட உண்மை இவ்வாறு மகசூலைக் குறிப்பிட்ட அளவு நிலத்தை வைத்துக்கொண்டு அதிகரிக்க முடியாது என்பதுதான்.

வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து பெறப்பட்ட இவ் வுண்மையைப் பொருளாதாரத்தில் ஒரு விதியாக ஆக்கியுள்ளார்கள்.

ஓர் உதாரணத்தை வைத்து இவ் விதியின் தன்மையைப் பார்ப்போம்.

| நிலத்தின் அளவு | ஆட்கள் | மொத்த விளைவு (நெல் மூட்டை) | சராசரி விளைவு (ஓர் ஆளுக்கு) | இறுதிநிலை விளைவு |
|---|---|---|---|---|
| 5 ஏக்கர் | 2 | 25 | $12\frac{1}{2}$ | 25 |
| ,, | 4 | 47 | $11\frac{3}{4}$ | 22 |
| ,, | 8 | 52 | $6\frac{1}{2}$ | 5 |

இதில் 5 ஏக்கர் நிலத்தை எடுத்துக்கொண்டு 2 ஆட்கள் வேலை செய்வார்களானல் மொத்த விளைவு 25 மூட்டை நெல் என்று கொள்வோம். வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி நான்கு பேரை உழைக்கச் செய்தால் மொத்த விளைவு 47 மூட்டையாக உயருகிறது. ஆனல், மொத்த விளைவு இரட்டிப்பாக ஆகவில்லை. அதாவது, 50 மூட்டையாகவில்லை. மொத்த விளைவு அதிகரிக்கிறது. ஆட்களை அதிகரிக்கும் விகிதத்தைவிடக் குறைந்த ஒரு விகிதத்தில் விளைச்சல் அதிகரிக்கிறது. நாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய அம்சம் இறுதிநிலை விளைவுதான். ஏற்கெனவே இறுதிநிலைபற்றிக் கூறியுள்ளோம். முதல் தடவை 2 ஆட்கள் உழைத்ததற்கும், இரண்டாம் தடவையில் 4 ஆட்கள் உழைத்ததற்கும் இடையில் உள்ள வேற்றுமையை இறுதிநிலை விளைவு என்று கொள்ளலாம். இங்குக் கொடுக்கப் பெற்றுள்ள எடுத்துக்காட்டில் இறுதிநிலை விளைவு குறைந்து செல்வதைக் காண்கிரேும். இங்கு ஆட்களைப் படிப்படியாக இரட்டிப்பாக்குவதாக அனுமானித்துள்ளோம். அதற்குப் பதிலாக அதைச் செலவீடாகக் கணித்து ஏற்படும் விளைவு மாற்றங்களைக் காணலாம்.

| தடவை | நிலம் (ஏக்கர்) | செலவீடு (ரூபாய்) | மொத்த விளைவு (மூட்டை) | இறுதிநிலை விளைவு (மூட்டை) |
|---|---|---|---|---|
| I | 5 | 500 | 15 | 15 |
| II | ,, | 1,000 | 28 | 13 |
| III | ,, | 2,000 | 33 | 5 |

மூட்டை நெல் ரூ. 60ஆக விற்பதாகக் கொண்டால் முதலாம் தடவையில் ரூ. 900 வருமானம் பெறுவான் உழவன். இரண்டாம் தடவையில் ரூ. 1,680 வருமானம் பெறுவான். மூன்ருவது தடவையில் கிட்டத்தட்ட 2,000 ரூபாய் (1980) பெறுவான். இதில் அவனுக்கு மொத்த விளைவு அதிகமாகிக்கொண்டே போனலும் அவனது செலவீட்டின் விகிதத்திற்கு ஏற்ருற்போல உற்பத்தி அதிகரிக்கவில்லை. குறைந்துசெல் வீதத்தில் அது உயருகிறது என்பது வெளிப்படை. இதைக்கொண்டு விதியைக் கூறலாம். கூறுவதற்கு முன்னர் முக்கியமானதொரு நிபந்தனையைக் கூறிவிட வேண்டும். விவசாயத் திறனில் மாற்றம் ஏதும் ஏற்பட்டிருக்கக்

கூடாது. அதாவது சாகுபடி முறையில், விவசாய இயலின் துணை கொண்டு ஏற்படும் மாற்றங்கள் இருக்கவில்லை என்பதாக அனுமானித்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் புது வகை வித்துகள், உரங்கள், புதிய சாகுபடி முறைகள் முதலியன ஈடுபடுத்தப்பெற்றால் நிலைமை வெகுவாக மாறிவிடக்கூடும். விளைச்சல் ஒருவேளை இரட்டிப்புக்கும் அதிகமாகக்கூட மாறலாம். 5 மூட்டை விளைந்த இடத்தில் 15 மூட்டை விளையலாம். குறைந்து செல் விளைவுக்குப் பதிலாக உயர்ந்துசெல் விளைவு தோன்றலாம். இதனால்தான் இவ் விதியின் அடிப்படை நிபந்தனையாக இதைக் கூறிவிடுகிறோம். மார்ஷல் இவ் விதியைக் கீழ்வருமாறு கூறியுள்ளார் : ‘சாகுபடி முறையில் மாற்றம் ஏதும் இல்லாது இருக்குமானால், ஒரு கொடுக்கப்பட்ட நிலத்தில் ஈடுபடுத்தப்பெறும் முதலும் உழைப்பும் அதிகப்படுத்தப்பெறும் விகிதாசாரத்துக்குக் குறைவாகவே விளைவு இருக்கும்.’

குறைந்து செல்வது இங்கு இறுதிநிலை விளைவுதான். மொத்த விளைவு குறைந்துசெல் விதத்தில் உயருகிறது. மேலும், இவ் விதி சில இடங்களிலும் சில சமயங்களிலும் உண்மையாகாமல் இருக்கலாம். ஓர் ஏக்கர் நிலத்திற்குச் சாதாரணமாக 3 பேரின் உழைப்பாவது தேவைப்படும் என்று கொள்வோம். அப்படிப்பட்ட நிலையில் ஓர் ஆள் வேலை செய்யும்போது அதன் முழு மகசூலையும் அவனொருவனே பெற்றுவிட முடியாது. எனவே, இரண்டு பேராகச் சேர்ந்து உழைக்கும்போது ஒருவனைப் பெற்றதைவிட இரட்டிப்புக்கும் அதிகமாக ஒருவேளை மகசூலைப் பெறக்கூடும். இதேபோன்று கன்னி நிலமாக இருந்து, இதுவரை உழப்படாமல் இருந்து முதன்முதலாக உழப்படும்போது அதன் மகசூல் வெகுவாக உயரலாம்.

நிலம் என்னும் தலைப்பின்கீழ் இவ் விதி விளக்கப்பட்டதன் காரணம் முதன்முதலாக உழவுத் தொழிலை மேற்கொண்டவர்கள் இவ்வனுபவத்தைப் பெற்றமையால் இதை நிலத்தின் தனித் தன்மையாகக் கருதினார்கள். மேலும், வேறு காரணிகளுக்கில்லாத அளவுக்குட்பட்ட நிலத்தின் தன்மை இவ் விதியை வகுப்பதற்குத் துணைபுரிந்தது. வெகுகாலமாக நிலம் ஒன்றுக்குத்தான் இவ் விதி பொருந்தும் என்று கருதப்பெற்றது. முதல் சம்பந்தப்பட்ட உற்பத்திகளில் உயர்ந்துசெல் விளைவு (increasing returns) காணப்படுகிறதென்றும், நிலத்தின் உற்பத்தியில் குறைந்துசெல் விளைவு காணப்படுகிறதென்றும் கூறப்பட்டது. இயற்கை எங்கு முக்கிய பங்கு பெற்றுள்ளதோ அங்கெல்லாம் குறைந்துசெல் விளைவும், மனித முயற்சி எங்கு அதிகப் பங்கு பெற்றுள்ளதோ அங்கெல்லாம்

உயர்ந்துசெல் விளைவும் காணப்படுவதாகக் கொண்டனர். ரிக்கார்டோ (Ricardo), மால்தஸ் (Malthus) போன்ருேர் இவ் வகைக் கருத்துகளைக் கொண்டிருந்தனர்.

ஆனால், உண்மையில் இவ் விதி எல்லாக் காரணிகளுக்கும் பொருந்தக்கூடியதாகும். உற்பத்திக் காரணிகளைக் கலந்து, அக் கலவையினின்று உற்பத்தியைப் பெறமுடிகிறது. இக் கலவையின் விகிதாசாரம் மாற்றப்படக்கூடியதாகும். உதாரணமாக, 5 ஏக்கர் நிலம் + 3 ஆட்கள் + 300 ரூபாய் பெறுமான முதல்+ நிலச் சொந்தக்காரரின் மேற்பார்வை சேர்ந்துதான் விளைவு கிடைக்கச் செய்கிறது. இதில் ஒரு காரணியைமட்டும் மாற்ருமல் இதர காரணிகளின் விகிதத்தை மாற்றும்போது முதலில் விளைவு அதிகரித்தாலும், அவ்வித மாறுதல் தொடர்ந்து நிகழுமானல் விளைவு குறைந்து செல்லும் வீதத்தில் உயருவதாகவும் இருக்கும். எட்வின் கானன் (Edwin Canan) என்பார் கூறியது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இவ் விதிமட்டும் இல்லாதிருந்தால் உலக மக்களின் துணிமணித் தேவைகளையெல்லாம் ஒரே ஒரு பஞ்சாலையை வைத்துத் தீர்த்துவிட்டிருக்கலாம். மேலும் மேலும் முதலையும், தொழிலையும் அவ்வாலையில் செலுத்தி உற்பத்தியைப் பெருக்கி இருக்கலாம் அல்லவா? ஆனல், குறைந்துசெல் விளைவு விதி இவ்வாறு நடைபெற வொட்டாது தடைசெய்துவிடுகிறது. இவ் விதியின் இற்றைய அமைப்பு வேறுபட்டுள்ளது.

**உயர்ந்துசெல் விளைவு விதியும் மாரு விளைவு விதியும்**

இன்று இவ் விதிகளுக்கு வேறு பெயர்கள் கொடுக்கப் பெற்றுள்ளன; மாறும் விகிதங்களின் விதி (Law of Variable Proportions) என்றும், விளைவு விதி (Law of Return) என்றும் அழைக்கின்றனர். உற்பத்தி நோக்கிற்காக உள்ள காரணிகளின் கலவை விகிதம் மாற்றப்படக்கூடியது. இவ்வாறு ஒன்றுக்குப் பதிலாக ஒரு காரணியைப் பதிலீடு செய்வதன்மூலம் உற்பத்தியாளர் உச்ச அளவுப் பயனைப் பெற முயல்கிருர். இவ்வாறு முயலும்போது, ஏதோ ஒரு காரணியை மாருது வைத்துக்கொண்டு இதர காரணிகளின் விகிதத்தை மாற்றினல் மூன்று வகை விளைவுகள் ஏற்படலாம்: 1. உயர்ந்துசெல் விளைவு (increasing returns); 2. மாரு விளைவு (constant returns); 3. குறைந்துசெல் விளைவு (diminishing returns).

ஒரே உற்பத்தி நிலையில் இம் மூன்று கட்டங்களையும் காண முடியும். உதாரணமாக, நெசவாலை ஒன்றை எடுத்துக்கொண்டு இதைப் பார்க்கலாம். 1,000 தொழிலாளரோடு அவ்வாலைஇயங்குவ

தாகக் கொள்வோம். ஆயிரம் தொழிலாளர் 8 மணி நேரம் வேலை செய்தால் அதன் இயந்திரங்களை முழுவதாக வேலை செய்ய வைக்க முடியாது அல்லவா? இன்னும் ஓராயிரம் பேரை நியமித்தால் இரண்டு ஷிப்டுகளும், மூவாயிரம் பேரை நியமித்தால் 24 மணி நேரமும் அவ்வாலை இயங்கிக்கொண்டிருக்க முடியும். இதற்கு வேண்டிய கச்சாப் பொருள்களும், இதர உற்பத்திச் சாதனங்களாகிய எரிபொருள், எண்ணெய், மின்சக்தி ஆகியவற்றையும் அதிகரிக்கவேண்டும். மேலும், இதை நிர்வகிக்கும் பிரிவும் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது இவ்வாலையின் விளைவு அதிகரிக்கும். உயர்ந்துசெல் விளைவு விதியை இக் கட்டத்தில் நாம் சந்திக்கிறோம். இன்னும் ஆலையை விரிவுபடுத்தி இயந்திரங்களையும் அதிகப்படுத்தித் தொழிலாளர்களையும் அதிகப்படுத்தினால் விளைவு மாறாததொரு நிலையில் இருக்கும். ஆனால், காரணிகளை இன்னும் அதிகரித்துக் கொண்டே போனால் இறுதியில் குறைந்துசெல் விளைவு தோன்றும். ஒரு வகுப்பறையில் 4 பேர் மாத்திரம் உட்கார்ந்திருப்பது பயன் அதிகமுள்ளதாகாது. 40 பேர் வரை அதிகரிக்க அதிகரிக்க அவ்வறையின் பயன் உயர்ந்து செல்லும். 40-க்கும் மேல் அதிகரித்தால் குறைந்துசெல் பயனைத் தரும்; அதாவது, நெருக்கடி ஏற்பட்டுக் கொடுக்கும் வேலையைச் செய்ய முடியாது குழப்பம் ஏற்படுமல்லவா ? ஒரு வரைகோடு வரைந்து பார்த்தால் இதைக் குறிக்கும் கோடு முதலில் வலப்புறமாக மேல்நோக்கி உயர்ந்து செல்லும். அது உயர்ந்துசெல் விளைவைக் காட்டுவதாகும். பின்னர் அது வலப்புறமாகக் கிட்டத்தட்ட படுகிடையாகச் செல்லும். இது மாறா விளைவுகளைக் காட்டும். பின்னர் கோடு கீழ் நோக்கிச் செல்லுமாயின் அது குறைந்துசெல் விளைவைக் காட்டும்.

**உற்பத்திச் செலவுகளும் இவ் விதியும்**

உற்பத்திச் செலவுகளையும் விளைவையும் ஒப்பிட்டு இம் மூன்று கட்டங்களையும் குறிப்பிடுகின்றனர். உற்பத்திச் செலவு ஓர் அலகு விளைவிற்கு ஆவதைவிட அதிக அளவு அலகுகள் விளைவிக்கும்போது குறையுமானால் அதைக் குறைந்துசெல் செலவு (Decreasing Cost) என்று அழைக்கலாம். விளைவு உயர உயர ஒவ்வோர் அலகின் உற்பத்திச் செலவும் அதிகரித்த வீதத்தில் செல்லுமானால் அதை உயர்ந்துசெல் செலவு (Increasing Cost) என்றும், விளைவு எவ்வளவு அதிகரிப்பினும் அதே விகிதாசாரத்தில் செலவும் அதிகரிக்குமானால் அதை மாறாச் செலவு (Constant Cost) என்றும் கூறுவர். இம் மூன்று

வகை விளைவு விதிகளையும் விளக்கிக் காட்டும் படத்தைக் கீழே காணலாம்.




படம் - 4

படத்தில் A B என்னும் கோடு குறைந்துசெல் செலவு விதியைக் (Law of Decreasing Cost) காட்டுகிறது. உற்பத்திச் செலவு குறைந்து செல்லும் என்பது மொத்த உற்பத்திச் செலவைக் குறிக்கவில்லை. மொத்த உற்பத்திச் செலவு உயர்ந்து கொண்டுதான் போகும். பண்டத்தின் ஓர் அலகு உற்பத்திச் செலவும் இறுதிநிலை ஆக்கச் செலவும்தாம் (marginal cost) குறைந்து செல்லும். இவ்வாறே BC என்னும் கோடு மாறாச் செலவு விதியையும் (Law of Constant Cost) CD என்னும் கோடு உயர்ந்துசெல் செலவு விதியையும் ((Law of Increasing Cost) விளக்கிக் காட்டுகின்றன.

# 8. உழைப்பு

## . (Labour)

நிலத்திற்குச் சில தனித் தன்மைகள் இருந்ததைப்போலவே உழைப்பிற்கும் உண்டு. முதலாவது, உழைப்பைப்பற்றிப் படிக்கும் மனிதனே உழைப்பாளிதானே! அவனுக்குள்ளேயே காணப்படும் பண்பு இது. உழைக்கும் மனிதன் ஒரு மூலமாகவும், முடிவாகவும் இருக்கிருன். உழைப்பிலிருந்து மனிதனைப் பிரிக்க முடியாது. உழைப்பு மனிதனின் தலைசிறந்த பண்பாகும். இரண்டாவதாக உழைப்பு, அதனைத் தரும் மனிதன் இருக்கும் இடத்திலேயேதான் இருக்கமுடியும். உழைப்பைத் தனியே எடுத்து விற்க முடியாது. மூன்ருவது, மனித உழைப்பு அழியும் (perishable) தன்மை பெற்றது. அதாவது, ஒரு நாளின் ஒரு மணி நேரம் மீண்டும் திரும்பி வரப்போவதே இல்லை. அந்த நேரத்தின் உழைப்பு சேமித்துவைக்கப்பட முடியாததாகும். உழைப்பினுல் உண்டாகும் பொருள்கள் பண்டங்கள் முதலியன சேமித்து வைக்கப்படலாம். ஆனுல், உழைப்பு என்னும் சக்தியைச் சேமித்து வைக்க முடியாது.

### உழைப்புத் தேவை (Demand for Labour)

ஒரு பொருளுக்கு, அல்லது பண்டத்துக்கு அல்லது பணிக்குள்ள தேவையே உழைப்பின் தேவை எனலாம். இருப்பினும், உழைப்புத் தேவை கீழ்வரும் சூழ்நிலைகளைப் பொறுத்து அமையும். வியாபாரம் எந்த அளவில் நடக்கிறது என்பதைப் பொறுத்து உழைப்புத் தேவைப்படும். மேலும் உபகரணங்கள், மூலங்கள், சாதனங்கள் ஆகியவை கிடைக்கும் தன்மையைப் பொறுத்தும் உழைப்புத் தேவை நிர்ணயிக்கப்பெறும். உற்பத்தி முறையின் தன்மை சார்ந்தும் உழைப்புத் தேவை நிர்ணயிக்கப்பெறும். தொழில்நுட்ப அறிவு, சாதனங்களின் பதிலீடு (substitution) ஆகியவற்றைச் சார்ந்தும் உழைப்புத் தேவை இருக்கும்.

பொருளாதாரத்தில் உழைப்பு என்று நாம் அழைப்பது பணத்திற்காகவோ அல்லது பண்டத்திற்காகவோ மாற்றுக்குள்ளாகும் உழைப்பை மாத்திரம்தான். பொருள் சார்பில்லாத உழைப்பு நமது ஆய்விற்குள் வரவில்லை. பொருள் சார்பில்லாத உழைப்பு உலகில் எத்துணையோ நன்மைகளை உண்டுபண்ணியுள்ளது. மனிதனை மனிதனாக எண்ண வைப்பதுங்கூடப் பொருள் சார்பில்லாத உழைப்புதான். எனினும், இங்கு நாம் ஆய்விற்கு எடுத்துக்கொள்வது அதுபற்றி அன்று. தன்னலங் கருதாது தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கும் தாயின் உழைப்பு பொருளாதார இயலுக்கு அப்பாற்பட்டது. பொருட்பயனை நோக்காகக் கொண்டு இயக்கப்பெறும் உழைப்பே நமது இயலின் எல்லைக்குட்பட்டதாகும்.

உழைப்பு மன உழைப்பு, உடலுழைப்பு எனப் பிரிக்கப் பெறுவதுண்டு. உழைப்பு ஏதோ ஒரு வேதனையுண்டாக்கக்கூடிய செயல் என்பதாகப் பழைய காலத்தில் சொல்லப்பட்டதுண்டு. உழைப்பு மனிதனின் இயற்கையான பண்பு. அதை ஒரு வேதனை தரும் முயற்சி எனக் கூறுவது அவ்வளவுப் பொருத்தமானதன்று. உண்டு, உறங்கிச் சோம்பேறியாய் வாழ்வதே சிறப்பு என்று நினைக்கும் சமுதாயத்தில்தான் உழைப்பை அவ்வாறு வேதனையானது என்று நினைப்பார்கள்.

**உழைப்பின் அளிப்பு** (Supply of Labour)

உழைப்பின் அளிப்பு என்பது பல காரணிகளைச் சார்ந்துள்ளது.

1. உழைக்கத் தகுதிபெற்ற வயதுவந்த உழைப்பாளர்களைப் பொறுத்தது.

2. அவர்கள் உழைக்கும் கால அளவைப் பொறுத்தது. அதாவது, 8 மணி நேர வேலைக்குப் பதிலாக 12 மணி நேரம் வேலை செய்வார்களானால் அதிக உழைப்பு அளிப்பு இருக்கிறது அல்லவா!

3. உழைக்கும் திறமையைப் பொறுத்தும் அளிப்பு இருக்கிறது.

4. இதில் உழைக்கும் மக்கள் மொத்த மக்கள்தொகையின் ஒரு பாகமாகையால், மொத்த மக்கள்தொகையின் பெருக்கமோ, சுருக்கமோ உழைப்பாளிகளின் எண்ணிக்கையைப் பாதிக்கக் கூடும். எனவே, மொத்த மக்கள்தொகையைச் சார்ந்தும் உழைப்பின் அளிப்பு உள்ளது. இதிலிருந்துதான் மக்கள்தொகைக்

கோட்பாடுகள் (population theories) பல தோன்றின. இவை பற்றிப் பார்ப்போம்.

### 1. மால்தசின் (Malthusian) கோட்பாடு

1798ஆம் ஆண்டில் டி. ஆர். மால்தஸ் (T. R. Malthus) என்பவர் மக்கள்தொகைபற்றிய கட்டுரையொன்றை வெளியிட்டார். முதலில் இது எழுதியவரின் பெயர் இல்லாது வெளியிடப் பெற்றது. பல கண்டனங்களும், குறைகளும், பாராட்டுகளும் இக் கட்டுரைபற்றி எழுதப்பெற்றமையால் 1803-ல் இதை இரண்டாவது முறையாகத் திருத்தி வெளியிட்டார். அதுபோழ்து அவரது பெயரையும் வெளியிட்டார். இக் கட்டுரை மிகவும் காரசாரமான விவாதத்துக்கு இலக்காக இன்றும் விளங்குகிறது. அவர் எழுதிய காலத்திலிருந்து இன்றுவரை எவ்வளவோ கட்டுரைகள் இதுபற்றி எழுதப்பட்டுவிட்டன.

இவரது கட்டுரையின் சாரம் வருமாறு: மக்கள்தொகைப் பெருக்கம் ஏற்படுவது மனித இனத்தின் புலன்சார் இயல்புகளால் நிகழுகிறது. இனவிருத்தி செய்வது, மிருகங்கள் தாவரங்கள் போன்றே மனிதனும் பெற்ற இயற்கைப் பண்பு. ஆனால், மனிதன் பகுத்தறிவுடையவன் ஆதலால் தனது பெருக்கத்தைத் தானே தடை செய்துகொள்ளமுடியும். அவ்வாறு தானே தடை செய்து கொள்வதைத் தவிர்ப்புத் தடைகள் (preventive checks) என்று இவர் அழைத்தார். இவ்வாறு தானே தவிர்ப்புத் தடைகள் செய்து கொள்ளாவிட்டால் மக்கள்தொகை மிகையாகப் பெருகிவிடும். அவ்வாறு பெருகும்போது இயற்கை சில தடைகளை உண்டாக்கும். இவற்றை இயல்புத் தடைகள் (positive checks) என்று அழைத்தார். இவ்வியல்புத் தடைகள் பஞ்சம், பட்டினி, சிசு மரணம், சாவு, கொள்ளை நோய், யுத்தம் ஆகியவைகளாகும். மக்கள்தொகைப் பெருக்கம் உணவுப் பெருக்கத்தைவிட அதிக அளவு பெருகிவிடும் தன்மையுடையது. அவ்வாறு ஏற்படுவதற்குக் காரணம் மனித இனப் பெருக்கம் புலன்சார் பண்புகளால் ஏற்படுவதாகும். தடையேதுமில்லாதிருந்தால் மக்கள்தொகை இரட்டிப்பு வீதத்தில் பெருகும். இதை ஜியோமிதி வீதம் (geometric ratio) என்று அழைப்பர். அதாவது 1, 2, 4, 8, 16, 32, 64, 128 என்று இரட்டித்துக்கொண்டே போகும். ஆனால், உணவுப் பெருக்கம் எண் வளர்ச்சியை ஒத்ததாக இருக்கும் (arithmetic ratio). அதாவது 1, 2, 3, 4, 5, 6, 7, 8, ......... என்று உயர்ந்து செல்லக்கூடியது. எனவே, மக்கள்தொகைப் பெருக்கம் உணவுப் பெருக்கத்தைவிட மிகையாகவே இருக்கும். தவிர்ப்புத் தடைகளை மனிதன் தன் பகுத்தறிவின் துணைகொண்டு பயன்படுத்தாது

விட்டுவிட்டால், இயல்புத் தடைகள் அவனது மக்கள் பெருக்கத்தைத் தடை செய்யும். இவ்வியல்புத் தடைகள் ஒழுங்கீனத்தையும் சொல்லொணுத் துன்பத்தையும் விளைவிக்கும். ஏராளமான சிசுக்கள் மரணமடையும். வாழ்வோரின் வாழ்நாட்காலமும் மிகக் குறைவானதாக இருக்கும். அவர்களது வாழ்க்கை வசதிகள் மிகக் குறைவாக இருக்கும். உண்ண உணவிருக்காது. உடையிருக்காது. இருக்க வீடிருக்காது. வாழ்க்கை மிகவும் இன்னலுக்குள்ளாகும். நெருக்கியடித்துக்கொண்டு குடிசைகளிலும், கொட்டடியிலும் மனிதன் வாழும்போது தொற்று நோயும், கொள்ளை நோயும் அவனது வாழ்க்கையைப் பயனற்றதாகச் செய்யும். பஞ்சம் தலைவிரித்தாடும். பட்டினிச் சாவுகளும், பூசல்களும், போராட்டங்களும் மலிந்து மனித வாழ்க்கை மோசமானதாகவும், குறுகியதாகவும், மிருகத்தனமானதாகவும் ஆகும். இவ்வித இயல்புத் தடைகளால் மக்கள்தொகை குறைக்கப்பட்டு உணவு கிடைக்கும் அளவிற்குள்ளாக்கப்படும். இவ்வாறு நேராது தடை செய்ய மனிதனுல் தவிர்க்கமுடியும். கல்யாணம் செய்யாது இருந்துவிடுதல், திருமண வயதைத் தள்ளிப் போடுவது, கணவனும் மனைவியும் இச்சையைக் கட்டுப்படுத்தி நெறிவாழ்வு வாழ்வது ஆகியவற்றின்மூலம் மக்கள் பெருக்கத்தைத் தடை செய்யலாம். அதன்மூலம் இயல்புத் தடைகள் உண்டாக்கும் வேதனையையும், ஒழுங்கீனத்தையும் தவிர்க்கலாம்.

இதில் முக்கியமாகக் காணப்பெறும் அம்சங்களைச் சுருக்கலாம். 1. மக்கள்தொகைப் பெருக்கம் உணவுப் பெருக்கத்திற்குக் கட்டுப்பட்ட ஒன்ருகும். 2. உணவு ஆக்கம் வளருமாயின் மக்கள் தொகையும் வளரும் தன்மையுடையது. 3. இருவகைத் தடைகள் மக்கள்தொகையை உணவு கிடைக்கும் அளவிற்குள்ளாக நிறுத்திவைக்கின்றன. இவை இயல்புத் தடைகளும், தவிர்ப்புத் தடைகளுமாகும். இயல்புத் தடைகள் துன்பத்தையும், ஒழுங்கீனத்தையும் கொடுப்பனவாகும். மால்தசு அமெரிக்க நாட்டின் மக்கள்தொகைப் பெருக்கத்தைச் சுட்டிக்காட்டி இவ்வகையான, உணவுக்கும் மக்கள்தொகைக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்கினுர்.

### இக் கோட்பாட்டின் குறைபாடுகள்

1. முதலாவதாக, மக்கள்தொகைப் பெருக்கம் இருபத்தைந்து ஆண்டுகளுக் கொருமுறை இரட்டிக்கும் என்பது வரலாற்றில் பொய்யாகிவிட்டது. உணவுப் பெருக்கம் இவ்வாறு இரட்டிக்க முடியாதென்ற இவர் வாதமும் பொய்த்துவிட்டது. உணவுப் பெருக்கம் மக்கள்தொகைப் பெருக்க வீதத்தைவிட

அதிகமாகப் பெருக வைக்கமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறு கின்றனர். இவ்வாறு மால்தசு கூறியது வெறும் எடுத்துக் காட்டாகவும், ஒரு விளக்கவுரையாகவும் கூறினர் என்று எடுத்துக் கொள்ளலாம் என்று மார்ஷல் கூறுகிருர். ஜியோமிதி வீதத்தில் மக்கள்தொகை உயருகிறது என்று கூறுவது இலக்கியக் கூற்ருகக் கொண்டாலும், உணவுக்கும், மக்கள்தொகைப் பெருக்கத்துக்கும் உள்ள தொடர்பை மிகைப்படுத்திக் கூறுகிருர்.

2. பிறக்கும் மனிதன் எவனும் சாப்பிட மாத்திரம் பிறக்க வில்லே. உழைக்கவும் பிறக்கிருன். எத்துணேயோ தொழில்கள் இருந்தும் மால்தசு அதையெல்லாம் தனது கவனத்தில் கொள்ள வில்லே.

3. சாகுபடி முறைகளில் எவ்வளவோ முன்னேற்றங்கள் இன்று ஏற்பட்டுள்ளன. இவற்றை மால்தசு எதிர்பார்க்கவில்லே. ஓரளவிற்கு இது அவருக்குத் தெரிந்திருந்தது. இருப்பினும் அவர், மக்கள்தொகைப் பெருக்கம் இறுதியில் உணவுப் பெருக்கத்தை மிஞ்சிவிடும் என்று நம்பினர். ஏதோ சில காலத்துக்கு மனிதனின் அறிவு இவ்வித நிலேயைத் தள்ளிப்போடும். ஆனல், ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் இது சாத்தியமற்றதாகி, மக்கள் தொகை உணவுப் பெருக்கத்தை மிஞ்சும். அவ்வாறு ஏற்படும் போது பஞ்சமும் பட்டினிச் சாவும் அவனது தலேவிதியாகும்.

4. தவிர்ப்புத் தடைகளேப் பயன்படுத்தித் தனது பெருக் கத்தைத் தடை செய்துகொள்வான் என்று கூறியவர் எவ்வாறு இயல்புத் தடைகளால் தடுக்கப்படும் என்று கூறுவது? இயல்புத் தடைகள் தவிர்ப்புத் தடைகள் இல்லாததால் ஏற்பட்டதென்ருல், தவிர்ப்புத் தடையால் தனது பெருக்கத்தைத் தடை செய்து கொள்வான் என்று எவ்வாறு கூறுவது?

5. அமெரிக்க உதாரணத்தை அவர் அளித்தார் அல்லவா? அவ் வெடுத்துக்காட்டு அவரது வாதத்திற்கு எதிரிடையாக இன்று விளங்குகிறது. மக்கள்தொகையும் வளர்ந்துள்ளது. உணவும் பெருகியுள்ளது. ஆனல், உண்மையில் அவர்களது உணவுப் பெருக்கத்திற்கேற்ற அளவு மக்கள்தொகை பெருகவில்லே என்பதை இன்று உணர முடிகிறது.

6. மக்கள்தொகைப் பெருக்கத்தைப்பற்றியும், அது வளர விடாது தடைசெய்யும் தடைகளேப்பற்றியும் எழுதிய மால்தசு, மக்கள்தொகைக்கும் செல்வத்திற்கும், தேசீய உற்பத்திக்கும் உள்ள தொடர்பைப்பற்றி எழுதவில்லே. நாட்டு மொத்த

உற்பத்திபற்றி அவர் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. இருப்பினும், மால்தசு முக்கியமானதொரு பணியை ஆற்றியுள்ளார் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். உலகின் மக்கள்தொகை இன்று பயங்கரமான வேகத்தில் பெருகி வருகிறது. ஐக்கிய நாட்டுச் சபையின் கணிப்பின்படி . மக்கள்தொகை ஆண்டொன்றுக்கு 2 சதவிகிதமாக உயருகிறது. 1952ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை 2·6 மில்லியனாக இருந்தது. 1964-ல் அது 3·3 மில்லியனாக உயர்ந்தது. ஒரு வருடத்திற்கு 6½ கோடி மக்கள் அதிகரிக்கிறார்கள். அதாவது இங்கிலாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய மூன்று நாடுகளின் மக்கள் தொகைக்குச் சமமாக வருடந்தோறும் அதிகரிக்கிறார்கள். வாரத்திற்கு 12,50,000 பேர் அதிகரிக்கிறார்கள் என்றால் பாருங்களேன்! இவ்வித நிலை ஏற்படும் என்பதை மால்தசு தீர்க்க தரிசனமாக உரைத்தார். அவரது இயல்புத் தடைகளில் மனிதன் தானாக மேற்கொள்ளும் கர்ப்பத் தடை, கருவழிப்பு முதலியன வற்றையும் சேர்த்துக்கொண்டது அவரது சமயச் சார்பின் காரணமாக இருக்கலாம். இன்று இவ்வகைத் தடைகள் உலகெங்கும் பின்பற்றப் பெறுகின்றன. இன்றும் மால்தசின் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் உண்டு. இவர்களை நவ மால்தூசியர் (Neo Malthusians) என்று அழைக்கிறார்கள்.

**உத்தம அளவு மக்கள்தொகைக் கோட்பாடு (Optimum Population)**

மால்தசின் கோட்பாடு உற்பத்திபற்றியும், நாட்டின் பொருளாக்கம்பற்றியும் ஒன்றுமே கூறவில்லையாதலால் வேறொரு கோட்பாடு தோன்றியது. இக் கோட்பாடு மக்கள்தொகைக்கும் நாட்டின் செல்வம், பொருளாக்கம் ஆகியவற்றிற்கும் உள்ள உறவை விளக்குவதாக உள்ளது.

ஒரு நாட்டின் மக்கள்தொகை உத்தம அளவைக் கணிக்க அந்த நாட்டின் பயிர்த்தொழில்முறை, தொழில்முறை ஆகிய எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். எல்லாத் தொழில்களும், நாட்டில் இருக்கின்ற செல்வமனைத்தும் உச்ச விளைவு நிலையை எய்த எந்த மக்கள் தொகை அளவு துணை செய்யுமோ அந்த அளவை உத்தம அளவு மக்கள்தொகை என்று கூறலாம். இந்த அளவிற்குக் கீழாக மக்கள்தொகை இருந்தால் நாட்டின் செல்வத்தைச் சரியான வழியில் பயன்படுத்தி உச்ச விளைவைப் பெறமுடியாது. அவ்வாறு இருக்குமானால் அதை 'போதா மக்கள்தொகை' (under population) என்று அழைக்கலாம். உத்தம அளவிற்கும்மேல்

மக்கள்தொகை இருக்குமானுல் அதை மிகை மக்கள் தொகை (over population) என்று அழைக்கலாம்.

இது கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் நிகழ்வதாகும். உற்பத்தி முறை, சாதனங்கள், மூலங்கள் ஆகியவை மாருதிருக்கும் ஒரு நிலையில்தான் உத்தம அளவு மக்கள்தொகை இவ்வளவு என்று கணிக்கவேண்டும். இச் சூழ்நிலையில் மாறுதல் ஏற்படுமானுல் புதிய சூழலுக்கேற்ப உத்தம அளவு மக்கள்தொகை எண்ணிக்கையும் வேறுபடும். எனவே, உத்தம அளவு மக்கள்தொகை என்பது எக் காலத்திலும் மாருத ஓர் எண்ணன்று. உற்பத்தி முறைகளும், உற்பத்திச் சாதனங்களும் மாறும்போது மக்கள் தொகை எண்ணிக்கையின் உத்தம அளவும் வேறுபடும்.

உதாரணமாக, ஒரு நாட்டில் உள்ள மக்கள்தொகை அங்குள்ள பொருளாதார நிலைமைக்கேற்ப உத்தம அளவினதாக இருப்பதாகக் கொள்வோம். அந்த நாட்டில் புதிதாகக் கனிப் பொருள்கள் கண்டுபிடிக்கப்படுமானுல் அங்குள்ள மக்கள்தொகை உத்தம அளவில் இருந்து குறைந்து போதா மக்கள்தொகையாகக் கூடும். மக்கள்தொகையின் உழைப்பாளர் எண்ணிக்கை, திறன் ஆகியவை உயருமானுல் அதற்கேற்ப உத்தம அளவும் மாறுபடும். எனவே, இவ் உத்தம அளவு மாறுந்தன்மையது.

இதுபற்றி மீட் (Meade) அவர்கள் தந்துள்ள உதாரணம் இதை விளக்குவதற்குத் துணைபுரியும். அவர் தந்துள்ள அட்டவணையின் படி நாமும் ஓர் அட்டவணையைக் கற்பனையாகத் தயார் செய்து பார்க்கலாம்.

| மக்கள் தொகை | தலா உற்பத்தி (Per head output) | மொத்த ஆக்கம் (Total product) | இறுதிநிலை ஆக்கம் (Marginal product) |
|---|---|---|---|
| 3 கோடி | 50 கோடி | 150 கோடி | — |
| 4 ,, | 55 ,, | 220 ,, | 70 கோடி |
| 5 ,, | 60 ,, | 300 ,, | 80 ,, |
| 6 ,, | 65 ,, | 390 ,, | 90 ,, |
| 7 ,, | 62 ,, | 434 ,, | 44 ,, |
| 8 ,, | 55 ,, | 440 ,, | 6 ,, |

இவ் வட்டவணையில் மக்கள்தொகை 6 கோடியாக இருக்கும் போது இறுதிநிலை ஆக்கம் உச்சநிலையை அடைகிறது. இறுதி நிலை ஆக்கம் தலா உற்பத்தியைவிட அதிகமாக இருக்கும் வரையில் மக்கள்தொகைப் பெருக்கம் தலா உற்பத்தியைப் பெருக்குகிறது. அதற்குப் பிறகு அது குறைந்துவிடுகிறது. ஆக இவ் உதாரணத்தின்படி 6 கோடி மக்கள்தொகை உத்தம அளவு மக்கள் தொகையாகும். 6 கோடிக்கு அதிகமாக மக்கள்தொகை மிகையான மக்கள்தொகையாகும். 6 கோடிக்கும் குறைவான மக்கள்தொகை போதா மக்கள்தொகையாகும்.

டால்டன் என்பவர் இதற்கொரு சூத்திரம் வகுத்துள்ளார். $M = \frac{A-O}{O}$ : இதில் மக்கள் தொகை உத்தம அளவில் இல்லாது கூடவோ, குறையவோ இருக்கும் தன்மையை M குறிக்கிறது. A அங்குள்ள மக்கள்தொகையைக் குறிப்பிடுகிறது. O உத்தம அளவைக் குறிக்கிறது. M நேர்க்கணியமாக (positive) இருந்தால் அது மக்கள்தொகை மிகையாக உள்ளது என்பதையும், எதிர்க் கணியமாக (negative) இருந்தால் போதா மக்கள்தொகையைக் காட்டுகிறதென்றும் கூறினர்.

**கோட்பாடுபற்றி விமரிசனம்**

1. இக் கோட்பாடு மால்தசின் கோட்பாட்டைவிட முன்னேற்றமடைந்ததுதான். ஏனெனில், பொருளாதார நடவடிக்கை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் மக்கள்தொகைபற்றிக் கூறுகிறது. மால்தஸ் உணவு உற்பத்தியைமட்டுமே முக்கியமானதாக எடுத்துக் கொண்டார். இதனல் வருங்காலத்தில் மக்களுக்கு ஒரு நம்பிக் கையை ஊட்டுவதாக இருக்கிறது. உற்பத்தியின் முக்கியத்தை வலியுறுத்துவதால் மக்கள்தொகைப் பெருக்கம் என்றல் பயந்து ஓடவேண்டிய ஒரு காரியமன்று என்பதை விளக்குகிறது. எல்லாவகை மக்கள்தொகைப் பெருக்கமும் பயங்கரமான விளைவுடையது என்று கருதாமல் உற்பத்தியோடு ஒப்பிட்டு அது உத்தம அளவா இல்லையா என்று கூற முடிகிறது. மிகக் குறைந்த அளவு மக்கள் தொகை கொண்டிருப்பது ஏதோ சிறப்புள்ளதொரு பண்பாகக் கருதாமல் அதையும் ஒரு குறைவாகவே மதிப்பிட இக் கோட்பாடு துணைபுரிகிறது. ஆயினும், இக் கோட்பாட்டில் முக்கியமானதொரு குறைபாடு உண்டு.

இது அளக்கப்பட அல்லது கணிக்கப்பட முடியாத ஒன்றாகும். எது உத்தம அளவு மக்கள்தொகை என்பதைக் கூறுவது சாத்திய

மானதன்று. அவரவர் கணிப்பிற்கு ஏற்றவாறு உத்தம அளவு எண்ணிக்கை இருக்கும். டால்டனின் சூத்திரத்தில் O என்பது என்ன என்று கணிக்கப்படாத வரையில் அதன் பயன் என்னவாக இருக்கமுடியும்? உற்பத்திக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பைச் சிறப்பாக விளக்க இக் கோட்பாடு உதவுகிறது என்பதைத் தவிர இதனால் செயல் முறையான பயன் அதிகம் இல்லை.

**உழைப்பு அளிப்பின் இதர காரணிகள்**

மக்கள்தொகை மட்டும் உழைப்பு அளிப்பை நிர்ணயிப்பதாக ஆகாது. வேறு பல அம்சங்களும் இதற்குத் துணையாக இருக்கின்றன. 1. மக்கள்தொகையின் உழைப்பாளரின் எண்ணிக்கை. 2. உழைப்பு நேரம். 3. உழைப்புத் திறன். 4. உழைப்புச் சாதனங்கள்.

ஒரு சமுதாயத்தில் ஆண்களில் வயது வந்தோர்மட்டுமே உழைப்பாளிகளாக இருந்தால் அதன் உழைப்பு அளிப்பு அதிகப்பட அங்குள்ள பெண்களும், குழந்தைகளும் வேலை செய்ய முற்படுவதில் அதிகரிக்குமல்லவா? உழைக்கும் நேரத்தை 8 மணியிலிருந்து 10 மணியாக்கினால் உழைப்பு அளிப்பு அதிகரிக்கும். அதேபோன்று உழைப்பாளரின் திறன் கூடுமானால் உழைப்பு அளிப்பு அதிகப்படும். யந்திரங்கள், உற்பத்திச் சாதனங்கள் முதலியன பெருகுவதால் உழைப்பு அளிப்பு பெருகக்கூடும்.

இவையேயன்றி மக்களின் இடப்பெயர்ச்சியும் உழைப்பு அளிப்பைப் பாதிக்கக்கூடும். குடியேற்றத்திற்காக வெளிநாட்டார் ஒரு நாட்டில் குடியேறுவதன்மூலம் அந் நாட்டின் உழைப்பு அளிப்பு பெருகக்கூடும். அதேபோன்று அவர்கள் வெளியேறும் நாட்டில் உழைப்பு அளிப்பு குறையக்கூடும். இடப்பெயர்ச்சியோடு வேலைகளுக்குள்ளும் பெயர்ச்சி நிகழக்கூடும். விவசாயத்தை விடுத்துப் பலரும் தொழிற்சாலைத் தொழிலாளராக மாறும்போது உற்பத்தியின் தன்மை மாறும். உழைப்பு அளிப்பும் மாறக்கூடும்.

**உழைப்புத் திறன்**

மக்களின் உழைப்புத் திறன் உழைப்பு அளிப்பைப் பாதிக்கலாம். உழைப்புத் திறன் பல காரணிகளால் ஆக்கப்பெறுவதாகும். உழைப்பாளர்களின் கல்வி, பண்பு ஆகியவற்றோடு, தொழில் அமைப்பு, உற்பத்திச் சாதனங்களின் தன்மை, வேலைப் பகுப்பு ஆகியவற்றைச் சார்ந்து உழைப்புத் திறன் நிர்ணயிக்கப் பெறும். மேலும், நாட்டின் தட்ப வெப்ப நிலை, வேலைச் சூழ்நிலை, நெறிவாழ்வு, வேலை நேரம், பயிற்சி சாத்தியங்கள் ஆகியவை

பெருமளவுக்கு உழைப்புத் திறனைப் பாதிக்கின்றன. பரந்த கல்வி யறிவு பெருகி இருக்கும் நாட்டில் உழைப்பாளர் திறன் சிறிது அதிகமாகவே காணப்படும். வாழ்க்கைத் தரம், ஊதிய நிலை ஆகியவையுங்கூட உழைப்புத் திறனைப் பாதிப்பவையே. சாதி மத அடிப்படைகளும் உழைப்புத் திறனைப் பாதிக்கின்றன.

**இந்தியாவில் மக்கள்தொகைப் பிரச்சினை**

இந்தியாவில் மக்கள்தொகைப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத் திற்கு மக்கள்தொகைப் பெருக்கம் பெருந்தடையாக அமைந் துள்ளது. மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள பல முயற்சிகளும் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததற்கு மக்கள்தொகைப் பெருக்கம்தான் காரணமாக இருக்கிறது. எனவே, இந்தியாவில் மக்கள்தொகைப் பிரச்சினையைப்பற்றி சற்று விரிவாகக் காணலாம்.

1961ஆம் ஆண்டில் நடந்த சென்சஸ் கணக்குப்படி இந்தி யாவின் மக்கள்தொகை 439 மில்லியனாகும். மிக அதிகமான மக்கள்தொகையைக் கொண்ட நாடுகளில் இந்தியா ஒன்று. மொத்த மக்கள்தொகை அளவைப் பொறுத்தமட்டில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றிருக் கிறது. மொத்த மக்கள்தொகை அதிகமாக இருப்பதோடு மக்கள் தொகைப் பெருக்கமும் மிக உயர்ந்த வீதத்தில் இருக்கிறது. கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

| ஆண்டு | மொத்த மக்கள் தொகை (மில்லியன்) | மக்கள் தொகைப் பெருக்கம் (சதவிகிதத்தில்) |
|---|---|---|
| 1921 | 248·18 | — 0·35 |
| 1931 | 275·52 | +11 |
| 1941 | 314·88 | +14·3 |
| 1951 | 357·23 | +13·3 |
| 1961 | 439·23 | +21·50 |

1931ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் மக்கள்தொகை பெருக்கமடையத் தொடங்கியிருக்கிறது என்பதையும் 1951ஆம் ஆண்டுக்குப் பிறகு பெருக்கம் மிக விரைவாக இருக்கிறது என்பதையும் பட்டியலிலிருந்து அறியலாம். மக்கள்தொகை இன்று ஆண்டொன்றுக்கு 2·2 சதவிகிதத்தில் உயர்ந்து வருகிறது. இந்த ரீதியில் மக்கள்தொகை பெருகி வந்தால் இந் நூற்றுண்டின் முடிவு காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகை ஒரு பில்லியனுக்கு (1000 மில்லியன்கள்) உயர்ந்துவிடும் என்று சிலர் கணக்கிட்டிருக்கிருர்கள். மக்கள்தொகை முன்னமே அதிகமாக இருப்பதால் 2·2 சதவிகித ஆண்டுப் பெருக்கம் மிக உயர்ந்ததாகும். அஃதாவது, இந்தியாவின் மக்கள் தொகையில் ஒரு பத்தாண்டுக் காலத்தில் இருக்கும் பெருக்கம், நார்வே, சுவீடன், இங்கிலாந்து போன்ற நாடுகள் ஒவ்வொன்றின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமுக இருக்கிறது. இந்தியாவில் மக்கள்தொகை பெருகி வருகிறது என்று கூறுவதைவிட வெள்ளமெனக் கரைபுரண்டோடுகிறது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். மக்கள்தொகை இந்த விகிதத்தில் வளர்ந்து வந்தால் நாட்டில் பொருளாதார முன்னேற்றம் நத்தை வேகத்தில் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

இந்தியாவில் மக்கள்தொகை மிகையாக (over populated) இருக்கிறதா என்று ஆராய்வதற்கு அவசியமேயில்லை. மால்தஸ் அவர்களுடைய கோட்பாடு, உத்தம அளவுக் கோட்பாடு இவற்றில் எதை அடிப்படையாகக்கொண்டு நோக்கினுலும் இந்தியாவின் மக்கள்தொகை மிகையாக இருக்கிறது என்பதை எளிதில் அறியலாம். மால்தஸ் அவர்களுடைய கோட்பாட்டின்படி நாட்டில் பட்டினியும், பற்றுக்குறையும், உயர்ந்த இறப்பு வீதமும் இருந்தால் அவை மிகை மக்கள்தொகையின் அறிகுறிகளாகும். இந்தியாவில் அண்மைக் காலத்தில் எழுந்துள்ள உணவுப் பற்றுக்குறை ஒன்றே மக்கள்தொகை மிகையாக இருக்கிறது என்பதை நிரூபிக்கப் போதிய சான்ருகும். நாட்டில் உணவு உற்பத்தியும் பெருகி வருகிறது. ஆனுல், உணவு உற்பத்திப் பெருக்கத்தைவிட மக்கள்தொகைப் பெருக்கம் அதிகமான வீதத்தில் இருக்கிறது. உத்தம அளவுக் கோட்பாட்டின்படி பார்த்தாலும் இந்தியாவின் மக்கள்தொகை மிகையானது என்பது தெளிவாகும். மக்கள் தொகையைக் குறைப்பதன்மூலம் நாட்டில் தலைக்கான வருமானத்தையும் மக்களுடைய பொருளாதார வாழ்க்கை நிலையையும் உயர்த்த முடியும் என்ற நிலை இருந்தால் அது மிகை மக்கள் தொகைக்கு (over population) அறிகுறி என்று உத்தம அளவுக் கோட்பாடு கூறுகிறது. இந்தியா இன்று அந்த நிலையில்தான் இருக்கிறது. 1961-62ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்த

நாட்டு வருமானம் ரூ. 14,630 கோடியாகும். ஆனால், ஒரு நபரின் தலைக்கான ஆண்டு வருமானம் ரூ. 329 தான் ஆகும். இந்தியாவில் தலைக்கான வருமானம் இவ்வளவு குறைவாக இருப்பதற்கு நாட்டின் மக்கள்தொகைதான் காரணமாகும். மக்கள்தொகை குறைந்தால் இந்தியாவின் மொத்த வருமானம் குறைந்துவிடாது; ஆனால், தலைக்கான வருமானம் அதிகமாக இருக்கும். எனவே, இந்தியாவில் மிகையான மக்கள்தொகை இருக்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**மக்கள்தொகைப் பெருக்கத்திற்குக் காரணங்கள்**

இந்தியாவில் ஏன் மக்கள் தொகை ஆண்டாண்டுக்கு இவ்வளவு உயர்ந்த வீதத்தில் பெருகி வருகிறது? மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு என்ன வழிகளை மேற்கொள்ளலாம்? இவ் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை காணலாம்.

முதலாவதாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் உள்ள தொடர்பினைத் தெளிவாக அறியவேண்டும். ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் அந் நாட்டின் மக்கள் தொகையும் முன்னைவிட உயர்ந்த வீதத்தில் பெருக்கமடையும். இதற்குக் காரணம் என்ன வென்று அறியலாம். ஒரு நாட்டின் மக்கள்தொகைப் பெருக்கம் அந் நாட்டின் பிறப்பு வீதம் (birth rate), இறப்பு வீதம் (death rate) இவ்விரண்டையும் சார்ந்திருக்கிறது. இறப்பு வீதம் நிலையாக இருந்து பிறப்பு வீதம் உயர்ந்தாலோ அல்லது பிறப்பு வீதம் நிலையாக இருந்து இறப்பு வீதம் குறைந்தாலோ அல்லது பிறப்பு வீதத்தைவிட இறப்பு வீதம் விரைவாகக் குறைந்தாலோ அல்லது இறப்பு வீதத்தைவிடப் பிறப்பு வீதம் விரைவாகப் பெருகினாலோ மக்கள் தொகை பெருக்கமடையும். நாட்டில் பொருளாதார வளர்ச்சி தோன்றும்போது இறப்பு வீதம், பிறப்பு வீதம் இரண்டும் மாறுபடுகின்றன. ஆனால், உடனடியாக மாறுவது இறப்பு வீதம். பிறப்பு வீதம் மாறுவதற்குச் சற்றுக் கால இடைவெளி வேண்டியிருக்கிறது. பொருளாதார வளர்ச்சியுள்ள நாட்டில் மலேரியா, காலரா, அம்மை, பிளேக்கு போன்ற கொள்ளை நோய்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் முனைப்பாக ஈடுபடுகிறது. மருத்துவ வசதிகளையும் பரவலாக அளிக்கிறது. இவையன்றிப் பொருளாதார வளர்ச்சிக் காலத்தில் மக்களுடையவருவாயும்உயர்வதால்அவர்கள் சத்துள்ள உணவை உண்டு நீண்ட காலம் வாழ்கிறார்கள். இக் காரணங்களால் நாட்டில் இறப்பு வீதம் உடனடியாகக் குறைகிறது. அஃதாவது, முன்னைவிட நாட்டில் இறப்புக் குறைவாக இருக்கிறது.

ஆனால், பிறப்பு வீதம் உடனடியாகக் குறைவதில்லை. மக்களுடைய மனநிலை மாறினால்தான் பிறப்பு வீதமும் குறையும். மக்கள் மனநிலை மாறுவதற்குச் சிறிது காலம் வேண்டியிருக்கிறது. எனவே, பிறப்பு வீதம் பழைய மட்டத்திலே இருக்கிறது; இறப்பு வீதம் உடனடியாகக் குறைகிறது. இவற்றின் விளைவால் மக்கள் தொகைப் பெருக்கமும் விரைவாக இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால், இந்தியா இன்று அந்த நிலையில்தான் இருக்கிறது. இவ்வுண்மையை மனத்தில் கொண்டு மேலே உள்ள பட்டியலைப் பார்த்தால் நிலைமை தெளிவாக விளங்கும். 1951-1961 இவ்விரு ஆண்டுகளின் இடைக்காலத்தில் இந்தியாவில் மக்கள்தொகைப் பெருக்கம் மிக விரைவாக இருந்திருக்கிறது. அஃதாவது, ஐந் தாண்டுத் திட்டங்கள் செயற்படத் தொடங்கி நாட்டில் பொரு ளாதார வளர்ச்சி தோன்றிய காலத்திலிருந்து மக்கள்தொகைப் பெருக்கமும் விரைவாக இருக்கிறது. இதனால் திட்டங்கள்தாம் மக்கள்தொகைப் பெருக்கத்திற்குக் காரணம்; எனவே, திட்டங் களைக் கைவிடவேண்டும் என்னும் தவறான முடிவுக்கு வரக் கூடாது. காலம் போகப் போகக் கல்வி வளர்ச்சியால் மக்க ளுடைய மனநிலையும் மாறும்; அதற்குப் பிறகு நாட்டில் பிறப்பு வீதமும் குறையத் தொடங்கும்; மக்கள்தொகைப் பெருக்கத்தின் வேகமும் குறையச் செய்யும்.

மேற்கூறிய விளக்கம்தான் மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு முதன்மையான காரணமாகும். மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைக்கவேண்டுமானால் நாட்டில் கல்வியைப் பரப்பவேண்டும். அதிகப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது தனக்கு மட்டுமன்று; நாட்டுக்கே பாரமாகும். இதைப் பெரும்பாலான மக்கள் உணர் வதில்லை. அவர்களுடைய ஏழைமை நிலையும் அறியாமையுமே இதற்குக் காரணம். எனவே, நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தடுக்கவேண்டுமானால், மக்களிடம் காணப்படும் அறியாமையை விரட்டியடிக்கவேண்டும்.

# 9. முதல்
## (Capital)

**விளக்கம்**

அன்றாட வாழ்க்கையில் நாம் கையாளும் 'முதல்' என்ற சொல்லுக்கும், பொருளாதாரத்தில் கையாளப்பெறும் முதல் என்ற சொல்லுக்கும் வேறுபாடு உண்டு. வியாபாரி முதல் என்று பேசும்போது அவன் கடைக்கு ஈடுபடுத்திய பணத்தைக் குறிக்கிறான். இது பண முதலை மட்டும் குறிப்பதாக இருக்கிறது. பொருளாதாரத்தில் முதல் என்று சொல்லும்போது, உற்பத்திக்குப் பயன்படுத்தும் உற்பத்திக் காரணிகளையும், மூலப் பொருள்களையும் குறிப்பிடுகிறோம். மனித உழைப்பும் நிலமும் மூலக்காரணிகளானால், அவற்றால் ஆக்கப்பெறுவது முதலாகும். மனிதன் இயற்கையின் வளத்தை நல்ல முறையில் தனக்குப் பயன்படுத்திக்கொள்ளச் சாதனங்கள் பலவற்றைச் செய்து கொள்கிறான். இவ்வகைச் சாதனங்கள் முதலாகும். 'உற்பத்தி செய்யப்பெற்ற உற்பத்தி மூலங்கள்' (Produced means of production) என்று முதலைக் கூறலாம். முதல் என்பது உற்பத்தி செய்யப் பயன்படுத்தும் சாதனங்களைக் குறிக்கும்.

மனிதனது பல்வகைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய அவனைச் சுற்றிலும் இருக்கும் இயற்கை வளத்தைப் பயன் படுத்தியாகவேண்டும். தாகத்தைத் தீர்க்கச் சுனைக்குச் செல்வதற்குப் பதிலாகப் பானை செய்து தண்ணீரைத் தான் இருக்கு மிடத்திற்கே கொண்டுவந்தான். அதிலும் அவன் பூரண திருப்தி பெறவில்லை. எனவே, எப்பொழுதும் சுத்தமான நீர் கிடைத்துக்கொண்டேயிருக்கக் குழாயைப் பொருத்தி, பம்பு செட்டுகள்மூலம் தண்ணீரைத் தான் இருக்குமிடத்தில் கிடைக்க வகை செய்தான். இவ்வாறு செய்யும்போது முதலாக்கம் தோன்றுகிறது.

கற்கால மனிதன் கற்களை முதலாகப் பயன்படுத்தி நிலத்தைத் தோண்டிக் கிழங்குகளையும் வேர்களையும் தின்று வாழ்ந்தான். கலப்பை ஒன்று செய்து அதில் மாடுகளைப் பூட்டி ஆழ உழுது விதை விதைத்து ஒன்றுக்கு நூருகப் பலனைப் பெற்றபோது முதல் உருவாயிற்று. இன்று புல்டோசர்களும், டிராக்டர்களும் இவ் வேலையைச் செய்கின்றன. கலப்பை, டிராக்டர், புல்டோசர் முதலியன முதல் ஆகும்.

முதலைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட உற்பத்திக்கும், முதல் இல்லாமல் செய்யப்பட்ட உற்பத்திக்கும் வேறுபாடு உண்டு. முதலில்லாமல் உற்பத்தி செய்த ஆதிமனிதன் பழத்தை மரத்தி னின்றும் தட்டிப் பறித்தவுடன் அதை உண்டு பசியாறினுன். பசித்தபோது பழத்தைத் தட்டிப் பறித்து உண்டான். அதாவது, உற்பத்தியும் நுகர்ச்சியும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. ஆனுல், முதலைப் பயன்படுத்த முற்பட்டபோது நுகர்ச்சியும் உற்பத்தியும் ஒன்ருக நிகழவில்லை. அதாவது, டாஸ்மேனியாவில் பறிக்கப்பட்ட ஆப்பிள் பழம் கைபடாதபடி யந்திரங்களால் டப்பாக்களில் அடைக்கப்பட்டு இங்கிலாந்திற்கு ஏற்றுமதியாகி அங்கு அது நுகர்வுக்குள்ளாகிறது. இது மாத்திரமன்று. இவ் வுற்பத்தியில் பயன்படுத்தப்பெறும் முதலை ஆக்க வேறு காலம் தேவைப்படுகிறது. பழத்தை வைக்கும் டப்பாக்கள் செய்ய வேண்டியுள்ளது. டப்பாக்கள் செய்யும் யந்திரங்களை ஆக்க வேண்டும். யந்திரங்களைச் செய்ய இரும்பு, எஃகு வேண்டும். இரும்பு, எஃகு செய்ய நிலக்கரி வேண்டும். நிலக்கரி, இரும்புக் கனிகளைத் தோண்டி எடுக்க யந்திரங்கள் வேண்டும். இப்படியாக நீண்டுகொண்டே போகும். ஆக, முதலைப் பயன் படுத்திச் செய்யப்படும் உற்பத்தி, சுற்றி வளைத்து உள்ள முறையாக இருக்கும்.

இதனுல் உற்பத்தி பெருகும். வெறும் கைகளை நம்பி மீன் பிடித்தவர்களுக்கும், இன்று யந்திர வலைகளுக்குமுள்ள வேறு பாட்டிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம். இலைகளைத் தைத்து ஆடை தைத்துக்கொள்வதற்கும், இன்று 'டெரீன்' ஆடையை அணிந்துகொள்வதற்குமுள்ள வேறுபாடு முதலாக்கத்தால் ஏற்பட்டதாகும். எனவே, விளைவை அதிகமாக்கும் முதல், உழைப்பையும் இயற்கை வளங்களையும் ஒரு சுற்று வழியால் அதிகப் பயனை அடையச் செய்கிறது.

**முதலின் வகைகள்**

ஆடம் ஸ்மித் அவர்கள் முதலை இருவகையாகப் பிரித்தார். 1. சுழல் முதல் (Circulating capital); 2. நிலை முதல் (Fixed

capital). சுழல் முதல் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்பெற்று இருக்கும்; நிலை முதல் அசையாச் சொத்துகளில் இடப்பட்டிருக்கும். முதலை அதன் (1) உடைமை, (2) தன்மை, (3) பொருளாதாரப் பணி ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். இவற்றைக் கலந்தும் வகைப்படுத்துவது இற்றைய பழக்கமாகும்.

1. சமூக மேலமைப்பு முதல் (Social overhead capital) என்று சாலைகள், ரெயில்வேக்கள், போக்குவரவு வசதிகள், செய்திப் போக்குவரவு வசதி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதையே சில சமயங்களில் பொருளாதார மேலமைப்பு முதல் (Economic overhead capital) என்றும் அழைப்பதுண்டு.

2. தொழிலுக்கு வேண்டிய யந்திரங்களும், மூலச்சாதனங்களும் கொண்ட முதல்: இதில் விவசாய உற்பத்திக்கு வேண்டிய கருவிகளையும் சேர்த்துக்கொள்ளலாம். இதில் பாங்கு, இன்சூரன்ஸ், விளம்பரம், விற்பனை போன்றவற்றிற்காகப் பயனுகும் கட்டடங்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

3. பண்ட முதல் (Inventory capital): உற்பத்திக்குப் பயன்படுத்தப்பெறும் இடைநிலைப் பொருள்கள் (intermediate goods), உற்பத்தி ஆகும்போது பயன்படுத்தப்பெறும் பொருள்கள், செய்து முடிக்கப்பட்ட பொருள்களும் இன்னும் செய்யாது அரைகுறையாகச் செய்யப்பட்டுள்ள பொருள்களும் ஆகியன இத்தலைப்பில் அடங்கும். இவை உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வாளருக்கு அனுப்பப்பெற்றுக்கொண்டிருக்கலாம்.

## முதலாக்கம் (Formation of Capital)

தினசரி உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவன் தனது உற்பத்தியைப் பெருக்குவதற்கும், தனது உழைப்பை இலகுவாக்குவதற்கும் கருவியாகக் கலப்பை ஒன்று செய்கிறுன். இக் கலப்பையை அவனே செய்யவேண்டுமானுல், அதுபற்றிய அறிவைப் பெற அவன் பல சோதனைகளைச் செய்யவேண்டும். பிறகு அவன் கலப்பை ஒன்றைச் செய்யத் தனது உழைப்பு நேரத்தைச் செலவிடவேண்டும். அவ்வாறு அவன் கலப்பை செய்யும் போது, உணவு தேட முடியாது. ஒன்று அவன் பட்டினியாக இருந்து கலப்பையோ அல்லது வேறு ஒரு கருவியோ செய்த பிறகு உண்பதைப்பற்றி நினைக்கவேண்டும்; அல்லது தனது உழைப்பு நேரத்தின் ஒரு பகுதியைக் கருவி செய்யப் பயன்படுத்தி, எஞ்சிய நேரத்தில் உணவு தயாரிப்பதில் ஈடுபடலாம்; அல்லது அவனுக்கு வேண்டியவர்கள்,

அவனது உற்பத்தி முறையினால் பயன் பெறப்போகிற வர்கள் அவனுக்குப் பராமரிப்பு அளித்து அவன் கலப்பை செய்து முடிக்கும்வரையில் உணவளித்து வரவேண்டும். மார்ஷல் (Marshall) மீன் பிடிப்பதை உதாரணமாகக் காட்டியுள்ளார். பத்துப் பேர் மீன் பிடிப்பவர்கள். இவர்கள் அனைவரும் வலை பின்னலாம். அப்படியானால் மீன், வலை பின்னி முடிக்கும்வரை கிடைக்காது. மீன் ஒன்றுதான் அவர்களது உணவுப் பொருளாயின், அவர்கள் பட்டினியாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் 8 பேர் மீன் பிடிக்கவும், இருவர் வலை பின்னவும் முற்படவேண்டும். அவ்வாறாயின், மீன் பிடிக்கும் 8 பேர் வலை பின்னும் இருவருக்கு வேண்டிய மீனைப் பிடித்துவர வேண்டும். இதற்காக அவர்கள் அதிக நேரம் உழைக்கவேண்டியிருக்கும்; அல்லது தங்களுக்குக் கிடைக்கும் மீனில் ஒரு பகுதியை இவ் விருவருக்கும் கொடுப்பதன்மூலம் அவர்களுக்கு வலை கிடைக்கும். வலை கிடைப்பதால் அவர்களுக்கு ஏராளமான மீன் கிடைக்கும்.

இது எதைக் காட்டுகிறது என்றால், முதலாக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது சேமிப்பு என்பதைத்தான். சேமிப்பு முதலாக முடியாது. சேமிப்பு முதலீடாக்கப்பெறும்போதுதான் முதலாகிறது. வெறும் சேமிப்புமட்டும் இருந்து பயன் இல்லை. முதலாக்கத்திற்குத் தேவையான பல அம்சங்கள் இருக்கவேண்டும். சேமிப்பு வளருவது எப்படி என்று பின்னர் பார்ப்போம். இப்போது முதலாக்கத்திற்குத் துணையாக உள்ள காரணிகளைப் பற்றிப் பார்ப்போம்.

முதலாக்கத்திற்கு முதலீட்டுச் சாத்தியங்கள் இருக்க வேண்டுவது அவசியம். முதலீடு செய்வதற்குத் தொழில் முயல்வோர்கள் இருந்தாகவேண்டும்; அல்லது திட்டமிட்ட பொருளாதாரத்தில் முதலீடு சாத்தியங்கள் இன்னின்ன என்று முன்னரே குறிப்பிடப்பெறவேண்டும். முதலாக்கம் செய்யப்பெறுவதற்குத் தொழில்நுட்ப அறிவும் அவசியம். இது விளைவாகவும் காரணமாகவும் இருக்கக்கூடும். அதாவது, தொழில் நுட்பத்தால் கண்டுபிடிப்பு நடக்குமானால், அதைப் பயன்படுத்தி யந்திரங்கள் செய்து உற்பத்தியைப் பெருக்கலாம். அதே போன்று முதலீட்டுச் சாத்தியங்கள் இருந்தும் தொழில்நுட்பம் இல்லாத காரணத்தால் முதலாக்கம் நடைபெறாது நின்றுவிடலாம். முதலாக்கத்திற்குக் கச்சாப் பொருள்கள் (raw materials) கிடைக்கவேண்டும். இவை சேமிப்புக் கிடைக்கும் என்ற அனுமானத்தின்பேரில் கூறப்படுகிறது. இனி, சேமிப்பு எதனால் வளருகிறது? அதற்கும், முதல் வளர்ச்

சிக்கும், முதல் குவிதலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று பார்ப்போம்.

**சேமிப்பும் முதல் பெருக்கமும்**

இன்றைக்கு நுகர்வதை விடுத்து இன்னொரு நாளைக்கு நுகர்ந்துகொள்ளலாம் என்று சேமித்துவைப்பதற்குக் காரணம், அவ்வாறு சேமிப்பதால் தான் நுகர்வதைவிட அதிகப் பயனைப் பெறமுடியும் என்ற காரணத்தால்தான். ஒரு சமுதாயம் தனது தேசீய வருமானத்தில் ஒரு பகுதியை நுகராது சேமித்து அதை முதலீடு செய்து முதலாக்கம் செய்யுமானால், அது வருங்காலத்தில் பெறப்போகும் பயனை உத்தேசித்தே அவ்வாறு செய்கிறது. இந்தியாவில் திட்டமிட்ட பொருளாதாரம் நடைபெறுகிறது. நமது தேசீய வருமானத்தை அதிகரிக்கச் செய்யவும், தலா வருமானத்தைப் பெருக்கி அதன்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிசமாக உயர்த்தவும் இத் திட்டம் இடப்பட்டுள்ளது. தேசீய வருமானத்தை அதிகரிக்க முதல் தேவைப்படுகிறது. அப்படியானால்தானே உற்பத்தி பெருக முடியும்? உற்பத்தி பெருகினால் தேசீய வருமானம் பெருகுமல்லவா? உற்பத்தியைப் பெருக்க முதல் வேண்டியுள்ளது. நம்மிடம் ஏராளமான உழைப்புச் சக்தி இருக்கிறது. இயற்கையும் பல வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்த முதலாக்கம் தேவைப் படுகிறது. இதற்கு மக்கள் தமது நுகர்ச்சியைக் கட்டுப்படுத்திச் சேமித்து, அவர்கள் சேமிப்பை முதலீடு செய்து முதலாக்கம் செய்ய வேண்டும். துறைமுகங்களும் தொழிற்சாலைகளும் நிறுவச் சேமிப்பு வேண்டும். இச் சேமிப்பு இவற்றில் ஈடுபடுத்தப்பெறும்போது நாட்டின் வருமானம் பெருகும்.

சேமிப்பை நிர்ணயிக்கும் காரணிகள் பல. இவை (1) சேமிப்புச் சக்தி; (2) சேமிக்கும் மனப்பாங்கு; (3) சேமிப்பு வசதிகள் ஆகியவையாகும். சேமிப்புச் சக்தி ஒருவனது வருமானத்தையும், அவனது வாழ்க்கைத் தரத்தையும் பொறுத்து இருக்கும். சேமிக்கும் மனப்பாங்கு ஏற்படுவது அவனது உளவியல்பைப் பொறுத்தது. அவன் தனது குடும்பத்தின் எதிர்காலத்தை எண்ணிப் பார்ப்பவனானால் சேமிக்க நினைக்கக்கூடும். தொழில்துறையில் உள்ளோரும் இதரர்களும் சேமிப்பால் பிற்காலத்தில் அதிகப் பயனைப் பெறமுடியும் என்ற நினைப்பால் சேமிக்கக்கூடும்; அல்லது அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் என்று சேமித்துவைப்போரும் உண்டு. சேமிக்கும் மனப்பாங்கு அரசியல், சமூகச் சூழ்நிலைகளுக் கேற்ப அமையக்கூடும். சேமிப்பு வசதிகள் பாங்குகள், இன்சூரன்ஸ், கூட்டுப் பங்கு கம்பெனிகள் முதலியன இருப்பது சேமிப்

பிற்கு வசதி செய்யும். அரசாங்கம் கடன் பத்திரங்கள், பரிசுப் பத்திரங்கள், சிறு சேமிப்புகள் ஆகியவற்றை நடத்துவதன்மூலம் சேமிப்பு வசதிகளைச் செய்துதரலாம். வட்டிக்கும் சேமிப்புக்கும் தொடர்புண்டு என்று முன்னரெல்லாம் கருதப்பெற்றது. ஆனால், கம்பெனிகள், பெரும் ஆலைகள் தோன்றிய பின்னர் வட்டியால் சேமிப்புப் பெருகும் என்று நினைப்பது இல்லை.

சேமிப்பது எல்லாம் முதலாவதில்லை என்று கூறினோம். முதலீடு செய்வது முதலின் ஆக்கத்திறன், மார்க்கெட் நிலவரம் ஆகியவற்றைப் பொறுத்து நிகழ்வதாகும். இங்கு வட்டி வீதமும் ஓரளவுக்குப் பங்கு வகிக்கிறது. பணமுதல் பொருள் முதலாவதற்கு வட்டி, முதல் திறன், தேவை ஆகியவற்றை நோக்கியே முதலீடு செய்யப்பெறும். உதாரணமாக, ஆலையொன்றை நிறுவுவதுபற்றிப் பார்ப்போம். சேமிப்பாளர் பலர் ஒரு கூட்டுக் கம்பெனியின் பங்குகளை வாங்குவர். இக் கம்பெனியின் நிர்வாகஸ்தர் பாங்குகளில் கடன் வாங்கி ஆலைக்கு வேண்டிய யந்திரங்களையும், கட்டடங்களையும், கச்சாப் பொருள்களையும் வாங்கித் தொழிலாளரை வேலைக்கமர்த்தி வேலையைத் தொடங்குவர். ஆலையின் உற்பத்திச் சக்தி, அது உற்பத்தி செய்யும் பண்டங்கள் விற்கப்படும் சாத்தியம் ஆகியவற்றைச் சார்ந்து அவ்வாலை துவக்கப்பெறும். யந்திரங்கள், கச்சாப் பொருள்கள், பணமுதல் ஆகியவை இருந்தால்தான் ஆலை துவக்க முடியும். சேமிப்புச் செய்கிறவர்கள் இவ்வாலையின் உற்பத்தியால் பெறப்படும் இலாபம் கருதியே சேமிப்பை இம் முதலீட்டில் செலுத்துகின்றனர். இது முதலாளித்துவ அமைப்பில் பொருந்தும் ஒன்றாகும். சோஷியலிச அமைப்பில் ஓர் உற்பத்திக்குப் பதிலாக வேறு ஓர் உற்பத்தியை மக்கள் விரும்புவதாகக் கொண்டால், அதில் ஏற்படும் அதிக பட்சப் பயனை நோக்கி இவ்வாறு முதலீடு நடைபெறும்.

# 10. தொழில் அமைப்பு

மேலே நாம் பார்த்த மூன்று சாதனங்களாகிய நிலம், உழைப்பு, முதல் ஆகியவற்றை உற்பத்திக்காகப் பயன்படுத்துவதைத் தொழில் அமைப்பு என்கிறோம். இம் மூன்று காரணிகளையும் கலவையாக்கி உற்பத்தி செய்யத் தனியொருவன் முற்பட்டால், அவனைத் தொழில்முயல்வோன் (entrepreneur) என்று அழைக்கிறோம். தொழில்முயல்வோர் கூட்டாகச் சேர்ந்து கம்பெனியை நிறுவி உற்பத்தி செய்யலாம்; அல்லது அரசாங்கமே தொழில் முயற்சியில் ஈடுபட்டு இக் காரணிகளைச் சரியான விகிதாசாரத்தில் கலந்து உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

**தொழில்முயல்வோன் பணிகள்**

தொழில்முயல்வோன் பலவகைப் பணிகளை ஆற்றவேண்டியுள்ளது. எங்கே தொழிலை ஆரம்பிப்பது? என்ன தொழிலை ஆரம்பிப்பது? ஆரம்பிக்கும் தொழிலில் எவ்வளவு நிலம், உழைப்பு, முதல் ஆகிய காரணிகளை ஈடுபடுத்துவது? அத் தொழிலின் உற்பத்திப் பொருள்களை எங்கு விற்பது, எப்படி விற்பது, என்ன விலையில் விற்பது? எப்பொழுது உற்பத்தியைக் கூட்டுவது, எப்பொழுது குறைப்பது? என்பனபோன்ற எண்ணற்ற கேள்விகளுக்கு விடை கண்டு தொழிலை அமைக்கவேண்டும். அவன் செய்யும் முடிவுகள் உற்பத்தியின் நிலையை முடிவு செய்கின்றன.

ஆரம்பிக்கும் தொழிலை மேற்பார்க்கவும் வேண்டியிருக்கிறது. தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி, வேண்டிய யந்திரங்களையும் கச்சாப் பொருள்களையும் வாங்கித் தொழிலை நடத்தவேண்டும். தொழிலாளர்கள் வேலை செய்வதை மேற்பார்க்கவேண்டும். செய்யப்படும் பொருள்களின் தரத்தையும் அளவையும் நிர்ணயம் செய்யவேண்டும். நுகர்வோரின் தேவை எவ்வாறு மாறுகிறது என்பதற்கேற்பத் தனது தொழிலின் உற்பத்தியை ஆக்கவேண்டியுள்ளது.

மேலும், உற்பத்தி செய்தவுடன் அப் பொருளோ பண்டமோ விற்பனை ஆகிவிடாது. ஒருவேளை அவன் காத்திருக்கவேண்டிய அவசியமும் ஏற்படலாம்; அல்லது உற்பத்தி செய்து முடித்த பிறகு தேவை மாறிவிடலாம். அதனால் ஏற்படும் இழப்பையும் தாங்கிக்கொள்ளவேண்டும். தேவையை எதிர்நோக்கிச் செய்வதில், ஒருவகையில் வருமுன்னரே உணர்ந்துகொள்ளும் சக்தி படைத்தவனாக இருக்கவேண்டும். இவ்வளவும் செய்த பிறகு இலாபமோ நஷ்டமோ ஏற்படுமாயின், அதை ஏற்றுக்கொண்டாகவேண்டும். ஆலை முதலாளி, தொழிற்சாலை அதிபர்கள், விவசாயிகள், பாங்கு முதலாளிகள் ஆகியோரெல்லாம் தொழில்முயல்வோர்கள்தாம்.

இருப்பினும், எல்லாப் பணிகளையும் தொழில்முயல்வோனே செய்யவேண்டும் என்பதில்லை. நன்றாகப் பயிற்சி பெற்ற மேலாண்மையாளர்களை நியமித்துத் தனது தொழிலை அவன் நடத்தலாம். அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துத் தனது பணிகளில் சிலவற்றை அவர்களிடம் விட்டுவிடலாம். எனினும், இலாபமோ நஷ்டமோ அவனுடையது. ஆபத்துகளை அவனே தாங்கிக்கொள்ளவேண்டும்.

தொழில்முயல்வோன் தனது பணத்தைத்தான் முதலாகப் போடவேண்டும் என்ற கட்டாயமில்லை. கடன் வாங்கியோ அல்லது பங்குகளை விற்றோ அவன் தனது தொழிலை ஆரம்பிக்கலாம். அவன் ஆரம்பிக்கும் தொழிலில் நம்பிக்கை ஏற்படும் வகையில் அவன் அதற்குரிய செயல்திட்டத்தை வகுக்கவேண்டும். பொதுமக்கள் இதைக் கண்டு அப்படிப்பட்ட தொழிலில் தங்களின் சேமிப்பை முதலீடு செய்ய முன்வரக்கூடும். பாங்குகளும், இன்சூரன்ஸ் கம்பெனிகளும் அவனது தொழிலில் நம்பிக்கை ஏற்படுமானால், தங்களது பணத்தை முதலீடு செய்ய முன்வரும். ஆக, மக்களையும் நிறுவனங்களையும் ஈர்க்கும் சக்தி படைத்தவனாக அவன் இருந்தாகவேண்டும். டாடா, ஃபோர்டு, நஃப்பீல்டு போன்றவர்கள் உலகின் தலைசிறந்த தொழில்முயல்வோர் ஆவர்.

தொழில்முயல்வோர் இலாபம் கருதியே இவ்விதப் பணிகளைப் புரிகின்றனர். சமுதாயத்தில் மிக உயர்ந்த இடம் பெறுவது, அரசாங்கம், சமூகம் ஆகியவற்றால் முக்கியமானவராக ஏற்றுக் கொள்ளப்படுவதும் இவர்களை ஊக்குவிக்கும் அம்சங்களாகும்.

**தொழில் அமைப்பு வகைகள்**

தொழில் அமைப்பு தனி மனிதனால் அமைக்கப்பெறுவதைப் பற்றி இதுகாறும் பார்த்தோம். ஆனால், இது தவிர வேறு பலவகை அமைப்புகளும் உண்டு.

## 1. தனிமனிதன் தொழில் முறை

1. தனி மனிதன் தொழில் முயற்சியில் ஈடுபடுவது இன்னும் அதிக அளவில் காணப்படும் ஒரு முறையாகும். சிறு தொழில்கள், விவசாயம்போன்ற துறைகளில் இம் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. சிறு தொழில்களாக ஆரம்பித்துப் பின்னர் பெருந் தொழில்களாக இவை மாறலாம்.

**இதன் சிறப்பு அம்சங்கள்**

1. பொதுவாகச் சிற்றளவு உற்பத்தியிலும், கலைப் பொருளாக்கத்திலும் தனிமனிதன் தொழில்முயல்வோனாக இருப்பது வசதியானது. தனிமனிதனாக இருப்பதால், வேறு எவரையுங் கலந்து ஆலோசித்து முடிவு செய்யவேண்டியதில்லை. விரைவாக முடிவு எடுப்பதற்கு இது இலகுவானது.

2. மேற்பார்வை, தொழிலாளிகளை நடத்துவது ஆகியவற்றில் தனிமனிதன் சிறப்பான தன்மை பெற்று இருக்கிறான். தொழில் முதல்வனின் பார்வைக்கு அவனது தொழிலில் உள்ளோர் தப்ப முடியாது. அவனது தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லாப் பணியாளரோடும் நேரடியான தொடர்பு அவனால் கொள்ளமுடியும்.

3. தனது சொந்தப் பணத்தையே போட்டுத் தொழிலை நடத்துவதால், அதன் வெற்றியில் அவனுக்குப் பெரிதும் நாட்டமேற்படுவது இயற்கை. தனது முழுச் சாமர்த்தியத்தையும் சக்தியையும் பயன்படுத்தி எப்படியாவது தனது தொழில் வெற்றி பெறப் பாடுபடுவான்.

4. சொந்தப் பணம் போட்டு அவன் தொழில் நடத்துவதால், அவனுக்குக் கடன் கொடுக்கப் பலர் முன்வரக்கூடும். ஏனெனில், அவனது சொத்து முழுவதும் கொடுக்கப்பெறும் கடனுக்கு ஈடாக இருக்கும்.

5. சுயேச்சை, சுதந்திரம், தன்னுழைப்பு ஆகிய பண்புகளை நாட்டில் வளரச் செய்ய இது பயன்படும் என்று சொல்லப்படுகிறது. சமூகப் பண்புகளாகிய தன்முனைப்பு, சுயநம்பிக்கை, சுயமுயற்சி ஆகியவைகளும் வளர இடமுண்டு.

**குறைபாடுகள்**

1. பெரிய தொழில்களுக்கு இற்றை நாட்களில் ஏராளமான முதல் வேண்டியிருக்கிறது. அவ்வளவு பணத்தையும் தனியொருவனே போடமுடியும் என்பதற்கில்லை.

2. தனியொருவனே பெரிய தொழில் ஒன்றின் சிக்கலான பிரச்சினைகள் அனைத்தையும் சமாளித்துவிட முடியாது. பலர் கூடி, விற்பனை ஒருவர் பொறுப்பு, உற்பத்தி ஒருவர் பொறுப்பு என்று பகுப்புச் செய்துகொள்ள முடியாது. எனவே, தொழில் வளர்ச்சி குன்றிவிடும்.

3. தனியொருவன் திறமையுள்ளவனாக இருக்கலாம். அவனுக்குப் பின்வரும் சந்ததியும் இவ்வாறு தனிச் சிறப்புடைய தாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இதனால் திறமை யற்றோரின் கைகளில் தொழில் சேர்ந்து தொழிலை அழிவுக்கு இழுத்துச் செல்லக்கூடும்.

4. கடன்கள் வாங்குவதும் வரையிலாப் பொறுப்பின்மீதுதான் நடைபெறவேண்டும். சொத்துகள் அனைத்தையும் ஈடுகாட்டித் தனது தொழிலுக்காகக் கடன் வாங்கவேண்டி யிருப்பதால் இது விரும்பப்படுவதன்று.

5. கடைசியாகத் தொழில்முயல்வோன் இறந்துபட்ட பிறகு அவன் ஆரம்பித்த தொழிலும் மூடப்பட்டுவிடவேண்டியிருக் கிறது. இதனால்தான் நேர்முக மேற்பார்வை தேவையான சிறு தொழில்களில்மட்டுமே தனியாள் தொழில் முயற்சி இருந்து வருகிறது. ஏனைய பேரளவுத் தொழில்களில் வேறு அமைப்பு முறைகள் தோன்றியுள்ளன.

## 2. கூட்டாளி முறை (Partnership)

தனியாள் தொழிலாக ஆரம்பித்துப் பின்னர் கூட்டாக மாறுவது பொதுவாக வழக்கமாகும். தொழில் விஸ்தரிக்கப்பட முதல் தேவைப்படலாம். முதல் போடக்கூடிய நபர்களைக் கூட்டாகச் சேர்த்துக்கொள்வதுண்டு. சில சமயங்களில் சிறப்பான பணியாளர், அதிலும் தொழிலின் இரகசியத்தை அறிந்தவர்கள் தொழிலைவிட்டு வெளியேறுவதைத் தடுக்கும் பொருட்டு அவர் களையும் கூட்டில் பங்குதாரர்களாகச் சேர்த்துக்கொள்வதுண்டு. சில குடும்பங்களின் சகோதரர்கள் பங்குதாரர்களாகச் சேர்ந்து தொழிலை ஆரம்பிப்பதுமுண்டு.

**இதன் சிறப்பு அம்சங்கள்**

1. தொழிலின் பல பணிகளைப் பகுப்புச் செய்து பங்குதாரர்கள் கவனித்துக்கொள்ளலாம். அதாவது, ஒருவர் விற்பனையையும், இன்னொருவர் கொள்முதலையும், இன்னொருவர் உற்பத்தி வேலை களையும் என்று இப்படியாக வேலைப் பகிர்வு செய்துகொள்ள வசதி ஏற்படுகிறது.

2. முதலும் தனியாள் தொழில் அமைப்பைவிட இதில் அதிகமாகக் கிடைக்கக்கூடும். ஏனெனில், கூட்டில் சேரும் பங்குதாரர்கள் தங்களது முதலையும் தொழிலில் ஈடுபடுத்தலாம். ஒருவரின் திறமையும், இன்னொருவரின் பணமும் சேர்ந்து தொழிலுக்கு வெற்றியைத் தேடித்தரலாம்.

3. கடன் பொறுப்பு வரையிலாது இருப்பதால், தொழில் முயல்வோர் பொறுப்போடும் அறிவோடும் நடந்துகொள்ளக் கூடும். இதனால் கடன் பெறுவதும் இலகுவாக இருக்கும். ஏனெனில், கடனுக்கு ஈடாகக் கூட்டாளிகளின் சொத்து முழுவதும் இருப்பதால் கடன் கொடுக்க யாரும் முன்வரக்கூடும்.

**குறைபாடுகள்**

1. கூட்டாளிகளின் ஒற்றுமை கெட்டால் தொழில் நசித்து விடும். ஒருவன் செய்துகொள்வான் என்று மற்றவன் தனது கடமையைச் செய்யாது விட்டுவிடக்கூடும். பொறுப்பு கூட்டாக இருப்பதால், குறிப்பாக எவரது பொறுப்பு என்பது வாதத்துக்குரிய காரியமாகிவிடும்.

2. கடன் பொறுப்புவரையிலாது இருப்பதால், கூட்டாளிகள் கடன் வாங்கத் தயங்கக்கூடும். இதனால் தொழில் விரிவு ஏற்படுவது தடைக்குள்ளாகும்.

3. சட்டப்படி கூட்டாளிகளில் ஒருவர் இறந்தாலும் விலகினாலும், கூட்டுக் கலைக்கப்பட்டுவிடும். இவற்றின் குறைபாடுகளை நீக்கிய கூட்டாளி முறை மேனாடுகளில் காணப்படுகின்றன.

## 3. கூட்டுப் பங்குக் கம்பெனிகள் (Joint-Stock Companies)

பெரிய தொழில்களுக்கு ஏராளமான முதல் வேண்டியிருக்கிறது. இதைப் பெறுவதற்கு இற்றை நாட்களில் கூட்டுப் பங்குக் கம்பெனிகள் தோற்றுவிக்கப்பெறுகின்றன. இவ்விதக் கம்பெனிகளின் முக்கிய அம்சம், பலரும் இக் கம்பெனியின் பங்குகளை (shares) வாங்கி அதன்மூலம் முதல் சேர்க்கப்பட்டுத் தொழிலை நடத்துவதாகும். இவர்களுக்குப் பங்குதாரர்கள் (shareholders) என்று பெயர். இவர்கள் நேரடியாகவோ அல்லது ஜனநாயக முறைப்படி இயக்குநர் குழுவைத் தேர்ந்தெடுத்து இக் கம்பெனியை நடத்துகிறார்கள். உலகின் பெருந் தொழில்களை இன்று காண்பதற்கு இவ்வகை அமைப்புப் பெருந்துணை செய்துள்ளது. இக் கம்பெனி முறை இன்று வழக்கில் இருப்பதற்குரிய முக்கிய காரணம்

இதன் கடன் பொறுப்பு வரையறை செய்யப்பட்டுள்ளதுதான். அதாவது, பங்குதாரரின் பங்குப் பணம் எவ்வளவோ அவ்வளவு தான் அவரின் கடன் பொறுப்பும். அவரது சொந்தச் சொத்துகள் கம்பெனியின் கடனுக்குப் பொறுப்பாகாது.

இருவகைக் கம்பெனிகள் உள்ளன. ஒன்று, அங்கத்தினர் களின் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்ட தனியார் கம்பெனிகள். இதில் பங்குகள் பொதுமக்களிடையே விற்கப்பட முடியாது. இன்னொன்று, பொதுக் கம்பெனிகள். இதில் எவ்வளவு பேர் வேண்டுமானாலும் அங்கத்தினர்களாக இருக்கலாம். பங்குகள் பொதுமக்களிடையே விற்கவும் வாங்கவும்படலாம்.

பங்குகள் பலவகைப்படும். 1. சாதாரணப் பங்குகள் (Ordinary shares). 2. சலுகைப் பங்குகள் (Preference shares). சாதாரணப் பங்குதாரர்களுக்குக் கம்பெனியின் இலாபத்திலும் நஷ்டத்திலும் பங்குண்டு. சலுகைப் பங்குதாரர்களுக்குக் குறிப்பிட்ட சத விகித இலாபம் பிரித்துக் கொடுக்கப்பட்ட பிறகு, எஞ்சியதைச் சாதாரணப் பங்குதாரர்களுக்குள் பிரித்துக்கொள்வார்கள்.

பங்குகள் தவிரக் கடன் பத்திரங்களையும் (debentures) விற்றுக் கம்பெனிகள் முதல் சேர்க்கும். கடன் பத்திரங்கள் வைத்திருப் போருக்கு முதலில் வட்டியைச் செலுத்திவிட்டுத்தான் இலாபப் பகிர்வு நடைபெறும்.

**இதன் சிறப்பு அம்சங்கள்**

1. பேரளவில் முதல் சேகரிக்க இது வகை செய்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் தமது சேமிப்பைப் பங்கு வாங்குவதில் ஈடுபடுத்த முடிகிறது. இவர்களுக்குப் பணம் தேவைப்பட்டால் இப் பங்குகளைப் பங்கு மார்க்கெட்டில் வேறு எவருக்கும் விற்க முடியுமாதலால், பங்குகள் நல்ல இலாபம் தரக்கூடிய முதலீடுக ளாகவும், அதே சமயத்தில் அவசரத்திற்கு ரொக்கமாகப் பணம் பெறக்கூடியனவாயும் இருக்கின்றன. இதனால் பலரும் தங்களது சேமிப்புகளைக் கம்பெனிப் பங்குகளில் போட முன்வருகின்றனர். இதனால் அதிக அளவு முதல் திரட்ட முடிகிறது; தொழிலைப் பேரளவில் நடத்த முடிகிறது.

2. கடன் வரையறை செய்யப்பட்டிருப்பதும் பங்குதாரர்கள் அதிகமாக முன்வருவதற்குரிய காரணமாகும். தொழிலில் ஏற்படும் ஆபத்துகள் தனியொரு மனிதனையோ குடும்பத்தையோ தாக்காமல் பரவியிருப்பதும் ஒரு காரணமாகும்.

3. கம்பெனிகள் நிரந்தரமானவையாகும். பங்குதாரர்கள் மாறிக்கொண்டே யிருக்கலாம். எல்லாப் பங்குதாரர்களும் இல்லாதுபோனாலும், புதுப் பங்குதாரர்களை வைத்துக் கம்பெனி நடக்கும். பங்கை விற்கும்போது கம்பெனியில் போட்ட முதலை எடுப்பதில்லை. வேரொருவர் தமது பணத்தைக் கொடுத்துப் பங்கை வாங்கிக்கொள்வதால், கம்பெனியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முதல் பாதிக்கப்பெறுவதில்லை.

4. கம்பெனியின் நிர்வாகம் ஜனநாயக முறைப்படியானது. சட்டதிட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் கம்பெனி கட்டுப் பட்டதாகும். கம்பெனியை ஒரு நபரைப்போலப் பாவித்து வழக்குத் தொடரலாம். அதுவும் வழக்கு நடத்தலாம். இதனால் கம்பெனி யைப்பற்றி மக்களிடையே நம்பிக்கை வளர ஏதுவாகிறது.

**குறைபாடுகள்**

1. கம்பெனியின் பங்குகளை வாங்குபவர்கள் தங்கள் சுயநலத் துக்காகக் கம்பெனியின் தொழில் நடவடிக்கைகளை மாற்ற முயலக் கூடும். பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் பங்குதாரர்களுக் கிடையே தோன்றிவிட்டால், கம்பெனி சீரழியும். சிறு குழுவொன்று சூழ்ச்சியாக நடந்துகொள்ளக்கூடும். இவர்கள் கைகளில் கம்பெனி நிர்வாகம் சேர்ந்துவிட்டால், தன்னலத்துக்காகக் கம்பெனியைச் சூறையாடிவிடக்கூடும்.

2. ஜனநாயக முறை என்பது சொல்லளவில்தான். நாடெங்கும் சிதறிக் கிடக்கும் பங்குதாரர் அனைவரும் பொதுக் கூட்டத்திற்கு வர முடிவதில்லை. தங்களது வாக்குரிமையை எவர் மூலமாவது பயன்படுத்திக்கொள்ளலாம் என்று இருப்பதால், அதைப் பயன்படுத்த விரும்பும் கும்பலிடம் அது சிக்கிக்கொள்ளக்கூடும். கம்பெனியின் சூட்சுமங்களை அறிந்தவர்கள் மிகச் சிலரே. இவர் களே கம்பெனியை ஆட்டிப் படைப்பவர்களாவர்.

3. பங்குகளை விற்று இலாபம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ள சிலர் தங்களது பங்குகளை விற்பதில் அதிக ஊக்கம் காட்டுவார்களேயொழிய, கம்பெனியின் பணிகளில் அன்று.

4. பேரளவு கம்பெனிகளைச் சம்பளம் பெறும் மேலாண்மை யாளர் நடத்துகிறார்கள். இவர்களது திறமையையும் நேர்மை யையும் பொறுத்துக் கம்பெனியின் வெற்றி தோல்வி இருக்கும்.

## 4. கூட்டுறவு அமைப்பு

மேலே காணும் குறைபாடுகளைத் தவிர்க்கவே கூட்டுறவு அமைப்பு முறை தோன்றியது. இது நுகர்வோர் கூட்டுறவாக இருக்கலாம் அல்லது உற்பத்தியாளர் கூட்டுறவாக இருக்கலாம்.

1. கூட்டுறவு சங்கங்களில் அங்கம் பெறுபவர் ஒருவருக் கொருவர் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். பங்கு விற்கப்பட முடியாதது. பங்கு வேண்டாமென்றால் சங்கமே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும். ஒருவருக்கு எத்தனை பங்குகள் இருந்தாலும் ஒரே ஓட்டுதான் உண்டு. வீண் செலவுகளும் ஆடம்பரமும் இன்றிச் சிக்கனத்தை ஊக்குவிப்பதாக இருக்கும். சங்கம் தனது நடவடிக்கைகளின் பயனாகப் பெறும் இலாபம் ஏதாவதிருந்தால், அதில் சிறிதொரு பாகத்தையே பகிர்வு செய்வார்கள். இலாபம் கருதி நடத்தப்பெறுவதில்லையாதலால் இலாப வேட்டை இதில் காணப்படுவதில்லை. நுகர்வோர் கூட்டுறவாயின், தரகர்களின் இலாபத்தைத் தவிர்த்து, வாங்குவோருக்குக் குறைந்த விலையில் பொருள் கிடைக்கச் செய்வதுதான் இதன் நோக்கமாகும்.

2. உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாளருக்கு வேண்டிய கொள்முதல், விற்பனை முதலியவைகளில் இலாப வேட்டையைத் தவிர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும். தனித் தனி உற்பத்தியாளர் விற்பனை செய்யும்போது பேரசக்தியற்றவர் களாகிறார்கள். அவர்கள் கூட்டுச் சேரும்போது அவர்களுக்குப் பேரம் செய்யும் திறமை கிட்டுகிறது.

3. கடன்கள், இன்சூரன்ஸ், பாங்கு ஆகிய விஷயங்களில் கூட்டுறவு முறை வழக்கில் இருக்கிறது. கடன்கள் பெறுவதற்கும், சிறு சேமிப்புகளை ஊக்குவிப்பதற்கும் சங்கங்கள் இருக்கின்றன.

**இதன் சிறப்பு அம்சங்கள்**

1. கூட்டுறவு முறையின் குறிக்கோள்கள் மிக உயர்ந்தவை யாகும். மனிதப் பண்பை உயர்த்துவனவாக அவை உள்ளன.

2. 'எல்லோருக்காக ஒவ்வொருவரும், ஒவ்வொருவருக்காக எல்லோரும்' என்ற சொற்றொடர் இதன் அடிப்படை அம்சத்தை விளக்குகிறது.

3. இலாப வேட்டையும், மனிதனை மனிதனாக நடத்தாத நிலையும் இதில் இல்லை. இங்கு ஒவ்வொருவருக்கும் சமமான பங்குண்டு.

**குறைபாடுகள்**

1. தற்காலத்திய பேரளவு தொழில்களை நடத்தும் திறனை இம் முறை பொதுவாகப் பெறவில்லை.

2. உயர்ந்த குறிக்கோள்கள் ஏட்டளவில்தான் இருக்கின்றனவேயொழிய உண்மையில் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் உள்ளதுபோலவே இங்கும் சிலரின் ஆதிக்கம் வேரூன்றிவிடுகிறது.

**அரசாங்கக் கார்ப்பொரேஷன்கள்**

இன்று உலகின் பல நாடுகளிலும் பொதுத்துறை என்ற அரசாங்கத்துறை பொருளாதாரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது. அரசாங்கம் நேரடியாகப் பல பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றை நடத்த இருவகை முறைகளை அவை பின்பற்றுகின்றன.

1. அரசாங்கத்துறை ஒன்றின் பிரிவாக இவ் வேலையை நடத்துவது. உதாரணமாக, சென்னை அரசாங்கப் போக்குவரத்துத்துறை, சென்னை நகரிலும் வெளியூர்களுக்கும் ஓடும் பஸ், லாரிபோன்ற வசதிகளை நிர்வகித்து நடத்துகிறது.

2. கார்ப்பொரேஷன்கள் : சுயேச்சையான கூட்டு நிறுவன அமைப்பை ஏற்படுத்தி, அவ் வமைப்பின்கீழ் குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையை மேற்கொள்வது இன்றைய கால முறையாகும். நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் இதற்கோர் உதாரணமாகும். தனியார் துறையில் நிறுவனங்கள் எவ்வாறு இயங்குகின்றனவோ அவ்வாறே இவையும் இயங்குகின்றன. பாராளுமன்றமோ, சட்டமன்றமோ இவற்றின் வரவு செலவுகளை அங்கீகரிக்கின்றன. தினசரி வேலைகளை இதன் நிர்வாகக் குழுவே நடத்திக்கொள்கிறது.

# 11. தொழிற் பிரச்சினைகள்
## (Industrial Problems)

மனிதர்கள் தத்தம் தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொண்டிருந்த காலம் ஒன்றுண்டு. அப்பொழுதெல்லாம் உற்பத்தி சிக்கலற்றதாகவும், முதலை அதிகமாகப் பயன்படுத்தாமலும் இருந்த ஒரு காலமாகும். ஒரு குடும்பத்தில் உள்ளோர் அனை வரும் எல்லா வேலைகளையும் செய்து வந்தனர். அதாவது, எல்லோரும் விவசாயம் செய்தனர். துணி வேண்டும்போது எல்லோரும் நூல் நூற்று, ஆடைகள் நெய்துகொண்டனர். ஆனால், காலப்போக்கில் இது அவ்வளவு வசதியானதன்று என்று தெரிந்துகொண்டதால், அவர்கள் தங்களின் வேலைகளைப் பகுப்புச் செய்துகொண்டனர். ஆதாம் பருத்தியைப் பஞ்சாக ஆக்கிப் பட்டையடித்துக் கொடுத்ததாகவும், ஏவாள் நூல் நூற்றதாகவும் பழைய காலக் கவிதை ஒன்று கூறுகிறது. ஆளுக்கொரு வேலையைச் செய்வது என்று ஏற்பட்ட பிறகு உற்பத்தி வெகுவாக உயர்ந்திருக்கவேண்டும். இப் பகுதியில் வேலைப் பகுப்புபற்றி ஆய்வோம்.

### 1. வேலைப் பகுப்பு (Division of Labour)

ஆடம் ஸ்மித் அவர்கள் வேலைப் பகுப்புபற்றிக் கூறியுள்ளதை நாமும் பின்பற்றலாம். குண்டூசி செய்யும் ஓர் உதாரணத்தைக் காட்டி இவர் இப் பிரச்சினைக்கு அழகான விளக்கம் தந்துள்ளார். தொன்மையான இவ்வெடுத்துக்காட்டு இன்னும் பொருத்தமாக இருக்கிறது.

குண்டூசியைச் செய்ய ஒருவன் முற்படுவானானால், அவனால் ஒரு நாளுக்குள் ஓர் ஊசிகூடச் செய்ய முடியுமாவென்பது சந்தேகமே. 20 ஊசிகளை அவன் செய்வது சாத்தியமேயன்று. அதற்குப் பதிலாகப் பத்துப் பேர் தங்களுக்குள்ளாகக் குண்டூசி செய்

வதன் பல வேலைகளை ஆளுக்கொன்ருகச் செய்வதாகக் கொள்வோம். ஒருவன் கம்பிகளைக் கோணலின்றி நீட்டுகிருன். இன்னொருவன் அதை அளவாக வெட்டுகிருன். மூன்ருமவன் வெட்டப்பட்ட துண்டுகளின் ஒரு பக்கத்தைக் கூராக்குகிருன். இன்னுமுள்ளோரில் மூன்று பேர் ஊசிக்குத் தலை வைக்கும் வேலை செய்கின்றனர். ஒருவன் ஊசிகளுக்கு வெண்மை நிறம் கொடுக்கிருன். இன்னொருவன் அவற்றை எண்ணிப் பார்த்துச் சிறுசிறு பாக்கெட்டுகளில் அடைக்கிருன். இப்படியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்ததால், 48,000 ஊசிகளுக்கு மேல் ஒரு நாளில் செய்ய முடிந்தது. அதாவது, ஒருவர் 4,800 ஊசி செய்யமுடிந்தது. வேலைப் பகுப்பு இல்லாதிருந்தால் இவ்வளவு ஊசிகள் செய்யமுடிந்திருக்காதல்லவா? நவீன எடுத்துக் காட்டுகள் பலவற்றைக் கூறமுடியும். டைப்ரைட்டர் செய்யும் தொழிலில் பல நூறு செயற் பகுதிகள் இருக்கின்றன. மோட்டார் தொழிற்சாலையில் பல ஆயிரம் வேலைப் பிரிவுகள் உள்ளன. இவ்வித வேலைப் பகுப்பினுல் உற்பத்தி பெருகுவதன் காரணம் என்ன? ஆடம் ஸ்மித் மூன்று காரணங்களைத் தருகிருர்.

1. ஒவ்வொரு தொழிலாளியும் குறிப்பிட்டதொரு வேலையைத் திரும்பத்திரும்பச் செய்வதால் அவனது கைத்திறன் அதிகப்படுகிறது. விடாது ஒரே வேலையைச் செய்யும்போது அவனுக்கு அவ் வேலையைப் பூரண திருப்தியோடு செய்யமுடிகிறது. அவனவன் திறமைக்கும் மனப்போக்கிற்கும் ஏற்றவாறு வேலையில் அமரமுடிகிறது. சிறப்புத் தேர்ச்சி (specialisation) பெறுவதற்கு இது உறுதுணையாக இருப்பதால், தொழிலாளி தனியொரு துறையில் சிறப்புத் தேர்ச்சி அடைகிருன். இதனுல் அவனுக்கு ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்குப் பெயர்ந்து செல்வது எளிதாகிறது. இவ்வித வேலைப் பெயர்ச்சி இன்றுள்ள பொருளாதார அமைப்பின் அடிப்படையாகக் கருதப்பெறுகிறது.

2. வேலை செய்யும் காலம் வெகுவாகக் குறைகிறது. மிகக் குறைந்த அளவு காலத்துக்குள் அதிக அளவு வேலையைச் செய்யமுடிகிறது. ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் நிலக்கரி வெட்டும் ஆட்களும், சுரங்கத்தின் ஓரத்தில் சாரம் கட்டும் ஆட்களும், வெட்டிய நிலக்கரியைச் சக்கர வண்டியில் ஏற்றும் ஆட்களும், கடைசியில் வண்டியை இழுத்துச் செல்பவர்களும் தனித்தனியே அவரவர் வேலையைச் செய்யாமல் எல்லோரும் எல்லா வேலைகளையும் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கிருந்த உபகரணங்களை ஒருவர் மாற்றி ஒருவர் உபயோகப்படுத்துவர். இதனுல் உபகரணங்களும் முழுவதாகப் பயன்படுத்தப்பெற

வில்லை. உழைப்பாளரும் முழுநேரம் வேலை செய்ய முடியவில்லை. வேலைப் பகுப்பு ஏற்பட்டபோது அவரவர் செய்யும் வேலைக்கேற்ற உபகரணங்களை அவர்களே பயன்படுத்தியதால், வேலை நேரமும் குறைந்தது; உபகரணங்களும் முழுப்பயனை அடைந்தன. ஸ்டாக்கனேவ் என்னும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி இம் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதால் ஏராளமான நிலக்கரியைத் தோண்ட முடிந்தது என்று ருஷ்யப் பொருளாதார வரலாற்று நூல் கூறுகிறது. இதை ஸ்டாக்கனேவைட் புரட்சி **(Stakhanovite revolution)** என்று அழைக்கின்றனர். இவ்வெடுத்துக் காட்டு, உபகரணங்களைக் கையாள்வதிலும், ஓரிடம் விட்டு இன்னேரிடம் மாற்றிச் செல்வதிலும் ஆகும் காலவிரயத்தைத் தடைசெய்வதன்மூலம் உற்பத்தியைப் பெருக்குகிறது.

3. ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அதன் நுணுக்கங்கள் தெளிவாகத் தெரிவதால், அவ் வேலையைச் செய்ய இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் முனைப்பும், தூண்டுதலும், சாத்தியமும் ஏற்படுகின்றன. ஆல்வா எடிசனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சி இதை விளக்குவதாக இருக்கிறது. தொலைவான காட்டுப் பிரதேசம் ஒன்றில் அவர் தந்திக் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். தலைமை அலுவலகத்துக்கு அரை மணிக்கொரு தரம் 'ஆர்' என்ற எழுத்தைத் தந்திமூலம் அனுப்பிக்கொண்டிருக்க வேண்டுமாம். தொலைதூரப் பிரதேசமாகையால் வேறு தந்திகளே அங்கு வருவதில்லையாம். எனவே, எடிசன் மிகவும் சோம்பலாகிக் களைத்துப்போனர். அரைமணிக்கொரு தரம் இவ் வெழுத்தை அனுப்பவேண்டி இராதிருந்தால், வேறு வேலையாவது சும்மா இருந்த நேரத்தில் செய்திருக்கலாம். எனவே, அவரது படைக்கும் அறிவைப் பயன்படுத்திச் சுவர்க் கடிகாரத்தோடு தந்தி அடிக்கும் கருவியைப் பொருத்தி, அரை மணி அடிக்கும்போது எழுத்தும் தந்தியில் அனுப்ப வகை செய்தார். நீராவியந்திரத்தைக் கண்டுபிடித்த ஸ்டீவன்சனும், தனது விளையாட்டுப் பொருள்கள் அனைத்தோடும் விளையாட நேரமில்லாதுபோகவே, அதைப் போக்குவதற்காக அவருடைய விளையாட்டு இரயில் வண்டியை நீராவியால் ஓட்ட வைத்தார். இவ்வாறு செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும்போது அவற்றிற்கு வேண்டிய இயந்திரங்களைச் செய்யும் முனைப்பும் ஆற்றலும் ஏற்படுகிறதாகையால், உற்பத்தி வெகுவாகப் பெருக இது வழிவகுக்கிறது. இதுமாத்திரமல்லாமல் குறிப்பிட்ட யந்திரக் கருவிகளே தேவைப்படுவதாகவும் இருக்கும். கிடைக்கும் இயந்திரக் கருவிகளையும் பூரணமாகப் பயன்படுத்த முடிவதால்,

முதலும் அதிகமாகத் தேவைப்படாது. வேலைப் பகுப்பின் காரணமாக இன்று தொழில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது.

**வேலைப் பகுப்பின் தீய விளைவுகள்**

வேலைப் பகுப்பு முழுவதாக நன்மையே மட்டும் விளைவிப்பதாகக் கருதிவிடக்கூடாது. அதனால் சில தீய விளைவுகளும் நேர்வதுண்டு.

1. பெரியதொரு மோட்டார்த் தொழிற்சாலையில் வர்ணம் பூசும் வேலை செய்யும் தொழிலாளிக்கு அல்லது கியர் பெட்டியின் ஒரு பகுதியைச் செய்யும் தொழிலாளிக்குத் தான் செய்யும் வேலையால் கார் ஆக்கப்பெறுகிறது என்பதை உணர முடிவதில்லை. இதனால் தான் செய்யும் வேலையைப்பற்றிய பெருமிதமும், ஆக்கபூர்வ மகிழ்ச்சியும் ஏற்படுவதில்லை. இதே போன்று, முழுச் செருப்பையும் தானே தைப்பவனுக்குத் தனது கைவேலையாகச் செருப்பு இருக்கிறது என்று உணரமுடிகிறது. ஆனால், செருப்புத் தொழிற்சாலையில் இரு நூறுக்கும் மேற்பட்ட பிரிவுகளில் ஒன்றில் பணிபுரிபவன் தனது ஆக்கம் என்று எதைக் கூறுவது?

2. செய்த வேலையையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருப்பதால், சோர்வும் மனவெறுப்பும் ஏற்பட ஏதுவாகும். செய்தித்தாளை மடித்து மடித்து வைக்கும் ஆள் வெகு விரைவிலேயே வேலையில் வெறுப்படைந்துவிடக்கூடும்.

3. ஒரே வேலையைச் செய்துகொண்டேயிருப்பதால், அத் தொழிலில் ஏதாவது பொருளாதார மந்தம் ஏற்பட்டுப்போகுமானால் வேறு வேலை கிடைக்காமற்போகலாம்.

4. இயந்திரப் பயன்பாட்டின் குறைபாடுகள் எல்லாம் ஓரளவிற்கு வேலைப் பகுப்பின் குறைபாடுகளாகக் கொள்ளலாம். இதுபற்றிப் பின்னர் பார்ப்போம்.

இத் தீய விளைவுகள் அறுதியானவை அல்ல. செய்யும் தொழிலில் பெருமிதம் கொள்வதற்கு முழுப் பொருளையும் ஆக்க வேண்டுமென்பதில்லை. தான் செய்யும் வேலை முழுப் பொருளாக்கத்தில் எத்துணை முக்கியம் வாய்ந்தது என்பதைத் தொழிலாளி உணர்வாரானல், அவருக்கு ஊக்கமும் உற்சாகமும் பிறக்கக் கூடும். மிகவும் மனச் சோர்வைத் தரும் வேலைகளைச் செய்யத் தற்காலத்தில் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. செய்தித்

தாளை மடிக்கும் இயந்திரம் இவ்வாறு கண்டுபிடிக்கப்பெற்றது தான். ஒரே தொழிலின் பல பிரிவுகளுக்கும் மாற்றம் செய்து அதன்மூலம் வேலையில் ஏற்படும் வெறுப்பைப் போக்கலாம். தற்காலத்திய தொழில் முறைகளில் இயந்திரப் பயன்பாடு இருப்ப தால், ஒரு தொழில் நசித்தாலும் இன்னொரு தொழிலுக்கு இலகுவில் மாற்றிக்கொள்ள முடிகிறது. யுத்த காலத்தில் இது தெரியவந்தது. கடிகாரம் செய்யும் தொழிற்சாலைகளெல்லாம் துப்பாக்கி செய்யும் தொழிற்சாலைகளாக மாற்றப்பெற்றன. தொழில் நுணுக்கம் அறியப்படுவதால் தொழிலாளியின் அறிவும் பயிற்சியும் பெருகுகிறது. வேறு தொழிலுக்கு மாற்றிக்கொள்ள இலகுவில் பயிற்சி பெறமுடிகிறது. இயந்திரங்களோடு இயந்திரமாக மனிதனைக் கருதிவிடாமல் இருக்க இக் காலத்தில் பற்பல சட்டங் களும் விதிகளும் தோன்றியவண்ணம் இருக்கின்றன. வேலை நேரம், வேலைச் சூழ்நிலை, தொழிலாளர் ஊதியங்கள், வீட்டு வசதிகள், மருத்துவச் சலுகைகள், இழப்பீட்டு வசதிகள் என்று எத்துணையோ மாறுதல்களைச் சமுதாயம் செய்து வருகிறது. இவற்றின்மூலமாக இயந்திரத்தோடு இயந்திரமாக உழைக்கும் மனிதனின் உளப்பண்பையும் உறுதியையும் இழக்கச் செய்யாமல் இருக்க வழிவகுக்கப்பெறுகிறது.

## 2. இயந்திரப் பொறிகளைப் பயன்படுத்துவதால் உண்டாகும் நன்மை, தீமைகள்

சிக்கலான இன்றைய பொருளாதார வாழ்க்கையில் இயந்திரங் கள் பேரளவில் பயன்படுகின்றன. மனிதனின் கைகளையே நம்பிக்கொண்டிருந்த காலம் போய்விட்டது. எதையும் இயந் திரத்தால் ஆக்கமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தொழிற் புரட்சிக்குப் பிறகு இவ்வாறு இயந்திரக் கருவிகள் அதிகமாகப் பயன்பட்டுவருகின்றன. வேலைப் பகுப்பின் விளை வாகவும், விஞ்ஞானப் படைப்புகளின்மூலமாகவும் இயந்திரங்கள் கருவிகளாக உற்பத்தி முறைக்குப் பயன்படுத்தப்பெற்றன. மரத்திலிருந்து பழத்தைப் பறிக்கக் கீழே கிடக்கும் குச்சியைப் பயன்படுத்தியவன் முதன்முதலாக ஒரு கருவியைப் பயன் படுத்தியவன் ஆவான். இனி, பொறிகளைப் பயன்படுத்துவதால் உண்டாகும் பலாபலன்களை ஆய்வோம்.

**நன்மைகள்**

1. மனிதனோ அல்லது அவனுக்குத் துணையாகப் பணிபுரிந்த மிருகபலமோ செய்யமுடியாது என்று நினைத்த வேலைகளை இன்று இயந்திரம் செய்கிறது. யானைகளைத் தூக்கிக் கப்பலுக்குள் வைத்து

விடுகிறது கிரேன் (crane) என்னும் யந்திரம். மரத்தையே வேரோடு பறித்துப் போட்டுவிடுகிறது புல்டோசர். நெய்வேலியில் உள்ள மண்வெட்டும் யந்திரம் 5,000 பேர் சேர்ந்து வெட்டும் மண்ணை வெட்டி, அதை ஓடும் பெல்டுகளில் போட்டு விடுகிறது. பெரும் பாறைகளையும் பிளக்க முடிகிறது. துளையிடும் கருவியால் இரும்புத் தகடுகளைத் துளையிடுகிறார்கள். இரும்புத் தண்டவாளங்களைத் துண்டுதுண்டாக நறுக்குகிறது இன்னொரு யந்திரம். எனவே, மனிதன் தனது உடல் வலுவைக்கொண்டு செய்யமுடியாத வேலைகளையெல்லாம் இயந்திரத்தைக்கொண்டு செய்துவிடுகிறான்.

2. ஒரே தரமான பொருள்களை இம்மியளவும் மாறாது அப்படியே செய்ய மனிதனால் முடிவதில்லை. ஒரு மரையுள்ள ஆணியில் பொருத்தும் மரைகளைச் (nuts) செய்ய மனிதனுக்கு முடியும். ஆனால், சரியாகப் பொருந்துமாறு செய்வது மிகக் கடினம். ஒருவன் செய்யும் மரை இன்னொருவன் செய்யும் ஆணியில் சேராதுபோகும். ஆனால், யந்திரம் திரும்பத் திரும்ப அதே பொருளை அப்படியே செய்து கொடுக்கும். இதனால் பதிலீடுகள் இலகுவாகின்றன. இயந்திரத்தின் பாகங்களைச் செய்ய முடிகிறது.

3. களைப்பையும் வெறுப்பையும் உண்டாக்கும் பணிகளை இயந்திரங்கள் புரிகின்றன. தற்கால நாகரிகத்தின் உச்சநிலையில் இருக்கும் நாடுகளில் இவ்வித இயந்திரங்கள் உழைப்பாளியின் சோர்வையும் வெறுப்பையும் போக்குவனவாக உள்ளன. தாமாக இயங்கும் இயந்திரங்கள் (automation) தோன்றிய பிறகு இது மிகவும் சிறப்புப் பெற்றுள்ளது. நூல் நூற்பாலையில் நூலறுந்துபோனால், தொழிலாளி ஒருவன் அங்கு நின்று அதை இணைத்து விட வேண்டும். நாளெல்லாம் ஓடிக்கொண்டிருக்கும் நூலைப் பார்த்து வெறுப்பும் சலிப்பும் ஏற்பட்டுவிடலாம். இப்பொழுதெல்லாம் நவீன இயந்திரங்களில் பொறி ஒன்று இணைக்கப்பெற்று, அதுவே அறுந்த நூலை ஒட்டச் செய்துவிடுகிறது.

4. உற்பத்தியைப் பேரளவில் பெருக்கி மலிவான விலையில் பொருள்கள் கிடைக்கச் செய்கின்றன இயந்திரங்கள். தற்காலத்தில் கிடைக்கும் பொருள்கள் முன்னொரு காலத்தில் மகாராஜாக்களும் மன்னர்களும் மட்டுமே பயன்படுத்தியவையாகும். இயந்திரப் பயன்பாட்டினால் இன்று பாமர மனிதனும் அனுபவிக்கக்கூடியவாறு பொருள்களைச் செய்து குவிக்கின்றன யந்திரங்கள். உற்பத்திச் செலவு குறைக்கப்பெறுவதால் இவ்வாறு விலை மலிவாகக் கிட்டுகிறது.

5. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நிலையையும் ஆக்கித்தருகின்றன பொறிகள். அமெரிக்கரின் வீட்டில் சமையலறையில் இருந்தபடியே வீட்டுக்கார அம்மாள் டெலிவிஷனும் பார்த்துக்கொள்ளலாம். தொலைபேசியில் பேசி, கடையிலிருந்து பண்டங்களை வாங்கிக்கொள்ளலாம். மின் சக்தியால் அடுப்பு எரிவதால், ஊதி ஊதிக் கண் கெட்டுவிட்டது என்ற நிலை போய்விடுகிறது. துணிகள் துவைக்க இயந்திரம், பாத்திரம் கழுவ இயந்திரம், உணவுப் பண்டங்களைச் சுத்தமாகவும் புதியனவாகவும் வைத்திருக்க இயந்திரம். இப்படி வாழ்க்கையின் வசதிகளைப் பெருக்கிக் கலைவாழ்வு வாழ வழிசெய்கிறது இயந்திரப் பயன்பாடு. நூறு மாடிகள், பதினன்கு மாடிகள் என்று கட்டடம் கட்டி அதில் ஏறுவதற்கு லிஃப்டுகளைப் பொருத்தி விரைவில் ஏறவும் இறங்கவும் வசதி செய்யப்படுகிறது. உணவுப் பண்டங்களும் பக்குவப்படுத்தி டப்பாக்களில் இடப்பெற்று, எங்கும் எந் நேரத்திலும் பயன்படுத்தும் வகையில் ஆக்கப்பெறுகின்றன. பொருளாதார வளர்ச்சி இவ்வாறு உயர்ந்து செல்வதற்கு இயந்திரப் பயன்பாடு பெரிதும் துணைபுரிகிறது.

6. இயந்திரங்களைக் கையாளும் தொழிலாளியின் அறிவு விருத்தியடைகிறது. சிக்கலான இயந்திரங்களை இயக்க அறிவும் திறனும் தேவைப்படுகின்றன. இவற்றிற்கான பயிற்சிகள் தோன்றுகின்றன. யந்திரப் பொறிகளில் வேலை செய்வோரின் பொது அறிவு, அவ்வாறு இயந்திரத் துணையில்லாமல் வேலைசெய்யும் தொழிலாளியின் அறிவைவிடக் கூர்மையானதாக இருக்கிறது.

இன்னும் எவ்வளவோ நன்மைகள் இயந்திரப் பயன்பாட்டினல் விளைகின்றன. இதனல் தீய விளைவுகளும் தோன்றுகின்றன. பெரும்பாலும் இத் தீய விளைவுகள் பொருளாதார அமைப்பினல் ஏற்படுபவையே. சமுதாய அமைப்பும் சில சமயங்களில் இத் தீய விளைவுகளுக்குக் காரணமாக இருந்துவிடுவதுண்டு.

**தீய விளைவுகள்**

1. இயந்திரப் பயன்பாட்டினல் தொழிலாளருக்கு வேலை போய் விடும் என்று கூறப்படுகிறது. பொதுவாகத் தொழிற் புரட்சி இங்கிலாந்தில் தோன்றியபோது தொழிலாளர் இவ்வாறு நினைத்தார்கள். இன்றுங்கூட இந்தியாவில் இவ்வாறு நினைக்கப் பெறுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் இவ்வாறு வேலையின்மை ஏற்படுவது ஒருவேளை நடக்கலாம். ஆனல், அங்குங்கூட முழுவதாகப் பொறிகளைப் பயன்படுத்துவதால் வேலையின்மை தோன்றுகிறதென்று கூறமுடியாது. ஓர் யந்திரத்தால் 1,000 பேர்

வேலை இழப்பதாகக் கொள்வோம். அவ்வியந்திரம் செய்வதால் அப் பொருளின் விலை மலிவாகும். இயந்திரத்தைச் செய்ய ஆட்கள் தேவைப்படும். மலிவு விலை ஆனதால் அப் பொருள் அதிகமாகத் தேவைப்படலாம். அதனால் மேலும் சிலருக்கு வேலை கிட்டலாம். பொருள் மலிவானதால் மிஞ்சும் பணத்தை வேறு பொருள்களில் செலவிடுவார்கள் அல்லவா? அதன்மூலம் வேறு சிலருக்கு வேலை கிட்டலாம். எனவே, வேலையின்மை ஏற்படும் என்பது அவ்வளவு உண்மையானதன்று. சோஷியலிசத்தில் இது ஏற்படாது.

2. மனிதர்களும் யந்திரமாகிவிடுவார்கள் என்று சொல்லப் படுகிறது. யந்திரத்தோடு சேர்ந்து வேலை செய்து களைத்துச் சோர்ந்து திரும்பும் தொழிலாளி வேறு வேலை அல்லது கலை ஆகிய வற்றிற்குப் பயனற்றவனாகிறான். இதைத் தவிர்க்க இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றுவருகின்றன. தொழிற்சாலைச் சட்டங்கள் இந்த நிலைமையை மாற்ற முயன்றுவருகின்றன. பஞ்சாலையிலிருந்து வருகிற தொழிலாளிகளையும், நிலக்கரிச் சுரங்கங்கள், ரப்பர்த் தொழிற்சாலைகள் ஆகியவற்றினின்றும் வெளியே வரும் தொழிலாளர்களையும் பார்த்தால், மேலும் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டாகவேண்டும் என்பது விளங்கும். சுகாதாரத்துக்கும் ஒழுக்கத்துக்கும் கேடு விளைவிப்பது குறைந்துவருகிறது.

3. சித்திர வேலைப்பாடுகள், கைவேலை ஆகியவை நிறைந்த பண்டங்களை யந்திரம் செய்ய முடியாது. மலையெனக் குவிக்கத் தான் யந்திரத்தால் முடியுமேயொழிய, நல்ல சிறப்பான முறையில் வேலைப்பாடு மிக்க பொருளைச் செய்ய முடியாது. சமுதாயம் முழுமைக்கும் பயன் தராத தனிச் சிறப்புப் பொருள்கள் செய்யப் பெறுவதால் இலாபம் ஒன்றுமில்லை. ஒருசிலரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுமட்டுமே இவ்வாறான கைவினைஞர்களால் முடியும். அதற்குப் பதிலாக யந்திரம் பல கோடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது.

எனவே, யந்திரப் பயன்பாட்டின் நன்மைகள் தீய விளைவுகளை விட அதிகமாகவே உள்ளன. மனிதனின் நல்வாழ்விற்காக அதை ஆள்வதில்தான் சிக்கல் தோன்றுகிறதேயொழிய, யந்திரப் பயன் பாட்டில் தீது ஒன்றுமில்லை.

## 3. தொழிலின் இடச்செறிவு (Localisation of Industries)

### (1) பிரதேசத் தொழிற் பகுப்பு

வேலைப் பகுப்புத் தொழிலாளருக்கிடையே நடப்பதுபோல பிரதேசங்களுக்கிடையே இவ்விதத் தொழிற் பகுப்பு ஏற்படுவதுண்டு. இயற்கை சில பிரதேசங்களைச் செழிப்புள்ளதாக்குகிறது. சில பிரதேசங்களைக் கனிவளம் நிறைந்ததாக்குகிறது. இன்னும் சில பிரதேசங்களில் மக்கள்தொகை அதிகமிருந்து வேலை செய்யும் தொழிலாளர் அதிகமாகக் கிடைக்கக்கூடும். இவ்வாருன இயற்கைக் காரணங்களோடு, பல செயற்கைக் காரணங்களும் சில பிரதேசங்கள் சில தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கச் செய்யக்கூடும். உதாரணமாக, சில நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஆரம்பத்திலேயே ஏற்பட்டுவிட்டதால், அங்குத் தொழில்கள் மேலும்மேலும் பெருக முடியும். அங்குத் தொழில்நுட்பமும் அறிவும் பெரும்பாலோரால் பெறப்படும் நிலை காணப்படும். இதனுல் ஒவ்வொரு நாடும் சில பொருள்களை ஆக்குவதில் அல்லது தொழில்களில் சிறப்புத் தேர்ச்சி பெறக்கூடும். சிறு பிள்ளைகூட சுவிட்சர்லாந்து என்ருல் கடிகாரம் செய்யும் நாடு என்று சொல்லும். இவ்வாறு நாடுகள் தொழிற் பகுப்பு செய்து கொள்வதைப் பிரதேசத் தொழிற் பகுப்பு (Territorial division of labour) என்று அழைக்கலாம்.

### (2) தொழிலின் இடச்செறிவு (Localisation of Industries)

இவ்வாறு நாட்டுக்கு நாடு சில சிறப்புத் தேர்ச்சி காணப்படுவதோடுகூட, நாட்டுக்குள்ளும் சில இடங்களில் சில தொழில்கள் குவிய ஆரம்பிக்கலாம். பம்பாயிலும், அகமதாபாத்திலும், சென்னையிலும், மதுரையிலும், கோவையிலும் பஞ்சாலைகளும் நெசவாலைகளும் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. இவை ஏன் இவ்வாறு ஓரிடத்தில் செறிவடைகின்றன என்ற கேள்விக்கு விடையளிக்க முயல்வோம்.

தொழிலாளர் வேலைப் பகுப்பு செய்துகொள்வதற்குக் காரணங்கள் அவரவரது திறமைக்குத் தக்கவாறும், சக்திக்கு ஏற்றவாறும் வேலை செய்வதற்காக என்று பார்த்தோம். இவைதாம் தொழிலின் இடச்செறிவுக்கும் காரணமாகின்றன. இவ்வாறு பம்பாயில் பஞ்சு ஆலைகளும், வங்காளத்தில் சணல் ஆலைகளும், சென்னையில் பஞ்சாலைகளும் இருப்பதற்கு அடிப்படையான காரணங்கள் இரு வகைப்படும். (1) இயற்கைக் காரணங்கள்;

(2) செயற்கைக் காரணங்கள் என்று இவற்றைக் கூறலாம். இவற்றை முறையே பார்ப்போம்.

### (அ) இயற்கைக் காரணங்கள்

(i) கச்சாப் பொருள் கிடைக்கும் வசதி: ஒரு சில இடங்களில் தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருள்கள் ஏராளமாகவும் தட்டின்றியும் கிடைக்கக்கூடும். குறிப்பாகப் பளுவுள்ள கச்சாப் பொருள்களாக இருப்பின், தொழில்கள் கச்சாப் பொருள்கள் கிடைக்குமிடத்திலேயே ஆரம்பிக்கப்படுவது இயற்கை. இரும்புக் கனி மிகவும் பளுவுள்ளது; இடத்தை அடைக்கக்கூடியது. வெகு தொலைவில் இரும்பு உருக்கும் ஆலை நிறுவப்பெறுமானால், இரும்புக் கனிப்பொருள்களை ஏற்றிச் செல்வதில் அதிகச் செலவு ஏற்படும். சில கச்சாப் பொருள்கள் ஏற்றிச் செல்லப்படுமானால் அதன் தன்மை குறைந்துவிடக்கூடும். உதாரணமாக, கரும்பைத் தொலைவான இடத்திற்கு அனுப்பிவைத்தால் அதன் சாறு வற்றிப் போகக்கூடும். நெய்வேலியின் பழுப்பு நிலக்கரி சில மணி நேரங்களில் காற்றுப் பட்டவுடன் எரிந்து சாதாரணக் கரியாகிவிடக்கூடும். இப்படிப்பட்ட பொருள்களை மூலப்பொருளாகக் கொண்டு நடத்தப்பெறும் தொழில்கள் அவை கிடைக்குமிடங்களிலேயே தொடங்கப் பெறவேண்டியுள்ளன. சில பொருள்கள் அதிக இடத்தை அடைத்துக்கொள்வதோடு அதிகப் பளுவுள்ளதாகவும், ஏற்றிச் செல்லும் செலவு அதிகப்பட்டதாகவும் ஆகிவிடும். செங்கல் இப்படிப்பட்டதுதான். ஆக, பருத்தி விளையும் பிரதேசங்களில் பருத்தி ஆலைகளும், சணல் விளையும் பிரதேசங்களில் சணல் ஆலைகளும், இரும்புக் கனியும் நிலக்கரியும் கிடைக்கின்ற இடங்களில் இரும்பு ஆலைகளும் தோன்றுகின்றன.

(ii) மார்க்கெட்டுக்கு அருகில் இருக்கும் வசதி: செய்த பொருள்களை ஏற்றுமதி செய்யவோ அல்லது விற்பதற்கோ மார்க்கெட் அருகில் இருப்பது தொழிற் செறிவிற்கு ஒரு முக்கியக் காரணமாகும். இந்தியாவின் தலைவாசலாகிய பம்பாய் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் கடற்பாதைகளில் அமைந்துள்ளது. பெரிய நகரங்களாகிய கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில் ஏராளமான மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் பொருள்களை வாங்கும் சக்தி படைத்தவர்களாக இருப்பதால் மார்க்கெட்டுகள் நன்றாக இருக்கின்றன. மார்க்கெட்டுகளுக்கு அருகில் இருப்பதா அல்லது கச்சாப் பொருள்களின் அருகில் இருப்பதா என்பது அதை ஏற்றிச்செல்லும் தராதரச் செலவுகளைப் பொறுத்ததாகும். செய்த பண்டங்களை ஏற்றிச் செல்வது குறைந்த

செலவுடையதாயின், கச்சாப் பொருள்கள் கிடைக்குமிடத்தில் தொழில் குவியும்.

(iii) யந்திரங்களை இயக்கும் சக்திகளுக்கு அருகாமையில் இருப்பது: முன்பெல்லாம் நதிகளின் ஓரங்களிலேதான் தொழில்கள் வளர்ந்தன. நதியின் ஓட்டத்தைப் பயன்படுத்தி யந்திரத்தின் சக்கரங்களை ஓட்டினார்கள். நதியில் போக்குவரவு வசதியும் கிடைத்தது. பின்பு நீராவி பயன்படுத்தப்பெற்றபோது, நீராவியை உண்டாக்க எரிபொருள்களாகிய நிலக்கரி தேவைப்பட்டது. எனவே, நிலக்கரி கிடைக்குமிடங்களில் தொழிற் செறிவு தோன்றியது. மின்சக்தி பயன்படுத்தப்படும் இந் நாளில் இது முக்கியமானதாக இருப்பதில்லை. ஏனெனில், மின்சக்தியை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்ல முடியும் அல்லவா? ஆனால், இங்கும்கூட ஓரளவுக்கு மின்சக்தி உற்பத்தி செய்யுமிடங்களுக்கு அருகாமையிலிருப்பது நல்லது. ஏனெனில், தூர இடங்களுக்கு மின்சாரக் கம்பிகள்மூலம் எடுத்துச் செல்லப்பெறும்போது ஆற்றல் இழப்பு ஏற்படுகிறது.

இது போன்றே முதலில் சொல்லப்பட்ட கச்சாப் பொருள் கிடைக்கும் வசதியும், மார்க்கெட் வசதியும் தற்காலத்தில் எல்லோருக்கும் எளிதில் கிடைக்கும் வகையில் சாலைகளும், ரயில்வேக்களும், போக்குவரத்துச் சாதனங்களும், செய்திப் போக்குவரத்தும் பெருமளவில் முன்னேற்றமடைந்துவிட்டன.

### (ஆ) செயற்கைக் காரணங்கள்

(i) தொழிலாளர் இலகுவில் கிடைப்பது: தொழில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டபிறகு அங்குப் பலரும் அத் தொழிலின் நுணுக்கங்களை அறிந்தவர்களாக இருப்பார்கள். பஞ்சாலைத் தொழில் நகரம் ஒன்றில் வேலை தேடுவோர் அதிகமாக இருப்பார்கள். இவர்கள் இலகுவில் கிடைப்பதால், தொழிலைப் புதிதாக அங்கு ஆரம்பிப்பது இவர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

(ii) அறிவு, தொழில்நுட்பச் செறிவு: இவ்வாறு தொழில் ஓரிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பிறகு அங்குள்ள மக்களுக்கு அத் தொழிலின் நுட்பங்களும், அதைப்பற்றிய பொதுவான அறிவும் பெருகி நிற்கும். இவ்வித அறிவு காற்றிலே கலந்து நிற்பது போன்று தோன்றும். எனவே, அவ்விடத்தில் மற்றோர் ஆலையை நிறுவ அதிக சிரமம் இராது.

(iii) கடன் வசதி, பாங்கு முதலியன உண்டாதல்: தொழில் ஒன்று நடத்தப் பணம் அதிகமாகத் தேவைப்படும். பாங்குகள் இவ்விதத் தொழில்களின் அமைப்பையும் விற்பனையையும் பற்றி ஆய்வு செய்து, அதன்பேரில் கடன் கொடுக்க முன்வரும். புதிய இடங்களில் தொழில் ஆரம்பித்தால், அங்குள்ள பாங்குகள் இவ்வாறு கடன் கொடுக்க முன்வராதுபோகலாம்; அல்லது பாங்குகளுக்குத் தொழிலைப்பற்றித் தெரியாதுபோகலாம். எனவேதான், ஏற்கெனவே தொழில் ஆரம்பிக்கப்பெற்றுள்ள இடத்தில் இவ்விதமான பண வசதி கிட்டுகிறது.

(iv) உபதொழில் வளர்ச்சி: தொழில் ஒன்று ஆரம்பிக்கப் பெற்ற பிறகு, அதற்குத் துணையாக வேறு பல தொழில்கள் தோன்ற இடமுண்டு. சர்க்கரை ஆலை ஆரம்பித்த பிறகு அங்கிருந்து கிடைக்கும் உபபொருள்களைப் பயன்படுத்தவென்று அமிலத் தொழிற்சாலைகள், உரத்தொழிற்சாலைகள் ஆகியவை தோன்றும். எந்திரங்கள் பழுதுபட்டால் அவற்றைப் பழுதுபார்க்கவும், அவற்றிற்கு வேண்டிய உபபகுதிகளை வாங்கவும் முடியும். புதிய இடத்தில் இவையெல்லாம் ஏற்பட முடியாதல்லவா?

(v) போக்குவரவு, செய்திப் போக்குவரத்து ஆகியவைகளுக்கான வசதிகள் காலப்போக்கில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில் நகரங்களில் ஏற்படுகின்றன. பொருள்களைப் பார்சல் செய்யவும், ஏற்றிச் செல்லவும் வேண்டிய சிறப்புத் தேர்ச்சியும் இவ்விடங்களில் தோன்றிவிடுகின்றன. இவற்றிற்கெல்லாம் புதிய இடங்களில் தொழில் ஆரம்பிக்கப்பட்டால் அதிக சிரமும் செலவும் ஆகும்.

(vi) அரசாங்க ஆதரவும் வசதிகளும்: தொழில்நுட்பக் கழகங்களும், அவற்றினால் வெளியிடப்பெறும் சஞ்சிகைகளும் தொழிற் செறிவுள்ள இடங்களிலே கிடைக்கக்கூடியனவாகும். அது மட்டுமல்லாமல் ஐந்தாறு தொழிற்சாலைகள் ஒன்றுகூடி ஆராய்ச்சிக் கூடங்கள் அமைக்கவும் வசதி ஏற்படும். அரசாங்கமும் இவ்விதத் தொழிற் செறிவுள்ள இடங்களுக்கென்று சலுகைகளையும் சட்டங்களையும் இயற்றக்கூடும்.

இக் காரணங்களால் தொழிற்செறிவு ஏற்படுகின்றது. தொழிற் செறிவினால் இவ்வித நலன்கள் ஏற்பட்டபோதிலும், தீமைகளும் இருக்கின்றன.

1. குறிப்பிட்ட சில இடங்களில்மட்டுமே தொழில்கள் குவிந்துவிட்டால், நாட்டின் இதர பகுதிகள் வளர்ச்சியற்றுப்போகின்றன.

2. ஒரே இடத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுவதால், வீட்டு நெருக்கடிகளும் சுகாதார வசதியின்மையும் பெருகுகின்றன. சேரிகளும் குடிசைகளும் தோன்ற இடமுண்டாகிறது.

3. தொழில் மந்தமடையுமானால், வேறு தொழில்கள் இல்லாமையால் தொழிலாளர் வேலையின்மையால் பெரிதும் பாதிக்கப்படக் கூடும்.

எனவேதான், இற்றை நாட்களில் அரசாங்கங்கள் தொழிற் செறிவுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. தொழில்கள் பரவலாக இருக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன.

## 4. உற்பத்தி அளவுகள்

சில நிறுவனங்கள் மிகப் பெரியனவாயும், சில மிகச் சிறியனவாயும் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். சில ஓட்டல்கள் மிகப் பெரிய அளவினவாக இருக்கும்; சில சிறியனவாக இருக்கும். இது போன்றே சில ஜவுளிக்கடைகள் சிறியனவாக இருக்கும்; சில பேரளவினவாக இருக்கும். இவை ஏன் பேரளவினவாக இருக்கின்றன? ஏன் சிற்றளவினவாகச் சில இருக்கின்றன என்ற பிரச்சினையைப்பற்றிப் பார்ப்போம்.

உற்பத்தி முறைகளில் (1) பேரளவு உற்பத்தி என்றும், (2) சிற்றளவு உற்பத்தி என்றும் இருவகை உற்பத்தி முறைகள் உண்டு.

### (1) பேரளவு உற்பத்தி (Large Scale Production)

ஆயிரக்கணக்கான பேர் ஒரே தடவையில் உட்கார்ந்து சாப்பிட்டுப் போகக்கூடிய ஓட்டல்களுண்டு. அங்கு நூற்றுக் கணக்கான பேர் பணிபுரியக்கூடும். பெரிய மோட்டார் தொழிற்சாலை அல்லது நெசவாலையைப் பார்த்தால் இது தெரியவரும். பெரிய பெரிய எந்திரங்களும், ஆயிரக்கணக்கில் தொழிலாளரும் இதில் காணப்படலாம். இதில் உற்பத்தி அளவும் ஆயிரக் கணக்கில் இருக்கும். பேரளவு உற்பத்தி முறை ஏற்படுவதற்கு அவ்வகையில் சில முக்கியச் சிக்கனங்கள் கிடைப்பதுதான் காரணமாகும். இச் சிக்கனங்களை அல்லது ஆதாயத்தை மார்ஷல் இரு வகைகளாகப் பிரித்தார். (அ) புறச் சிக்கனங்கள் (external economies); (ஆ) அகச் சிக்கனங்கள் (Internal economies).

**(அ) புறச்சிக்கனங்கள்**

புறச்சிக்கனங்கள் தொழிற் செறிவினால் ஏற்படும் நன்மைகளே யாகும். எனவே, இவைபற்றி ஏற்கெனவே பார்த்துள்ளோம். தொழிற் செறிவு ஏற்படுவதால், பயிற்சிபெற்ற தொழிலாளர் கிடைப்பர். பண வசதியும் இருக்கும். தொழிலுக்குப் பக்க பலமாக உபதொழில்களும் உதவித் தொழில்களும் தோன்றும். தொழில் நுட்பமும் பரவலாக மக்களிடையே பரவிநிற்கும். போக்குவரவு வசதிகளும், செய்திப் போக்குவரவும் கிடைக்கும். இவை தனியொரு நிறுவனத்தினால் ஏற்படாதவையாதலால், இவற்றைப் புறச்சிக்கனங்கள் என்று அழைக்கிறார்கள்.

**(ஆ) அகச்சிக்கனங்கள்**

தனியொரு நிறுவனம் பேரளவினதாக ஆகும்போது ஏற்படும் சிக்கனங்களாதலால், இவற்றை அகச்சிக்கனங்கள் என்று அழைக் கின்றனர்.

**(i) தொழில்நுட்பச் சிக்கனங்கள்**

சில தொழில்கள் சிற்றளவில் செய்யப்பட முடியாதவையாகும். இவ் வகைத் தொழில்களில் பயன்படுத்தப்பெறும் எந்திரங்களா யினுஞ் சரி, கச்சாப் பொருள்களாயினுஞ் சரி, அவை பேரளவின வாக இருத்தல்கூடும். உதாரணமாக, நீர் மின்சாரத் திட்டத்தை (Hydro-electric project) எடுத்துக்கொள்ளலாம். நதியின் நீரைத் தேக்கி டர்பைன்கள்மூலமாக அதைச் செலுத்திச் சக்கரங்களைச் சுழலவைத்து மின்சாரம் எடுக்கப்பெறுகிறது. இதில் ஆளப்படும் கருவிகள் அனைத்தும் ராட்சசப் பொறிகளாக இருக்கின்றன. எனவே, உற்பத்தியும் பேரளவினதாக இருந்தால்தான் அதை நடத்துவது சாத்தியம். சில பொறிகள் பல்வகைச் சாத்தியங்களை உடையவை. இவற்றைக் கையாளப் பேரளவு உற்பத்தி அவசிய மாகிறது. செய்தித்தாளை அச்சடிக்கும் பெரிய யந்திரங்கள் சிற்றளவு உற்பத்திக்குப் பயன்படா இவ்வியந்திரத்துக்காக ஆகும் செலவைச் சரிக்கட்டப் பேரளவு உற்பத்தி செய்யவேண்டியுள்ளது. மேலும், யந்திரத்தை இயக்க ஆட்கள் தேவையில்லை. பேரளவில் அச்சடிக்கும்போது ஓர் அலகு உற்பத்தியின் விலை வெகுவாகக் குறைகிறது. குறைந்துசெல் செலவீடு காரணமாக இது நிகழ் கிறது. பலர் இதை நுகருவதால் மார்க்கெட்டும் பெரிதாகிறது.

**(ii) மார்க்கெட் சிக்கனங்கள்**

தொழிலுக்கு வேண்டிய பொருள்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்துகொள்ளலாம். ஆனால், அவ்வாறு வாங்கும்

போது வெளியார் பலருக்கு இலாபம் கொடுக்கவேண்டியுள்ளது. இதைத் தவிர்க்கத் தொழிலிலேயே இப் பொருள்களைச் செய்து கொள்ள முற்படலாம். இரும்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனி நிலக்கரியை விலைக்கு வாங்கலாம். அப்படி வாங்கும்போது, நிலக் கரிச் சுரங்கங்களுக்கு இலாபம் அளிப்பது மட்டுமல்லாமல் அவர் களைச் சார்ந்தும் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். இதைத் தவிர்க்கத் தாமே நிலக்கரிச் சுரங்க வேலையையும் தொழிலின் ஒரு பகுதியாக மேற்கொள்ளலாம்.

விற்பதிலும் பேரளவு உற்பத்தித் தொழிலுக்குச் சில சாத கங்கள் உண்டு. அதாவது, மார்க்கெட் பேரங்கள் செய்வது, விலை நிர்ணயம் ஆகியவற்றின் பேரளவு உற்பத்தியாளர் சாதகங்கள் உடையவராவார். தொழிலாளரை வேலைக்கமர்த்தி அவர்களுக்குக் கூலி முதலியன கொடுப்பதிலும் பேரளவு உற்பத்திமுறையில் அதிக நன்மைகளுண்டு. பேரளவு உற்பத்தியில் கழிவுப் பொருள்கள், உபபொருள்கள் ஆகியவற்றை வீணாக்காமல் விற்பதற்கு வகை செய்ய முடியும்.

### (iii) நிர்வாகச் சிக்கனங்கள்

பேரளவு உற்பத்தியில் நிர்வாக முறையிலும் சிக்கனங்கள் ஏற்படுகின்றன. ஒரே அலுவலகம், ஒரே மேலாண்மையாளர், ஒரே விளம்பரம் ஆகியவற்றைக் கொண்டு தொழிலை நடத்த முடியும். 100 செய்தித்தாள்களை அச்சடிப்பதற்கும் ஓர் ஆசிரியர் உப ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள் தேவைதான். இவர் களையே வைத்துக்கொண்டு 1000 தாள்களை அச்சடிப்பதற்கும் இவர்களுக்காக ஒன்றும் செலவிட வேண்டியதில்லையே. பெரிய நிறுவனங்களில் மேலாண்மையாளர் (managers) அதிகச் சம்ப ளத்தில் நியமிக்கப்பெறலாம். இவர்களது திறமை முழுவதையும் பயன்படுத்தப் பேரளவு உற்பத்தி அவசியமாகிறது.

### (iv) பணச் சிக்கனங்கள்

பணம் கொடுக்கல்வாங்கலில் பெரிய நிறுவனம் சில நன்மை களைப் பெற்றுள்ளது. பெரிய நிறுவனம் கடன்பெறுவது எளிது. வட்டியும் குறைவாக இருக்கக்கூடும். எளிதில் தனது பங்குப் பத்திரங்களை விற்கவும் முடியும்.

### (v) இதர சிக்கனங்கள்

பெரிய நிறுவனங்களால் தொழில் ஆபத்துகளைச் சுலபமாகச் சமாளிக்க முடிகிறது. இன்சூரன்ஸ் வசதிகள், சரியான முறையில்

வரும் காரியத்தை முன்னரே காணல் ஆகிய தன்மைகளைப் பெரிய நிறுவனம் பெற்றுள்ளதால் ஆபத்துகளைத் தாங்கிக்கொள்ள முடிகிறது. சில சமயங்களில் அவற்றை வெற்றிகரமாகத் தவிர்க்கவும் செய்கின்றன.

(vi) **சில தீமைகள்**

1. பேரளவு உற்பத்தி செய்யும் தொழிலில் மந்தம் ஏற்படுமானால், விளையும் ஆபத்து அதிக இழப்பைத் தரக்கூடும்.

2. தொழிலாளர் இன்னார் இன்னாரென்று நிர்வாகத்திலிருப்பவர் அறிய முடியாது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே இதனால் தொடர்பு ஏற்படாதுபோகும். எனவே, இவர்களுக்கிடையே மனக்கசப்பும் பூசலும் வளரலாம்.

3. பெரிய நிர்வாகப் பொறுப்பானதால் சிறு தவறுகள்கூடப் பெருமளவில் இழப்பை உண்டாக்கக்கூடும். நிர்வாகப் பொறுப்பு பெரிதாகையால் மேற்பார்வையிடுவதும் கவனிப்பதும் சாத்தியமற்றவைகளாகப் போகக்கூடும்.

4. நிறுவனத்தைப் பெரிதாக வளர்த்துக்கொண்டேபோனால், மேல்செலவுகளும், இதர அடிப்படைச் செலவுகளும் அதிகரித்து, குறைந்துசெல் செலவு மாறி, உயர்ந்துசெல் செலவுப் போக்குத் தோன்ற ஆரம்பித்துவிடும். கப்பல் ஒன்றைப் பெரிதாகச் செய்து கொண்டேபோனால், அதை இயக்கவும் துறைமுகத்தில் நிறுத்தவும் உள்ள சிரமங்கள் அதனால் ஏற்படும் நன்மையைவிட அதிகமாகி விடும்.

5. மேலும், சில பொருள்களின் உற்பத்திக்கு நேரடியான மேற்பார்வையும், தனி அக்கறையும் தேவைப்படக்கூடும். இப்படிப்பட்ட பொருள்களைப் பேரளவில் உற்பத்திசெய்ய முடியாது.

6. சில உற்பத்தித் துறைகளில் உடனடியாக வரப்போவதை உணர்ந்து உற்பத்தி முறையை மாற்ற முடியாது இருக்கலாம். உதாரணமாக, விவசாயத்தில் இதைக் காணலாம். ஏராளமான அளவில் கடலை போடுவதாகக் கொள்வோம். திடீரென்று விலைகள் சரிகின்றன. அதைத் தடுக்க முடியாதுபோகும். அதற்குப் பதிலாகச் சிற்றளவு உற்பத்தியாயின் ஏற்படும் இழப்புக் குறைவாக இருக்கும்.

## (2) சிற்றளவு உற்பத்தி (Small-scale Production)

பேரளவு உற்பத்தியில் எவ்வளவோ நன்மைகள் இருந்தும், சிற்றளவு உற்பத்தி இன்னும் உலகெங்கிலும் பெருமளவுக்குக்

காணப்படுகிறது. குறிப்பாகச் சில்லறை வியாபாரத்திலும், விவசாயத்திலும், ஓட்டல், கடைகள் போன்றவற்றிலும், கலைப் பொருள் ஆக்கத்திலும் சிற்றளவு உற்பத்தி காணப்படுகிறது.

சிற்றளவு உற்பத்தியின் நன்மைகள் பேரளவு உற்பத்தியின் தீமைகளாகும். குறிப்பிட்டதொரு பொருளை நேரடியான மேற் பார்வையின்கீழ் அதிக அக்கறையோடு செய்யவேண்டுமாயின், அது சிற்றளவில்தான் செய்யப்பெறமுடியும். ஓட்டல் ஒன்றில் உணவருந்துவோரின் தேவைகளையும் ஆசைகளையும் உணர்ந்து அங்குப் பண்டங்கள் பறிமாறப்பட வேண்டுமாயின், அது சிற்றள வினதாக இருந்தால்தான் முடியும். அவசரமான முடிவுகளை மேற்கொள்ளவும், உற்பத்தியின் அளவை நினைத்தமாத்திரத்தில் கூட்டவும் குறைக்கவும் செய்யும் தன்மை சிற்றளவு உற்பத்தியில் காணப்பெறுகிறது. சில தொழில்களில் பேரளவு உற்பத்தி சாத்தியமாகவே இருக்காது. அவ்விதப் பண்டங்களைச் சிற்றளவில் தான் செய்ய முடியும். விற்பனைச் சிக்கனங்களையும், பணச் சிக்கனங்களையும், இதர தொழில் நுட்பச் சிக்கனங்களையும் சிற்றளவு நிறுவனங்கள் பெறமுடியாதுபோவதால்தான் அவை கூட்டுறவு ஸ்தாபனங்களாகச் சேருகின்றன.

**கூட்டுறவு விவசாயம் (Co-operative Farming)**

முக்கியமாக விவசாயத்தில் சிற்றளவு உற்பத்தி முறையே பின்பற்றப்பெறுகிறது. பல்லாயிரக் கணக்கான சிறு விவசாயிகள் சிறு சிறு நிலங்களில் உற்பத்தி செய்கின்றனர். இவர்களுக்குச் சில சாதகங்கள் இருப்பினும், பல சிக்கனங்களைப் பெற முடிவ தில்லை.

கடன் வசதிகள், உபகரண வசதிகள், புதிய சாகுபடி முறை களைப் பின்பற்றுதல் ஆகியவை சாத்தியமானவையாக இராமற் போகின்றன. இது போக, விற்பனையிலும் வாங்குவதிலும் இவர் களுக்கு அநேக இடையூறுகளும் இழப்புகளும் ஏற்படுகின்றன. திறமை படைத்த நகர்ப்புறக் கமிஷன் கடைக்காரர் மிகக் குறைந்த விலையில் இச் சிறு விவசாயிகளிடமிருந்து பொருள்களை வாங்கி விடுகிறார். ஆனால், அவருக்கு வேண்டிய பொருள்களை வாங்கும் போது அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி நேரிடுகிறது.

இவற்றையெல்லாம் தவிர்க்கச் சிறு சிறு விவசாயிகள் கூட்டுறவு முறையின் மூலம் பேரளவு உற்பத்தியின் சிக்கனங் களைப் பெறமுடியும். சிற்றளவு உற்பத்தியின் நன்மைகளையும் பெறமுடியும்.

சிறு பரப்புள்ள நிலங்களை உடைய உழவர்கள் தங்களது நிலங்களையெல்லாம் ஒரு நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவந்து உற்பத்தி செய்யலாம். உற்பத்தியான பொருள்கள் அனைத்தையும் கூட்டுறவு விற்பனை மூலமாக விற்கலாம். வாங்கும் பொருள்களையும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகப் பெறலாம். இதற்கும் மேலாகக் கடன்களையும் எளிதில் பெறலாம். சிக்கனமும் ஏற்படும். சிறு சேமிப்புகளையும் வளர்க்க முடியும். தொழில் நுட்பத்தையும் ஆராய்ச்சியையும் கூட்டுறவு விவசாய முறையில் மேற்கொள்ள முடியும்.

நிலம் தனியுடைமையாகவே இருக்கும். பிரிந்து செல்ல விரும்புவோர் பிரிந்து செல்லலாம். இதனால் சுதந்திரம் பாதிக்கப் பெறுவதில்லை. சிக்கனங்களைப் பெறுவதற்காகவே இவர்கள் கூட்டாகச் சேருவது நலம் பயக்கும்.

# 12. மதிப்பு
# (Value)

பொருளியலில் மதிப்பு ஒரு முக்கியப் பிரிவாகும். ஒரு பண்டத்தின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகிறது என்பதை அறிய முயலலாம். முதலாவதாக, மதிப்புக்கும் விலைக்கும் உள்ள வேறுபாட்டினை நினைவூட்டிக்கொள்ளவேண்டும். மதிப்பு என்பது ஒரு பண்டத்தின் மாற்று சக்தி. ஒரு பண்டத்தின் மதிப்பைப் பண அளவில் குறிப்பிட்டால் அது விலை ஆகிறது. ஒரு பண்டத்தின் மதிப்பு எதைச் சார்ந்திருக்கிறது என்பதை விளக்கப் பல வல்லுநர்களால் பலவிதக் கோட்பாடுகள் தரப்பெற்றுள்ளன. அவற்றைச் சுருக்கமாக ஆராய்ந்து அறியலாம்.

## மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகள் (Theories of Value)

### உழைப்புக் கோட்பாடு (Labour Theory of Value)

மதிப்பு நிர்ணயக் கோட்பாடுகளுள் மிகப் பழமையானது உழைப்புக் கோட்பாடு. ஆடம் ஸ்மித் (Adam Smith), ரிகார்டோ (David Ricardo), மார்க்ஸ் (Karl Marx) இவர்கள் இக் கோட்பாட்டின்ஆசிரியர்களாகக் கருதப்பெறுகிறார்கள். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பின் அளவே அப் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்பதுதான் இக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து. இது ஒரு தவறான கோட்பாடு என்பதை எளிதில் அறியலாம். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய உழைப்பு மட்டும் இருந்தால் போதாது. மூலதனம் வேண்டும். நிலம் வேண்டும். இவை மூன்றையும் இணைக்க ஒரு தொழில் முயல்வோனும் (Entrepreneur) வேண்டும். இச் சாதனங்களுக்கு ஊதியம் கொடுத்தாக வேண்டும். பண்டத்தின் மதிப்பு இவ் ஊதியங்கள் அனைத்தையும் அடக்குவதாக இருக்கவேண்டும். உழைப்பை உள்ளடக்கிய பண்டங்கள் எல்லாவற்றிற்கும் மதிப்பு

இருக்கும் என்றும் கூறமுடியாது. உற்பத்தியான பண்டத்திற்குப் பயன் (utility) இல்லாவிடில் அப் பண்டத்திற்கு மதிப்பும் இருக்காது.

**உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Cost of Production Theory)**

ஒரு பண்டத்தின் மதிப்பு அப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுக்குச் சமமாக இருக்கும் என்று ஒருசில பொருளாதார வல்லுநர்கள் கருதினார்கள். இக் கருத்தை அடிப்படையாகக்கொண்டது உற்பத்திச் செலவுக் கோட்பாடாகும். ஒரு பண்டத்தின் உற்பத்திச் செலவுடன் நியாயமான இலாபத்தினையும் (normal profit) கூட்டினால் அதுவே அப் பண்டத்தின் விலை அல்லது மதிப்பாகும் என்று மில் அவர்கள் விளக்கினார். சந்தையில் அப் பண்டத்திற்கு நிலவும் மதிப்பு இம் மதிப்பிலிருந்து சிறிது காலத்திற்கு மாறுபட்டிருக்கலாம். ஆனால், போட்டியின் விளைவால் முடிவில் பண்டத்தின் உற்பத்திச் செலவே அப் பண்டத்தின் மதிப்பாகச் சந்தையில் நிலவும் என்றார் மில்.

இக் கோட்பாடும் ஒரு திருத்தமான கோட்பாடன்று. ஏனெனில்; இக் கோட்பாடு பண்டத்தின் அளிப்பு நிலையை மட்டுந்தான் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஒரு பண்டத்தின் உற்பத்திச் செலவு ஒன்றாக இருக்கலாம். ஆனால், அப் பண்டத்திற்குச் சந்தையில் இருக்கும் தேவைக்கு ஏற்றாற்போல அப் பண்டத்தின் மதிப்பும் மாறுபடும். தேவை அதிகமாக இருந்தால் அப் பண்டத்தின் மதிப்பு உற்பத்திச் செலவைவிட அதிகமாகவும், தேவை குறைவாக இருந்தால் மதிப்புக் குறைவாகவும் இருக்கும். ஒரு பண்டத்தின் மதிப்பை நிர்ணயிப்பதில் அப் பண்டத்தின் உற்பத்திச் செலவுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. ஆனால், உற்பத்திச் செலவு மட்டுந்தான் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்னும் கருத்துத் தவறானதாகும்.

**பயன்பாட்டுக் கோட்பாடு (Utility Theory)**

பண்டத்திற்குப் பயன்பாடு (utility) இருப்பதால்தான் அப் பண்டத்திற்கு மதிப்பு இருக்கிறது. எனவே, ஒரு பண்டத்தின் மதிப்பு அப் பண்டத்திற்கு இருக்கும் பயன்பாட்டுக்குச் சமமாக இருக்கும் என்று கூறுவதுதான் பயன்பாட்டுக் கோட்பாடு. அதிக அளவு பயன்பாடு உள்ள பண்டத்துக்கு அதிக மதிப்பும், குறைந்த அளவு பயன்பாடு உள்ள பண்டத்துக்குக் குறைந்த மதிப்பும் இருக்கும் என்று இக் கோட்பாடு கூறுகிறது. ஜெவான்ஸ் (Jevons) போன்ற வல்லுநர்கள் இக் கோட்பாட்டை வலியுறுத்துகிறார்கள். இக் கோட்பாடு உற்பத்திச் செலவுக் கோட்பாட்டுக்கு நேர் எதிர்

படையானது. இவ் விரு கோட்பாடுகளையும் இரு துருவங்களாகக் கருதலாம். உற்பத்திச் செலவுக் கோட்பாடு எப்படி உற்பத்தியாளருக்கு ஆகும் செலவுதான் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் என்று கூறுகிறதோ, அதேபோல் பயன்பாட்டுக் கோட்பாடு நுகர்வோர் ஒரு பண்டத்திலிருந்து எய்தும் பயன்பாடுதான் அப் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் என்று கூறுகிறது. முன்னது பண்டங்களின் விலை நிர்ணயத்தில் கண்ட அளிப்பைமட்டும் வலியுறுத்துகிறது; பின்னது பண்டத்திற்கு இருக்கும் தேவையை மட்டும் வலியுறுத்துகிறது. எனவே, இக் கோட்பாடும் குறைபாடுடையதே.

**அளிப்பு, தேவைக் கோட்பாடு** (Supply and Demand Theory)

மேற்கண்ட கோட்பாடுகளில் குறைபாடுகள் இருப்பதாகக் கண்டோம். மதிப்புக் கோட்பாடுகளுள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கோட்பாடு மார்ஷல் அவர்கள் தந்துள்ள அளிப்பு, தேவைக் கோட்பாடாகும். ஒரு பண்டத்தின் அளிப்பு, தேவை இவை இரண்டும் சந்தையில் ஒரே நேரத்தில் இயங்கி அப் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது என்று கூறுகிறார் மார்ஷல். பண்டத்தின் அளிப்பு மட்டுமோ அல்லது தேவை மட்டுமோ மதிப்பை நிர்ணயிப்பதில்லை. இரண்டும் ஒன்றுகச் சேர்ந்துதான் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கிறது. இதை விளக்க மார்ஷல் ஓர் அழகான உவமை தந்துள்ளார். ஒரு பண்டத்தின் மதிப்பு அப் பண்டத்தின் உற்பத்திச் செலவைச் சார்ந்திருக்கிறதா அல்லது அப் பண்டத்தில் அடங்கி யிருக்கும் பயன்பாட்டைச் சார்ந்திருக்கிறதா என்று வாதிடுவதைவிட, ஒரு காகிதத் தாளைக் கத்தரிக்கோலின் மேல் கத்தி வெட்டுகிறதா அல்லது கீழ்க்கத்தி வெட்டுகிறதா என்று வாதாடலாம் என்றுர் மார்ஷல்.

சந்தையிலிருக்கும் மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் தான் பண்டத்தின் மதிப்பை நிர்ணயிக்கின்றன. தேவைப் பக்கத்தில் வாங்குவோர் ஒவ்வொருவரும் பண்டத்திற்குக் குறைந்த விலை கொடுத்து வாங்க முனைவார்கள். குறைந்த விலையில் பண்டத்தை வாங்கி அதிகப் பயனை அடைவதுதான் அவர்கள் குறிக்கோள். அளிப்புப் பக்கத்தில் உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் அதிக விலையில் பண்டத்தை விற்க முன்வருவார்கள். உயர்ந்த விலையில் விற்று அதிக இலாபமடைவதுதான் அவர்கள் குறிக்கோள். இவ் விரு சக்திகளும் எப்பொழுதும் எதிர் திசையில் இழுக்கின்றன. வாங்குவோரிடையே உள்ள போட்டியால் விலை ஏற்றமடைகிறது. உற்பத்தியாளர்களிடையே உள்ள போட்டியால் விலை குறைகிறது. முடிவில் இவ்விருசாராரும் ஏற்றுக்கொள்ளக்

கூடிய ஒரு மட்டத்தில் மதிப்பு நிலைக்கிறது. இம் மட்டத்தில் பண்டத்திற்கு இருக்கும் தேவையும் அளிப்பும் சமனாக இருக்கும். இந் நிலையைச் 'சமநிலை' (equilibrium) என்று கூறலாம்.

**சந்தை**

மக்கள் நுகர்வதற்காகப் பல பண்டங்களை நாடுகிறார்கள். உற்பத்தியாளர்கள் அப் பண்டங்களை உற்பத்தி செய்து தருகிறார்கள். நுகர்வோர் ஒரு சாரார்; உற்பத்தியாளர்கள் மற்றொரு சாரார். நுகர்வை எதிர்பார்த்துதான் உற்பத்தி நடைபெறுகிறது. எனவே, நுகர்வோர், உற்பத்தியாளர்கள் இவ்விரு சாராருக்கும் தொடர்பு ஏற்படவேண்டியிருக்கிறது. இவ்வாறு ஏற்படும் தொடர்பினைத்தான் பொருளாதாரத்தில் சந்தை (market) என்று குறிப்பிடுகிறோம். சந்தை என்பது பொருளாதாரத்தில் ஒரு சிறப்புச் சொல்லாக (term) உபயோகிக்கப்பெறுகிறது. சாதாரண வழக்கில் பண்டங்கள் விற்பனை நடக்கும் ஓர் இடத்தைச் சந்தை என்று நாம் குறிப்பிடும் பொருளை அது கொள்ளாது.

**போட்டி**

சந்தையில் போட்டி எழுகிறது. விற்பனையாளர்களுக்கும் வாங்குவோருக்கும் இடையே போட்டி ஏற்படுகிறது. உற்பத்தியாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்வதிலும், உற்பத்தியான பண்டங்களை விலையாக்குவதிலும் போட்டியிடுகிறார்கள். நுகர்வோரிடையே பண்டங்களைப் பெறுவதிலும், குறைந்த விலையில் பெறுவதிலும் போட்டி எழுகிறது. பண்டங்களை மட்டுமன்றி, பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பொருளாதாரக் காரணிகளை (factors of production) விற்பதிலும் வாங்குவதிலும் போட்டி ஏற்படுகிறது. சந்தையில் உள்ள ஒரு பண்டத்தை வாங்குவோர் ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கிறார். எவ்வளவு குறைந்த விலைக்கு அப் பண்டத்தைப் பெற முடியும் என்பதுதான் அவருடைய அவா. விற்பனையாளர் முற்றிலும் மாறுபட்ட கோணத்திலிருந்து நோக்குகிறார். இவ் இருவரும் வெவ்வேறு திசைகளில் இழுக்க, முடிவில் இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மட்டத்தில் அப் பண்டத்தின் விலை நிர்ணயிக்கப்பெறுகிறது. போட்டியின் தன்மை பலவகையாக இருக்கலாம். உதாரணமாக, போட்டி 'நிறைவுப் போட்டியாக' (perfect competition) இருக்கலாம்; அல்லது நிறை குறைப் போட்டியாக (imperfect competition) இருக்கலாம். பண்டங்களின் விலை நிர்ணயத்தில் ஈடுபட்டு இயங்கும் சக்திகளும் போட்டியின் தன்மைக்கு ஏற்றாற் போல மாறுபடும். விலை நிர்ணயம் போட்டியின் தன்மைக்கு ஏற்ப மாறுவதோடு, கால அளவுக்கு ஏற்றாற்போலவும் மாறும் தன்மை

யுடையது. குறுகிய கால அளவில் ஒரு பண்டத்தின் மதிப்பு ஒரு விதமாக நிர்ணயிக்கப்பெறும். நீண்ட கால அளவில் அது மாறுபடும். போட்டியின் வகைகளை விளக்கிப் பின்னர் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகிறது என்பதை அறியலாம்.

**போட்டியின் வகைகள் 'நிறைவுப் போட்டி'** (Perfect Competition)

ஒரு தனி விற்பனையாளரோ அல்லது தனி வாங்குவோரோ தன்னிச்சைப்படி பண்டத்தின் விலையை மாற்ற முடியாத நிலை இருந்தால், அந் நிலையை 'நிறைவுப் போட்டி' என்றழைக்கலாம். பண்டத்தின் விலையை மாற்றியமைக்கக்கூடிய வலிமை விற்பனையாளருக்கும் இருக்காது; வாங்குவோருக்கும் இருக்காது. சந்தையில் பண்டத்தின் விலையை மொத்த அளிப்பு (total supply), மொத்தத் தேவை (total demand) இவ் விரு சக்திகளும் நிர்ணயிக்கும். சந்தை முழுவதும் அந்த விலைதான் நிலவும். உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இந்த விலை கட்டிவருமானல், அவர்கள் சந்தையில் ஈடுபட்டு அப் பண்டத்தை எல்லையற்ற அளவுக்கு விற்பனை செய்யலாம். இல்லாவிடில், அவர்கள் சந்தையை விட்டு வெளிநடக்கவேண்டியதுதான். இதே விதி வாங்குவோருக்கும் பொருந்தும். சந்தையில் நிலவும் விலைக்குப் பண்டத்தை வாங்க விரும்பினுல் வாங்கலாம். அதைவிடக் குறைந்த விலைக்கு யாரும் வாங்க முடியாது. எனவே, சந்தை முழுவதும் ஒரே சீரான விலை நிலவுவதே 'நிறைவுப் போட்டியின்' முக்கிய இயல்பாகும். ஒரே பண்டத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விலைகள் சந்தையில் நிலவினுல் போட்டியின் நிறைவுத் தன்மை கெட்டுவிடும். நிறைவுப் போட்டி கைகூடக் கீழ்க்காணும் விதிகள் அவசியம். இவற்றுள் எந்த ஒரு விதி மீறப்பட்டாலும் போட்டியின் நிறைவுத் தன்மை அழிந்துவிடும்.

(1) சந்தையில் விற்பனையாளர், வாங்குவோர் இவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கவேண்டும். நிறைவுப் போட்டியில் சந்தையிலுள்ள மொத்த அளிப்பும், மொத்தத் தேவையும்தாம் பண்டத்தின் விலையை நிர்ணயிக்கின்றன என்று கண்டோம். எனவே, விற்பனையாளர் அல்லது வாங்குவோர் இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தால், அவர்களில் ஒருவர் தன்னுடைய சொந்த நடவடிக்கையின் மூலம் பண்டத்தின் மொத்த அளிப்பையோ அல்லது மொத்தத் தேவையையோ மாற்றியமைத்துப் பண்டத்தின் விலையையும் மாற்றியமைக்கக்கூடும். உதாரணமாக, சந்தையில் ஒரு பண்டத்தின் மொத்த அளிப்பு 10,000 அலகுகள் (units) என்று வைத்துக்கொள்வோம். இந்த 10,000 அலகுகளை 1000 விற்பனையாளர்கள் விற்பனை செய்தால்,

ஒருவருடைய சராசரி விற்பனை 10 அலகுகள்தாம் இருக்கும். இந்த நிலையில் எந்த ஒரு விற்பனையாளருக்கும் உற்பத்தியைப் பெருக்குவதன்மூலமாகவோ அல்லது இருப்பைத் தேக்கிவைப்பதன்மூலமாகவோ சந்தையிலுள்ள மொத்த அளிப்பைக் கட்டுப்படுத்தக்கூடிய வலிமை இருக்காது. 10,000 அலகுகளை நான்கே நான்கு விற்பனையாளர்கள் விற்பனை செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு விற்பனையாளரும் தன் சொந்த நடவடிக்கையின்மூலம் மொத்த அளிப்பை ஓரளவுக்குக் கட்டுப்படுத்திப் பண்டத்தின் விலையையும் மாற்றக்கூடும்.

(2) விற்பனையாகும் பண்டம் ஒரே சீராக (homogenous) இருத்தல்வேண்டும். ஒரு விற்பனையாளர் விற்கும் பண்டம் ஒரு தரமாகவும், மற்றொருவர் விற்கும் பண்டம் அதற்கு மாறுபட்டும் இருக்கக்கூடாது. சந்தையில் விற்கப்பெறும் பண்டம் எல்லாம் ஒன்றுக்கொன்று எள்ளளவுகூடத் தரத்தில் மாறுபடாமல் ஒரே வகையாக இருந்தால், நுகர்வோர் அப் பண்டத்தை வெவ்வேறு விலை கொடுத்து வாங்கவேண்டிய அவசியமில்லை.

(3) சந்தைக்குள் புதிய விற்பனையாளர்களும் வாங்குவோரும் விரும்பினால் தடையின்றி நுழையலாம். அதேபோன்று பழைய நபர்கள் சந்தையிலிருந்து தடையின்றி வெளியேறலாம்.

(4) சந்தையின் வெவ்வேறு பாகங்களில் விலை எவ்வாறு நிலவுகிறது என்பதை எல்லா விற்பனையாளர்களும் வாங்குவோரும் அறிந்திருக்கவேண்டும். விலை விவரத்தை எல்லோரும் எளிதில் அறியக்கூடிய சாதனங்களும் வழக்கில் இருக்கவேண்டும். ஒரு பண்டத்தை மற்றவர்கள் என்ன விலையில் வாங்குகிறார்கள், விற்கிறார்கள் என்பதை ஒருவர் அறியாவிட்டால், அவர் அதே பண்டத்தை அதிக விலையில் வாங்கவோ அல்லது விற்கவோ நேரிடும்.

(5) வாங்குவோருக்கு, அறிந்தும் ஒரு பண்டத்துக்குச் சற்று அதிக விலை கொடுத்து வாங்கும் இயற்கையில் அமைந்த வழக்கம் இருக்கக்கூடாது. ஒரு பண்டத்தை அருகிலுள்ள கடையில் பத்து பைசாவுக்கும் சற்று தொலைவில் உள்ள கடையில் ஒன்பது பைசாவுக்கும் வாங்கலாமென்றால், ஒருவர் அசட்டையின் காரணத்தால் அருகிலுள்ள கடையில் பத்து பைசா கொடுத்து வாங்கலாம். நுகர்வோர்களிடம் சாதாரணமாகப் படிந்துள்ள இயங்காத்தன்மையைத்தான் (inertia) இது காட்டுகிறது.

(6) சந்தையில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குப் பண்டத்தை எளிய முறையிலும் குறைந்த செலவிலும் எடுத்துச் செல்லக்கூடிய போக்குவரத்து வசதிகள் பரவலாக இருக்க வேண்டும். போக்குவரவுச் சாதனங்களில் குறைபாடுகள் இருந்தால், சந்தையின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு விலைகள் நிலவக்கூடும்.

**தூய போட்டி (Pure Competition)**

சேம்பர்லின் என்னும் ஆசிரியர் (Edward Chamberlin) அவருடைய 'சர்வாதீனப் போட்டி' (Monopolistic Competition) என்னும் நூலில் 'தூய போட்டி' என்று ஒரு புதுவகைப் போட்டியினைப் புனைந்திருக்கிறார். நிறைவுப் போட்டி என்னும் பெரும் பிரிவினுள் அடங்கிய ஒருவகைப் போட்டிதான் 'தூய போட்டி' எனப்படுவது. சந்தையில் விற்பனையாளர்கள் எண்ணிக்கையற்ற அளவு இருந்து, எந்த ஒரு விற்பனையாளரும் சந்தையில் நிலவும் விலையை எள்ளளவுக்கும் மாற்ற முடியாத நிலையைத்தான் 'தூய போட்டி' என்று அவர் குறிப்பிடுகிறார். தூய போட்டியில் உள்ள ஒரு விற்பனையாளரைக் கடலின் ஒரு சொட்டு நீருக்கு ஒப்பிடலாம். தூய போட்டி இருந்து மேற்கூறிய மற்ற விதிகளும் நிறைவேற்றப் பட்டால், அது நிறைவுப் போட்டியாகிறது.

**நிறைகுறைப் போட்டி (Imperfect Competition)**

சந்தையில் ஒரே பண்டத்திற்கு ஒரே நேரத்தில் வெவ்வேறு விலைகள் நிலவினால், அப் போட்டிக்கு நிறைகுறைப் போட்டி என்று பெயர். சந்தை முழுவதும் ஒரு பண்டத்துக்கு ஒரே விலை நிலவினால் அதை நிறைவுப் போட்டி என்றும், ஒரே விலை நிலவவேண்டுமானால் பல முக்கிய விதிகள் நிறைவேறவேண்டுமென்றும் மேலே கண்டோம். அவ் விதிகளுள் ஒன்று நிறைவேறாவிட்டாலும் ஒரே பண்டத்தை ஒருசிலர் ஒரு விலையும், வேறு சிலர் மற்றொரு விலையும் கொடுத்து வாங்கக்கூடும். சந்தையில் ஒரே பண்டத்திற்குப் பல விலைகள் நிலவுவதற்கு எது வேண்டுமானாலும் காரணமாக இருக்கலாம். சந்தையின் பல பாகங்களில் நிலவும் விலை விவரத்தை விற்பனையாளரும் வாங்குவோரும் அறியாத காரணத்தினாலோ, பண்டங்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு அனுப்பி வைப்பதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவினாலோ, நுகர்வோரிடம் உள்ள இயங்காத்தன்மையாலோ அல்லது பண்டத்தின் தரத்தில் உண்மையில் எந்தவித வேறுபாடும் இல்லையெனிலோ, ஒரு கடையிலிருந்து வாங்கும் பண்டம் வேறிடத்திலிருந்து வாங்கக்கூடிய பண்டத்தைக் காட்டிலும் சிறந்தது என்று ஒருசிலர் எண்ணுவதாலோ பண்டத்தின் விலை மாற்றம் ஏற்படக்கூடும்.

நெடுங்காலமாக, குறிப்பாக 1930 ஆம் ஆண்டுவரை, பொருளியல் ஆராய்ச்சியும் விலை நிர்ணயக் கோட்பாடுகளும் (Price theories) நிறைவுப் போட்டி ஒன்றுதான் வழக்கில் இருக்கிறது என்ற எண்ண அடிப்படையில் நடந்துவந்தன. அன்றாட வாழ்க்கையில் நாம் நிறைவுப் போட்டியைக் காண்பது மிகவும் அரிது. நிறைவு குறைந்த போட்டியினைத்தான் நாம் வழக்கில் காண்கிறோம். இந்த உண்மை 1930 ஆம் ஆண்டு வாக்கில்தான் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அன்றாட வாழ்க்கையில் நிறை குறைப் போட்டிதான் நிலவுகிறது என்னும் கருத்தினை வன்மை பெறச் செய்வதில் ஜோன் ராபின்சன் அம்மையாரும் (Mrs. Joan Robinson), எட்வார்டு சேம்பர்லின் அவர்களும் (Edward Chamberlin) முன்னோடிகளாக இருந்தனர்.

### சர்வாதீனம் (Monopoly)

பண்டங்களின் உற்பத்தி, விற்பனை இவைகளில் போட்டியே இல்லாத நிலைதான் சர்வாதீனம். உற்பத்தியாளர் ஒருவராகவோ அல்லது உற்பத்திமூலம் ஒன்றாகவோ இருந்து, சந்தையில் மொத்த அளிப்பு அனைத்தையும் ஒருவரே கட்டுப்படுத்தினால், அதைச் சர்வாதீன நிலை என்று குறிப்பிடலாம். இத்தகைய ஒரு நிலையில் உற்பத்தியினர் தாம் விரும்பிய அளவுக்கு அளிப்பைப் பெருக்கலாம்; சுருக்கலாம். பண்டத்தின் விலையையும் எந்த மட்டத்தில் வேண்டுமானாலும் நிர்ணயிக்கலாம். பண்டத்தை வாங்குவோர் ஒரே ஒருவராக இருந்து, சந்தையின் மொத்தத் தேவை அனைத்தையும் அவர் கட்டுப்படுத்தக்கூடிய நிலைக்கு 'வாங்கல் சர்வாதீனம்' (Monopsony) என்று பெயர்.

### சர்வாதீனப் போட்டி (Monopolistic Competition)

'சர்வாதீனப் போட்டி' என்பது சேம்பர்லின் என்னும் ஆசிரியர் புனைந்துதந்துள்ள ஒருவகைப் போட்டி. 'சர்வாதீனப் போட்டி' என்னும் சொற்றொடர் முன்னுக்குப் பின் முரண்பாடானதாகத் தோன்றும். ஏனெனில், போட்டியே இல்லாத ஒரு நிலைதான் சர்வாதீனம். போட்டி இருக்கவேண்டுமானால், சந்தையில் ஒருவருக்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது விற்பனையாளர்கள் இருக்கவேண்டும். ஒருவர் மட்டும் போட்டியிட்டுக்கொள்ள முடியாது. நேர் எதிரான இவ்விரு நிலைகளையும் ஒன்றாக இணைத்து 'சர்வாதீனப் போட்டி' என்றழைப்பது புதிராகத்தான் தோன்றும். இருப்பினும், சேம்பர்லின் அவர்கள் சர்வாதீனப் போட்டியினை விளக்கி அது நிறைகுறைப் போட்டியிலிருந்து (Imperfect competition) மாறுபட்டது என்று வற்புறுத்திக் கூறுகிறார்.

நிறைகுறைப் போட்டி, சந்தையில் உற்பத்தியாளர்கள் அல்லது விற்பனையாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால், அவர்களில் ஒவ்வொருவருக்கும் பண்டத்துக்குச் சந்தையில் நிலவும் விலையை மாற்றியமைக்கக்கூடிய வன்மை இருக்கும் என்ற கருத்தைச் சார்ந்திருக்கிறது. அவர்கள் விற்கும் பண்டம் ஒரேவகையாக (homogenous) இருக்கும் என்னும் அனுமானத்தின் (assumption) மீதுதான் நிறைகுறைப் போட்டி விளக்கப் பெறுகிறது. ஆனால், ஒன்றுக்கொன்று சிறிதளவு மாறுபட்ட பண்டங்களைச் சந்தையில் பலர் விற்க நேரிட்டால் அது சர்வாதீனப் போட்டியாகிறது. இத்தகைய ஒரு நிலையில் போட்டி, சர்வாதீனம் ஆகிய இரு தன்மைகளையும் காணலாம். ஓர் உதாரணத்தைக் காட்டி விளக்கினால் தெளிவாக இருக்கும். பற்பசையை எடுத்துக் கொள்வோம். பற்பசையில் எத்தனையோ வகைப் பற்பசைகள் இருக்கின்றன. அடிப்படையில் எல்லாம் பற்பசைதான். இருந்தாலும், ஒருவகைப் பசை மற்றொருவகையிலிருந்து மாறுபட்டிருக்கிறது. இதைப் பண்டத்தை மாறுபடுத்திக் காட்டுதல் (product differentiation)என்று கூறுவர். கோல்கேட் பற்பசையை உற்பத்தி செய்பவர், கோல்கேட் பசையை உற்பத்தி செய்வதைப் பொறுத்த அளவில் சர்வாதீனத் தன்மை பெற்றிருக்கிறார். அதேநேரத்தில், கோலினோஸ் பற்பசை தயாரிப்பாளருடைய போட்டியையும் அவர் சமாளிக்கவேண்டியிருக்கிறது. இந் நிலையைச் சர்வாதீனப் போட்டி என்றழைக்கலாம்.

## நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயம் (Pricing under Perfect Competition)

நிறைவுப் போட்டி இருக்கும்பொழுது சந்தை முழுவதும் ஒரு பண்டத்திற்கு ஒரே விலைதான் நிலவும் என்று கண்டோம். இந்த விலை எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகிறது என்று அறிய முயலலாம். நிறைவுப் போட்டி இருக்கும்பொழுது சந்தையில் எண்ணிக்கையற்ற உற்பத்தியாளர்கள் இருப்பார்கள்; அதேபோல எண்ணிக்கையற்ற வாங்குவோர் இருப்பார்கள். பொருளாதாரத் துறையில் விற்றல், வாங்கல் போன்ற நடவடிக்கைகள் இலாபம் கருதியே நடைபெறுகின்றன. உற்பத்தியாளர்கள் ஒவ்வொருவரும் இலாபமடைய விரும்புகிறார்கள். இந்த இலாபத்திற்கு எல்லை உண்டா? உச்சநிலை (maximum) இலாபம்தான் அவருடைய எல்லை. இந்த உச்சநிலை உயர்வாக இருக்கலாம்; குறைவாக இருக்கலாம். குறிப்பிட்ட சூழ்நிலையில் உச்சநிலை இலாபத்தை அடைவதுதான் உற்பத்தியாளரின் குறிக்கோள். அதேபோல நுகர்வோரும் பயனை அருந்த விரும்பித்தான் பண்டத்திற்கு விலை கொடுக்க முன்வருகிறார்கள். எந்த அளவுக்குப் பயனடைய விரும்புவார்கள்?

ஒவ்வொரு நுகர்வோரும் ஒரு குறிப்பிட்ட பண்டத்தை வாங்குவதன்மூலம் உச்சநிலைப் பயன்பாட்டை அடைய விரும்புவார்கள். உற்பத்தியாளர் எப்படி உச்சநிலை இலாபத்தை அடையமுடியும், நுகர்வோர் எப்படி உச்சநிலைப் பயன்பாட்டை அடையமுடியும் என்று கண்டறிந்தால், பண்டத்தின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப் பெறுகிறது என்பதையும் எளிதில் அறியலாம்.

உற்பத்தியாளர் உயர்ந்த விலையில் பண்டங்களை விற்பதன் மூலம் இலாபம் ஈட்டலாம். நுகர்வோர் குறைந்த விலையில் பண்டங்களை வாங்குவதன் மூலம் அதிகப் பயன்பாட்டை அடையலாம். ஆனால், நிறைவுப் போட்டியில் உற்பத்தியாளருக்கோ அல்லது வாங்குவோருக்கோ பண்டத்தின் விலையை மாற்றக்கூடிய வன்மை கிடையாது. சந்தையில் நிலவும் விலையைத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். எனவே, அவர்களில் ஒவ்வொருவரும் தான் விற்கும் பண்டத்தின் அளவையும் வாங்கும் அளவையும் மாற்றுவதன்மூலமாகத்தான் உச்சநிலை இலாபத்தையும் உச்சநிலைப் பயனையும் அடையமுடியும்.

பண்டங்களின் உற்பத்திச் செலவுக்கும், அவற்றை விலையாக்குவதன் மூலம் கிடைக்கும் தொகைக்கும் உள்ள வித்தியாசம் தான் இலாபம். இந்த நிகர இலாபத்தை உச்சநிலைக்கு உயர்த்தத்தான் உற்பத்தியாளர் முனைகிறார். இறுதிநிலைச் செலவு (marginal cost) இறுதிநிலை வருவாய்க்குச் (marginal revenue) சமனாக இருந்தால் உற்பத்தியாளர் அடையும் இலாபம் உச்சநிலையில் இருக்கும் என்று கூறலாம். அது எவ்வாறு என்று அறியுமுன் இறுதிநிலைச் செலவு, இறுதிநிலை வருவாய் இரண்டையும் விளக்கிக் கூறவேண்டும். உற்பத்தியாளர் உற்பத்தியின் அளவைப் பெருக்கும்பொழுது உற்பத்திச் செலவும் உயரும். மொத்த உற்பத்தியின் அளவை ஓர் அலகுக்கு உயர்த்தும்பொழுது உற்பத்திச் செலவில் ஆகும் உயர்வுதான் இறுதிநிலைச் செலவு என்பதாகும். ஓர் உற்பத்தியாளர் X பண்டத்தை 1000 அலகுகள் அளவுக்கு உற்பத்தி செய்கிறார் என்றும், அதற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ 2,000 என்றும் எடுத்துக்கொள்வோம். உற்பத்தியின் அளவை அவர் 1000 அலகுகளிலிருந்து 1001 அலகுகளுக்குப் பெருக்கும்பொழுது உற்பத்திச் செலவும் உயரும். 1001 அலகுகளை உற்பத்தி செய்ய ரூ. 2,003 செலவாகிறது என்றால், இறுதிநிலைச் செலவு ரூ. 3 ஆகும். விற்பனை அளவு ஓர் அலகுக்கு உயரும்பொழுது மொத்த வருவாயில் கிடைக்கக்கூடிய பெருக்கம்தான் இறுதிநிலை வருவாய் என்பது. உற்பத்தியாளர் 1000 அலகுகளை

விற்பனை செய்யும்பொழுது மொத்த வருவாய் ரூ. 3,000 என்றும், 1001 அலகுகளை விற்கும்பொழுது ரூ. 3,003 என்றும் பெறுகிறார் என்றால், இறுதிநிலை வருவாய் ரூ. 3 ஆகும்.

இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமமாக இருக்கும் பொழுது எங்ஙனம் இலாபம் உச்சநிலையில் இருக்கும் என்று காணலாம். இந் நிலையைக் கீழ்க்காணும் பட்டியல் தெளிவாக்கும்:

| உற்பத்தி அளவு அலகு | இறுதிநிலைச் செலவு ரூ. | பண்டத்தின் விலை | இறுதிநிலை வருவாய் | மொத்த உற்பத்திச் செலவு | மொத்த வருவாய் | நிகர இலாபம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 5 | 5 | 2 | 5 | 3 |
| 2 | 3 | 5 | 5 | 5 | 10 | 5 |
| 3 | 4 | 5 | 5 | 9 | 15 | 6 |
| 4 | 5 | 5 | 5 | 14 | 20 | 6 |
| 5 | 6 | 5 | 5 | 20 | 25 | 5 |
| 6 | 7 | 5 | 5 | 27 | 30 | 3 |

உற்பத்தித் துறையில் குறைந்துசெல் விளைவு விதி (Law of Diminishing Returns) உடனேயோ அல்லது சற்றுத் தாமதித்தோ இயங்குமாதலால், உற்பத்தியின் அளவு உயர உயர உற்பத்திச் செலவும் உயர்வீதத்தில் (increasing rate) ஏற்றமடையும். உற்பத்தியாளர் தம்முடைய உற்பத்தியின் 4 அலகுகளோடு நிறுத்திக்கொள்வார். ஏனெனில், சம மட்டத்தில்தான் அவர் அடையக்கூடிய இலாபம் உச்சநிலையில் இருக்கும். அதைவிடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ உற்பத்தி செய்தால், அவருக்குக் கிடைக்கக்கூடிய நிகர இலாபம் உச்சநிலையைவிடக் குறைவாகத்தான் இருக்கும். மூன்று அலகுகளை உற்பத்தி செய்யும்பொழுதும், நான்கு அலகுகளை உற்பத்தி செய்யும் பொழுதும் இலாபம் ஒரே அளவில் இருப்பதைக் காணலாம். இருந்தாலும், அவர் நான்கு அலகுகளைத்தான் உற்பத்தி செய்வார். ஏனெனில், உற்பத்திச் செலவு என்பது ஓரளவுக்கு நியாயமான இலாபத்தை உள்ளடக்கியிருக்கிறது. எனவே, 3 அலகுகளை உற்பத்தி செய்வதைவிட 4 அலகுகளை உற்பத்தி செய்யும்பொழுது நிகர இலாபம் (வெளிப்படையாகத் தெரியா விட்டாலும்) அதிகமாகத்தான் இருக்கும்.

இறுதிநிலைச் செலவு உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், இறுதிநிலை வருவாய் நிலையாக இருப்பதைப் பட்டியலில் காணலாம். இதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். நிறைவுப் போட்டியில் இறுதிநிலை வருவாய் எப்பொழுதும் நிலையாகவே இருக்கும். நிறைவுப் போட்டியின் இயல்புதான் இதற்குக் காரணம். மொத்த அளிப்பும் மொத்தத் தேவையும்தாம் பண்டத்தின் விலையை நிர்ணயிக்கின்றன. உற்பத்தியாளர் அந்த விலையில் எந்த அளவுக்கு வேண்டுமானாலும் விற்கலாம். இதே காரணத்தினால்தான் இறுதிநிலை வருவாயும் பண்டத்தின் விலையும் இயற்கையாகவே சமனாக இருக்கும்.

வாங்குவோர் எங்ஙனம் உச்சநிலைப் பயனை அடைகின்றார்கள்? பண்டத்தின் இறுதிநிலைப் பயன்பாடும் (marginal utility), அப்பண்டத்தின் விலையும் சமனாக இருக்கும்பொழுது நுகர்வோருக்குக் கிடைக்கும் பயன்பாடு உச்சநிலையில் இருக்கும் என்று கூறலாம்.

நிறைவுப் போட்டியில் விலை நிர்ணயத்தைச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், பண்டத்தின் விலை உற்பத்தியாளரின் இறுதிநிலைச் செலவுக்குச் சமனாக இருக்கும். நிறைவுப் போட்டியில் இறுதிநிலை வருவாயும் பண்டத்தின் விலையும் ஒன்றாக இருக்குமாதலால், விலை — இறுதிநிலைச் செலவு — இறுதிநிலை வருவாய் மூன்றும் ஒன்றாக இருக்கும். அதேபோலப் பண்டத்தின் விலை நுகர்வோருடைய இறுதி நிலைப்பாட்டுக்குச் சமனாக இருக்கும்.

## சர்வாதீனத்தில் விலை நிர்ணயம்
## (Pricing under Monopoly)

சர்வாதீன விற்பனையாளரும் தான் உச்சநிலை இலாபம் அடைவதையே நோக்கமாகக் கொண்டிருப்பார். சர்வாதீன முறையில் ஒரே ஒரு விற்பனையாளர் மட்டும் இருப்பதால், அவர் பண்டத்தை என்ன விலையிலும் விற்கலாம். இது முற்றிலும் உண்மையாகாது. ஏனெனில், அவர் நிர்ணயிக்கும் விலைக்கு ஏற்றவாறு வாங்குவோரும் தாம் வாங்கும் பண்டத்தின் அளவை மாற்றிக்கொள்வார்கள். எனவே, சர்வாதீன விற்பனையாளர் உயர் மட்டத்தில் விலையை நிர்ணயித்தால் அவருடைய விற்பனை அளவும் குறைந்துவிடும். சுருக்கமாகக் கூறினால், சர்வாதீன விற்பனையாளர் பண்டத்தின் விலையை நிர்ணயித்தால் வாங்குவோர் விற்பனையாகும் பண்டத்தின் அளவை நிர்ணயிப்பார்கள். சர்வாதீன விற்பனையாளர் இவ்வளவு அலகுகளை விற்கவேண்டும்

என்று குறிப்பாக இருந்தால், விலை நிர்ணயத்தை வாங்குவோருக்கு விட்டுவிடவேண்டும். பண்டத்தின் விலை, பண்ட அளவு இரண்டில் ஒன்றைத்தான் சர்வாதீன விற்பனையாளர் நிர்ணயிக்க முடியும்.

சர்வாதீன விற்பனையாளர் எந்த மட்டத்தில் தன்னுடைய பண்டத்தின் விலையை நிர்ணயிப்பார் என்று காணலாம். அவர் அடையக்கூடிய இலாபம் உச்சநிலையில் இருக்கும் வழியில்தான் அவர் பண்டத்தின் விலையை நிர்ணயிப்பார். அவருடைய இறுதிநிலைச் செலவும் இறுதிநிலை வருவாயும் சமனாக இருந்தால், அவர் அடையும் இலாபமும் உச்சநிலையில் இருக்கும். இதுவரை நிறைவுப் போட்டியின் விலை நிர்ணயத்திற்கும், சர்வாதீனத்தில் விலை நிர்ணயத்திற்கும் எந்தவித மாறுபாடும் இல்லை. ஆனால், நிறைவுப் போட்டியில் இறுதிநிலை வருவாயும் பண்டத்தின் விலையும் ஒன்றாக இருக்கும் என்று கண்டோம். சர்வாதீனத்தில் இவை இரண்டும் ஒன்றாக இருக்காது. இறுதிநிலை வருவாய் பண்டத்தின் விலையைவிடக் குறைவாகவே இருக்கும். இதனால் இறுதிநிலைச் செலவும் பண்டத்தின் விலையைவிடக் குறைவாகவே இருக்கும். இதை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்.

சர்வாதீன விற்பனையாளர் தம்முடைய பண்டத்தை அதிக அளவில் விற்க விரும்பினால் பண்டத்தின் விலையைக் குறைக்க வேண்டும் என்று மேலே விளக்கினோம். ஒரு சர்வாதீன விற்பனையாளர் X என்னும் பண்டத்தை ஓர் அலகு 1000 ரூபாய் விலையில் 10 அலகுகள் விற்பனை செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் 11 அலகுகளை விற்க விரும்பினால் விலையை ஓரளவுக்குக் குறைத்தாகவேண்டும். அவ்வாறு விலையைக் குறைத்து விற்கும்போது அவருக்குக் கிடைக்கும் இறுதிநிலை வருவாய் பண்டத்தின் விலையைவிடக் குறைவாக இருக்கும். இந் நிலையை பின்வரும் பட்டியலிருந்து தெளிவாக அறியலாம்:

| விற்பனை அளவு | பண்ட விலை | மொத்த வருவாய் | இறுதிநிலை வருவாய் |
|---|---|---|---|
| | ரூபாய் | ரூபாய் | ரூபாய் |
| 10 | 1,000 | 10,000 | — |
| 11 | 990 | 10,890 | 890 |
| 12 | 980 | 11,760 | 870 |
| 13 | 970 | 12,610 | 850 |

சர்வாதீன முறையில் பண்டத்தின் விலை விற்பனையாளரின் இறுதிநிலை வருவாய், இறுதிநிலைச் செலவு இவ் விரண்டுக்கும் உயர்வாகவே இருக்கும். இறுதிநிலை வருவாய் இறுதிநிலைச் செலவுக்குச் சமனுக வரும்போது சர்வாதீன உற்பத்தியாளர் பண்ட உற்பத்தியை நிறுத்திக்கொள்வார். ஏனெனில், அவை இரண்டும் சமனுக இருக்கும் கட்டத்தில்தான் அவருக்குக் கூடிய நிகர இலாபம் உச்சநிலையில் இருக்கும்.

# 13. பணம்
# (Money)

**விளக்கம்**

அன்றாட வாழ்க்கையில் மனிதன் பல பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ள ஒரு கருவியே பணம் ஆகும். பண்டங்களை வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் தொழில், வணிகம் இவற்றை மேற்கொண்டு நடத்துவதற்கும், இவை போன்ற இன்ன பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் ஒவ்வொரு மனிதனும் பணத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். விவசாயி தன்னுடைய விளை பொருள்களைச் சந்தையில் பணத்திற்குத்தான் விலையாக்குகிறான். பண்டங்களை வாங்கி விற்கும் வணிகன் பணத்தின் மூலம்தான் வாணிபம் நடத்துகிறான். கூலி யீட்டுவோருக்குப் பணமாகத் தான் கூலி வழங்கப்பெறுகிறது. இவ்வாறு, இன்றையப் பொருளாதார அமைப்பில் பணம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. பணம் மட்டும் வழக்கத்திற்கு வந்திராவிட்டால், பொதுவாக நாம் காணும் பொருளாதார முன்னேற்றமும், தொழில் விவசாயத் துறைகளில் காணும் வளர்ச்சியும், உள்நாட்டு அயல்நாட்டு வாணிபத் துறையில் காணும் பெருக்கமும் செழிப்பும் கைகூடியிருக்குமா என்பது ஐயத்திற்குரியதாகும்.

பணத்தின் விளக்கம் என்ன? பணம் எப்படித் தோன்றி, வளர்ந்து இன்றைய நிலையை அடைந்திருக்கிறது? பணம் ஆற்றும் பணிகள் யாவை? பணம் தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றதா? பணப் பெருக்கத்தினாலும் பணச் சுருக்கத்தினாலும் எழக்கூடிய விளைவுகள் யாவை? என்பன போன்ற அடிப்படையான வினாக்களுக்கு விடைகாண முயலலாம்.

**பண்டமாற்று முறை (Barter System)**

ஆதி மனிதன் காட்டுமிராண்டியாகக் காடுகளில் திரிந்து வாழ்ந்த காலத்தில், அவனுடைய தேவைகளும் மிகக் குறை

வாகவே இருந்தன. பசித்தபொழுது வேட்டையாடிக் கிடைத்ததைப் புசித்தான். களைத்தபொழுது உறங்கினான். ஆனால், நாகரிகப் படிக்கட்டில் அடி வைத்து அவன் மேலே உந்த உந்த அவனுடைய தேவைகளும் பெருகிக்கொண்டே போயின. ஆடை உடுத்தத் தொடங்கினான். குடில் அமைத்து வசிக்கத் தொடங்கினான். தன் இச்சைக்குகந்த பொருள்களை விரும்பிப் பெற்று நுகரத் தலைப்பட்டான். இவ்வாறு தேவைப் பெருக்கம் வளர வளரத் தனக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுச் சில பண்டங்களுக்கு மற்றவரை நம்பி வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த மாற்றத்தால் பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும் வழக்கம் நடைமுறைக்கு வந்தது. இம் முறையைத்தான் பண்டமாற்று முறை என்று கூறுவர். விவசாயி தான் விளைவித்த அரிசியையும் கோதுமையையும் தான் உண்டது போக எஞ்சியதை நெசவாளியிடம் கொடுத்து அதற்குப் பதிலாகத் துணியைப் பெறுவான். கொல்லன் தான் செய்து முடித்த விவசாயச் சாதனங்களை உழவனிடம் கொடுத்துத் தானியத்தைப் பெறுவான். இவ்வாறு நேரிடையாகப் பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்களைப் பெறும் வழக்கமே பண்டமாற்று முறை என்றழைக்கப்பெறுகிறது.

### பண்டமாற்று முறையில் காணும் குறைபாடுகள்

மக்களின் தேவைகள் சற்றுக் குறைவாகவும் பொருளாதார நடவடிக்கைகள் பரவலாக இல்லாமலும் இருந்த காலத்தில் பண்டமாற்று முறை எளிதாக இயங்கி வந்திருக்கக்கூடும். ஆனால், தேவைகளும், உற்பத்தியும், கொடுக்கல் வாங்கலும் பெருகப் பெருகப் பண்டமாற்று முறையில் உள்ள குறைபாடுகளும் இடையூறுகளும் வெளிப்படத் தொடங்கின.

(1) **இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாமை (Absence of Double Coincidence of Wants):** ஒரு குறிப்பிட்ட பண்டமாற்று நடந்தேறவேண்டுமானால் அதில் ஈடுபட்டுள்ள நபர்கள் இருவருள் ஒவ்வொருவரும் மற்றவர் விரும்பும் பொருளைக் கொடுக்கும் நிலையில் இருக்கவேண்டும். இத்தகைய ஒரு நிலையை இருமுகத் தேவைப் பொருத்தம் என்றழைக்கலாம். இப் பொருத்தம் இயற்கையில் அமைந்தால் அன்றி பண்டமாற்று முறை எளிதில் இயங்கமுடியாது. தன்னிடமுள்ள பண்டத்தை மற்றொரு பண்டத்துடன் மாற்றிக்கொள்ள விரும்பும் ஒருவன் தனக்குத் தேவையான பண்டத்தை வைத்திருக்கும் மற்றொருவனைத் தேடிப் பிடித்தால் மட்டும் போதாது; அந்த மற்றவன் தன்னுடைய பண்டத்தை விரும்பிப் பெற்றுக்கொள்ளக்கூடியவ

ஞகவும் இருத்தல்வேண்டும். ஒருவன் நெல் வைத்திருப்ப தாகவும், நெல்லுக்குப் பதிலாகத் துணியைப் பெற விரும்புகிருன் என்றும் கொள்வோம். மற்ருெருவன் துணி வைத்திருக்கிருன், துணிக்குப் பதிலாக நெல்லைப்பெற விரும்புகிருன் என்ருல் எந்த விதத் தடையுமின்றி இந்த நடவடிக்கை நடந்தேறும். இதில் இரு முகத் தேவைப் பொருத்தம் இருக்கிறது. நெல்லும் துணியும் கை மாறும். ஆனல், நெல் வைத்திருப்பவன் துணி வாங்க விரும்பாமல் தன்னுடைய மனைவிக்கு ஒரு காதணி வாங்க விரும்பினுல் விவசா யிக்கும் நெசவாளிக்கும் நடவடிக்கை நேரிடையாக அமைய முடியாது. காதணி செய்து தரக்கூடிய பொற்கொல்லன் நெல்லை விரும்பாமல் ஒரு பசுவை விரும்பி, பசு வைத்திருப்பவன் துணியை விரும்பி, ஒருவேளை துணி வைத்திருப்பவன் பசு வாங்க விரும்பினுல் முடிவில்தான் பேரம் நிலைக்கும். எனவே, இருமுகத் தேவைப் பொருத்தம் இல்லாமை பண்டமாற்று இயங்குவதற்குப் பெருந் தடையாக அமையும்.

(2) **பொதுவான மதிப்பளவை இல்லாமை** (Lack of Common Measure of Value): பண்டங்களுக்கு எதிராகப் பண்டங்களை மாற்றிக்கொள்ளும்பொழுது எந்த மாற்று வீதத்தில் அப் பண்டங்களை மாற்றிக்கொள்வது என்பதை நிர்ணயிப்பது எளிதான காரியமன்று. இது மற்ருெரு குறைபாடாகும். ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பையும் மற்றெல்லாப் பண்டங்களுக்கும் எதிராகக் கணக்கிடவேண்டும். ஒரு மரக்கால் நெல்லுக்கு இத்தனை முழத் துணி, இத்தனை நாள் ஆண் உழைப்பு, இத்தனை நாள் பெண் உழைப்பு என்றெல்லாம் கணக்கிடவேண்டும். வழக்கத்திலிருக்கும் பண்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் இது எளிதாக முடியும். ஆனுல், நாகரிக வளர்ச்சியால் பண்டங்களின் எண்ணிக்கை பெருகப் பெருகப் பண்டங்களின் தராதர மதிப்பைக் கணக்கிடுவது பெருந் தொல்லையாகிவிடும். மேலும், பண்டங்கள் ஒவ்வொன்றும் அளவிலும் தரத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. எல்லா நெல்லும் ஒருவகை அல்ல. எல்லாத் துணியும் ஒருவகை அல்ல. எனவே, அவ்வப் போது பேரம் செய்துதான் பண்டங்களின் தராதர மதிப்பை நிர்ணயிக்க முடியும்.

(3) **பண்டத்தைப் பிரிக்க முடியாமை** (Absence of Sub-division): அதிக மதிப்புள்ள ஒரு பண்டத்தைக் குறைந்த மதிப்புள்ள ஒரு பண்டத்துடன் மாற்றிக்கொள்ள நேரிடும்பொழுது தவிர்க்க முடியாத ஓர் இடையூறு எழுகிறது. தன்னிடமுள்ள எருது ஒன்றினைக் கொடுத்து உப்பைப்பெற விரும்பும் ஓர் உழவன்

எருதைத் துண்டாக்கியும் கொடுக்கமுடியாது; ஓர் எருதுக்கு எதிராகக் கிடைக்கக்கூடிய பெருமளவு உப்பைப் பெற்றுக்கொள்ளவும் விரும்பமாட்டான்.

(4) **செல்வத்தைச் சேமித்து வைப்பதில் எழும் இடையூறு:** பணம் வழக்கில் இல்லாதிருந்தால் மனிதன் தன்னுடைய செல்வத்தைப் பண்டங்களாகவே சேமித்து வைக்க நேரிடும். ஆனால், சேமித்து வைக்கக்கூடிய தகுதி எல்லாப் பண்டங்களுக்கும் இல்லை. பல பண்டங்கள் கெட்டழியும் தன்மையுடையவை. மற்றும் பல காலவாக்கில் தங்களுடைய மதிப்பினை இழக்கக்கூடியவை.

மேற்கண்ட காரணங்களால் பண்டமாற்று முறை ஆதி காலத்தில் ஓரளவுக்குத் திருப்திகரமாகச் செயலாற்றி வந்திருக்கக் கூடும். என்றாலும் பொருளாதார வளர்ச்சி பெருகிய இன்றைய உலக நிலைக்கு அது பொருந்தாது என்பது தெளிவாகும்.

**பணத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

பண்டமாற்று முறையிலிருந்த குறைபாடுகளும் இன்னல்களுமே பணம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தன எனலாம். தொடக்க காலத்தில் எல்லோருக்கும் சாதாரணமாகத் தேவைப்பட்ட சில பண்டங்கள் பணமாக இயங்கி வந்தன. வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பண்டங்கள் பணமாக உபயோகத்திலிருந்தன. கிரேக்கர்கள் எருதுவையும், சிகப்பு இந்தியர்கள் புகையிலையையும், ஆஃப்ரிக்க வாசிகள் தந்தத்தையும் பணமாகக் கையாண்டனர் என்று அறிகிறோம்.

காலப்போக்கில் பண்டங்களுக்குப் பதிலாகச் சில உலோகங்களைப் பணமாகப் பயன்படுத்துவது மேலும் சிறந்தது என்பதை மனிதன் உணர்ந்தான். இரும்பு, பித்தளை, வெண்கலம் போன்ற ஒவ்வோர் உலோகமும் மாறி மாறி வழக்கில் இருந்து வந்தது. ஆனால், அதிக மதிப்புடைய வெள்ளியும், பொன்னும் பணமாக உபயோகிக்கப் பொருத்தமானவை என்று உணரப்பெற்றது. இவற்றைப் பணமாக உபயோகிப்பதில் பல நன்மைகள் இருக்கின்றன. சாதாரணமாக இவற்றிற்கான தேவை (demand) அதிகமாயிருக்கிறது. ஆனால், இவற்றின் மொத்த உற்பத்தி குறைவாக இருப்பதால் இவற்றின் மதிப்பு அதிக மாறுதலடைவதில்லை. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இவற்றை எடுத்துச் செல்வதும் எளிது. இவற்றை அன்றாட வாழ்க்கையில்

கையாளுவதும் எளிது. இவற்றை வெட்டிப் பிரித்துத் தேவைக்கு ஏற்றாற்போலச் சிறு சிறு துண்டுகளாகக்கூட உபயோகிக்கலாம்.

உலோகங்கள் பணமாகச் செயல்படத் தொடங்கிய காலத்தில் உலோகத் துண்டுகளே பணமாக உலவி வந்தன. ஆனால், இம் முறையில் பல இன்னல்கள் எழுந்தன. இவற்றைப் போக்குவதற்காக அரசாங்க முத்திரை பொறிக்கப்பெற்ற நாணயங்கள் புழக்கத்திற்கு வந்தன.

காகிதச் செலாவணி நடைமுறைக்கு வந்ததைப் பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கியக் கட்டமாகக் கருதலாம். பொன்னையும் வெள்ளியையும் வணிகர்கள் தங்களுடன் சுமந்து செல்வது இடையூறாகவும் இருந்தது; ஆபத்தாகவும் இருந்தது. எனவே, பொன் வெள்ளிக் கட்டிக்குப் பதிலாகப் பொன்னாகவும் வெள்ளியாகவும் மாற்றிக் கொள்ளக்கூடிய அத்தாட்சிபெற்ற பற்றுச் சீட்டுகளை வணிகர்கள் சுமந்து செல்லத் தலைப்பட்டனர். தொடக்க காலத்தில் இப் பற்றுச் சீட்டுகள் உலோகங்களுக்குப் பதிலிகளாகவே (substitute) உபயோகிக்கப்பெற்று வந்தன. ஆனால், நாளாவட்டத்தில் இச் சீட்டுகளையே மக்கள் நாணயங்களாக ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். இவ்வாறு காகிதச் செலாவணி (Paper Currency) புழக்கத்திற்கு வந்தது. காகிதச் செலாவணி வெளியிடுவதைக் கவனத்தோடும் எச்சரிக்கையோடும் மேற்கொள்ளவேண்டியிருப்பதால் காலப்போக்கில் இச் செயலை அரசாங்கமோ அல்லது மைய பாங்கோ (Central Bank) ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது.

### பணத்தின் பணிகள் (Functions of Money)

பண்டமாற்று முறையிலே பலவிதக் குறைபாடுகள் இருக்கின்றன என்று மேலே கண்டோம். பணத்தை ஒரு பொருளாதாரக் கருவியாக உபயோகிப்பதன்மூலம் இக் குறைகள் அனைத்தும் நீக்கப்பெறுகின்றன. பண்டங்களுக்கு எதிராகப் பண்டங்களை மாற்றிக்கொள்ளும் வழக்கத்திற்குப் பதிலாக ஒருவன் தன்னிடமுள்ள பண்டத்தைப் பணத்திற்கு விற்றுவிட்டுக் கிடைத்த பணத்தைக்கொண்டு விரும்பிய பண்டத்தைப் பெறலாம். இருமுகத் தேவைப் பொருத்தம் இருக்கவேண்டுமென்கிற நியதி இல்லை. பண்டமாற்று முறையில் காணக்கிடக்கும், ஒரு பண்டத்தின் மதிப்பு இவ்வளவு என்று திண்ணமாகக் கூறமுடியாத பிரச்சினையும் எழுவதில்லை. நுகர்பு போக எஞ்சியதை மனிதன் பணமாகச் சேமித்துவைப்பதும் எளிதாகிறது. இவ்வாறு பணம் கொடுக்கல் வாங்கலைப் பரவலாக்குவதற்கு வழிவகுத்திருக்கிறது. இன்று

காணும் சிக்கலான பொருளாதார அமைப்புகள் இயங்குவதற்குப் பணம் பேருதவியாக இருக்கிறது. பணம் என்னும் கருவி கண்டு பிடிக்கப்பெற்று வழக்கத்திற்கு வந்திராவிடில் இன்று நாம் காணும் மலைப்பூட்டும் பொருளாதார வளர்ச்சி கைகூடியிருக்காது என்று கூறினுல் மிகையாகாது. கிரௌத்தர் என்னும் பேராசிரியர் பணத்தின் முக்கியத்துவத்தை அழகாகக் கூறுகிருர். 'மனிதன் புனைந்துள்ள புதுமைகளுள் (inventions) பணம் அடிப்படையான தொன்ருகும். மனித அறிவின் ஒவ்வொரு பிரிவிலும் அடிப்படை யான கண்டுபிடிப்புகள் இருக்கின்றன. பொறித்துறையில் சுழலும் உருளையும் (wheel), அறிவியலில் நெருப்பும், அரசியலில் வாக்குரி மையும் (vote) இத்தகைய கண்டுபிடிப்புகள். அதேபோன்று பொருளாதாரத் துறையில், ஏன் மனிதனுடைய சமூக வாழ்க்கை அனைத்திலும், பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பு ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் மற்றெல்லா மனித நடவடிக்கைகளும் நடந்தேறிவருகின்றன'.

பணம் நான்கு முக்கியப் பணிகளைச் செய்கின்றது. அவை யாவன: (1) பணம் பண்டங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் ஏதுவான ஓர் இடையீட்டுக் கருவியாக (Medium of Exchange) இருக்கிறது. (2) பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கும் ஓர் அளவையாக இருக்கிறது (Measure of Value). (3) சொத்தைச் சேமித்துவைக்க உதவுகிறது (Store of Value). (4) எதிர்காலப் பட்டுவாடாக்கள் செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது (Standard of Deferred Payments). இவற்றுள் முதலிரண்டு பணிகளை முதன்மை யான பணிகள் என்றும், பின்னவை இரண்டும் முன்னவற்றைச் சார்ந்து எழுந்த துணைப் பணிகள் என்றும் அழைக்கிருர்கள்.

**(1) பணம் பண்டங்களைக் கொடுப்பதற்கும் வாங்குவதற்கும் ஏதுவான ஓர் இடையீட்டுக் கருவி:** பணம் ஓர் இடையீட்டுக் கருவியாகச் செயலாற்றி வாணிபம் செழித்து வளரத் துணையாக இருக்கிறது. சந்தைக்கு வரும் பண்டங்கள் அனைத்தும் முதலில் பணத்திற்கு விற்கப்படுகின்றன. பின்னர்த் தேவையான வழியில் பணம் பண்டங்களாக மாற்றிக்கொள்ளப்பெறுகிறது. பண்ட மாற்று முறையில் ஒருவன் தன் வசம் உள்ள ஒரு பண்டத்தை விற்க வேண்டுமானுல் அதே நேரத்தில் மற்ருெரு பண்டத்தை வாங்கவும் தயாராக இருக்கவேண்டும். அதேபோன்று எதை யாவது வாங்க விரும்புவோன் ஒரு பண்டத்தை விற்கவும் தயாராக இருக்கவேண்டும். பணம் புழங்கத் தலைப்பட்டதும் இத்தகைய இக்கட்டான நிலை தவிர்க்கப்பெறுகிறது. ஒருவன் விற்பனை செய்பவனுகவோ அல்லது வாங்குபவனுகவோ மட்டும் இருக்

கலாம். நேரிடையான இருமுகத் தேவைப் பொருத்தம் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உழைப்புக்கு ஊதியம் கொடுக்க நேரிடும்பொழுது பண்டமாற்று முறையில் மற்றொரு சிக்கல் எழு கிறது. கழனியில் வேலை செய்யும் உழவனுக்குத் தானியத்தைக் கூலியாகக் கொடுக்கலாம். பாடம் புகட்டும் ஆசிரியனுக்கு எதன் மூலம் கூலியைக் கொடுப்பது? இவ்வாறு பண்டமாற்று முறையில் எழக்கூடிய குழப்பமெல்லாம் பணத்தை ஓர் இடையீட்டுக் கருவி யாகக் கையாளுவதன்மூலம் மறைகின்றன.

**2. பணம் பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கும் ஓர் அளவை:** இரண்டாவதாக, பணம் பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கும் ஒரு பொதுப்படையான அளவையாக அமை கிறது. தொலைவைக் கிலோமீட்டரிலும் மீட்டரிலும் அளந்து குறிப் பிடுகிறோம். பளுவை கிலோகிராமிலும் கிராமிலும் அளந்து குறிப் பிடுகிறோம். அதேபோன்று பண்டங்களின் மதிப்பை அளக்கப் பணத்தை ஓர் அளவைக் கருவியாகப் பயன்படுத்துகிறோம். எல்லாப் பண்டங்களின் மதிப்பையும் நாம் பணத்தின்மூலம் கணக் கிடுவதால் அன்றாட வாழ்க்கைக்கு வசதியாக இருக்கிறது. சந்தைக்குச் சென்று பண்டங்களின் விலைகளை விசாரிப்பதன்மூலம் அவற்றின் தராதர மதிப்பை எளிதில் அறிய முடிகிறது. இதனால் ஒருவன் தன்னுடைய வருவாயிலிருந்து எந்தெந்தப் பண்டங்களை எந்த அளவுக்கு வாங்கி அனுபவிக்கமுடியும், முடியாது என்று எளிதில் கணக்கிட முடிகிறது.

**3. சொத்தைச் சேமித்துவைக்கப் பணம் உதவுகிறது:** பண்டமாற்று முறையில் ஒருவன் எதிர்காலத்திற்கு முன்னேற் பாடாகச் சேமித்துவைக்க விரும்பினால் பல பண்டங்களாகத்தான் சேமித்து வைக்கவேண்டும். இவ்வாறு சேமித்துவைப்பதில் எழக் கூடிய இன்னல்கள் பல. பல பண்டங்கள் காலவாக்கில் கெட்டழிந்துவிடுகின்றன. மற்றும் பல நாள் ஆக ஆகத் தங்க ளுடைய மதிப்பை இழக்கின்றன. பணம் தோன்றிய பின் சொத்தைச் சேமித்துவைப்பது எளிதாகிறது. இந்தப் பணியைப் பணம் செய்வதனால் சமூகத்துக்கு அநேக நன்மைகள் உண்டு. ஒருவன் தனக்குக் கிடைக்கும் வருவாய் முழுவதையும் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. நுகர்வுக்காக (consumption) செலவழித்தது போக எஞ்சியதைப் பணமாகச் சேமித்துவைத்து எதிர்காலத்தில் அவசியம் ஏற்படும்பொழுது செலவழித்துக் கொள்ளலாம். பணம் ஆற்றும் இப் பணி ஒரு பெரும் பணி என்றாலும், இப் பணியிலிருந்து கிளைத்து எழுந்த ஒரு பெருந் தீமையையும் இங்குக் குறிப்பிடவேண்டும். எல்லாப் பண்டங்களின்

மதிப்பையும் அளக்கும் ஒரு பொதுப்படையான பண்டம் பணம். ஆனால், காலப்போக்கில் பணத்தின் மதிப்பே மாறுதலடைந்தால் பல பொருளாதாரப் பிரச்சினைகள் தலைதூக்கும். பணத்தின் மதிப்பு மாறுதலடைவதால் எழும் பிரச்சினைகளையும் அதன் விளைவுகளையும் பின்னர் விரிவாக ஆராயலாம்.

**4. எதிர்காலப் பட்டுவாடாக்கள் செய்வதற்குப் பணம் ஏதுவாக அமைகிறது :** பொருளாதார நடவடிக்கைகளில் பலவற்றிற்கும் உடனுக்குடனேயே நிகழ்காலத்தில் பட்டுவாடா செய்யப் பெறுகிறது. மற்றும் பல நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்தில் பட்டுவாடா செய்யவேண்டியிருக்கிறது. இன்று வாங்கும் கடன் காலம் கடந்து திருப்பி அடைக்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் (contracts) பலவற்றிற்கும் எதிர்காலத்தில்தான் பட்டுவாடா செய்யப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பணம் உதவியாக இருக்கிறது. கடன் வாங்குவதும் கொடுப்பதும், அதற்கான வட்டியைச் செலுத்துவதும் பெறுவதும், ஒப்பந்தங்கள் பல நடந்தேறுவதும் எல்லாமே பணக் கணக்கில்தான் நடைபெறுகின்றன. பணம் செய்யும் இப் பணி வாணிபம் செழித்தோங்க எங்ஙனம் உதவுகிறது என்பதை எளிதில் அறியலாம்.

மேற்கூறிய பணிகளுடன்கூட ஐந்தாவது பணியாகப் பணத்தின் நீர்மைத் தன்மையை (liquidity) சில ஆசிரியர்கள் வற்புறுத்துகின்றனர். பணத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு பொருளாதார அமைப்பில் பணத்தைப் பண்டமாக எளிதில் மாற்றிக்கொள்ளலாம். ஒருவன் பத்தாயிரம் ரூபாயை ரொக்கமாக வைத்திருக்கிறன்; மற்றொருவன் பத்தாயிரம் ரூபாய் பெறுமான நிலம் வைத்திருக்கிறன் என்று எடுத்துக்கொள்வோம். இருவரும் ஒரே செல்வ நிலையில் உள்ளவர்கள்தாம். ஆனல், ரொக்கமாக வைத்திருப்பவன் தான் விரும்பினல் உடனடியாக ஒரு மோட்டார் கார் வாங்கலாம். நிலம் வைத்திருப்பவனுக்கு அது முடியாத செயல். அவனுக்குச் சிறிது கால அவகாசம் வேண்டும். எனவே, எல்லாவகைச் சொத்துகளிலும் பணம் எளிய மாற்றுச் சக்தி உடையது. இதையே பணத்தின் நீர்மைத் தன்மை என்று கூறுவர்.

## பணத்தின் வகைகள் (Kinds of Money)

பலவகைப் பணங்கள் வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. இன்றும் இருந்துவருகின்றன. பணம் எண்ணிக்கையற்ற பல உருவங்களில் நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது என்கிற காரணத்தாலும் பலவகைப் பணங்கள் இன்று வழக்கில் இல்லாத

காரணத்தாலும் எல்லாவகைப் பணத்தையும் இணைத்துப் பாகு படுத்துவது எளிதான செயலன்று. எனவே, மேல்வாக்காகச் சில முக்கியமான வகைகளைமட்டும் ஆராயலாம்.

**கணக்கீட்டுப் பணமும் நடைமுறைப் பணமும்**

முதலாவதாகப் பணத்தைக் 'கணக்கீட்டுப் பணம்' (Money of Account) என்றும் ' நடைமுறைப் பணம் ' (Money Proper) என்றும் இருவகைப் படுத்தலாம். ஒவ்வொரு நாட்டிலும் பண்டங்களின் விலை, கடன், கூலி இவைகளை ஒரு குறிப்பிட்ட பணத்தின் கணக்கில் மதிப்பிடுகிறார்கள். உதாரணமாக, இந்தியாவில் ஒரு பொருளின் விலை இத்தனை ரூபாய், உழைப்பிற்கு இவ்வளவு ரூபாய் கூலி, இவ்வளவு ரூபாய் கடன், வட்டிப் பணம் இத்தனை ரூபாய் என்று குறிப்பிடுகிறோம். எனவே, இந்தியாவில் ரூபாய் பணம் கணக்கீட்டுப் பணமாகும். இதேபோன்று இங்கிலாந்தில் ஸ்டெர் லிங்கும், ஐக்கிய அமெரிக்காவில் டாலரும், ஜப்பானில் யென்னும் கணக்கீட்டுப் பணமாகும். ஆனால், வழக்கில் பல நாணயங்கள் உலவுகின்றன. ஐந்து ரூபாய், பத்து ரூபாய் போன்ற காகிதச் செலாவணிகளும் ஐம்பது பைசா, இருபத்தைந்து பைசா போன்ற பல உலோக நாணயங்களும் இந்தியாவில் உலவுகின்றன. பண்டத்தின் விலை இத்தனை ரூபாய் என்று குறிப்பிட்டாலும், அதன் விலைக்கு வழக்கில் உள்ள நாணயங்கள் எதை வேண்டுமானாலும் விலையாகக் கொடுத்து அப் பண்டத்தை வாங்கலாம். இவ்வாறு ஒவ்வொரு நாட்டிலும் அவ்வப்போது நடைமுறையில் இருக்கும் நாணயங்களை நடைமுறைப் பணம் என்று அழைக்கலாம்.

**பாங்குப் பணம் (Bank Money)**: நடைமுறைப் பணம் (money proper) பல உருவங்களைப் பெறலாம். இவற்றுள் பாங்குப் பணத்திற்கும் மற்றவகைப் பணத்திற்கும் உள்ள முக்கிய வேறு பாட்டினை உணரவேண்டும். ஒரு பண்டத்தை நாம் வாங்கும் பொழுது அதற்குரிய விலையைச் 'செக்' (cheque) மூலம் கொடுக் கலாம். அப்படிக் கொடுக்கும்பொழுது பாங்கில் நம்முடைய கணக்கில் உள்ள வைப்பு (deposit) நாம் கொடுத்த செக்கின் அளவுக்குக் குறையும். செக்கினைப் பெறுவோரின் கணக்கு அந்த அளவுக்கு உயரும். இவ்வாறு பாங்கிலுள்ள வைப்புகளை ஒருவர் கணக்கிலிருந்து மற்றொருவர் கணக்குக்கு மாற்றுவதன் மூலம் கொடுக்கல் வாங்கல் கைகூடுகிறது. எனவே, சாதாரணப் பணம் செய்யும் பணியை பாங்குப் பணமும் நிறைவேற்றுகிறது. ஆனால், பாங்குப் பணம் 'சட்டச் செலாவணி' (legal tender money) அன்று. அதாவது, நாம் செக் மூலம் பணத்தைக் கொடுக்கும்பொழுது அதை ஏற்போர் விரும்பினால் பெற்றுக்கொள்ளலாம். இல்லை

யெனில் மறுக்கலாம். பெறுவதும் மறுப்பதும் கொடுப்பவர்மீது ஏற்பவருக்கு உள்ள நம்பிக்கையைப் பொறுத்தது. ஏற்கத்தான் வேண்டும் என்று ஏற்பவர்மீது சட்டத்தின் துணைகொண்டு வற்புறுத்த முடியாது. மற்றவகை நடைமுறைப் பணம் (money proper) எல்லையில்லாத அளவுக்கோ அல்லது குறிப்பிட்ட ஓர் அளவுக்கோ சட்டச் செலாவணியாகும். இந்தியாவில் ரூபாய் நாணயம் சட்டச் செலாவணியாகும். அரை ரூபாய் நாணயம் பத்து ரூபாய் வரையிலும் பிற கீழ் இன நாணயங்கள் ஒரு ரூபாய் வரையிலும் சட்டச் செலாவணித் தன்மை உடையன.

**பண்டப் பணம்** (Commodity Money)

ஒரு குறிப்பிட்ட பண்டம் பணமாகக் கையாளப்பெற்றால் அது பண்டப் பணமாகிறது. பண்டைக் காலத்தில் வெவ்வேறு பண்டங்கள் பணமாக இயங்கி வந்தன என்றாலும் முடிவில் பொன் வெள்ளி போன்ற சில உலோகங்களே பணமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றன என்று மேலே கண்டோம். ஒரு பண்டப் பணத்தின் உள்ளுறு மதிப்பும் (intrinsic value), தோற்ற மதிப்பும் (face value) ஒன்றாக இருக்குமானால் (அதாவது, ஒரு ரூபாய் நாணயத்திலுள்ள வெள்ளி உலோகத்தின் மதிப்பு ஒரு ரூபாய் பெறுமானால்) அதை 'நிலையான பணம்' (Standard Money) அல்லது 'முற்றுருப் பணம்' (Full-bodied Money) என்று கூறுவது வழக்கம்.

**அடையாளப் பணம்** (Token Money)

நாட்டில் முற்றுருப் பணம் உலவும்பொழுது சில்லறை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாகச் செம்பு, பித்தளை போன்ற சாதாரண உலோகங்களினால் ஆகிய குறைந்த மதிப்புள்ள அடையாள நாணயங்களும் கூடவே உலவி வருவது வழக்கம். அடையாள நாணயங்களின் தோற்ற மதிப்பு அவற்றின் உள்ளுறு மதிப்பைவிட அதிகமாக இருக்கும். இந்தியாவில் உள்ள பைசா நாணயங்கள் பலவும் இவ் வகையைச் சார்ந்தவை. இன்று உலகின் பல நாடுகளிலும் வழக்கில் இருக்கும் எல்லா நாணயங்களுமே அடையாள நாணயங்கள்தாம். இந்தியாவில் ரூபாய் நாணயத்தின் தோற்ற மதிப்பு அதன் உள்ளுறு மதிப்பைவிட அதிகம். எனவே, ரூபாய் நாணயமும் ஓர் அடையாள நாணயம்தான்.

**பிரதிப் பணம்** (Representative Money): பணத்தின் வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு நிலையில் உலோக நாணயங்களுக்குப் பதிலாகக் காகிதச் செலாவணி வெளியிடப்பெற்றது என்று கண்டோம். காகிதச் செலாவணியைக் கையாளுவதில் பல நன்மைகள்

இருக்கின்றன. இவ்வாறு உலோக நாணயத்திற்குப் பிரதியாகக் காகிதச் செலாவணி பணியாற்றுவதைப் பிரதிப் பணம் என்றழைக் கிருர்கள். பிரதிப் பணத்தை வெளியிடும் அரசாங்கம் அல்லது 'மைய பாங்கு' (Central Bank) வெளியீட்டுக்கு ஈடான பொன் அல்லது வெள்ளி உலோகங்களை வைத்திருந்ததால், காகிதச் செலாவணியை உலோக நாணயமாகவும் உலோக நாணயத்தைக் காகிதச் செலாவணியாகவும் மக்கள் எப்பொழுதும் மாற்றிக் கொள்ளக்கூடிய நிலை காகிதச் செலாவணி நடைமுறைக்கு வந்த காலத்தில் இருந்தது. இவ்வாறு ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளும் தகுதியை உடைய காகிதச் செலாவணியை 'மாற்றுத் தகுதியுடைய செலாவணி' (Convertible Paper Currency) என்று அழைக்கலாம். தற்காலத்தில் இத்தகைய மாற்றுத் தகுதியுடைய பிரதிப் பணத்தைக் காண்பது அரிது. எனவே, அடையாளப் பணத்திற்கும் பிரதிப் பணத்திற்கும் அதிக வேற்றுமை இல்லை. அடையாளப் பணம் சாதாரண உலோகங்களால் ஆனது. பிரதிப் பணம் காகிதத்தால் ஆனது.

**நல்ல பணத்தின் இயல்புகள்**

பணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் பலவிதப் பண்டங்களும் பலவகை உலோகங்களும் அவ்வப்போது பணமாக உபயோகிக்கப்பெற்று வந்தன என்று கண்டோம். உள்ளூறு மதிப்பு எதுவுமே இல்லாத காகிதத் தாள் இன்று பணமாக எல்லா நாடுகளிலும் கையாளப்பெற்று வருகிறது. மக்கள் இதை நன்ருக அறிந்திருந்தும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். காகிதச் செலாவணியைத் தேவைக்கும் பொருளாதாரச் சூழ் நிலைக்கும் ஏற்ப வெளியிட்டு வந்தால் அதை மற்றெல்லா வகைப் பணத்தையும்விடச் சிறந்ததாகக் கருதலாம். ஒரு சிறந்த பணத்திற்கு இருக்கவேண்டிய இயல்புகளைப் பின்வருமாறு கூறலாம்.

**(1) எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும்** (General Acceptability)

மக்கள் எல்லோரும் பணமாக உலவும் பண்டத்தைப் பண மென ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப் பண்டம் இன்ன பொருளாக இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. தானியமாயிருக்கலாம் ; பொன் வெள்ளியாக இருக்கலாம்; அல்லது வெறும் காகிதத் தாளாகக்கூட இருக்கலாம்.

**(2) தெளிவுடைமை (Cognisability)**

எடுத்த எடுப்பிலேயே பணத்தைத் தொட்டுப் பார்த்தவுடன் அது எவ்வளவு மதிப்புடையது என்று எளிதில் தெரிந்துகொள்ளக் கூடிய தன்மை இருக்கவேண்டும். உலோக நாணயங்கள் பல உருவங்களிலும், காகிதச் செலாவணி பல நிறங்களிலும் பல அளவு களிலும் செய்யப்பெறுவது இதன் காரணமாகத்தான்.

**(3) தூக்கிச் செல்ல எளிதாயிருக்கவேண்டும் (Portability)**

பணத்தை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்கு எடுத்துச் செல்வது எளிதாய் இருக்கவேண்டும். இரும்பு, செம்பு, பித்தளை போன்ற சாதாரண உலோகங்களால் ஆன பணத்திற்கு இந்த இயல்பு கிடையாது. பணமாகக் கையாளக்கூடிய பண்டம் குறைந்த அளவில் நிறைந்த மதிப்புடையதாக இருக்கவேண்டும். பொன்னும் வெள்ளியும் வழக்கிற்கு வந்ததற்கு இதை ஒரு முக்கியக் காரணமாகக் காட்டலாம். இந்த இயல்பினை முற்றிலும் பெற்றது காகிதச் செலாவணியாகும்.

**(4) உறுதியுடையதா யிருக்கவேண்டும் (Durability)**

பணம் அடிக்கடி கைமாறுவதால் அது உறுதிப்பாடு உடையதாக இருக்கவேண்டும். பல பண்டங்களுக்கு இத் தன்மை கிடையாது. எல்லா உலோகங்களுக்குங்கூட இத் தன்மை கிடையாது. கலப்பற்ற நிக்கல் அழுக்கை உண்டாக்குகிறது. தனி அலுமினியம் எளிதில் தேய்ந்துவிடுகிறது. ஈயம் எளிதில் நசுங்கக்கூடியது. இரும்பு துரு பிடிக்கக்கூடியது. காலவாக்கில் நல்ல மதிப்புள்ள பொன்னும் வெள்ளியும் பணமாக ஆட்சியில் நிலைத்துவிட்டதற்கு இந்த உலோகங்கள் உறுதிப்பாட்டில் சிறந்ததா யிருந்ததே காரணமாகும். குறைந்த செலவில் அவ்வப்போது பழைய காகிதச் செலாவணியை நீக்கிவிட்டுப் புதுப்புதுத் தாள்களை வெளியிட முடியுமாதலால் காகிதச் செலாவணிக்கும் இத் தன்மை இருப்பதை அறியலாம்.

**ஒரு சீராக இருக்கவேண்டும் (Uniformity)**

பணமாக உபயோகிக்கப்பெறும் பண்டம் அளவிலும், மாற்றிலும், எடையிலும் ஒரே சீராக இருக்கவேண்டும். ஒரே மதிப்புடைய பணம் அளவிலோ அல்லது எடையிலோ ஒன்றுக் கொன்று மாறுபட்டால் பெருத்த குழப்பம் ஏற்படும்.

**மதிப்பு மாறுமல் இருக்கவேண்டும்** (Stability of Value)

பல பண்டங்களின் தராதர மதிப்பை அளந்து காட்டும் ஓர் இடையீட்டுக் கருவிதான் பணம். இக் கருவியின் மதிப்பே அடிக்கடி மாறுதலடைந்தால் பணம் பணி செய்வதற்குப் பதிலாகத் தொல்லை கொடுப்பதாக அமையும். ஒரு மீட்டரின் நிலையான நீளம் இவ்வளவு என்று வைத்திருப்பதால்தான் துணியை மீட்டர் கோலால் அளந்து இவ்வளவு நீளம் இருக்கிறது என்று குறிப்பிட முடிகிறது. மீட்டர் கோலின் அளவே அடிக்கடி மாறுதலடைந்தால் குழப்பம்தான் ஏற்படும். எனவே, பணத்தின் மதிப்பு மாறுமல் இருக்கவேண்டியது மிக்க அவசியம்.

# 14. பணத்தின் மதிப்பு
## (Value of Money)

**விளக்கம்**

பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கக்கூடிய ஓர் இடையீட்டுக் கருவிதான் பணம் என்று முன்னர் விளக்கினேம். பணத்தின் மதிப்பை எப்படி அளப்பது, எந்தக் கருவியின் துணை கொண்டு அளப்பது என்கிற அடிப்படையான வினுக்களுக்கு விடைகாண முயலலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பணத்தின் மதிப்பு என்ன என்பதற்கு நேரிடையான பதில் அளிக்க முடியாது. ஏனெனில், பணத்தின் மதிப்பை அளக்க முடியாது. பணத்திற்கு இருக்கும் பண்டங்களை வாங்குந் திறனைத்தான் (purchasing power) அதன் மதிப்பாகக் குறிப்பிடலாம். அப்படியானல் ஒரு ரூபாய் பணத்தின் மதிப்பு இத்துணைப் படி அரிசிக்குச் சமம், இவ்வளவு துணி, இவ்வளவு காகிதம், இத்துணை வாழைப்பழம் என்று ஒரு முடிவில்லாத பட்டியலைத் தயாரிக்க வேண்டியிருக்கும். இதில் யாரும் அக்கறை காட்டமாட்டார்கள். ஆனல், சென்ற ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ஆண்டில் பணத்தின் மதிப்பு உயர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறிய எல்லோரும் விரும்புவார்கள். ஒரு காலத்திற்கும் மற்றொரு காலத்திற்குமிடையே பண மதிப்பில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறியலாம். எனவே, பணத்தின் மதிப்பை அளக்க முடியாது; அளக்கவேண்டிய அவசியமும் இல்லை. ஆனல், பண மதிப்பில் ஏற்படும் மாற்றங்களை அளந்து அறியலாம். இதை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும்.

மதிப்பு, விலை இவை யிரண்டும் பொருளாதாரத்தில் சிறப்புச் சொற்களாகக் (terms) கையாளப் பெறுகின்றன. இவை யிரண்டுக்கும் உள்ள தொடர்பினை அல்லது வேறுபாட்டினைத் தெளிவாக அறியவேண்டும். மதிப்பு என்பது பண்டங்களுக்கு இருக்கும்

மாற்றுச் சக்தி (exchange value). இரண்டு நாற்காலிகளைக் கொடுத்து ஒரு மேசையைப் பெறலாம் என்றால் ஒரு மேசையின் மதிப்பு இரண்டு நாற்காலிகள் என்று கூறலாம். ஒரு பண்டத்தின் மதிப்பைப் பணத்தால் அளந்து அறிவிப்பது விலை எனப்படும். ஒரு மேசையின் விலை இருபது ரூபாய், ஒரு நாற்காலியின் விலை பத்து ரூபாய் என்று குறிப்பிடுகிறோம். நாட்டில் விலைவாசிகள் இரட்டிப்பாக உயருகின்றன என்று வைத்துக்கொள்வோம். ஆனால், பண்டங்களின் மதிப்பு இரட்டிக்காது. மேசையின் விலை நாற்பது ரூபாயாகவும் நாற்காலியின் விலை இருபது ரூபாயாகவும் உயரும். ஆனால், ஒரு மேசையின் மாற்று மதிப்புப் பழைய நிலையான இரண்டு நாற்காலிகளாகத்தான் இருக்கும்.

பணத்தின் மதிப்புக்கும் விலைவாசிக்கும் உள்ள பொருத்தம் எதிர்மறையானது. பணத்தின் வாங்குந்திறனையே நாம் பணத்தின் மதிப்பு என்று குறிப்பிடுவதால் விலைவாசிகள் உயரும் பொழுது பணத்தின் மதிப்புக் குறையும். விலை மட்டம் தாழும் பொழுது பணத்தின் மதிப்பு உயரும்.

**குறியீட்டு எண்கள்** (Index Numbers)

பணத்தினுடைய வாங்குந் திறனில் அவ்வப்பொழுது ஏற்படும் ஏற்ற இறக்கங்களை அளந்துகாட்டக்கூடிய ஒரு புள்ளியியல் முறைதான் (statistical device) குறியீட்டு எண்கள் என்பதாகும். பணத்தின் வாங்குந்திறன் என்று பொதுப்படையாகக் கூறுவது தெளிவில்லாத ஒன்றாகும். எண்ணிக்கையற்ற பண்டங்கள் உலகில் இருக்கின்றன. பணத்தின் வாங்குந்திறன் மாறும்பொழுது எல்லாப் பொருள்களிலும் ஒரே அளவில் மாறுவதில்லை. சில பண்டங்களின் விலை 60 சதவீதம் உயரலாம்; சில பண்டங்களின் விலை 20 சதவீதம் உயரலாம். மற்றும் சில பண்டங்களின் விலை 5 சதவீதம் குறைந்துகூட இருக்கலாம். மேலும், எல்லா மக்களும் எல்லாப் பண்டங்களையும் வாங்க விரும்புவதில்லை. ஒரு காரின் விலை 100 சதவிகிதம் உயர்ந்து விட்டால் அது ஒரு சாதாரணக் கூலியாளைப் பாதிப்பதில்லை. அதேபோல உப்பு, தீப்பெட்டி இவை போன்ற பண்டங்களின் விலைகள் இரட்டித்துவிட்டால் செல்வந்தர்களை அதிகம் பாதிப்பதில்லை. எனவே, மக்களைக் கூலி யீட்டுவோர், வணிகர், தொழில் உற்பத்தியாளர் என்று பல பிரிவுகளாகப் பிரித்து வகைப் படுத்தினால் ஒவ்வொரு பிரிவினரும் ஒருவகைப் பண்டங்களின் விலைமாற்றத்தில்தான் அக்கறை காட்டுகின்றனர். தெளிவாகக் கூறினால் ஒவ்வொரு வகுப்பினரும் தாம் ஈடுபாடு கொண்டுள்ள பண்டங்களில் பணத்தின் வாங்குந் திறன் எவ்வாறு மாறுதலடை

கிறது என்பதை அறியத்தான் விரும்புவர். இக் காரணத்தினுல் ஒவ்வொரு வகைப் பண்டத்திற்கும் ஒவ்வொரு வகைக் குறியீட்டு எண்கள் அமைக்கவேண்டியிருக்கிறது. அவசியத்திற்கு ஏற்ருற்போல 'வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்' (Cost of living index), 'சில்லறை விலைக் குறியீட்டு எண்' (Retail price index), 'மொத்த விலைக் குறியீட்டு எண்' (Wholesale price index) என்று பலவகையான குறியீட்டு எண்களை அமைப்பது வழக்கம்.

**குறியீட்டு எண்களை அமைக்கும் முறை**

இரு காலநிலைகளுக்கிடையே பணத்தின் வாங்குந் திறனில் ஏற்படும் மாற்றங்களை எடுத்துக்காட்டும் ஒரு புள்ளியியல் சாதனந் தான் குறியீட்டு எண்கள் என்று கண்டோம். குறியீட்டு எண்கள் ஒன்றை அமைப்பதற்கு முதன்முதலாக அடிப்படை ஆண்டைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அஃதாவது, 1951ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக்கொண்டு இன்று ஒரு குறியீட்டு எண்களை அமைத்தால், 15 ஆண்டுத் திட்ட காலத்தில் ரூபாயின் வாங்குந் திறன் எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதை அறியலாம். அடிப்படை ஆண்டைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதிகக் கவனம் செலுத்தவேண்டும். அடிப்படை ஆண்டு, பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்ற இறக்கங்கள் இல்லாத, ஒரு சாதாரண ஆண்டாக இருத்தல்வேண்டும்.

அடுத்தபடியாகப் பண்டங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் செலுத்தவேண்டும். எந்த நோக்கத்தை மனத்தில் கொண்டு குறியீட்டு எண்கள் அமைக்க இருக்கிருேமோ, அதற்கு ஏற்ருற்போல் பொருத்தமான பண்டங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். உதாரணமாக, வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணை அமைக்க முற்பட்டிருக்கிருேமென்ருல், சாதரண மனிதனின் அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்கள் அனைத்தும் அதில் இடம்பெற வேண்டும். அவசியமற்ற பண்டங்களை அதில் சேர்க்கக்கூடாது.

அதற்கு அடுத்த கட்டத்தில் பண்டங்களின் அடிப்படை ஆண்டில் நிலவிய விலைகளையும், நடப்பு ஆண்டில் நிலவும் விலைகளையும் கண்டறியவேண்டும். நடப்பு ஆண்டின் விலை விவரத்தை அடிப்படை ஆண்டில் நிலவிய விலைகளின் சதவீதமாகக் கூறவேண்டும். ஒரு பண்டத்தின் விலை அடிப்படையாண்டில் 10 ரூபாயாகவும் நடப்பு ஆண்டில் 15 ரூபாயாகவும்

இருந்தால், அதை முறையே 100 எண்களாகவும், 150 எண் களாகவும் மாற்றியமைக்கவேண்டும். இவ்வாறு அமைத்த குறியீட்டு எண் ஒன்றின் விளக்கத்தைக் கீழே காணலாம்.

## வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்

| பண்டம் | 1951-ல் விலை ரூ. | | 1965-ல் விலை ரூ. | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| உணவுப் பண்டங்கள் ... | 100 | 100 | 300 | 300 |
| வாடகை ... ... | 20 | 100 | 60 | 300 |
| துணி ... ... | 20 | 100 | 45 | 225 |
| பொழுது போக்கு, கேளிக்கை (Entertainments) ... | 4 | 100 | 6 | 150 |
| போக்குவரத்து (Transport) ... | 16 | 100 | 20 | 125 |
| சில்லறை வகை (Misc.) ... | 5 | 100 | 6 | 120 |
| | 6 | 600 | 6 | 1220 |
| | | 100 | | 220 |

**குறியீட்டு எண்கள் = 220:** இதிலிருந்து, சாதாரண மக் களின் வாழ்க்கைச் செலவு 120 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று அறியலாம். பண்டங்களின் விலைமட்டம் 120 சதவீதம் உயர்ந்திருக்கிறது. பண மதிப்பு அந்த அளவுக்குக் குறைந் திருக்கிறது. குறியீட்டு எண்ணை இன்னும் சீரிய முறையில் அமைக்கவேண்டுமானால், பண்டங்களுக்குத் தராதர முக்கியத் துவம் கொடுத்து அமைக்கவேண்டும். அவ்வாறு அமைத்த குறியீட்டு எண்ணுக்கு 'நிறையிட்ட குறியீட்டு எண்' (Weighted index number) என்று பெயர். மேலே தந்துள்ள வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்ணில் எல்லாவகைச் செலவுக்கும் ஒரே முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். உணவுப் பண்டங்களுக்கு ஆகும் செலவில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தையும், பொழுதுபோக்குச் செலவில் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் வேறுபடுத்திக் காட்ட வில்லை. இது சரியன்று. உணவுப் பண்டங்களுக்குக் கட்டாயம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்பது பண்டங்களின் தராதர முக்கியத்துவத்தைப் பொறுத்திருக்கிறது. போக்கு

வரத்துச் 'செலவை ஒரு முறை கணக்கில் எடுத்துக்கொண்டால், உணவுப் பண்டங்களை நான்கு முறையும் (4 எடை), வாடகைச் செலவை மூன்று முறையும், துணிச் செலவை இரண்டு முறையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் பொருத்தமாக இருக்கும். நிறையிட்ட குறியீட்டு எண் அமைப்பதன்மூலம் கிடைக்கும் முடிவும் (result) சாதாரணக் குறியீட்டு எண் காட்டும் முடிவும் மாறுபட்டிருக்கும்.

## இர்விங் ஃபிஷருடைய பண அளவுக் கோட்பாடு (Fisher's Quantity Theory of Money)

பணத்தின் மதிப்பு எதைச் சார்ந்திருக்கிறது என்பதுபற்றிப் பல கோட்பாடுகள் வழக்கில் இருக்கின்றன. இவற்றுள் பண அளவுக் கோட்பாடு (Quantity theory of money) பழமையானதும் நெடுங்காலமாக வழக்கில் இருந்துவருவதுமான ஒன்றாகும். இக் கோட்பாட்டின் ஆசிரியர் இர்விங் ஃபிஷர் என்னும் அமெரிக்கப் பொருளாதார நிபுணர். பணத்தின் மதிப்புப் பண அளிப்பின் (supply of money) அளவைச் சார்ந்திருக்கிறது என்னும் கருத்தின் அடிப்படையில் இக் கோட்பாடு அமைந்திருப்பதால், இதற்குப் பண அளவுக் கோட்பாடு என்று பெயர் வரலாயிற்று. பண மதிப்புக்கும் புழக்கத்திலிருக்கும் பண அளவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று நெடுங்காலமாகப் பல பொருளாதார வல்லுநர்களும் வலியுறுத்திவந்தாலும், இக் கருத்தினைத் திருத்தி அமைத்துச் செப்பனிட்டுத் தந்த காரணத்தால், இர்விங் ஃபிஷருடைய பெயரே இக் கோட்பாட்டின் ஆசிரியராக வழக்கில் இருந்துவருகிறது.

ஒரு பண்டத்தின் மதிப்பை அப் பண்டத்தின் அளிப்பும் (supply), தேவையும் (demand) நிர்ணயிக்கின்றன. அதேபோன்று பணத்தின் மதிப்பையும் அதன் அளிப்பும் தேவையும் நிர்ணயிக்கின்றன. இதில் ஒரே ஒரு திருத்தம் அவசியமாகிறது. ஆரஞ்சுப் பழத்தின் அளிப்பு 10 சதவிகிதம் உயர்ந்தால் ஆரஞ்சுப் பழத்தின் விலை குறையும். ஆனால், எந்த அளவுக்குக் குறையும்? விலை இறக்கம் 2 சதவீதம் இருக்குமா, 5 சதவீதம் இருக்குமா, அல்லது 10 சதவீதம் இருக்குமா என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால், பணத்தின் அளிப்பில் 10 சதவீதப் பெருக்கம் இருந்தால் அதன் மதிப்பும் 10 சதவீத அளவுக்குக் குறையும். இது பணத்தின் ஒரு தனித் தன்மையான இயல்பாகும். இதனை மனத்திற்கொண்டு பணத்தின் அளிப்பு, தேவை இரண்டினையும் ஆராயலாம்.

**பணத்தின் அளிப்பு** (Supply of Money): பணத்தின் அளிப்பு என்றால் என்ன? ஒரு நாட்டில் புழக்கத்திலிருக்கும் பணத்தின் அளவே பணத்தின் அளிப்பாகும். பணம் பல உருவங்களைக்கொண்டிருக்கலாமாகையால், சில்லறை நாணயங்கள், காகிதச்செலாவணி போன்ற எல்லாவற்றையும் சேர்த்த பண அளவே பணத்தின் அளிப்பாகும். இத்தகைய பண அளிப்பு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குமட்டும்தான் பொருந்தும். ஒரு குறிப்பிட்ட கால அளவில் (over a period of time) பணத்தின் அளிப்பு என்ன என்று நாம் அறிய விரும்பினால், பணத்தின் 'சுழல் வேகத்தையும்' (velocity of circulation) நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். பணம் வெகு விரைவில் கைமாறுகிறது. ஒரு பத்து ரூபாய் நோட்டு குறிப்பிட்ட கால அளவில் பத்து முறை கைமாறினால், அது நூறு ரூபாய் பெருமான நடவடிக்கைகளைச் செய்திருக்கிறது என்றறியலாம். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சராசரி எத்தனை முறை பணம் சுழன்று கைமாறுகிறதோ அதைத்தான் பணத்தின் 'சுழல் வேகம்' என்றழைக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருக்கும் பணத்தின் அளிப்பை M என்ற குறியாகவும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள பணத்தின் சுழல் வேகத்தை V என்ற குறியாகவும் வைத்துக்கொண்டால், MV என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள பணத்தின் அளிப்பைக் குறிக்கும்.

**பணத்தின் தேவை** (Demand for Money)

பணத்திற்குத் தேவை எப்படி எழுகிறது? பணத்தின் தேவை என்றால் என்ன? ஒரு பண்டத்திற்கு எழும் தேவை நாம் அறிந்ததே. ஓர் ஆரஞ்சுப் பழத்தை ஒருவன் வாங்க விரும்பினால் அதனை நுகர்வதற்காக வாங்க விரும்புகிறான். ஆகவே, தேவை எழுகிறது. பணத்தைப் பெற எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால், மற்றப் பண்டங்களைப்போலப் பணத்தை நுகர்வதற்காக விரும்புவதில்லை. மற்றப் பண்டங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஏதுவான ஓர் இடையீட்டுக் கருவியாகப் பயன்படுத்துவதற்காகத்தான் மக்கள் பணத்தைப் பெற விரும்புகிறார்கள். எனவே, பண்டங்களுக்கு எழும் தேவையைப் பணத்திற்கு எழும் தேவை என்று கூறலாம். உதாரணமாக, ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பண்டங்களை வாங்கி விற்கவேண்டியிருந்தால் ஆயிரம் ரூபாய் பணத்திற்குத் தேவை எழும் என்பதை அறியலாம். ஒரே ஒரு பண்டம், அரிசி ஒன்றுதான் வழக்கில் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நாட்டில் உற்பத்தியான மொத்த அரிசி 1000 மூட்டை என்றும் வைத்துக்கொள்ளுவோம். இந்த மொத்த உற்பத்தியில் 700 மூட்டைதான் நடப்பு ஆண்டில் சந்தையில் விலையாகிறது என்றும் வைத்துக்கொள்ளுவோம். நடப்பு ஆண்டில்

பணத்திற்கு எழும் தேவையும் இந்த 700 மூட்டைகளை வாங்கி விற்பதற்கான அளவுக்குத்தான் இருக்கும். ஒரு மூட்டை அரிசியின் சராசரி விலை 50 ரூ. என்றால், $700 \times 50 = 35{,}000$ ரூ. அளவுக்குப் பணத்தேவை எழும். எனவே, நாட்டில் பண்டங்களின் மொத்த உற்பத்தியில் விற்பனை ஆகவிருக்கும் அளவினை T என்ற குறியாக வைத்துக்கொண்டு, பண்டங்களின் சராசரி விலையை P என்ற குறியாகவும் வைத்துக்கொண்டால், ஒரு குறிப்பிட்ட கால அளவில் பணத்திற்கான தேவை PT ஆகும்.

பணத்தின் தேவையிலோ அல்லது அளிப்பிலோ ஏற்படும் மாற்றம் பணத்தின் மதிப்பு மாறுவதற்குக் காரணமாக இருக்கும். பணத்தின் அளவு மாறாமல் பழைய நிலையிலேயே இருந்து பண்டங்களின் அளவு பெருகினால், பணத்தின் மதிப்பு உயரும். பணத்தின் அளவு மாறாமல், ஆனால், பண்டங்களின் அளவு குறைந்தால் பணத்தின் மதிப்பும் குறையும். பண்டங்களின் அளவு மாறாமல் பணத்தின் அளவு பெருகினால் பணத்தின் மதிப்புக் குறையும்; சுருங்கினால் மதிப்பு உயரும். இதுதான் பண அளவுக் கோட்பாட்டின் தத்துவம்.

இக் கருத்தினை இர்விங் ஃபிஷர் அவர்கள் ஒரு கணக்கியல் சமன்பாட்டின் (equation) உதவிகொண்டு விளக்குகிறார். அச் சமன்பாட்டினை $P = \frac{MV}{T}$ என்று எழுதலாம். இதில் P என்பது பண்டங்களின் சராசரி விலையினையும், M என்பது புழக்கத்திலிருக்கும் எல்லாவகைப் பணத்தின் மொத்த அளவையும், V என்பது பணத்தின் சுழல் வேகத்தையும், T என்பது மொத்த உற்பத்தியில் சந்தையில் விலையாகும் பண்டங்களின் அளவையும் குறிக்கும். ஃபிஷர் கூறிய கோட்பாட்டினைப் பின்வருமாறு கூறலாம்:

'பொதுவான விலைமட்டம் பணத்தின் அளவு, அதன் சுழல் வேகம் இவ் விரண்டிற்கும் ஏற்றாற்போல் நேரிடையான முறையிலும், பணம் மூலம் வாங்க இருக்கும் பண்டங்கள், பணிகள் இவற்றின் அளவுக்கு எதிர் திசையிலும் மாறுகிறது' (The general level of prices varies directly with the quantity of money and velocity of circulation and inversely with the volume of goods and services to be purchased with money).

இதுவரை பணத்தின் அளிப்பைப் பற்றிக் (supply) கூறும் பொழுது, பலவகையான நாணயங்களையும் காகிதச் செலாவணியையும் மட்டும்தாம் கணக்கில் எடுத்துக்கொண்டோம்.

சாதாரணப் பணம் செய்யும் பணியினைச் செக்குகள் (cheques), உண்டியல்கள் (bills) மூலம் பாங்கு பணமும் செய்கிறது என்பது நாம் அறிந்ததே. ஆகவே, இதனையும் (bank money) கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக்கொள்ளும் பொழுது, திருத்தி அமைத்த பண அளவுக் கோட்பாட்டின் சமன்பாடு (equation) பின்வருமாறு அமையும் : $P = \frac{MV + M'V'}{T}$. இதில் M' என்பது பாங்கு பணத்தின் அளவினையும், $V^1$ என்பது பாங்குப் பணத்தின் சுழல் வேகத்தினையும் குறிக்கின்றன.

மேற்கூறிய சமன்பாட்டிலுள்ள பல உறுப்புகளில் பணத்தின் அளவைக் குறிக்கும் M ஒன்றுதான் பணத்தின் மதிப்பை நிர்ணயிப்பதில் முக்கியம் வாய்ந்தது என்று ஃபிஷர் அவர்கள் கூறுகிறார். V',MV',T இவை யாவும் அதிக மாற்றமுறுவதில்லை. அப்படி மாறினாலும், குறுகிய கால அளவில் இவை மாறுவதில்லை. எனவே, விலைமட்டத்தில் (P-ல்) ஏற்படும் மாற்றத்திற்குப் பண அளவில் (M-ல்) ஏற்படும் மாற்றமே காரணமாகும் என்று முடிவு கட்டினார். விலைமட்டம், பண அளவில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்றாற்போல நேரிடையாகவும் அதே அளவிலும் மாறுதலடைகிறது; பணத்தின் மதிப்புப் பண அளவில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்றாற்போல அதே அளவில் எதிர்முகமாக மாறுதலடைகிறது என்பதுதான் அவருடைய முடிவின் சுருக்கம்.

**ஃபிஷர் கோட்பாட்டிலுள்ள குறைபாடுகள்**

ஃபிஷர் அவர்களின் கோட்பாடு பொருளாதார வல்லுநர் பலரின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கிறது. இக் கோட்பாட்டில் காணக்கிடக்கும் முக்கியமான குறைபாடுகளைக் கீழே காணலாம் :

(1) இக் கோட்பாட்டை விளக்க ஃபிஷர் தந்துள்ள சமன்பாடு புதிய உண்மை எதையும் அறிவிக்கவில்லை என்று கூறலாம். சமுதாயத்தை நுகர்வோர் (consumers), உற்பத்திச் செய்வோர் (producers) என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அப்படிப் பிரிக்கும்பொழுது, நுகர்வோர் அனைவரும் ஒரு கால அளவில் செய்யும் மொத்தச் செலவுத் தொகையானது, அவர்கள் வசம் இருக்கும் பண அளவைப் பணத்தின் சுழல் வேகத்தினால் பெருக்குவதால் கிடைக்கும் தொகைக்குச் சமமாக இருக்கும். உற்பத்தியாளர் நிலையிலிருந்து நோக்கினால், சமுதாயம் செய்யும் மொத்தச் செலவு பண்டங்களின் மொத்த அளவை அதன் விலையினால் பெருக்குவதற்குச் சமமாக இருக்கும். எனவே, MV என்பது

PT-க்குச் சமமாக இருந்துதான் ஆகவேண்டும். எனவே, இக் கோட்பாடு இருப்பதைத்தான் கூறுகிறதேயன்றிப் புதிய உண்மை எதையும் கூறவில்லை, எனலாம்.

(2) ஃபிஷருடைய கோட்பாடு பல பாவனைகளின் (assumptions) அடிப்படையில் அமைந்திருக்கிறது. இப் பாவனைகளில் ஒன்றுகூட உண்மையில்லை. பணத்தின் சுழல்வேகம் (V), பாங்கு பணத்தின் அளவு (M'), பாங்கு பணத்தின் சுழல்வேகம் (V'), பண்டங்களின் மொத்த அளவு (T) இவை யாவும் குறுகிய கால அளவில் மாற்றமுறுவதில்லை என்னும் பாவனைகளின் அடிப்படையில்தான் பண அளவு பெருகினால் பணத்தின் மதிப்பு குறையும், அளவு குறைந்தால் மதிப்பு உயரும் என்கிற முடிவை ஃபிஷர் அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார். ஆனால், உண்மையில் V, M', V', T இவை ஒவ்வொன்றும் மாறுந்தன்மையுடையவை. உதாரணமாக, T என்பது மக்கள்தொகை, உற்பத்தி முறை, உற்பத்தித் திறன் இவைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றாற்போல மாறுந் தன்மையுடையது.

(3) பண அளவில் ஏற்படும் மாற்றமும் பண மதிப்பில் ஏற்படும் மாற்றமும் ஒரே வீதத்தில் இருக்கும் என்று ஃபிஷர் வலியுறுத்திக் கூறுகிறார். அஃதாவது, பண அளவு 10 சதவீதம் உயர்ந்தால் பண மதிப்பும் 10 சதவீதம் குறையும் என்கிறார். இது உண்மைக்குப் புறம்பானது. ஏற்றுக்கொள்ள முடியாதது.

(4) பணப் பெருக்கக் காரணம், விலையேற்ற விளைவு என்று கூறுகிறார் ஃபிஷர். நன்றாகத் துருவிப் பார்த்தால், இவை இரண்டில் எது காரணம், எது விளைவு என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலையைக் காணலாம். சில சந்தர்ப்பங்களில் விலையேற்றம் பணப்பெருக்கத்திற்குக் காரணமாகக்கூட அமையலாம். உதாரணமாக, விலைமட்டம் உயர்ந்துவருவதாக வைத்துக்கொள்வோம். வணிகர்கள் மேலும் விலைமட்டம் உயரலாம் என்று எதிர் பார்த்தால், அதிக இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் பண்டங்களை அதிக அளவில் வாங்கித் தேக்கிவைக்க முனைவார்கள். இதற்காகத் தேவைப்படும் நிதியைக் கடனாகப் பெற பாங்குகளை நாடுவார்கள். பாங்குகளும் பணத்தைப் பெருக்கலாம். இப்படி அமைந்தால், விலையேற்றம் காரணம் என்பதையும், பணப்பெருக்கம் விளைவு என்பதையும் அறியலாம்.

(5) இவை அனைத்திலும் கீன்சு (Keynes) அவர்கள் கூறும் குற்றச்சாட்டுதான் மிகவும் முக்கியமானது. ஒரு நாடு 'வேலை நிறைவு' நிலையை (full employment) அடைந்த பிறகுதான் பணப்

பெருக்கம் விலையேற்றத்திற்குக் காரணமாக அமையும் என்கிறார் கீன்சு. நாடு அந்த நிலையை அடையும்வரை பணப்பெருக்கம் இருந்தால், நாட்டில் வேலையின்றிக் கிடக்கும் பொருளாதாரச் சாதனங்கள் (factors of production) வேலைக்கு அமர்த்தப்பெற்று, உற்பத்தி பெருகுமே ஒழிய விலைமட்டம் உயராது என்று அவர் கூறுகிறார்.

(6) பணப்பெருக்கத்தினால் விலையேற்றம் ஏற்படும் என்பது உண்மையானால், பொருளாதார மந்தத்தைத் தடுப்பது மிகவும் எளிதாகிவிடும். மந்த காலத்தில் விலைகள் சரிந்து அடிமட்டத்திற்கு வந்து விடுகின்றன. இதனால் சொல்லொணாப் பொருளாதார இன்னல்கள் ஏற்படுகின்றன. பண அளவுக் கோட்பாட்டின் கருத்து உண்மையானால், இத்தகைய நிலையைத் தடுப்பதற்கான எளிய வழி பணத்தின் அளவைப் பெருக்கவேண்டியதுதான். ஆனால், இம் முறையைக் கையாளுவதன் மூலம் நோக்கம் கைகூடாது என்பதைப் பொருளாதார வரலாறு தெளிவாகக் காட்டியிருக்கிறது.

**பணத்துறைச் சிக்கல்கள்—பண வீக்கமும் பண வாட்டமும் (Inflation and Deflation)**

பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கக்கூடிய ஒரு கருவிதான் பணம். பணம் இப் பணியைச் செவ்வனே செய்ய வேண்டுமானால் பணத்தின் மதிப்பு மாறாமல் நிலையாக இருக்க வேண்டும். துணியின் நீளத்தை அளக்க மீட்டர் கோலை ஒரு துணைக் கருவியாகப் பயன்படுத்துகிறோம். ஆனால், மீட்டர் கோலின் அளவு நிலையாக இல்லாமல் அவ்வப்போது மாறுதலடைந்தால் குழப்பம்தான் எஞ்சும். இதைப்போன்றே பணத்தின் மதிப்பும் அடிக்கடி மாறுதலுக்குட்பட நேரிட்டால் பொருளாதாரத் துறையில் பல இடையூறுகள் எழுகின்றன. பண மதிப்பில் ஏற்படும் மாற்றங்களையும், அவற்றின் காரணங்களையும், விளைவுகளையும் ஆராயலாம்.

**பணவீக்கம்** (Inflation): புழக்கத்திலிருக்கும் பண அளவு பெருக்கமடைந்து அதற்கு உகந்தாற்போல உற்பத்தியாகும் பண்டங்களின் அளவில் பெருக்கமில்லாவிட்டால், விலைமட்டம் உயர நேரிடும்; பண மதிப்புக் குறையும். இத்தகைய ஒரு நிலையைப் பணவீக்கம் என்று அழைக்கலாம். மிகுந்த அளவு பணம் குறைந்த அளவு பண்டங்களைத் துரத்திச் செல்லும் நிலை ஏற்படும் (too much money chases too few goods). விலை

மட்டம் அவ்வப்போது உயர்ந்துகொண்டே செல்லும் நிலையைத் தான் பணவீக்கம் என்றழைக்கிறோம். பணவீக்கத்திற்கான இத்தகைய ஓர் இலக்கணம் 'பண அளவுக் கோட்பாட்டை' அடிப்படையாகக்கொண்டது. வேறு பல கோட்பாடுகளை அடிப் படையாகக்கொண்டு பணவீக்கத்திற்கு விளக்கம் தரலாம். எந்த முறையில் விளக்கினாலும், விலையேற்றம் பணவீக்கத்தின் தவிர்க்க முடியாத இயல்பு என்பதை அறியலாம்.

## பணவாட்டம் (Deflation)

பணவீக்கத்திற்கு நேர்மாறான நிலை பணவாட்டம். விலை யேற்றம் எப்படிப் பணவீக்கத்திற்கு ஓர் அறிகுறியோ அதே போன்று விலைச்சரிவு பணவாட்டத்தின் அறிகுறியாகும். பொது வான விலைமட்டம் குறைவதால் பணத்தினுடைய மதிப்பு உயரும். பணவீக்கம், பணவாட்டம் இவை இரண்டையும் கூர்ந்து நோக்கும்பொழுது, பணவாட்டக் காலத்தில் பண்டங்களின் விலை மட்டம் குறைந்து பணத்தின் வாங்குந் திறன் (purchasing power) உயர்வதால் பணவீக்கத்தைவிடப் பணவாட்டம் விரும்பத்தக்கது என்று எண்ணத் தோன்றும். ஆனால், இந்த எண்ணம் சரியான தன்று. பொது நோக்கோடு ஆராய்ந்தால் பணவீக்கத்தைவிடப் பணவாட்டம் கேடுடையது என்பது புலப்படும். பணவீக்க காலத்தில் விலைமட்டம் ஏற்றமடைவதால் பொருளாதார நட வடிக்கைகள் சுறுசுறுப்பாக நடைபெறும். உற்பத்தியாளர் களுக்கும் வணிகர்களுக்கும் அதிக விலை என்றால் அதிக இலாபம் என்று பொருள். இலாபத்தினையே குறிக்கோளாகக்கொண்ட இவர்கள் நிகர இலாபத்தை மேலும் பெருக்குவதற்காகத் தங்க ளுடைய நடவடிக்கைகளைப் பரவலடையச் செய்யவும் வளர்க்கவும் தலைப்படுவர்; எனவே, மொத்த உற்பத்தி பெருகும்; பொருளா தாரச் சாதனங்களுக்கு (factors of production) வேலை வாய்ப்பு களும் அதிகரிக்கும். பணவாட்ட காலத்தில் இதற்கு மாறான நிலை ஏற்படும். விலைமட்டம் இறங்குவதால் உற்பத்தியாளர்களும் வணிகர்களும் நட்டத்திற்கு உள்ளாவார்கள். எனவே, பண வாட்டம் அவர்களுடைய ஊக்கத்தைக் குறைக்கும். அவர்களும், நட்டத்தைத் தவிர்ப்பதற்காகத் தங்களுடைய நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளத் தொடங்குவார்கள். உற்பத்தி குறையும்; வேலையின்மை பெருகும். எனவே, ஒரு நாடு அல்லது சமுதாயம் அனைத்தையும் மனத்தில் கொண்டு பார்த்தால், பணவீக்கத்தி லுள்ள கேடுகளைவிடப் பணவாட்டத்தில் உள்ள கேடுகள் அதிகம் எனலாம். இதனால் பணவீக்கம் விரும்பத்தக்கது என்று பொருளன்று.

**பணவீக்கம் எதனுல் எழுகிறது ?**

மக்களின் அன்ருட வாழ்க்கையில் பலப்பல பண்டங்கள், பலவகையான பண்டங்கள் தேவைப்படுகின்றன. உணவுப் பண்டங்கள், குடியிருப்பு வசதிகள், உடைவகைகள், இன்ன பிற எத்தனேயோ பண்டங்கள் நுகர்வுக்காகத் (consumption) தேவைப் படுகின்றன. இவ்வாறு எழும் மொத்தத் தேவைக்கு எதிராகப் போதுமான அளவுக்குப் பண்டங்களின் மொத்த உற்பத்தியும் அளிப்பும் (supply) இருந்தால், பண்டங்களுக்கான மொத்தத் தேவையும் பண்டங்களின் மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று ஈடாகச் சமநிலேயில் இருக்கும். இந்த நிலேயில் விலேமாற்றம் ஏற்படவேண்டிய அவசியமில்லே. பணத்தின் மதிப்பும் மாருது. எக் காரணத்தைக்கொண்டும் இச் சமநிலேயில் ஏற்படும் ஒவ் வொரு மாற்றமும் விலே மாற்றத்திற்கும் பணத்தின் மதிப்பு மாற்றத் திற்கும் காரணமாக அமையும். தேவைநிலே மாருது இருந்து அளிப்புநிலே மாறுபட்டாலோ அல்லது அளிப்புநிலே மாருமல் தேவைநிலே மாறுபட்டாலோ அல்லது அளிப்புநிலே, தேவைநிலே இரண்டுமே வெவ்வேறு வீதங்களில் மாறுபட்டாலோ விலே மட்டத்தில் மாற்றம் ஏற்படும். இதனேக் கருத்தில்கொண்டு பணவீக்கத்தின் காரணங்கள் யாவை என்று காணலாம்.

(1) போர்க்காலத்திலும் போர் முடிந்தவுடனேயும் பண வீக்கத்தைக் காணலாம். ஒரு நாடு போரில் ஈடுபடும்பொழுது போர்ச்செலவு பெருகுகிறது. பகைவனே முறியடிப்பதே நோக்க மாகவும் மூச்சாகவும் ஆகிவிடுவதால், போர்ச்செலவைச் சமாளிக்க அரசாங்கம் எல்லா வழிகளேயும் கையாளத் தயங்குவதில்லே. அரசாங்கத்தின் செலவுத் தொகை பெருக்கமடைவதால் நாட்டில் பண்டங்களுக்கான தேவையும் பெருக்கமடைகிறது. போர்ச் செலவு உற்பத்தியாக்கச் செலவாகையால் (unproductive expenditure) பண்டங்களின் உற்பத்தியும் அளிப்பும் பெருகுவதில்லே. நுகர்வுப் பண்டங்களே உற்பத்தி செய்வதற்குப் பயன்பட்டுவந்த பொருளாதாரச் சாதனங்கள் போர்க் காலத்தில் போர்க் கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, தேவை அளிப்பைவிடப் பெருக்கமடைந்து விலேயேற்றத்திற்குக் காரண மாகிறது. போர்க்காலத்தைவிடப் போர் முடிந்தவுடன் விலே யேற்றம் அதிகமாக இருக்கும்.

(2) பொருளாதாரத் திட்டத்தைக் கையாளும் நாட்டிலும் பணவீக்கம் ஏற்படும். திட்டத்தை நிறைவேற்றப் பெருமளவில் அரசாங்கம் முதலீடு செய்கிறது. அரசாங்கத்தின் ஆண்டுச் செலவுத் தொகை பெருகுவதால் நாட்டில் பணப் புழக்கமும்

பெருகும். மக்களுடைய பணவருவாயும் அதிகரிக்கும். எனவே, நுகர்வுப் பண்டங்களுக்கான தேவையும் பெருக்கமடையும். அரசாங்கம் செய்யும் செலவு விரையமாவதில்லை. அவை உற்பத்தி யாக்கும் செலவினத்தைச் (productive expenditure) சேர்ந்தவை தாம். ஆனால், அரசாங்கம் மேற்கொள்ளும் முதலீட்டினால் ஏற்படும் வருவாய்ப் பெருக்கத்திற்கும், முதலீட்டினால் ஏற்பட இருக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் சிறிது கால இடைவெளி ஏற்படுகிறது. இந்த இடைவெளிக் காலத்தில் பண்டங்களின் தேவைக்கு ஏற்ப அளிப்பு இல்லாததால் பணவீக்கம் உண்டாகும். இரண்டு இலட்சம் ஏக்கர் புதிய நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக் கக்கூடிய ஒரு நீர்த்திட்டத்தை 20 கோடி ரூபாய் செலவில் கட்ட அரசாங்கம் முனைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அரசாங்கம் செலவிடத் தொடங்கியவுடனேயே பணப் புழக்கம் பெருகி, வருவாய் பெருகி அந்த அளவுக்குத் (அல்லது அதற்கு மேலுங்கூட) தேவையும் பெருக்கமடைகிறது. ஆனால், நீர்த்திட்டம் கட்டி முடிந்து, நிலம் திருத்திப் பாசனத்திற்கு வந்ததற்குப் பிறகுதான் உணவு உற்பத்தி பெருகும். இவ்வாறு பொருளாதாரத் திட்ட நாடுகளில் மக்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கும், நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் கால இடைவெளி இருப்பதால் பண வீக்கம் ஏற்படுகிறது.

(3) அரசாங்கத்தின் வரவு—செலவுத் திட்டத்தில் பற்றுக் குறை எழுந்தால் விலையேற்றம் ஏற்படும். வருவாயைவிட அதிக மாக அரசாங்கம் செலவு செய்தால், பணப் புழக்கம் பெருகி மக்களின் வருவாயும் பெருகும்; இதனால் தேவையும் பெருக்க மடையும். உற்பத்தியும் அளிப்பும் அந்த அளவுக்குப் பெருக்க மடையாவிட்டால் நாட்டில் பணவீக்கம் ஏற்படும்.

**பணவீக்கத்தைத் தடுக்கும் வழிகள்**

பண வீக்கம் பல பொருளாதார இன்னல்களுக்குக் காரண மாகிறது. பொருளாதார நிலையில் கீழ்மட்டத்தில் உள்ளவர்களைப் (கூலியீட்டுவோர், நிலையான வருமானம் உள்ளவர்கள்) பெரிதும் வருத்துகிறது. மற்றும் சில வகுப்பினருக்கு உழைப்பின்றிப் பெரு மளவில் ஊதியம் கிடைக்கச் செய்கிறது. இதனால் மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மேலும் வளர்கின்றன. விலைமட்டம் ஏற்றமடையத் தொடங்கினால் மேலும் மேலும் விரை வாக உயர்ந்து அமித வீக்கத்தில் (hyper-inflation) போய் முடியும். நாளுக்கு நாள் பணத்தினுடைய மதிப்புத் தேய்ந்து கொண்டே வருமாதலால், நாளாவட்டத்தில் மக்கள் பணத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழப்பார்கள். மக்கள்

பணத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நிலைகூட ஏற்படும். பண வீக்கத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால், முடிவில் சமூகப் புரட்சி, அரசியல் எழுச்சி இவற்றிற்கு வித்திட்டதாகிவிடும். எனவே, பணவீக்கத்தைத் தடுக்கவேண்டியது மிகமிக அவசியமாகிறது.

மொத்தத் தேவை, மொத்த அளிப்பு இவை இரண்டின் சமன் பாட்டு நிலையில் ஏற்படும் மாறுதல்களால் பணவீக்கம் ஏற்படுகிறது என்று கண்டோம். எனவே, பணவீக்கத்தைத் தடுக்கத் தேவை யைக் குறைத்தோ அல்லது அளிப்பைப் பெருக்கியோ இரண்டும் சமன்பாட்டு நிலையை அடையும்படி செய்யவேண்டும். இந் நோக்கத்தோடு அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய வழிதுறைகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: (1) நிதியியல் நடவடிக்கைகள், (2) பணவியல் நடவடிக்கைகள், (3) வாணிப நடவடிக்கைகள், (4) நேரிடை நடவடிக்கைகள்.

**நிதியியல் நடவடிக்கை:** மக்களிடம் வாங்கும் சக்தி அதிக மாக இருப்பதால்தான் தேவைப் பெருக்கம் ஏற்படுகிறது. மக்களிடம் இருக்கும் அளிப்புக்கு மீறிய வாங்கும் சக்தியை அரசாங்கம் புதிய வரிகள் விதித்து எடுத்துக்கொண்டுவிட்டால், நாட்டிலுள்ள மொத்தத் தேவை குறையும். அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை உபரி இருக்கும் வழியில் தீட்டவேண்டும்.

**பணவியல் நடவடிக்கைகள்:** விலையேற்றக் காலத்தில் தொழிலதிபர்களும் வணிகர்களும் இலாபமடைவார்கள். தங்க ளுடைய இலாபத்தை மேலும் பெருக்கிக்கொள்ளும் ஆசையில் முன்பின் யோசியாது பாங்கிகளிடமிருந்து கடன் வாங்கித் தொழிலை யும் வாணிபத்தையும் பெருக்கத் துணிவார்கள். பண்டங்களைப் பதுக்கிவைத்து, ஊகவாணிபத்தில் (speculation) துணிச்சலாக ஈடுபடுவார்கள். இத்தகைய செயல்கள் விலைமட்டம் மேலும் ஏற்றமடையச் செய்கின்றன. இவற்றைத் தடுப்பதற்காக வணிக பாங்குகள் (Commercial Banks) அதிக அளவில் கடன் கொடுப்பதைத் தடுத்துக் குறைக்கும்படியான நடவடிக்கைகளை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மைய பாங்கு (Central Bank) மேற்கொள்ளவேண்டும்.

**வாணிப நடவடிக்கைகள்:** இங்கு வாணிப நடவடிக்கைகள் என்பன அயல் நாட்டு வாணிபத்தைச் சார்ந்தனவாகும். அளிப் பைவிடத் தேவை அதிகமாக இருப்பதால் பணவீக்கம் ஏற்படு கிறது. அளிப்பைப் பெருக்க அயல் நாட்டு வாணிபத் துறையைக்

கையாளலாம். உள்நாட்டு உற்பத்தி — ஏற்றுமதி + இறக்குமதி இதுதான் நாட்டின் நிகர அளிப்பு. பண்டங்களின் இறக்குமதியை விட ஏற்றுமதி அதிகமாக இருந்தால் நிகர அளிப்பு குறையும். ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக இருந்தால் நிகர அளிப்பு அதிகமாக இருக்கும். இதன் மூலம் பண வீக்கம் குறையும். இத்தகைய நடவடிக்கைகளை இந்தியா போன்ற நாடு கையாளும் நிலையில் இல்லை; கையாளவும் கூடாது.

**நேரிடை நடவடிக்கைகள் :** விலையேற்றத்தைத் தடுப்பதற் காக அரசாங்கம் சில நேரிடை நடவடிக்கைகளையும் மேற் கொள்ளலாம். இன்றியமையாத பண்டங்களுக்கு (உணவுப் பண்டங்கள், உடை வகைகள்) நியாயமான விலையை நிர்ணயித்து அதைவிட அதிக விலையில் விற்பது சட்டத்திற்கு விரோதமானது என்று சட்டமியற்றலாம். அளிப்பு குறைவாக உள்ள பண்டங்களை எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதற்காகப் பங்கீட்டு முறையை (rationing) அமலுக்குக் கொண்டுவரலாம்?

மேற்கூறிய வழிகள் யாவும் சக்தி வாய்ந்தவை என்றுலும்கூட, இவை விலைமட்டம் மேலும் ஏற்றமுருமல் தடுக்கப் பயன்படுமே யன்றிப் பணவீக்கத்தை முற்றிலும் போக்கக்கூடியனவல்ல. பண வீக்கத்தை நிரந்தரமாகப் போக்கவேண்டுமானுல், நாட்டில் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கி அளிப்பைப் பெருக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

**இந்தியாவில் பணவீக்கம்**

திட்ட காலத்தில் இந்தியாவில் விலையேற்றம் ஏற்பட்டிருக் கிறது. பொருளாதாரத் திட்டத்தை மேற்கொள்ளும் நாட்டில் ஓரளவுக்குப் பணவீக்கம் தவிர்க்க முடியாதது என்று பொதுப் படையாக மேலே கூறினேம். அதே கண்ணேட்டத்தில் கடந்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள விலை மாற்றத்தைக் கண்டறிவோம்.

**இந்தியாவில் விலைமட்டத்தின் போக்கு**

**1952-53 = 100**

| | | | |
|---|---|---|---|
| 1950—51 | 111.8 | 1962—63 | 127.9 |
| 1955—56 | 92.5 | 1963—64 | 135.3 |
| 1960—61 | 124.9 | 1964—65 | 152.7 |
| 1961—62 | 125.1 | | |

1952-53ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டால், 1950—51ஆம் ஆண்டு தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் விலைமட்டம் ஏறத்தாழ 45 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று அறிகிறோம். அஃதாவது, ஆண்டுச் சராசரி 3 சதவீதம். இது ஒரு கட்டுக்கடங்காத பணவீக்கமா? பொது நோக்கோடு பதில் கூறவேண்டுமானால் இல்லை என்றுதான் கூற வேண்டும். அண்மைக் காலத்தில் பொருளாதார வளர்ச்சியடைந்துவரும் சில நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியாவில் விலையேற்றம் குறைவாகத்தான் இருக்கிறது. பிரேசில் நாட்டில் ஆண்டுச் சராசரி விலையேற்றம் 40 சதவீதம், அர்ஜென்டினாவில் 30 சதவீதம், மெக்சிகோவில் 8 சதவீதம். இருந்தாலும் கடந்த இரண்டாண்டுக் காலமாக விலையேற்றம் சற்று விரைவாக இருப்பதால், விலை மட்டம் இனியும் ஏற்றமுறாமல் இருக்கவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று முடிவாகக் கூறலாம்.

**விலை மாற்றத்தின் விளைவுகள்** (Effects of changes in prices)

விலை மாற்றம் (ஏற்றம், இறக்கம் இரண்டும்) சமுதாயத்தின் எல்லா வகுப்பினரையும், எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் ஒரே வகையில் பாதிப்பதில்லை. விலையேற்றத்தால் பயனடைபவர்களும் உண்டு; தீங்குறுபவர்களும் உண்டு. இதே போன்றதுதான் விலை இறக்கம். விலை மாற்றத்தின் விளைவுகளை இனிக் காணலாம்.

முதலில் உற்பத்தி (production), வேலைமட்டம் (employment level) போன்ற பொருளாதார நடவடிக்கைகளை விலை மாற்றம் எங்ஙனம் பாதிக்கிறது என்று காண்போம்.

**உற்பத்தி:** நாட்டின் மொத்த உற்பத்தி விலையேற்றக் காலத்தில் பெருகும்; விலை யிறக்கக் காலத்தில் குறையும். உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் உற்பத்தியைப் பெருக்க விரும்புவார்களா அல்லது குறைத்துக்கொள்ள விரும்புவார்களா என்பது அவர்கள் அடைய இருக்கும் இலாபநட்டத்தைச் சார்ந்தது. விலையேற்ற காலத்தில் இலாபம் அதிகமாக இருக்கும். எனவே, இலாபத்தினை மேலும் மேலும் பெருக்கும் நோக்கத்துடன் உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கத்தோடு முனைவார்கள். விலையிறக்கக் காலத்தில் இவர்கள் நட்டத்திற்குள்ளாவார்கள். ஆதலால், நட்டத்தைத் தவிர்ப்பதற்காகத் தங்களுடைய தொழில் நடவடிக்கைகளைச் சுருக்கிக்கொள்ளுவார்கள். உற்பத்தியின் அளவும் குறையும்.

**வேலைமட்டம்:** அதேபோன்று விலையேற்றக் காலத்தில் வேலை மட்டம் உயரும்; இறக்கக் காலத்தில் மட்டம் குறையும். பண்டங் களின் உற்பத்தி பெருகவேண்டுமானால், அப் பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய சாதனங்களும் (factors) அதிக அளவில் வேலைக்கு அமர்த்தப்பெறவேண்டும். எனவே, உற்பத்தி பெருகும் பொழுது பொருளாதாரச் சாதனங்களின் வேலை மட்டமும் உயரும்.

சமூகத்தின் பொருளாதார அமைப்பில் மக்களைக் கூலியீட்டு வோர், நிலையான வருவாய் உள்ளவர்கள், வணிக வகுப்பினர், விவசாய வகுப்பினர் என்று பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவ் வகுப்பினர்களை விலைமாற்றம் எவ்வாறு பாதிக்கிறது என்று காணலாம்.

(1) **கடன் கொடுப்போர், கடனாளிகள் :** விலையேற்றக் காலத்தில் கடனாளிகள் இலாபமடைகின்றார்கள். கடன் கொடுத் தவர்கள் நட்டத்திற்கு உள்ளாகிறார்கள். இதற்கு நேர்மாறாக விலை இறக்கக் காலத்தில் கடன் கொடுத்தவர்கள் இலாபமடைகிறார்கள்; கடனாளிகள் நட்டமடைகிறார்கள். ஒருவன் 1950ஆம் ஆண்டில் 1000 ரூபாம் பணத்தைக் கடனாகக் கொடுத்து, 1965-ல் வட்டியும் முதலுமாக திரும்பப் பெற்றால் நட்டத்திற்குள்ளாவான். இடைக் காலத்தில் ஏற்பட்ட விலையேற்றத்தால் அவன் திரும்பப்பெறும் 1000 ரூபாயின் உண்மையான மதிப்பு 500 ரூபாயாகத்தான் இருக்கும்.

(2) **வணிக வகுப்பினர் :** தொழில், வாணிபம் இவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் விலையேற்றக் காலத்தில் இலாபமடைவார்கள்; விலை இறக்கக் காலத்தில் நட்டத்திற்குள்ளாவார்கள். இதனை விளக்கிக்கூறவேண்டிய அவசியமில்லை.

(3) **கூலியீட்டுவோரும், நிலையான வருவாய் உள்ளவர் களும்** (Wage-earners and fixed income group people): விலையேற்றக் காலத்தில் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் இவ் வகுப் பினரே. பண்டங்களின் விலைகள் ஏற்றமுறும் அளவுக்கு இவர் களுடைய ஊதியம் உயர்வதில்லை. இதனால் அவர்களுடைய மெய்வருமானம் (real income) குறைந்துவிடுகிறது. கூலிக்கும் விலைக்கும் உள்ள தொடர்பினைக் 'கூலிகள் எப்பொழுதும் விலை களுக்குப் பின்தங்கியே செல்கின்றன' (Wages always tend to lag behind prices) என்று கூறுவர். விலை இறக்கக் காலத்தில் இவர்கள் பயனடைவார்கள்.

(4) **விவசாய வகுப்பினர்:** இவ் வகுப்பினர் விலையேற்றக் காலத்தில் பயனடைகிருர்கள். இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, உணவுப் பண்டங்களின் விலை உயர்வதால் விவசாயிகளுடைய வருவாய் பெருக்கமடைகிறது. மேலும், விவசாயிகளில் (இந்தியா போன்ற நாட்டில்) பெரும்பாலோர் கடனாளிகளாக இருப்பதால், விலையேற்றக் காலத்தில் நல்ல பயனடைகிருர்கள்; விலை இறக்கக் காலத்தில் பெருத்த இன்னலுக்கு ஆளாகிருர்கள்.

# 15. பணத் திட்டங்கள்
## (Monetary standards)

**விளக்கம்**

ஒரு நாட்டில் பணமுறை (monetary system) எதை அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கிறது என்று குறிப்பிடுவது தான் பணத் திட்டம் என்பதாகும். பலவித உலோகங்களைப் பணமாக உபயோகிக்கத் தொடங்கிய காலம் முதற்கொண்டு ஒவ்வொரு நாட்டின் பொளாதார நிலைக்கும் ஏற்றவாறு பலவகையான பணத் திட்டங்கள் நடைமுறையில் இருந்துவந்திருக்கின்றன. பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுக் காலத்தில் உலகின் எல்லா நாடுகளிலும் வெள்ளியே பெரும்பான்மையும் பணத்திற் குரிய உலோகமாக இருந்துவந்தது. இங்கிலாந்துதான் முதன் முதலாக 1816ஆம் ஆண்டில் பொன்னை அடிப்படையாகக் கொண்ட பணமுறையைக் கையாண்டது. அதைத் தொடர்ந்து பிற நாடுகளும் இத் திட்டத்தைக் கையாளத் தொடங்கின. அண்மைக் காலம்வரை மூன்று முக்கியப் பணத் திட்டங்கள் நடைமுறையில் இருந்துவந்தன. அவையாவன: (1) தனி உலோகத் திட்டம் (Mono-metallism); (2) இரண்டு உலோகத் திட்டம் (Bi-metallism); (3) காகிதத் திட்டம் (Paper currency standard).

**தனி உலோகத் திட்டம்** (Mono-metallism)

ஏதேனும் ஓர் உலோகத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் பணமுறை அமைந்தால், அதற்குத் தனி உலோகத் திட்டம் என்று பெயர். வெள்ளியினை அடிப் படையாகக்கொண்ட ஒரு திட்டத்தை 'வெள்ளித் திட்டம்' என்றும், பொன்னை அடிப்படையாகக்கொண்ட ஒரு திட்டத்தைப் 'பொன் திட்டம்' என்றும் கூறுவர். 1835ஆம் ஆண்டுக்கும் 1893ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் இந்தியா வெள்ளியை அடிப்படையாகக் கொண்ட தனி உலோகத் திட்டத்தைக் கையாண்டது.

தனி உலோகத் திட்டத்தில் பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. பணமுறை அமைப்பு ஓர் உலோகத்தைமட்டும் சார்ந்திருப்பதால் இது ஓர் எளிமையான திட்டம். இரண்டு உலோகத் திட்டத்தில் காணக்கிடக்கும் வெவ்வேறு உலோக நாணயங்களின் மாற்று விகிதத்தை நிர்ணயிப்பதில் எழும் பிரச்சினைகள் இதில் கிடையா. பொன்னை அடிப்படையாகக்கொண்ட தனி உலோகத் திட்டம் இன்னும் சிறப்பு வாய்ந்தது. பொன் உள்நாட்டிலன்றி உலகெங்கும் மதிப்புடையது. மேலும், பொன் கைவசம் இருந்தாலொழியப் பணவெளியீட்டைப் பெருக்குவது இயலாத செயலாகையால், அரசு தனது இச்சைக்குகந்தபடி யதேச்சாதிகாரமாக அதிக அளவில் பணத்தை வெளியிடுவதை இத் திட்டம் தடுக்கிறது. பண வெளியீட்டுப் பெருக்கத்தினால் எழக்கூடிய விலைமாற்றமும் இதனால் தடுக்கப்பெறும்.

## இரண்டு உலோகத் திட்டம் (Bi-metallism)

இரண்டு உலோகங்களால் ஆகிய இருவகை நாணயங்கள் ஒரே காலத்தில் புழக்கத்தில் இருந்தால், அத்தகைய முறைக்கு இரண்டு உலோகத் திட்டம் என்று பெயர். பெரும்பாலும் பொன்னும் வெள்ளியுமே இவ்விரண்டு உலோகங்களாக இருந்துவந்தன. இருவகை நாணயங்களும் எல்லையற்ற அளவுக்குச் சட்டச் செலாவணியாக (legal tender currency) வழக்கில் இருக்கும். பொன் நாணயங்களையும் வெள்ளி நாணயங்களையும் எந்த விகிதத்தில் மாற்றிக்கொள்வது என்பதை அரசாங்கம் சட்டரீதியான முறையில் நிர்ணயிக்கும். மக்கள் எந்த உலோகத்தைக் கொண்டுவந்தாலும் அரசாங்கம் கட்டணமின்றிப் பணமாக அச்சடித்துக் கொடுக்கும். பண்டங்களை விற்றல், வாங்கல், கடன் கொடுத்தல், கடன் அடைத்தல் போன்ற எல்லா நடவடிக்கைகளையும் எந்த நாணயத்தில் வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம். இவையே இரண்டு உலோகத் திட்டத்தின் முக்கிய இயல்புகள் ஆகும்.

1803ஆம் ஆண்டில் ஃபிரான்சு இத் திட்டத்தைக் கையாண்டது. அதைத் தொடர்ந்து 19ஆம் நூற்றுண்டில் மற்றும் பல நாடுகளும் அத் திட்டத்தைப் பின்பற்றின. ஐக்கிய அமெரிக்காவில் 1871ஆம் ஆண்டுவாக்கில் புதிய வெள்ளிச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பெற்றன. இதனால் வெள்ளி உற்பத்தி பெருக்கமடைந்தது. அதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்கா, ஜெர்மனி போன்ற சில நாடுகள் வெள்ளித் திட்டத்தைக் கைவிட்டுப் பொன் திட்டத்தைக் கையாளத் தொடங்கியதால், வெள்ளிக்கு இருந்த தேவையும் குறைந்தது. இவ்விரு காரணங்களாலும்

வெள்ளியின் மதிப்பு வீழ்ந்தது. பொன்னைவிட மதிப்புக் குறைந்த வெள்ளி நாணயங்களுடன் பொன் நாணயங்களும் உலவிய பொழுது, சாதாரணமாக மக்கள் மதிப்பு உயர்ந்த பொற் காசுகளை விரும்பிப் பெற்று அவற்றை மறுபடியும் வெளிவராமல் பதுக்கத் தலைப்பட்டனர். இதுபோன்ற பிரச்சினைகள் காரணமாக இரண்டு உலோகத் திட்டத்தை 1900 ஆம் ஆண்டுவாக்கில் ஏறக் குறைய எல்லா நாடுகளும் கைவிட்டன.

## இரண்டு உலோகத் திட்டத்தில் உள்ள சிறப்பியல்புகள்

(1) இரண்டு உலோகத் திட்டத்தை ஆதரிப்பவர்கள், இத் திட்டத்தின்கீழ்ப் பணத்தின் மதிப்பும் பண்டங்களின் விலை மட்டமும் மாறுதலடையாமல் ஒரே நிலையில் இருக்கும் என்று கருதுகிறார்கள். நாணய வெளியீடு நாட்டிலுள்ள உலோக அளிப்பைப் (supply) பொறுத்திருக்கிறது. உலோக அளிப்பு மாற்றமடைந்தால் நாணய வெளியீடும் மாறும். இரண்டு உலோ கத் திட்டத்தில் நாணய வெளியீடு பொன், வெள்ளி இவ்விரண்டு உலோகங்களின் மொத்த அளிப்பைச் சார்ந்திருப்பதால், ஓர் உலோக அளிப்பில் ஏற்படக்கூடிய மாற்றம் மற்றொன்றுக்கு ஈடு செய்து மொத்த அளிப்பு அதிக அளவில் மாறாமல் கூடுமான வரை நிலையாக இருக்கும் என்பதுதான் இந்த வாதத்தின் உட்கருத்து.

(2) இரண்டு உலோகத் திட்டத்தைக் கடைப்பிடிக்கும் நாட்டில் அந்நியச் செலாவணி மாற்று விகிதம் (Foreign exchange rate) மாறாமல் நிலையாக இருக்கும் என்று கருதப்பெறுகிறது. பிற நாடுகள் பொன் அல்லது வெள்ளியை அடிப்படையாகக் கொண்ட தனி உலோகத் திட்டத்தைக் கையாண்டாலும்கூட, இரண்டு உலோகத் திட்ட நாட்டுக்கு எந்தவிதத் தீமையும் ஏற்படாது. இருவகைத் திட்ட நாடுகளிடையே நிலவும் அந்நியச் செலாவணி மாற்று விகிதம் பொன், வெள்ளி இவ் விரண்டு உலோகங்களின் தராதர மதிப்பைச் (பொன்னின் வெள்ளி மதிப்பையும், வெள்ளியின் பொன் மதிப்பையும்) சார்ந்திருக்கும். இரண்டு உலோகத் திட்டத்தைக் கையாளும் நாட்டில் இரண்டு உலோகங்களின் மாற்று விகிதம் நிர்ணயிக்கப்பெறுவதால், அந் நாட்டின் அந்நியச் செலாவணி மாற்று வீதமும் நிர்ணயிக்கப் பெற்று நிலையாக இருக்கும் என்பதுதான் கருத்து.

(3) இரண்டு உலோகத் திட்டத்தில் உலோகப் பற்றுக்குறை எழவேண்டிய அவசியமில்லை. ஓர் உலோகத்தின் அளிப்புக் குறைய நேரிட்டால் மற்றோர் உலோகம் அதற்கு ஈடுசெய்யலாம்.

தனி உலோகத் திட்டத்தில் உலோகப் பற்ருக்குறை எழுந்தால், பணப்புழக்கம் குறைந்து, விலைமட்டம் சரிந்து, பொருளாதார மந்தத்தில் (depression) போய் முடியும். உதாரணமாக, எல்லா நாடுகளும் பொன் திட்டத்தைக் கையாளத் தொடங்கினுல் பொன் பற்ருக்குறை ஏற்படும். இதனுல் பல பொருளாதாரப் பிரச்சினை களும் தலைதூக்கும். இதைத் தவிர்ப்பதற்குப் பொன்னேடு வெள்ளியையும் பயன்படுத்துவதுதான் சிறந்த வழியாகும்.

**இரண்டு உலோகத் திட்டத்தின் குறைபாடுகள்**

இரண்டு உலோகத் திட்டத்தின் செயற்பாட்டில் பல குறை பாடுகளும் இருக்கின்றன.

(1) முதலாவதாக, நாட்டில் பண வெளியீடும் விலை மட்டமும் ஏறக்குறைய நிலையாக இருக்கும் என்று இத் திட்டத் திற்கு ஆதரவாகக் கூறப்படும் வாதம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஏனெனில், ஓர் உலோக அளிப்பில் ஏற்படக்கூடிய பெருக்கத்திற்கும் பற்ருக்குறைக்கும் மற்ருேர் உலோகம் ஈடு செய்யும் என்பது உறுதி இல்லை. ஒருவேளை அத்தகைய பொருத்தம் தற்செயலாக வேண்டுமானுல் அமையலாம்.

(2) இரண்டாவதாக, உலகின் எல்லா நாடுகளும் இத் திட்டத்தைக் கையாண்டால் அன்றி இத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்பட முடியாது. ஒரு நாடுமட்டும் இத் திட்டத்தையும், மற்றைய நாடுகள் பொன் திட்டத்தையும் கையாண்டுவருவதாக வைத்துக்கொள்வோம். இரண்டு உலோக நாட்டில் மட்டும்தான் பொன், வெள்ளி உலோகங்களின் மாற்று விகிதம் நிர்ணயிக்கப் பெற்றிருக்கும். மற்ற நாடுகளில் நிலையான மாற்று விகிதம் இருக்காது. இத்தகைய சூழ்நிலையில் இரண்டு உலோகத் திட்ட நாட்டில் மாற்று வீதம் மற்ற நாடுகளைவிட உயர்ந்த மட்டத்திலோ அல்லது குறைந்த மட்டத்திலோ நிலைக்கக்கூடும். அப்படி நிலைத்தால், இரண்டு உலோகங்களிடையே உள்நாட்டில் ஒரு மாற்று விகிதமும், அயல் நாடுகளில் ஒரு மாற்று விகிதமும் நிலவும். இதனுல் இரண்டு உலோகத் திட்டத்தின்கீழ் உள்ள நாடு தன் வசம் உள்ள பொன், வெள்ளி இரண்டில் ஒன்றை முற்றிலும் இழக்க நேரிடும்.

(3) இத் திட்டத்தில் மற்ருெரு பெருங் குறைபாடு இருக் கிறது. இத் திட்டத்தைக் கையாளும் நாட்டில் பொன், வெள்ளி இவ் விரண்டு உலோகங்களின் மாற்று விகிதமும் சட்ட ரீதியான முறையில் நிர்ணயிக்கப்பெறும் என்று மேலே கண்டோம்.

எக் காலத்திற்கும் பொருத்தமாக அமையக்கூடிய முறையில் மாற்று விகிதத்தை நிர்ணயிப்பது இயலாத செயலாகும். ஒவ்வோர் உலோகத்தின் மதிப்பும் அதன் அளிப்புக்கும் தேவைக்கும் ஏற்றவாறு அவ்வப்போது மாறுதலுடையுமாதலால், இரண்டு உலோகங்களின் மாற்று மதிப்பும் மாறுதலடையச் செய்யும். பதினாறு அவுன்சு வெள்ளி ஓர் அவுன்சு பொன்னுக்குச் சமன் என்று அரசாங்கம் விதித்திருப்பதாக வைத்துக்கொள்வோம். சூழ்நிலை மாற்றத்தால் வெள்ளியின் அளிப்புக் குறைந்து சந்தையில் பதினைந்து அவுன்சு வெள்ளிக்கே ஓர் அவுன்சு பொன் கிடைக்குமானால், பொன் உலோகம் புழக்கத்திலிருந்தே மறைந்து விடும். ஏனெனில், ஒருவன் சந்தையில் 15 வெள்ளிக் காசுகளைக் கொடுத்து ஒரு பொற்காசைப் பெற்று, அரசாங்க நாணய சாலைக்குச் சென்று ஒரு பொற்காசைக் கொடுத்து 16 வெள்ளிக் காசுகளைப் பெற்று இலாபமடையலாம். எனவே, அரசாங்கம் பொன்னின் மதிப்பை உயர்ந்த மட்டத்தில் நிர்ணயித்திருந்தால், பொன்னும் வெள்ளியை உயர்ந்த மட்டத்தில் நிர்ணயித்திருந்தால், வெள்ளி புழக்கத்திலிருந்து முற்றிலும் மறைந்துவிட்டிருக்கும். இதை கிரஷாம் விதி (Gresham's Law) என்று கூறுவர்.

(4) இத் திட்டத்தில் உள்ள மற்றொரு குறைபாடு, அரசாங்கம் நிர்ணயித்த மாற்று விகிதத்திற்கும் சந்தையில் அவ்வப்போது நிலவும் மாற்று விகிதத்திற்கும் வேறுபாடு இருக்குமானால் குழப்பமும் சிக்கலும் மிகும். அரசாங்கம் நிர்ணயித்த மாற்று விகிதத்தில் பொன்னின் மதிப்பு உயர்வாக இருந்தால் ஒரு கடனாளி பொன்னைக் கொடுத்துக் கடனை அடைக்க விரும்புவான். கடன் கொடுத்தவன் கடன் தொகையை வெள்ளியாகக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்துவான். இதனால் குழப்ப நிலை ஏற்படும்.

மேற்கூறிய காரணங்களால் இரண்டு உலோகத் திட்டம் திறம்படச் செயற்பட முடியாது என்பதை அறியலாம். சென்ற நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இத் திட்டம் வழக்கிலிருந்து மறைந்ததற்கு இத் திட்டத்தில் இருந்த பெருங் குறைபாடுகளே காரணமாகும்.

# 16. பொன் திட்டம்

## (Gold Standard)

**தோற்றம்**

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இரு உலோகத் திட்டம் பரவலாக அமுலில் இருந்துவந்தது. ஆனால், அந் நூற்றுண்டின் இடைக்காலத்தில் நாடுகளின் செலாவணி முறையில் பெருத்த குழப்பம் ஏற்பட்டது. இரு உலோகத் திட்டத்தில் உள்ள பெருங் குறைபாடுகள் காரணமாக அது இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது. போரும் புரட்சியும் மலிந்த இந் நூற்றுண்டின் இடைக்காலத்தில் ஐரோப்பாவில் பல நாடுகள் காகிதச் செலாவணியை வெளியிடத் தொடங்கின. தூரக்கிழக்கு நாடுகள் வெள்ளித் திட்டத்தையே கடைப்பிடித்துவந்தன. இவ்வாறு பல்வேறு அடிப்படையில் அமைந்த பணத் திட்டங்கள் பன்னாட்டு வாணிபச் சீர்குலைவுக்கும், அந்நியச் செலாவணி மாற்று விகிதநிலை மாற்றத்திற்கும் காரண மாக அமைந்தன. இத்தகைய சூழ்நிலையில் பிறந்ததுதான் பொன் திட்டம். முதன்முதலாகப் பொன் திட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த நாடு ஜெர்மனியாகும். பொன் திட்டத்திற்கு ஏதுவாக ஜெர்மனி பெருமளவில் வெள்ளியை விற்றுப் பொன்னை வாங்கத் தலைப்பட்டது. இதனால் உலகச் சந்தையில் பொன்னுக்குப் பற்றுக்குறை எழுந்ததோடு வெள்ளியின் விலையும் கீழிறங்கத் தொடங்கியது. இரு உலோகத் திட்ட நாடுகளில் பொற்காசுகள் புழக்கத்திலிருந்து மறையத் தொடங்கின. இவ்வாறு எழுந்த இன்னலைத் தடுப்பதற்காக ஜெர்மனி நாட்டைப் பின்பற்றி ஹாலந்து, சுவீடன், நார்வே, டென்மார்க், ஃபிரான்சு, ருஷ்யா ஆகிய எல்லா நாடுகளும் பொன் திட்டத்தைக் கையாளத் தொடங்கின. இவ்வாருகப் பத்தொன் பதாம் நூற்றுண்டின் முடிவுக்குள் ஏறக்குறைய ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் உறுதியான முறையில் பொன் திட்டத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்தன. ஐக்கிய அமெரிக்காவும் 1900ஆம் ஆண்டில் பொன் திட்டச் சட்டம் ஒன்றை நிறைவேற்றிப் பொன் திட்டத்தை நிறுவியது.

**பொன் திட்டத்தின் விளக்கம் :** பொன்னை அடிப்படையாகக் கொண்ட ஒரு பணமுறை அமைப்பினைப் பொன் திட்டம் எனலாம். பொன்னுக்கு என்றும் நிலையான மதிப்பு இருப்பதால் பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கும் ஒரு கருவியாக (அஃதாவது, பணமாக) உபயோகிக்கும் தகுதியைப் பொன் பெற்றிருந்தது என்று மேலே கண்டோம். பொன் திட்டத்தைக் கையாளும் நாட்டில் அந் நாட்டுப் பணத்தின் பொன் மதிப்பை அரசாங்கம் நிர்ணயித்து அறிவிக்கும். உதாரணமாக, பொன் திட்டம் அமலில் இருந்த காலத்தில், இங்கிலாந்தில் ஒரு பவுன் (சவரன்) நாணயம் 113 குன்றிமணி சுத்த பொன்னுக்குச் சமம் என்றிருந்தது.

**பொன் திட்டத்தின் இயல்புகள் :** (1) பொன் திட்டத்தில் நிலையான எடையும் தூய்மையும்கொண்ட பொற்காசுகள் புழக்கத்தில் இருக்கும். காகிதச் செலாவணியும் குறைந்த மதிப்புள்ள அடையாள நாணயங்களும்கூட நடைமுறையில் இருக்கலாம். ஆனால், எல்லாவகை நாணயங்களுக்கும் பொன்மதிப்பு உண்டு. அவற்றை எப்பொழுதும் பொன்னாக மாற்றிக்கொள்ளலாம். (2) மக்கள் பொன்னைப் பணமாகவும், பணத்தைப் பொன்னாகவும் எல்லையற்ற அளவுக்கு வரையறையின்றிப் பண ஆட்சியாளரிடம் (அரசாங்கம் அல்லது மைய பாங்கு) மாற்றிக்கொள்ளலாம். அஃதாவது, கட்டணமின்றி நாணயம் அச்சடித்துக் கொடுக்கப் பெறும் (free coinage). (3) ஒவ்வொரு நாட்டிலும் பண ஆட்சியாளர்கள் குறிப்பிட்ட ஒரு விலையில் பொன்னை எந்த அளவிலும் வாங்கவும் விற்கவும் முன்வருவார்கள். (4) பொன் திட்டத்தைக் கடைப்பிடிக்கும் எல்லா நாடுகளும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பொன்னை ஏற்றுமதி செய்வதையும் இறக்குமதி செய்வதையும் தடையின்றி அனுமதிக்கும். இவையே பொன் திட்டத்தின் இயல்புகள் ஆகும்.

**பொன் திட்டத்தின் பணிகள் :** பொன் திட்டம் இரண்டு முக்கியப் பணிகளை நிறைவேற்றுகிறது. இரு பணிகளும் பணத்தின் மதிப்பை (value of money) நிலைப்படுத்துவதைச் சார்ந்திருக்கின்றன. பணத்திற்கு இரு மதிப்புகள் உண்டு. ஒன்று அதற்கு உள்நாட்டில் உள்ள மதிப்பு; மற்றது அதற்கு வெளிநாட்டிலுள்ள மதிப்பு. பணத்தின் இவ்விரு மதிப்புகளையும் பேணி நிலைப்படுத்துவதைப் பொன் திட்டம் நோக்கமாகக் கொண்டது. இப் பணிகளைக்கொண்டு உள்நாட்டுப் பொன் திட்டம் (Domestic gold standard) என்றும், பன்னாட்டுப் பொன் திட்டம் (International gold standard) என்றும் பொன் திட்டத்தை இருவகையாகக் கூறலாம்.

**உள்நாட்டுப் பொன் திட்டம்:** ஒரு நாட்டில் பணவெளியீடு அடிக்கடி மாறுதலுக்கு உட்பட்டால், பணவீக்கமும் (inflation) பணவாட்டமும் (deflation) அடிக்கடி தோன்றி விலைவாசிகள் மாற்றமுற்றுப் பொருளாதார நிலையில் குழப்பத்தை உண்டாக்கும். பெருவாரியான பணவீக்கத்தையும் பணவாட்டத்தையும் தவிர்க்க வேண்டுமாயின் பணவெளியீட்டை நிலைப்படுத்தவேண்டும். பண வெளியீட்டை அந் நாட்டின் பொன் அளிப்போடு (supply of gold) இணைத்துவிடுவதன்மூலம் இந் நோக்கம் கைகூடும். பொன் அளிப்பில் அதிக மாற்றமிருக்க இடமில்லையாதலால், பொன்திட்டம் ஒரு நாட்டின் பணவெளியீட்டினைக் கட்டுப்படுத்தும் ஒரு சிறந்த கருவியாகும் என்று கருதப்பெற்றது.

**பன்னாட்டுப் பொன் திட்டம்:** பொன் திட்டத்தைக் கையாளு வதன்மூலம் பன்னாட்டுத்துறையில் ஒரு நாட்டின் அந்நியச் செலாவணியின் மாற்று விகிதமும் நிலையாக இருக்கும். பொன் திட்டம் வெற்றிகரமாக செயலாற்றிவந்த காலத்தில் (1914ஆம் ஆண்டுவரை) அது இப் பணியைச் செவ்வனே செய்து வந்தது. அக் காலத்தில் அயல்நாட்டு வாணிபம் மிகவும் முக்கியத் துவம் பெற்றிருந்தது. அயல்நாட்டு வாணிபம் செழித்து வளர அந்நியச் செலாவணி மாற்று விகிதம் நிலையாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறவேவண்டிய அவசியமில்லை.

இத் துறையில் பொன் திட்டம் எங்ஙனம் இயங்கிவந்தது என்பதை அறியலாம். பொன் திட்டம் ஆட்சியிலிருக்கும் ஒவ் வொரு நாட்டிலும் அந் நாட்டுப் பணத்தின் பொன் மதிப்பு நிலையான முறையில் நிர்ணயிக்கப்பெறுவதாலும், நாடுகளிடையே பொன்னைத் தடையின்றி ஏற்றுமதி-இறக்குமதி செய்யலாமாகை யாலும் பொன் ஒரு பன்னாட்டுப் பண்டமாக ஆகிவிடுகிறது. பொன் திட்டத்தைக் கையாண்ட இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா இரு நாடுகளையும் எடுத்துக்கொள்வோம்.

இங்கிலாந்தில் ஒரு பவுன் நாணயம் 113 குன்றிமணி எடையுள்ள பொன்னுக்குச் சமனாக இருந்தது. அமெரிக்காவில் ஏறத்தாழ 5 டாலர் பணம் அதே எடைப் பொன்னுக்குச் சமனாக இருந்தது. பொன் ஒரு பன்னாட்டுப் பண்டத்தின் தகுதியையும் செல்வாக்கினையும் பெற்றிருந்தது என்று கண் டோம். ஒரு குறிப்பிட்ட அளவு பொன் இங்கிலாந்தில் ஒரு பவுனுக்கும் அமெரிக்காவில் ஐந்து டாலருக்கும் ஈடாகும் என்றால், பவுன், டாலர் நாணயங்களின் மாற்று விகிதம் £ 1 = $ 5 என்று அமையும் என்பதை அறியலாம். இவ்விரு நாடுக

ளிடையே உள்ள அந்நியச் செலாவணி மாற்று விகிதம் இந்த மட்டத்திலிருந்து மாறுபட முடியாது. அப்படி மாறுபட்டாலும், மிகக் குறைந்த அளவுக்குத்தான் (பொன்னை அயல்நாட்டுக்கு அனுப்பி அதை அயல்நாட்டுப் பணமாக மாற்றுவதற்கு ஆகக் கூடிய செலவின் அளவுக்கு) மாறுபடும். உதாரணமாக, வாணிப ஏற்றஇறக்கங்களால் அமெரிக்க டாலருக்குத் தேவை பெருக்க மடைகிறது என்று வைத்துக்கொள்வோம். இதனால் டாலரின் பவுன் மதிப்பு உயரும்; பவுன் நாணயத்தின் டாலர் மதிப்புக் குறையும். தேவை அளிப்பில் இருக்கும் மாற்றங்களால் அந்நியச் செலாவணிச் சந்தையில் 1 £ = $ 4 என்ற விகிதத்தில்தான் டாலர் கிடைக்கிறது என்றும் வைத்துக்கொள்வோம். அமெரிக்காவி லிருந்து பண்டங்களை இறக்குமதி செய்யும் ஓர் ஆங்கில வணிகன் மேற்கண்ட உயர்ந்த விகிதத்தில் டாலர் நாணயத்தைப் பெற வேண்டிய அவசியமில்லை. சந்தையில் வாங்கினால் ஒரு பவுனுக்கு நான்கு டாலர்தாம் கிடைக்கும். ஆனால், இங்கிலாந்திலுள்ள நாணயசாலைக்குச் சென்று ஒரு பவுன் நாணயத்தைக் கொடுத்து 113 குன்றிமணி எடையுள்ள பொற்கட்டியைப் பெற்று அதை அமெரிக்காவுக்கு அனுப்பி அங்குள்ள நாணய சாலையில் அதை டாலர் நணயத்திற்கு மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்தால், அவனுக்கு ஐந்து டாலர் கிடைக்கும். இங்கிலாந்திலுள்ள இறக்குமதியாளர்கள் பலரும் இவ் வழியைக் கையாள முனைந்தால் (இது இலாபகரமாக இருப்பதால் எல்லோரும் கட்டாயம் முனை வார்கள்), பொன் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி யாகும். இங்கிலாந்தில் பொன் அளிப்புக் குறையும்; அமெரிக்கா வில் பெருகும். பொன் திட்டத்தில் நாணய வெளியீடு பொன் அளிப்பைச் சார்ந்திருப்பதால், இங்கிலாந்தில் பணவெளியீடு சுருங்கும்; விலைவாசிகள் வீழ்ச்சியுறும். நேர்மாறாக அமெரிக்கா வில் பணவெளியீடு பெருகும்; விலைவாசிகள் உயரும். இரு நாடுகளிடையேயும் விலை மட்டம் மாற்றமடைவதால், இங்கி லாந்திலுள்ள குறைந்த விலையுள்ள பண்டங்களுக்கு அமெரிக்கத் தேவை வளரும். அமெரிக்கப் பண்டங்களின் விலைமட்டம் உயர்வாக இருப்பதால், அவைகளுக்கு இங்கிலாந்தில் இருந்த தேவை குறையும். இங்கிலாந்திலிருந்து பண்டங்களின் ஏற்றுமதி பெருக்கமடையும்; இதனால் இங்கிலாந்தின் பவுன் நாணயத் திற்கு இருக்கும் தேவையும் பெருக்கமடையும். தொடக்கநிலையில் டாலர். நாணயத்துக்கு எழுந்த தேவைப் பெருக்கத்தினால் ஏற்பட இருந்த டாலர் - பவுன் நாணய மாற்று விகித மாறு பாட்டினை இவ் விளைவுகள் தடுக்கும். எனவே, பொன் திட்டம் ஆட்சியிலிருக்கும் நாடுகளிடையே நாணய மாற்று விகிதத்தில் ஏற்றத்தாழ்வுகள் நிகழா. அப்படி நிகழ்ந்தாலும், ஏற்றத்

தாழ்வுகள் குறைந்த அளவில்தான் இருக்கும். குறைந்த அளவு ஏற்றத்தாழ்வுகளும் கூடிய விரைவில் நாடுகளிடையே நிகழும் பொன் ஏற்றுமதி இறக்குமதியின்மூலம் தவிர்க்கப்பெற்றுப் பழைய, நிலையான (£ 1 = $ 5) மட்டம் மீட்சியுற்று நிலக்கும்.

**பொன் திட்டத்தின் விதிகள்** (Rules of the Gold Standard): மேலே நாம் விவரித்த பொன்திட்டத்தைத் 'தன்னால் இயங்கும் பொன் திட்டம்' (automatic gold standard) என்று கூறுவர். காரணம், இத் திட்டம் தானாக இயங்கிவந்தது. நடுநிலையில் நின்று யாரும் இத் திட்டத்தை இயக்க முனையவில்லை. இயக்குநர் இல்லாத இத் திட்டம் சிறப்பான முறையிலும் வெற்றிகர மாகவும் இயங்கவேண்டுமானால், பங்குபெறும் ஒவ்வொரு நாடும் சில முக்கிய விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பொன் திட்டத்தின் செயல்திறன் பொன்திட்ட நாடுகள் இவ் விதிகளைத் தவறாது அனுசரிப்பதைப் பொறுத்துதான் இருக்கிறது. இவ்விதி களைப் பொன்திட்டத்தின் பொன் விதிகள் என்றுகூடக் கூறலாம்.

(1) முதலாவதாக, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பொன் பெயர்ந்து செல்வதில் எள்ளளவு தடையும் இருக்கக் கூடாது. (2) இரண்டாவதாக, ஒரு நாட்டின் பொன் இருப்பில் ஏற் படும் மாற்றங்களுக்கு ஏற்றாற்போல் அந் நாட்டின் பணவெளி யீடும் மாறவேண்டும். அஃதாவது, ஒரு நாடு பிறிதொரு நாட்டி லிருந்து பொன்னைப் பெற நேரிட்டால், உடனடியாக அந்த அளவுக்குப் பணவெளியீட்டையும் பெருக்கத் தயாராக இருக்க வேண்டும். இதேபோன்று பொன்னை இழக்கும் நாடும் பண வெளியீட்டைக் குறைக்கவும் தயங்கக்கூடாது. (3) மூன்றாவதாக, ஒவ்வொரு நாட்டின் மைய பாங்கும் (Central Bank) பொன் திட்டம் எளிதில் இயங்குவதற்கு இணக்கமான ஒரு கொள்கையைப் பின்பற்றிவரவேண்டும். மைய பாங்கு நிர்ணயிக்கும் வட்டிக் கட்டணம் (Bank rate), புறச்சந்தை நடவடிக்கைகள் (Open market operations), இத் துறைகளில் மைய பாங்கு அனுசரிக்கும் கொள்கை ஆகியன பொன் திட்டத்தின் செயற்பாட்டுக்கு முரண் பாடாக இருக்கக்கூடாது.

**பொன் திட்ட வகைகள்** (Different Forms of Gold Standard): சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில் தோன்றிய பொன் திட்டம் முதல் உலகப் போர் மூண்டவரை சிறந்த முறையில் இயங்கிவந்தது. போர்க் காலத்தில் பொன் திட்டம் கைவிடப் பெற்றது. போர்மேகம் மறைந்ததும், செலாவணி முறையில் எழும் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கும், அந்நியச் செலாவணி

மாற்று விகிதத்தை நிலைப்படுத்துவதற்கும் பொன் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவருவது மிக்க அவசியம் என்று பல நாடுகள் உணர்ந்தன. பொன் திட்டத்தைத் தோற்றுவிப்பதற்கான சீரிய முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், மீட்கப்பெற்ற பொன் திட்டம் போர்க்காலத்திற்கு முன்னர் இயங்கிவந்த திட்டத்தினின்றும் பெரிதும் மாறுபட்டிருந்தது. மீண்ட திட்டமும் நீடித்து நிலைக்கவில்லை. பல காரணங்களால் (காரணங்களைக் கீழே காணலாம்) நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பொன் திட்டத்திலிருந்து விலகின. இங்கிலாந்து 1931ஆம் ஆண்டில் பொன் திட்டத்திலிருந்து நீங்கியது. ஐக்கிய அமெரிக்கா 1933ஆம் ஆண்டிலும் ஃபிரான்சு 1936ஆம் ஆண்டிலும் விலகிக்கொண்டன. அத்துடன் பொன்திட்டமும் ஒரு பழங்கதையாகி, கனவாகிவிட்டது. இவ்வாறு 1936ஆம் ஆண்டுவரை இயங்கிவந்த பொன் திட்டத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன: (1) பொன் நாணயத் திட்டம் (Gold Currency Standard); (2) பொற்கட்டித் திட்டம் (Gold Bullion Standard); (3) பொன் மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard).

**பொன் நாணயத் திட்டம்:** 1914ஆம் ஆண்டுவரை இயங்கிவந்த பொன் திட்டத்திற்குப் 'பொன் நாணயத் திட்டம்' என்று பெயர். இத் திட்டத்தில் தூய பொன்னால் ஆகிய நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. எனவே, இத் திட்டத்தில் பணத்தின் இரு பணிகளாகிய பண்டங்களின் தராதர மதிப்பை அளக்கும் கருவியாகவும், பொருளாதார நடவடிக்கைகளின் ஒரு இடையீட்டுக் கருவியாகவும் பொன் பணிசெய்தது. பொன், பணம் இரண்டையும் ஒன்றுக்கொன்று யாரும் எந்த அளவில் வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம். அதேபோன்று எந்த அளவில் வேண்டுமானாலும் பொன்னை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யலாம்; இறக்குமதி செய்யலாம். இத் திட்டத்தில் நாட்டிலுள்ள பொன் இருப்புக்கும் பணவெளியீட்டின் அளவுக்கும் நேரிடையான, நெருங்கிய தொடர்பு இருந்தது. பொன் கைவசம் இருந்தால்தான் பண வெளியீட்டைப் பெருக்க முடியும். 1914ஆம் ஆண்டில் போர் மூண்டதும், போரில் ஈடுபட்ட நாடுகள் போர்ச்செலவுக்காகப் பண வெளியீட்டைப் பெருக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயின. பொன் நாணயத் திட்டம் இதற்கு இடங்கொடுக்காது. எனவே, முதலில் இங்கிலாந்தும், அதைத் தொடர்ந்து பிற நாடுகளும் இத் திட்டத்தைக் கைவிட்டன.

**பொற்கட்டித் திட்டம்:** போர் முடிந்ததும் பொன் திட்டம் மீட்கப்பெற்றதாக மேலே கண்டோம். அவ்வாறு மீட்கப் பெற்ற திட்டத்தின் ஒரு வகைதான் பொற்கட்டித் திட்டம். பொற் கட்டித் திட்டம் மூன்று வகைகளில் பொன் நாணயத் திட்டத் திலிருந்து மாறுபட்டிருந்தது. முதலாவதாக, பொற்காசு களுக்குப் பதிலாகக் காகிதப் பணம் புழக்கத்திற்கு வந்தது. இது ஒரு முக்கிய மாற்றம். தன்னுல் இயங்கும் தன்மையை மீட்சி யுற்ற பொற்கட்டித் திட்டம்இழந்ததற்கு இம் மாற்றம் ஒரு முக்கியக் காரணமாகும். இரண்டாவதாக, கட்டணமின்றி நாணயம் அச்சடித்துக் கொடுக்கும் வழக்கம் கைவிடப்பெற்றது. மூன்ருவ தாக, புழக்கத்தில் இருக்கும் காகிதப் பணத்தையும் மற்ற நாணயங்களேயும் (அடையாள நாணயங்கள்) கொடுத்துப் பொன்ஞக மாற்றிக்கொள்ள வேண்டுமாஞல், ஒரு குறிப்பிட்ட பெருந்தொகைக்கு மேற்பட்டதைத்தான் மாற்றிக்கொள்ளமுடியும். உதாரணமாக, இங்கிலாந்தின் மையபாங்காகிய ‘பாங்க் ஆஃப் இங்கிலாந்து’, 400 அவுன்சு எடையுள்ள பாளங்களாகப் பொன்னே விற்க முன்வருவதாக அறிவித்தது. அதுவும் நடை முறையில், அயல் நாடுகளுக்குச் செலுத்துகள் (Payments) செய்ய வேண்டியிருந்தால்தான் பொன்னேப் பெறமுடியும். இத் திட்டம் இந்தியாவில் 1927-க்கும் 1931-க்கும் இடைக்காலத்தில் ஆட்சி யில் இருந்தது.

**பொன் மாற்றுத் திட்டம்:** போருக்குப் பின்னர் மீட்கப் பெற்ற பொன் திட்டத்தின் மற்ருெருவகைதான் பொன் மாற்றுத் திட்டம். பொன் திட்டத்தை மீண்டும் நிறுவும் நோக்கத்துடன் 1920-ல் பிரஸ்ஸல்சிலும் 1922-ல் ஜெனீவாவிலும் பன்ஞட்டு மாநாடு கூட்டிப் பணவியல் நிபுணர்கள் பலரும் கலந்து ஆலோசித்தனர். எல்லா நாடுகளும் பொன்திட்டத்தைக் கையாளத் தலேப்பட்டால் பொன் பற்ருக்குறை எழும் என்று அவர்கள் கருதினர். போர்க் காலத்தில் எழுந்த சூழ்நிலேயின் விளேவால் உலகின் மொத்தப் பொன் இருப்பில் பெருமளவும் ஐக்கிய அமெரிக்காவிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. எனவே, பொன்னேச் சிக்கனப்படுத்தும் நோக்கத்துடன் எளிய நிலேயில் இருந்த நாடுகளும் சிறு நாடுகளும் பொன் பரிமாற்றுத் திட் டத்தைக் கையாளுவது நல்லது என்று அவர்கள் கருத்து அறிவித்தனர். இதன் விளேவால் தோன்றியதுதான் பொன் பரிமாற்றுத் திட்டம். பொன் பரிமாற்றுத் திட்ட நாடுகளில் காகிதச் செலாவணியைப் பொன்ஞக மாற்றிக்கொள்ள முடியாது. ஆஞல், அந் நாட்டுச் செலாவணியைப் பொன் திட்டத்தைக் கையாளும் மற்ருெரு நாட்டினுடைய செலாவணிக்கு மாற்றிக்

கொள்ளலாம். இவ்வாறு மாற்றிக் கொடுப்பதற்கு ஏதுவாக அந் நாடுகள் பிறநாட்டு நகரங்களில் (லண்டன் போன்ற) பெருமளவுக்கு அன்னியச் செலாவணியைக் காப்பாக (Reserve) வைத்திருக்கும்.

இத் திட்டம் இந்தியாவில் ஆட்சியில் இருந்தது. இந்திய ரூபாய்க்கு எதிராகப் பொன்னை மாற்றிக்கொள்ள முடியாது. ரூபாய் நாணயம் இங்கிலாந்தின் நாணயமான ஸ்டெர்லிங்குடன் இணைக்கப்பெற்றிருந்ததால் ரூபாயைக் கொடுத்து ஸ்டெர்லிங் நாணயத்தைப் பெறலாம்; இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கையாண்டுவந்ததால் ஸ்டெர்லிங் நாணயத்தைக் கொடுத்துப் பொன்னைப் பெறலாம். இவ்வாறு பொன் பரிமாற்றுத் திட்டத்தின் கீழ்ப் பொன்னையும் பணத்தையும் ஒன்றுக்கொன்று நேரிடையாக மாற்றிக்கொள்ள இயலாது. ஆனால், பொன் திட்டத்தின்கீழ் இருக்கும் மற்றொரு பணத்தின் வாயிலாக மாற்றிக்கொள்ளலாம்.

**பொன் திட்டம் முறிந்ததன் காரணங்கள்**

மீட்கப்பெற்ற பொன் திட்டம் நீடித்து நிலைக்கவில்லை என்று கண்டோம். நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகத் திட்டத்திலிருந்து விலகிக்கொண்டன. 1936ஆம் ஆண்டோடு பொன் திட்டம் முற்றிலும் மறைந்தேவிட்டது. இவ்வாறு பொன் திட்டம் முறிந்து, மறைந்ததற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

(1) நாடுகளின் பொருளாதாரக் கொள்கையிலும் நோக்கத்திலும் ஏற்பட்ட மாறுதலை முதற் காரணமாகக் கூறலாம். சென்ற நூற்றாண்டிலும், இந் நூற்றாண்டில் 1914ஆம் ஆண்டுவரையிலும் அயல்நாட்டு வாணிபம் ஒரு முக்கிய அங்கம் வகித்தது. மற்றப் பொருளாதார நோக்கங்களெல்லாம் அதற்கு அடுத்த கட்டமாகத்தான் கருதப்பெற்றன. வாணிபச் செழிப்புக்கு நிலையான அந்நியச் செலாவணி மாற்று விகிதம் அமைவது மிகவும் அவசியம். இந் நோக்கம் கைகூடுவதற்காக எல்லா நாடுகளும் பொன் திட்டத்தின் விதிகளைப் பிறழாது பின்பற்றிவந்தன. ஆனால், 1930 தொடங்கிய பத்தாண்டுக் காலத்தில் கிளைத்த மாபெரும் பொருளாதார மந்தம், நாடுகளின் பொருளாதாரக் கொள்கையையே மாற்றியமைத்துவிட்டது. மந்தத்தைத் தவிர்ப்பதையும், விலைச்சரிவைத் தடுப்பதையும், வேலை மட்டத்தை உயர்த்துவதையுமே பெருங் குறிக்கோள்களாக நாடுகள் மேற்கொள்ளத் தொடங்கின. இவற்றைப் பேணுவதற்கான கொள்கையும் நடிவடிக்கைகளும் பொன் திட்டத்தின் விதிகளுக்கு முரண்பாடானவை. எனவே, பொன் திட்டம் இயங்க முடியவில்லை.

(2) பொன்னைப் பெறும் நாடு பணவெளியீட்டைப் பெருக்கவும், பொன்னை இழக்கும் நாடு பணவெளியீட்டைச் சுருக்கவும் தயாராக இருக்கவேண்டும் என்று கண்டோம். ஆனால், முதல் உலகப் போருக்குப் பிந்திய காலத்தில் பல நாடுகளும் இவ் விதியைப் பின்பற்றத் தவறின. இதனால் பொன் திட்டம் இயங்க முடியவில்லை.

(3) மீட்கப்பெற்ற பொன் திட்டத்தில் ஒவ்வொரு நாடும் அதனதன் செலாவணியின் பொன் மதிப்பை நிர்ணயிக்க வேண்டியிருந்தது. அப்படி நிர்ணயிக்கும்பொழுது பல நாடுகள் தங்களுடைய செலாவணியின் பொன் மதிப்பை உயர்மட்டத்தில் நிர்ணயித்தன. உதாரணமாக, இங்கிலாந்தின் பவுன் நாணயம் மிகையாக மதிப்பிடப்பெற்றது.

(4) முதல் உலகப் போர் முடிந்ததும் ஜெர்மனி போர் இழப்பீடு செலுத்தவேண்டியிருந்தது. இதைப் பொன்னாகச் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. மேலும், போர்க்காலத்தில் கடன்பட்ட நாடுகளை விரைவில் கடனை அடைக்கும்படி அமெரிக்கா வற்புறுத்தியது. இந் நடவடிக்கைகளின் விளைவால் அந்நியச் செலாவணிச் சந்தையில் கட்டுக்கடங்காத் தேவைப் பெருக்கம் ஏற்பட்டது. பொன் திட்டம் இயங்குவதற்கு இத் தகைய சூழ்நிலை இடையூறாக இருந்தது.

(5) முதல் உலகப் போர்வரை உலகில் தடையிலா வாணிபம் **(Free trade)** நிலவிவந்தது. பொன் திட்டம் திறம்படச் செயலாற்றுவதற்கு இது உறுதுணையாக இருந்தது. ஆனால், பிற்காலத்தில் குறிப்பாக 1930ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ்வொரு நாடும் அயல்நாட்டு வாணிபத்தில் தலையிட்டுப் பல தடைகளையும் விதிக்கத் தொடங்கின.

(6) பொன் பரிமாற்றத் திட்ட நாடுகளும் புதிய பிரச்சினைகளை உண்டாக்கின. இத்தகைய பல நாடுகளுக்கு இங்கிலாந்து ஓர் இணைப்பு நாடாக இருந்தது. பல நாடுகளும் லண்டனில் காப்பு நிதியை வைத்திருந்தன. ஆனால், அந் நாடுகள் ஒரே காலத்தில் காப்பு நிதியிலிருந்து செலாவணியை எடுக்க நேரிட்டதால், இங்கிலாந்தினால் அந்த நிலையைச் சமாளிக்க முடியவில்லை.

**பொன் திட்டத்தின் சிறப்புகள்**

பொன் திட்டத்தில் பல சிறப்புகள் இருப்பதைக் காணலாம். (1) பொன் ஒன்றுதான் உலகெங்கிலும் மதிப்புள்ள ஒரு பண்டம். எனவே, பொன் இருப்பை அடிப்படையாகக்கொண்டு ஒரு செலாவணியை எல்லா நாட்டினரும் தயக்கமின்றி ஏற்றுக்கொள்ளுவர். மேலும், பொன் திட்டம் நாட்டின் விலைமட்டத்தையும் நிலையாக்க உதவுகிறது. செலாவணி வெளியீடு பொன் இருப்புடன் இணைக்கப் பெற்றிருப்பதால், நாட்டில் பணவீக்கமும் பணச்சுருக்கமும் அதிக அளவில் ஏற்பட நியாயமில்லை. (2) பொன் திட்டம் அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தை நிலைப்படுத்தி அயல் நாட்டு வாணிபம் செழித்து வளர உதவுகிறது. (3) பொன் திட்டம் எளிதானதொன்று என்பதோடு தன்னால் இயங்கும் தன்மையுமுடையது. ஒரு நாட்டில் அயல்நாட்டு வாணிபநிலை பாதகமாக இருந்தால் (adverse balance of trade), பிந்திய ஆண்டில் இந்த நிலை தானாகவே மறைந்து சாதக வாணிபநிலை தோன்றும். பாதக வாணிபநிலை உள்ள நாட்டிலிருந்து பொன் வெளியேறி, பண வெளியீடு குறைந்து, விலைவாசிகளும் வாட்டமுறும். இதன் காரணமாக அந் நாட்டிலிருந்து பண்டங்களின் ஏற்றுமதி பெருகும்; இறக்குமதி குறையும். (4) எதேச்சாதிகார அரசாங்கங்கள் தம்மிச்சைப்படி பணத்தை வெளியிடுவதைப் பொன் திட்டம் தடுக்கும் என்று கருதலாம்.

**பொன் திட்டத்தில் காணும் குறைபாடுகள்**

(1) பொன் திட்டம் அந்நியச் செலாவணி மாற்று விகிதத்தை நிலைப்படுத்துகிறது என்றாலும், இதைப் பெறுவதற்காக உள் நாட்டுப் பொருளாதார நிலையில் ஒவ்வொரு நாடும் பலவற்றைத் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. பொன் திட்டத்தைக் கையாளும் நாடுகள் தங்களுக்குகந்த உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையைத் தம்மிச்சைப்படி கையாள முடியாது. உள் நாட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் பொன் திட்டத்தின் விதிகளுக்கு முரண்படுமாகையால், நாடுகள் உள்துறையில் பல நோக்கங்களை விட்டுக்கொடுக்கவேண்டும். பொன் திட்டம் முறிந்ததற்கு இத்தகைய முரண்பாடே முக்கியக் காரணமாகும். (2) ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பு சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறும் தன்மையுடையதாக இருந்தாலன்றிப் பொன் திட்டம் சிறப்பாகச் செயற்பட முடியாது. முதல் உலகப் போருக்கு முன்னர் பொன் திட்டம் சீரிய முறையில் பணியாற்றிவந்ததற்கு இயற்கையால் அமைந்த சந்தர்ப்ப சூழ்நிலையே காரணமாகும். (3) பொன்

திட்டம் நடைமுறையில் இருந்தபொழுது நாடுகளிடையே பொன் ஏற்றுமதியும் இறக்குமதியும் அடிக்கடி நிகழ்ந்ததால், பொன் இருப்பை அடிப்படையாகக் கொண்ட பண வெளியீட்டின் அளவும் அடிக்கடி மாற்றமுற்றன. ஒரு நாட்டில் ஏற்படும் பண வீக்கமும் பணவாட்டமும் மற்ற நாடுகளுக்கு எளிதில் பரவின. (4) பொன்னை இழக்கும் நாடு கட்டாயம் பணவெளிவீட்டைச் சுருக்கியாக வேண்டும். ஆனால், பொன்னைப் பெறும் நாடு பண வெளியீட்டைப் பெருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நடைமுறையில் பல நாடுகளும் இக் கொள்கையைத்தான் கையாண்டன.

# 17. கடன்

## (Credit)

**விளக்கம் :** பண்டங்களை விற்றல் வாங்கல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதற்குப் பணம் ஒரு துணைக் கருவியாக இருக்கிறது. பணம் ஈடுபடாமல்கூட ஒரு நடவடிக்கை நடந்தேறலாம். நாம் ஒரு பண்டத்தைக் கடனுக்கு வாங்கலாம், கடனுக்கும் விற்கலாம். இவ்வாறு, பணம் இடையிடாமல் ஒரு பொருளாதார நடவடிக்கையை மேற்கொள்வதற்குத் துணையாக இருக்கும் கருவியைக் 'கடன்' (credit) என்று விளக்கலாம். உடனுக்குடனே பணத்தைச் செலுத்தி ஒரு பண்டத்தை வாங்கினால் அந் நடவடிக்கை பண நடவடிக்கையாகிறது (cash transaction). மாறாக, சில மாதங்கள் கழித்துப் பணத்தைச் செலுத்துவதாக உறுதியளித்து ஒரு பண்டத்தை வாங்கினால் அது கடன் நடவடிக்கையாகிறது (credit transaction). ஒரு கடன் நடவடிக்கை நடந்தேறுவதற்கு அடிப்படைத் தேவை நம்பிக்கை அல்லது நாணயம். நாணயமுள்ள ஒருவர் வார்த்தை மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ உறுதி கூறுவதன் மூலமாகப் பெருமளவுக்குப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இன்றைய நிலையில் கடன் நடவடிக்கைகள் மிகவும் பரவலாக மேற்கொள்ளப்பெறுகின்றன. அமெரிக்காவின் சில்லறை வாணிபத்தில் ஏறக்குறைய 60 சத வீதமும், மொத்த வாணிபத்தில் 90 சத வீதத்திற்குக் குறையாமலும் கடன்மூலமாகவே நடக்கின்றன. இதிலிருந்து கடன் நடவடிக்கைகளின் வளர்ச்சியை எளிதில் அறியலாம். கடன் நடவடிக்கைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பொருளாதார நிலையில் வளர்ச்சியடைந்த நாடுகளில் கடன் நடவடிக்கைகளும் பரவலாக இருக்கும்.

**கடனால் எழும் நன்மை தீமைகள் :** வாணிப வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் கடன் பெருந்துணையாக இருக்கிறது. எல்லா நடவடிக்கைகளும் பண மூலமாகவே நடக்கவேண்டு மென்று இருந்தால் ஒரு நாட்டில் வாணிப அளவும், தொழில் உற்பத்தியின் அளவும் மிகக் குறைவாகவே இருக்கும். நாணயமும் திறமையும் உள்ளவர்களிடம் மூலதனம் இல்லாவிட்டாலும்கூட அவர்கள் வாணிபத்தை மேற்கொள்வதற்கும் தொழிலைத் தொடங்கு வதற்கும் கடன் உதவியாக இருக்கிறது. பேரளவுத் தொழில் உற்பத்தியில் (large-scale production) பல அனுகூலங்கள் இருக் கின்றன. வெளிப்பாடு (output) அதிக அளவில் இருக்கிறது; உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிறது; பண்டங்களும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இவ்வளவு பயன்களுக்குக் காரணமாக இருக்கும் பேரளவுத் தொழில்களைக் கடன்முறை வழக்கில் இல்லாவிட்டால் மேற்கொள்ள முடியாது. நாட்டின் ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்துக்குப் பணத்தைக் குறைந்த செலவில் விரைவாக அனுப்பி வைப்பதற்குக் கடன் கருவிகள் (credit instruments) பெரிதும் துணை செய்கின்றன. பன்னாட்டு வாணிபத்துறையில் இன்று கடன் இன்றியமையாததாகிவிட்டது. 'வாணிப உண்டியல்' (Bill of Exchange) என்றழைக்கப்பெறும் கடன் கருவி மூலமாகத்தான் இன்று நாடுகளிடையே பண்டங்கள் ஏற்றுமதியும் இறக்குமதியுமாகின்றன. கடன்முறை வழக்கத்தில் இருக்கும்பொழுது பணம் செய்யும் பணியைக் கடன் செய்கிறது. எனவே, கடன் பணத்திற்கு ஒரு பதிலியாக (substitute) இயங்கி வருகிறது. இதனால் கடன்முறையைப் பரவலாகக் கையாளுவதன் மூலம் விலையுயர்ந்த பொன், வெள்ளி உலோகங்களை ஒரு நாடு சிக்கனப்படுத்தலாம்.

உடல் உரத்திற்குப் பால் நல்லதுதான். ஆனால், அளவுக்கு மிஞ்சினால் ஆபத்தாக முடியும். இதைப்போன்றதுதான் கடனும். அளவோடு இருந்தால் கடன் நன்மை பயக்கும். அளவுக்கு மீறினால் பொருளாதாரச் சீர்குலைவுக்குக் காரணமாகிவிடும். பாங்கு களைக் கடன்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் என்றுகூட அழைக்கலாம். கடன்களைப் பெருக்குவதன்மூலம் பாங்குகளுக்கு இலாபம் கிடைக்கிறது. இலாபத்தையே நோக்கமாகக் கொண் டிருக்கும் வணிகப் பாங்குகள் (Commercial Banks) அதிக அளவில் கடன்களைப் பெருக்க நேரிட்டால் நாட்டில் பல பொருளா தார இன்னல்கள் தலைதூக்கும். எளிதாகக் கடன் கிடைக்கிறது என்றால் சிக்கனத்திற்கு மதிப்பில்லாமல் போகிறது. விரயமும் ஊதாரித்தனமும் கடன் வழி வந்தவையே. உற்பத்தியாளர்கள் பெருமளவில் தொழில் முயற்சியை மேற்கொள்வதற்குக் கடன்

துணையாக இருக்கிறது என்று மேலே கண்டோம். வணிகர்களும் உற்பத்தியாளர்களும் இதற்கு ஒருபடி மேலே சென்று ஊக வாணிபத்தில் (speculation) ஈடுபடுகிறார்கள். கடன் பெருக்கம் (credit creation) அதிகமாக இருந்தால் ஊக வாணிபமும் அதிக அளவில் மேற்கொள்ளப்பெறும். இந் நிலை விரும்பத்தக்கதன்று. கடன் திறமையில்லாதவர்களைக்கூடத் துணிச்சலோடு தொழிலிலும் வாணிபத்திலும் ஈடுபடச் செய்கிறது. முடிவில் அவர்கள் அடையும் நட்டம் ஒருபுறமிருக்க அவர்களுடைய நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார நிலையையும் பாதிக்கும். இக் காரணங்களால் கடனைக் கையாளுவதில் கவனமாக இருக்கவேண்டும்.

**கடன் கருவிகள் அல்லது கடனுக்குத் துணையாக இருக்கும் கருவிகள்** (Credit Instruments): ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் எழுவதுதான் கடன். கடனை மேற்கொள்வதற்குத் துணையாகப் பல கருவிகள் இருக்கின்றன. இவற்றைக் கடன் கருவிகள் என்றழைக்கலாம். வழக்கில் இருக்கும் முக்கியக் கடன் கருவிகளைப் பின்வருமாறு விளக்கலாம்:

(1) **கடன் பத்திரம்** (Promissory Note): கடன் கருவிகளில் எளிதான ஒன்று கடன் பத்திரம். கடன் வாங்கும் ஒருவர் கடன் கொடுத்தவருக்கு எழுதிக் கொடுக்கும் உறுதிப் பத்திரம்தான் கடன் பத்திரமாகும். குறிப்பிட்ட தொகையைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகக் கடனைக் கொடுத்தவரிடமோ அல்லது கடன் பத்திரத்தைக் கொணர்பவரிடமோ (bearer) கொடுப்பதாகக் கடன் வாங்கியவர் அப் பத்திரத்தில் உறுதி கூறியிருப்பார். கடன் கொடுத்தவர் கொடுத்திருக்கிறார் என்பதற்கும், கடன் வாங்கியவர் கடன்பட்டிருக்கிறார் என்பதற்கும் கடன் பத்திரம் ஓர் அத்தாட்சி.

**வாணிப உண்டியல்** (Bill of Exchange)

குறிப்பிட்ட ஒருவரை, குறிப்பிட்ட மற்றொருவருக்கோ அல்லது அவர் கட்டளையிடுபவருக்கோ உண்டியலில் குறிப்பிட்ட தொகையை நிபந்தனையின்றிக் கொடுக்கும்படி எழுத்துமூலம் இடும் கட்டளைதான் வாணிப உண்டியலாகும். வாணிப உண்டயலில் இருவகை உண்டியல்கள் இருக்கின்றன. ஒன்று உண்டியலில் கண்ட தொகை உடனேயே செலுத்தப்பெற வேண்டும். இதற்குக் 'கட்டளை உண்டியல்' என்று பெயர். மற்றொன்று உண்டியலில் கண்ட தொகை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்பெற வேண்டும். இதற்குக் 'கால

உண்டியல்' என்று பெயர். வாணிப உண்டியல்கள் வாணிபத் துறையில் பரவலாகக் கையாளப்பெறுகின்றன. உள்நாட்டு வாணிபத்தில் உபயோகிக்கப்பெறும் உண்டியலுக்கு 'உள் நாட்டு வாணிப உண்டியல்' என்றும், அயல் நாட்டு வாணிபத் தில் உபயோகிக்கப்பெறும் உண்டியலுக்கு 'அயல் நாட்டு வாணிப உண்டியல்' என்றும் பெயர்.

**செக்கு** (Cheque): ஒருவருக்குப் பாங்கில் வைப்பு (deposit) இருந்தால், குறிப்பிட்ட ஒரு தொகையைக் குறிப்பிட்ட ஒரு வருக்கோ அல்லது செக்கைக் கொணர்பவருக்கோ கொடுக்கும்படி எழுத்துமூலம் அவர் அப் பாங்குக்குப் பிறப்பிக்கும் உத்தரவுதான் செக்கு ஆகும். கடன் கருவிகளுள் செக்கு மிகவும் அதிகமாக உபயோகிக்கப் பெறுகிறது.

**உண்டியல்** (Hundis): மேலே நாம் கண்ட வாணிப உண்டி யலும் சாதாரண உண்டியலும் ஒரே வகையைச் சேர்ந்தவை தாம். வாணிப உண்டியல் நவீன பாங்கு முறையின் வளர்ச்சி யால் தோன்றியது. Hundis என்றழைக்கப் பெறும் உண்டியல்கள் நம் நாட்டில் நவீன பாங்குமுறை தோன்றுவதற்கு முன்னரே வழக்கில் இருந்து வந்தன. வாணிப உண்டியல்கள் ஆங்கிலத் தில் வரையப் பெறுகின்றன. உண்டியல்கள் நம் நாட்டு மொழி களில் வரையப் பெறுகின்றன. உள்நாட்டு வாணிபத்தில் மட்டும் தான் இவை உபயோகிக்கப்பெறுகின்றன.

**பாங்கு டிராஃப்டு** (Bank Draft): செக்கைப் போன்ற ஒரு கருவிதான் பாங்கு டிராஃப்டு ஆகும். தனி நபர்கள் தாங்கள் பாங்கில் வைத்திருக்கும் வைப்புகளுக்கு எதிராகச் செக்கு களைக் கிழித்துக் கொடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக ஒரு பாங்கு மற்றொரு பாங்கை அல்லது வெளியூரில் இருக்கும் தன்னுடைய கிளையைக் குறிப்பிட்ட ஒரு தொகையைக் குறிப்பிட்ட ஒரு நபருக்குக் கொடுக்கும்படி விண்ணப்பித்துக் கொண்டால் அது டிராஃப்டு ஆகிறது.

# 18. பாங்கியல்
## (Banking)

பாங்குகள், பாங்குகளின் அமைப்பு, பாங்குகளின் நடவடிக்கைகள் இவற்றை ஆராயும் ஒரு பிரிவுதான் பாங்கியலாகும். இன்று நாம் காணும் பாங்குகள் அண்மைக் காலத்தியப் பொருளாதார வளர்ச்சியின் விளைவால் தோன்றியவையாகும். தொழில், வாணிபம் இவற்றைப் பெருமளவும் மேற்கொள்வதற்கு மூலதனம் தேவைப்படுகிறது. மக்களில் பலர் தங்களுடைய வருவாயில் நுகர்வுக்காகச் செலவழித்தது போக மிச்சமாகப் பணம் வைத்திருக்கிருர்கள். இவ்விரு சாராரிடையே இடையிட்டு, மக்கள் வசம் இருக்கும் எச்சப் பணத்தைத் (surplus money) திரட்டி அப் பணத்தை வேண்வோருக்குக் கொடுக்கும் ஓர் அமைப்புதான் பாங்கு ஆகும். ஒருவர் பாங்கில் பணம் போட்டு வைப்பதால் (வைப்புகள்) பணமும் பத்திரமாக இருக்கிறது; அப்பணத்திற்கு வட்டியாகச் சிறிதளவு ஊதியமும் கிடைக்கிறது; பாங்குகள் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் பணத்தைக் கடனுகக் கொடுக்கும்பொழுது சற்று உயர்வான வட்டியை விதிக்கின்றன. பாங்குகளில் பலவகை இருக்கின்றன. ஒவ்வொரு வகை பாங்கும் ஒவ்வொரு துறையில் ஈடுபட்டு இயங்கி வருகின்றன. பாங்குகளின் வகை பின்வருமாறு :

### (1) வாணிப பாங்குகள் (Commercial Banks)

நாம் ஊருக்கு ஊர் இந்தியன் பாங்கு, இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு, பஞ்சாப் நேஷனல் பாங்கு, யுனைடெட் கமெர்சியல் பாங்கு என்று காணும் பாங்குகள் இவ்வகையைச் சேர்ந்தவை. கடன் வாங்குவதையும், கடன் கொடுப்பதையும் இப் பாங்குகள் வாணிபமாக மேற்கொண்டிருப்பதால் இப் பாங்குகள் வாணிப பாங்குகள் என்றழைக்கப் பெறுகின்றன. இவைகள் கூட்டுப்பங்கு

பாங்குகள் (Joint Stock Banks) என்றும் அழைக்கப் பெறு கின்றன. வாணிபத்திற்கும் தொழிலுக்கும் குறுகிய காலக் கடன் களைக் கொடுப்பதையே இப் பாங்குகள் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றன.

## (2) நாணய மாற்று பாங்குகள் (Exchange Banks)

அமைப்பில் நாணய மாற்று பாங்குகள் வாணிப பாங்குகளை ஒத்தவையே. ஆனால், இவை ஒரே ஒரு துறையில் மட்டும் முனைப்பாக ஈடுபடுகின்றன. அயல் நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவை நிதிவுதவி அளிக்கின்றன. பன்னாட்டு வாணிபத்திறகுத் துணையாக இருக்கும் வாணிப உண்டியல்களை (Bill of Exchange) வாங்குவதையும் விற்பதையும் அவைகளை ஏற்பதையுமே இவ்வகை பாங்குகள் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கின்றன. இக் காரணத்தினால் இப் பாங்குகள் பல நாடுகளின் முக்கிய நகரங்களில் கிளைகள் வைத் திருக்கின்றன. நாணய மாற்றுத் தொழிலை மட்டும் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள இந்திய பாங்குகள் இல்லை. இந்தியாவின் பல வாணிப பாங்குகள் மற்ற நடவடிக்கைகளுடன் நாணய மாற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றன.

## (3) தொழில் பாங்குகள் (Industrial Banks)

நவீன காலத் தொழில்களுக்கு அதிக அளவில் நிதியுதவி கடனாகத் தேவைப்படுகிறது. சாதாரணமாகப் பல காரணங்களா லும் தொழில்களுக்குத் தேவைப்படும் நிதியுதவி அனைத்தையும் அளிக்கக் கூடிய நிலையில் வாணிப பாங்குகள் இல்லை. அப்படி வாணிப பாங்குகள் அளிக்கும் நிதியுதவியும் குறுங்காலக் கடன்களாகவே இருக்கின்றன. வாணிப பாங்குகளால் தொழில் களின் நெடுங்காலத் தேவைகளை ஏற்க முடிவதில்லை. இக் குறையைப் போக்கச் சில நாடுகளில் மட்டும் எழுந்த ஒரு வகை பாங்குகள்தாம் 'தொழில் பாங்குகள்'. தொழிலுக்கு மட்டும் கடன் கொடுப்பதையே முக்கியத் தொழிலாகக் கொண்ட இத் தொழில் பாங்குகள் முதல் முதலில் ஜெர்மனியில் தோன்றின. இந்தியா வில் தொழில் பாங்குகள் இல்லை. ஆனால், அரசாங்க முயற்சி யால் தோன்றியிருக்கும் தொழில் நிதியுதவிக் கார்ப்பரேஷன் (Industrial Finance Corporation) போன்ற அமைப்புகள் இந்தியாவில் தொழில் பாங்குகளின் பணிகளை மேற்கொண் டுள்ளன.

**விவசாய பாங்குகள் (Agricultural Banks)**

இந்தியா போன்ற நாட்டில் விவசாயிகளில் பெரும்பான்மையினரும் எளிய நிலையில் இருக்கின்றனர். அன்றாட விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்குக் குறுகிய காலக் கடனுதவி தேவைப்படுகிறது. நிலையான நில அபிவிருத்தி செய்வதற்கும் அவர்களுக்கு நீண்டகாலக் கடன் தேவைப்படுகிறது. விவசாயிகளுக்குக் கடனுதவி அளிப்பதையே தொழிலாகக் கொண்ட பாங்குகள் விவசாய பாங்குகள் ஆகும். இந்தியாவில் இத் தொழிலைப் பெரும்பான்மையும் கூட்டுறவு பாங்குகளே மேற்கொண்டிருக்கின்றன.

**மைய பாங்கு (Central Bank)**

நாட்டில் உள்ள வாணிப பாங்குகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி நாட்டினுடைய நலத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் பாங்கு மைய பாங்கு ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மையபாங்கு இருக்கிறது. மைய பாங்கைப் பற்றி சற்று விரிவாகப் பின்னர் ஆராயலாம்.

**வாணிப பாங்குகளின் பணிகள்**

பாங்குகளில் பலவகை இருந்தாலும் பாங்குத் தொழிலைப் பரவலாகச் செய்துவருவது வாணிப பாங்குகள்தாம். மற்றவகைப் பாங்குகள் ஏதோ குறிப்பிட்ட துறைகளில்தாம் செயலாற்றி வருகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பில் வாணிப பாங்குகள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. ஒரு நாட்டிலுள்ள மொத்தப் பண அளிப்பில் பெரும் பகுதி பாங்குகள் உற்பத்தி செய்யும் பாங்குப் பணமாகவே இருக்கிறது. அரசினர் வெளியிடும் பணம் சிறிதளவே. இதனால் பாங்குகள் தங்களுடைய பணவெளியீட்டின் மூலம் (Bank Money) ஒரு நாட்டினுடைய பொருளாதாரப் போக்கையே மாற்றியமைக்கக் கூடிய வலிமையைப் பெற்றிருக்கின்றன. வாணிப பாங்குகள் ஆற்றும் முக்கியப் பணிகளை ஆராயலாம்.

(1) மக்களிடம் இருக்கும் எச்சப் பணத்தை (surplus money) ஒன்றுகூட்டித் திரட்டி, அதை உற்பத்தித் துறையில் பயன்படும் வகையில் வணிகர்களுக்கும் தொழில் உற்பத்தியாளர்களுக்கும் கடனுதவியாகக் கொடுப்பது வாணிப பாங்குகள் செய்யும் பெருந் தொண்டாகும். இத் தொண்டு அந் நடவடிக்கைகளைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் செய்யும் தொண்டன்று; நாட்டுக்கே செய்யும் தொண்டு.

(2) வாணிப பாங்குகள் மக்களிடமிருந்து வைப்புகளை (deposits) ஏற்றுக்கொள்கின்றன. செலுத்தியவர்கள் வேண்டும் போது திருப்பிக் கொடுக்கவும் தயாராயிருக்கின்றனர். ஒருவர் கணக்கில் இருக்கும் வைப்பை மற்றொருவர் கணக்குக்கு எளிதில் மாற்றியும் கொடுக்கின்றன. வைப்புகளில் நடப்புக் கணக்கு (Current Account), நிலையான கணக்கு (Fixed Account), சேமிப்புக்கணக்கு (Savings Account) என்று பலவகை இருக்கின்ற. அவரவர் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்றாற் போலக் கணக்கு வைத்துக்கொள்ளலாம். பாங்குகள் இந்த வசதியை அளிப்பதன் மூலம் மக்களிடையே உழைப்பு, சிக்கனம், சேமிப்பு போன்ற நல்ல பண்புகளை வளர்ப்பதற்குக் காரணமாயிருக்கின்றன.

(3) வாணிப பாங்குகள் தொழிலதிபர்களுக்கும் வணிகர்களுக்கும் பெருமளவில் கடனுதவி அளிக்கின்றன. பாங்குகள் அளிக்கும் கடனுதவிகள் கடன் வாங்குவோரின் சக்திக்கும் தேவைக்கும் ஏற்பப் பல வகையாக இருக்கலாம். அடமானத்தின் மீது அல்லது அடமானம் இல்லாமல்கூட பாங்குகள் கடன் கொடுக்கின்றன.

(4) இன்று உள்நாட்டு, அயல் நாட்டு வாணிபம் பெரிதும் வாணிப உண்டியல்கள் மூலம்தான் நடந்தேறுகின்றன. வாணிப உண்டியல்கள் நிறைவு (maturity) பெறுவதற்குச் சிறிதுகாலம் பிடிக்கும். வாணிப உண்டியல்களை வைத்திருக்கும் ஒருவருக்கு உடனடியாகப் பணம் தேவைப்பட்டால் அவற்றை பாங்குகளிடம் கொடுத்துப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். பாங்குகள் செய்யும் இப் பணிக்கு வாணிப உண்டியல்கள் ‘கழிவு செய்து கொடுத்தல்’ (Discounting of Bills of Exchange) என்று பெயர். இப் பணியின் மூலம் பாங்குக்கு இலாபம் கிடைக்கிறது. வாணிப நடவடிக்கைகளுக்கும் துணையாக இருக்கிறது.

(5) வர்த்தகர்கள் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குப் பணத்தை எளிதாக அனுப்பிவைப்பதற்கு பாங்குகள் உதவியாக இருக்கின்றன. பெருந்தொகையைச் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு அனுப்பவேண்டியிருந்தால் ஆபத்து, செலவு என்றெல்லாம் எண்ணித் தயங்க வேண்டியதில்லை. சென்னையில் உள்ள பாங்கில் அத் தொகையைச் செலுத்தி ஒரு பற்றுச் சீட்டைப் பெற்று (இதைத்தான் பாங்கு டிராஃப்டு என்றழைக்கின்றோம்) அச் சீட்டை கல்கத்தாவில் யாரிடம் பணம் சேர வேண்டுமோ அவருக்கு அனுப்பி வைத்தால் போதும். கல்கத்தா

வில் உள்ள ஒரு பாங்கில் கொடுத்து அவர் பணத்தைப் பெற்றுக்கொள்வார்.

(6) அயல் நாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் பாங்குகள் பெருந்துணையாக இருக்கின்றன. இந்திய ஏற்றுமதியாளர் அமெரிக்க இறக்குமதியாளரின் முகத்தைப் பார்த்திருக்க மாட்டார். இறக்குமதியாளர் நாணயம் உள்ளவரா, நம்பக் கூடுமா என்றெல்லாம் ஏற்றுமதியாளர் தயங்க வேண்டியதில்லை. இறக்குமதியாளர் ஓர் அயல் நாட்டு வாணிப உண்டியலை வரைந்து, அமெரிக்க பாங்கு ஒன்றின் மேலெழுத்தைப் (endorsement) பெற்று இந்திய ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைத்தால் போதும். ஏற்றுமதியாளரின் பண்டக்கிரயத்திற்கு ஆபத்தே கிடையாது; குறிப்பிட்ட தொகையும் அவருக்குக் காலத்தில் கிடைக்கும்.

(7) பாங்குகள் பதிலாள் பணிகளையும் (agency services) மேற்கொள்ளுகின்றன. ஒருவர் தன்னுடைய வங்கியிடம் இன்னின்ன தேதிகளில் இன்னின்னாரிடம் வாடகைப் பணம் மின்சாரக் கட்டணம், நிலவரி போன்ற பலவற்றையும் செலுத்த வேண்டும்; அதே போன்று இன்னின்ன தேதிகளில் அவருடைய வரவுகளை வசூலிக்க வேண்டும் என்று நிலையான உத்தரவு கொடுத்துவிட்டால் அவருக்குப் பதிலாக அந்த பாங்கு எல்லா நடவடிக்கைகளையும் தவருது நிறைவேற்றி வைக்கும்.

**மைய பாங்கு (Central Bank)**

உலகில் இன்று மைய பாங்கு இல்லாத நாடே இல்லையென்று சொல்லலாம். மையபாங்கு ஓர் அண்மைக் காலத்திய தோற்றமாகும். சுவீடன் நாட்டில்தான் முதன்முதலாக 1688 ஆம் ஆண்டில் மையபாங்கு நிறுவப்பெற்றது. இங்கிலாந்தின் மையபாங்காகிய 'பாங்க் ஆப் இங்கிலாந்து' (Bank of England) 1694-ல் நிறுவப்பெற்றது. ஃபிரான்சு நாட்டில் 1800-ல் நெப்போலியன் ஒரு மைய பாங்கை நிறுவினார். அதைத் தொடர்ந்து பல ஐரோப்பிய நாடுகள் மைய பாங்குகளை நிறுவின. 1920, 1922 ஆம் ஆண்டுகளில் முறையே பிரஸ்ஸல்சிலும் ஜெனீவாவிலும் நடந்த பன்னாட்டு செலாவணி மாநாடுகள் அதுவரை மையபாங்கை நிறுவாத நாடுகளை உடனடியாக நிறுவும்படி வேண்டிக்கொண்டன. அவ் வேண்டுகோளுக்கு இணங்க எல்லா நாடுகளும் மைய பாங்குகளை நிறுவின.

ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய பாங்கு இருக்கிறது. மையபாங்கு தன்னுடைய நடவடிக்கைகள் மூலமாக இலாபம் ஈட்டலாம். ஆனால், இலாபம் ஈட்டுவதுதான் அதனுடைய நோக்க மன்று. அதனுடைய நோக்கம் ஒரு பரந்த நோக்கமாகும். இலாபத்தையே குறியாகக் கொண்ட மற்ற வாணிப பாங்கு களை நாட்டின் பொருளாதார நலனுக்கு இணக்கமாக இயங்க வைப்பதுதான் ஒரு மைய பாங்கினுடைய முக்கியப் பணியாகும். ஒரு நாட்டில் அமைந்துள்ள 'பாங்குத் தொழில் முறைக்கு' (Banking System) மையபாங்கு ஒரு பாதுகாவலர். பொருளா தாரச் சூழ்நிலை நாட்டுக்கு நாடு மாறுபட்டிருக்கிறது. எனவே, மையபாங்குகளின் பணிகளும், அவை கடைப்பிடிக்கும் கொள்கைகளும் அக் கொள்கைகளை நிறைவேற்ற அவை கையாளும் வழிகளும் நாட்டுக்கு நாடு மாறுபட்டிருக்கின்றன. இருந்தாலும் பொதுவான சில பணிகளை எல்லா நாட்டு மைய பாங்குகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன; அவற்றை ஆராயலாம்.

**மைய பாங்கின் பணிகள்**

**(1) மைய பாங்கு காகிதச் செலாவணியை அளவோடு வெளியிடுகிறது:** *பணத்தினுடைய வளர்ச்சிக் கட்டத்தில் காகிதச் செலாவணி தோன்றியதும் ஒரு பிரச்சினை தலைதூக்கியது. காகிதச் செலாவணியை வெளியிடுவதற்கு வெறும் காகிதம்தான் தேவை. எனவே, செலாவணியை யார் வெளியிடுவது? தனியார் நடத்தும் வாணிப பாங்குகளிடம் இப் பணியை ஒப்படைத்தால் ஆபத்து ஏற்படும். மேலும், ஒவ்வொரு பாங்கும் வெளியிடும் செலாவணி ஒவ்வொரு வகையாக இருக்கும். அரசாங்கமே ஏற்றுக்கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று எண்ணத் தோன்றும். ஆனால், நிதிப்பற்றுக்குறை இல்லாத அரசாங்கமே கிடையாதாகையால் அரசாங்கம் செலாவணியை அளவோடு வெளியிடும் என்கிற நிச்சயமில்லை. முடிவில் இலாபத்தினைக் குறியாகக் கொண்டிராத மைய பாங்கிடம் செலாவணி வெளி யிடும் உரிமையைக் கொடுப்பது சிறந்தது என்ற எண்ணம் வன்மை பெற்றது. இவ்வழி வந்ததுதான் மைய பாங்குக்குக் கிடைத்த செலாவணி வெளியிடும் உரிமை. நாட்டில் நிலவும் பொருளாதார நிலைக்கும், வாணிபச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு செலாவணியை வெளியிடும் பொறுப்பு மைய பாங்கிடம் ஒப் படைக்கப் பெற்றிருக்கிறது. மைய பாங்கு இப் பொறுப்பைத் திருத்தமாக நிறைவேற்றுவதற்காக அதற்கு செலாவணி வெளி யீட்டில் 'முற்றுரிமை' (monopoly power) இருக்கிறது. மைய பாங்கை யன்றி வேறு யாரும் (திருட்டுத்தனமாக வெளியிடுவது*

புறம்பானது) செலாவணியை வெளியிட முடியாது. செலாவணி வெளியிடும் முறையில் பல வகை இருக்கின்றன. முக்கியமான மூன்றை மட்டும் ஆராயலாம்.

**வரையறை செய்த நம்பிக்கைத் திட்டம் (Fixed Fiduciary System)**

இத் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டம் வரையில் மைய பாங்கு செலாவணியை வெளியிடலாம். அதற்குக் காப்பாகப் பொன்னை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அந்த அளவுக்கு அரசாங்கக் கடன் பத்திரங்களை (securities) மட்டும் வைத்திருந்தால் போதும். அந்த அளவுமட்டத்தை 'நம்பிக்கை மட்டம்' (fiduciary limit) என்றழைக்கலாம். இந்த நம்பிக்கை மட்டத்திற்கு மேலாக மைய பாங்கு செலாவணியை வெளியிட விரும்பினால் அதற்கெதிராகச் சம மதிப்புள்ள பொன்னை வைத்திருந்தால்தான் வெளியிடலாம். உதாரணமாக, இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற 'பாங்குச் சட்டம்' 'பாங்க் ஆப் இங்கிலாந்தின்' நம்பிக்கை மட்டத்தை 14 மில்லியன் பவுன்களாக (pound sterling) விதித்தது. இத் திட்டத்தின் சிறப்பியல் என்னவென்றால், ஓர் அளவுக்குமேல் பொன் கைவசம் இருந்தால்தான் செலாவணியை வெளியிட முடியுமாதலால் செலாவணி அமித வெளியீடு (over issue of currency) தடுக்கப் பெறுகிறது. மக்களுக்கும் செலாவணியின் மீது நல்ல நம்பிக்கை இருக்கும். ஆனால், செலாவணி வெளியீட்டில் நெகிழ்ச்சி (elasticity) இல்லாமல் போய்விடும். நாட்டில் நிலவும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு அவ்வப்போது செலாவணியின் அளவைச் சுருக்கவும் பெருக்கவும் வேண்டியிருக்கும். வரையறை செய்த நம்பிக்கை வெளியீட்டுத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில் இதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது. இந்தியாவில் இத் திட்டம் 1934 ஆம் ஆண்டுவரையில் அமலில் இருந்து வந்தது.

**வீதாசார காப்புத் திட்டம் (Proportional Reserve System)**

இத் திட்டத்தின் கீழ் மைய பாங்கு வெளியிடும் செலாவணி அளவில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தைப் பொன்னாக வைத்திருக்க வேண்டும். எஞ்சிய அளவுக்கு எதிராக அரசாங்கக் கடன் பத்திரங்களையோ அல்லது வாணிப உண்டியல்களையோ (Trade Bills) காப்பாக வைத்திருந்தால் போதும். உதாரணமாக, இச்சதவீதம் 20 என்று அரசாங்கம் விதித்திருந்தால் மைய பாங்கு 100 கோடி ரூபாய் மதிப்புள்ள செலாவணியை வெளியிட 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னைத் தன் வசம்

வைத்திருக்க வேண்டும். இந்தச் சதவீதம் நாட்டுக்கு நாடு மாறுபடலாம். இத் திட்டத்தைப் பின்பற்றும் நாட்டில் செலாவணி அளவில் நெகிழ்ச்சி இருக்கும். செலாவணியின் மொத்த அளிப்பை (supply) எளிதில் மாற்றியமைக்கலாம். ஆனால், இத் திட்டத்தில் ஒரு பெருங்குறைபாடு இருக்கிறது. நாட்டில் செலாவணி வெளியீடு பன்மடங்காகப் பெருக்கமடையும். அதே போலத்தான் சுருங்கவும் செய்யும். உதாரணமாக, இந்தியாவில் இந்த சதவீதம் 20 என்று கற்பனை செய்து கொள்வோம். மைய பாங்கு 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன் கிடைக்கப் பெற்றால் செலாவணி வெளியீடு 100 கோடி ரூபாய் அளவுக்குப் பெருகும். அதே போல் மைய பாங்கு 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னை இழக்க நேரிட்டால், நாட்டில் செலாவணி அளிப்பும் 100 கோடி ரூபாய்க்குக் குறையும். இதனால் பணவீக்கமும் பணவாட்டமும் எளிதில் ஏற்படும். 1934 ஆம் ஆண்டில் இந்தியாவில் மைய பாங்கு (ரிசர்வு பாங்கு) நிறுவப்பெற்றபோது இத் திட்டம் அமலுக்கு வந்தது.

**குறைந்த அளவுக் காப்புத் திட்டம் (Minimum Reserve System)**

இத் திட்டத்தின் கீழ் மைய பாங்கு ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவுக்குப் பொன்னையோ அல்லது அயல்நாட்டுக் கடன் பத்திரங்களையோ (Foreign securities) அல்லது இரண்டையுமோ வைத்திருக்க வேண்டும். மற்றப்படி மைய பாங்கு தன்னிச்சைப் படி செலாவணியை வெளியிடலாம். உச்ச மட்டம் என்று ஓர் எல்லையும் கிடையாது. பொருளாதார வளர்ச்சியுற்றுவரும் நாடுகளில் பண அளிப்பும் அவ்வப்போது உயர்ந்துகொண்டே இருக்கவேண்டும். பண அளிப்பை எளிதில் மாற்ற முடியாத நிலை இருந்தால் அது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். இக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இத் திட்டம் சிறந்தது என்று கூறலாம். ஆனால், செலாவணி வெளியீட்டுக்கு உச்ச வரம்பே இல்லாதபடியால் நாட்டில் பணவீக்கத்திற்கு இத் திட்டம் காரணமாக அமையும் என்று கூறலாம். இந்தியாவில், 1934 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டுவரை 'வீதாசாரக் காப்புத் திட்டம்' நடைமுறையில் இருந்துவந்தது. 1956 சூலை மாதம் ரிசர்வு பாங்கு திருத்தச் சட்டம் (Reserve Bank Amendment Act of 1956) நிறைவேற்றப்பெற்றது. இச் சட்டத்தின்படி 'வீதாசாரக் காப்புத் திட்டம்' கைவிடப்பெற்று, 'குறைந்த அளவுக் காப்புத் திட்டம்' அமலுக்கு வந்தது. 1957 ஆம் ஆண்டில் அந்நியச் செலாவணி நெருக்கடி எழுந்ததால் மறுபடியும் ரிசர்வு பாங்குச் சட்டம் திருத்தப்பெற்றது. இவ்வாறு திருத்தி

யமைத்த சட்டத்தின்படி ரிசர்வு பாங்கு 200 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன், அயல் நாட்டுக் கடன்பத்திரங்கள் இவற்றைக் காப்பாக வைத்திருக்க வேண்டும். இந்த 200 கோடியில் 115 கோடி ரூபாய்க்குக் குறையாமல் பொன்னுகை வைத்திருக்க வேண்டும். மீதமுள்ள தொகைக்கு அயல்நாட்டுக் கடன் பத்திரங் களை வைத்திருக்கலாம்.

(2) **மைய பாங்கு அரசாங்கத்திற்குப் பணி செய்யும் ஒரு பாங்கு:** தனி நபர்களுடைய பாங்கு நடவடிக்கைகளை மைய பாங்கு ஏற்பதில்லை. ஆனால், அரசாங்கத்தினுடைய பணத்துறை, பாங்குத்துறை, நிதித்துறை நடவடிக்கைகளை மைய பாங்கு மேற் கொண்டு நடத்துகிறது. இந் நடவடிக்கைகளை மைய பாங்கு மேற்கொள்வது சிக்கனமாகவும் வசதியாகவும் இருக்கும் என்ப தோடு மற்றொரு முக்கிய காரணமுமிருக்கிறது. பணத்துறைக்கும் அரசாங்கத்தின் நிதித்துறை நடவடிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நாட்டில் எல்லோரையும்விட அரசாங்கம் தான் அதிகமான வருவாயையும் செலவையும் கொண்டிருக்கிறது. அரசாங்கம் வரி விதித்து வருவாய் ஈட்டுவதோடு பெருந் தொகை யாகக் கடன்களையும் வாங்குகிறது. அதேபோல ஆயிரம் ஆயிரம் கோடியாகச் செலவையும் செய்கிறது. அரசாங்கம் இவ்வாறு பெரு மளவில் நடத்தும் நிதி நடவடிக்கைகள் சரியானபடி சீர்படுத்தி, ஒழுங்குபடுத்தப்பெருவிட்டால் பணச்சந்தையில் நெருக்கடியும் சிக்கல்களும் தோன்றும். எவ்வழியை மேற்கொண்டால், எக் காலத்தில் மேற்கொண்டால் இவ் விளைவுகளைத் தவிர்க்கலாம் என்று மைய பாங்கு அரசாங்கத்திற்கு யோசனை கூறுகிறது. அரசாங்கத்தினுடைய பண வரவு செலவு நடவடிக்கைகள் அனைத் தையும் மையபாங்குதான் நடத்துகிறது. அரசாங்கத்தின் வைப்புகளை (deposits) மைய பாங்குதான் வைத்திருக்கிறது. அரசாங்கம் கடன் பத்திரங்களை மைய பாங்கு மூலமாகத்தான் விற்பனை செய்கிறது. அரசாங்கக் கடன் சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் மையபாங்குதான் மேற்கொண்டு நடத்து கிறது. மேலும், அவசரத் தேவைகளை அரசாங்கம் சமாளிப்பதற்கு உதவியாக மைய பாங்கும் கடனுதவி அளிக்கிறது. ஆனால், இக் கடன்கள் பெரும்பான்மையும் குறுகியகாலக் கடன்களாகவே (3 மாதம், 6 மாதம், 9 மாதம்) இருக்கும்.

(3) **மைய பாங்கு மற்றெல்லா பாங்குகளுக்கும் ஒரு பாங்கு:** ஒரு நாட்டில் திருத்தமான முறையில் பாங்குத் தொழிலை வளர்க்கும் பொறுப்பு மைய பாங்கைச் சார்ந்தது. ஏனைய பாங்கு களைக் கட்டி ஆளும் தலைமைப் பதவி மைய பாங்கிடம் இருக்

கிறது. ஆனால், அதிகாரத்தைச் செலுத்தும் தலைவனாக மட்டும் அது இருப்பதில்லை. வாணிப பாங்குகளுக்கு ஓர் உற்ற நண்பனாகவும் இருக்கிறது. வாணிப பாங்குகளும் பணத்தை (இதனைக் கடன் பணம் அல்லது பாங்குப் பணம் என்றழைக்கிறோம்) உற்பத்தி செய்கின்றன என்று கண்டோம். பாங்குப் பண உற்பத்தி அளவோடு இல்லாவிட்டால் பல சிக்கல்கள் தோன்றும். வாணிப பாங்குகளின் பண உற்பத்தியை மைய பாங்கு மட்டுப் படுத்தி, ஒழுங்குபடுத்துகிறது. மைய பாங்கு தன்னுடைய பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு அதற்குச் சில உரிமைகள் வழங்கப்பெற்றிருக்கின்றன. நாட்டில் உள்ள ஒவ்வொரு வாணிப பாங்கும் மைய பாங்கிடம் ‘இருப்பு’ (reserve) வைத்திருக்கவேண்டியிருக்கிறது. ஒரு வாணிப பாங்கு தன்னுடைய பொறுப்புகளைச் சமாளிக்க முடியாத நெருக்கடி நிலைக்குள்ளாக நேரிட்டால் அது மைய பாங்கின் உதவியை நாடலாம். மையபாங்கும் நியாயமான அளவுக்குக் கடனுதவி அளிக்கும்.

(4) நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு (Foreign exchange reserve) மைய பாங்கு வசம் இருக்கிறது. பணத்தின் அயல்நாட்டு மதிப்பைப் (external value) பேணும் பொறுப்பும் மைய பாங்கைச் சேர்ந்தது. மைய பாங்கு தன்னுடைய நடவடிக்கையின்மூலமாக மட்டும் பணத்தின் அயல்நாட்டு மதிப்பை நிலையாக்க முடியாது. நாட்டில் நிலவும் பொருளாதார நிலை, அரசாங்கக் கொள்கை இவையெல்லாம் பண மதிப்பைப் பாதிக்கின்றன. இருந்தாலும் பண மதிப்பைப் பேணுவதற்கு மைய பாங்கு உறுதுணையாக இருக்கும் என்று கூறலாம். அந்நியச் செலாவணித் தட்டுப்பாடுள்ள இந்தியா போன்ற நாடுகளில் அந்நியச் செலாவணி நடவடிக்கைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கு அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு (exchange control) என்று பெயர். சாதாரணமாக இத்தகைய கட்டுப்பாடு மைய பாங்கிடம்தான் ஒப்படைக்கப்பெறுகிறது.

(5) **மைய பாங்கு கடன்களைக் கட்டுப்படுத்துகிறது:** கடன் எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்றும், ஆனால், கடன் அளவோடு இல்லாவிட்டால் எத்தகைய இன்னல்கள் விளையும் என்றும் மேலே விளக்கினோம். கடன் பெருக்கத்தினாலும் சுருக்கத்தினாலும் நாட்டில் பண வீக்கமும் பண வாட்டமும் தலைதூக்குகின்றன. கடனை அளவோடு மட்டுப்படுத்தும் பொறுப்பு மைய பாங்கைச் சேர்ந்தது. இவ்வாறு கட்டுப்படுத்துவதற்கு மைய பாங்கிடம் சில சக்திவாய்ந்த ஆயுதங்கள் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை ‘பாங்கு வட்டி வீதமும்’ (bank rate), ‘வெளிச்

சந்தை நடவடிக்கைகளும்' (open market operations) ஆகும். பாங்கு வட்டி வீதம் என்பது மைய பாங்கு விதிக்கும் வட்டிவீதம். மைய பாங்கு தன்னுடைய வட்டி வீதத்தை உயர்த்தினால் வாணிப பாங்குகளும் வட்டி வீதத்தை. உயர்த்தவேண்டும். அவ்வாறே மைய பாங்கு வட்டிவீதத்தைக் குறைக்கும்போது நாட்டில் வட்டிவீதமும் குறையும். நாட்டில் கடன் பணத்தின் அளவு ஓரளவுக்கு வட்டிவீதத்திற்கு ஏற்றாற்போல மாறுந் தன்மையுடையதாகையால் மைய பாங்கு தன்னுடைய வட்டி வீதத்தை மாற்றுவதன் மூலம் நாட்டில் கடன் பணத்தின் அளவையும் மாற்ற முடியும். மைய பாங்கு கடன் பத்திரங்களை விற்பனை செய்வதையும் வாங்குவதையும் மைய பாங்கின் 'வெளிச்சந்தை நடவடிக்கைகள்' (open market operations) என்றழைக்கலாம். இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக நாட்டில் உள்ள கடன் பணத்தின் அளவை மைய பாங்கு மாற்ற முடியும்.

(6) அரசாங்கம் தன்னுடைய பணக் கொள்கையை (Monetary Policy) நிறைவேற்றுவதற்கு மைய பாங்கு துணையாக இருக்கிறது. பொருளாதாரத் துறையின் பல பிரிவுகளிலும் அரசாங்கம் திருத்தமான ஒரு கொள்கையைக் கையாளவேண்டியிருக்கிறது. பணக்கொள்கை, நிதியியல் கொள்கை, வாணிபக் கொள்கை என்று பலவகையான கொள்கைகள் இருக்கின்றன. இவற்றுள் பணக்கொள்கை மிகவும் முக்கியம் வாய்ந்தது. நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைக்கு இணக்கமான ஒரு பணக் கொள்கையை உருவாக்கிக் கொடுப்பதிலும், உருவாக்கிய கொள்கையைச் செயல்படுத்துவதிலும் மைய பாங்கு அரசாங்கத்திற்குப் பெருந் துணையாக இருக்கிறது.

**ரிசர்வு பாங்கு**

இந்தியாவினுடைய மைய பாங்குதான் ரிசர்வுபாங்கு ஆகும். ரிசர்வு பாங்கு 1935 ஏப்ரல் மாதம் பணியாற்றத் தொடங்கியது. ரிசர்வுபாங்கினுடைய பணிகளும், உரிமைகளும் மற்ற நாடுகளுடைய மைய பாங்குகளைப் போன்றே இருக்கின்றன. ரிசர்வு பாங்கு நெடுங்காலமாகத் தனியார் நடத்தும் ஒரு பாங்காக இருந்து வந்தது. நாடு விடுதலையடைந்த பிறகு 1949 ஜனவரி மாதம் ரிசர்வு பாங்கு தேசியமயமாக்கப்பெற்றது. நாட்டில் பணமுறையை (monetary system) ஒழுங்குபடுத்தி அரசாங்கம் அவ்வப்போது வகுக்கும் கொள்கைக்கு இணக்கமான பொருளாதார மேம்பாட்டை வளர்ப்பதுதான் ரிசர்வு பாங்கினுடைய முக்கிய நோக்கமாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்ததும் ரிசர்வுபாங்கு புதிய பணிகளையும் பொறுப்பையும் ஏற்கவேண்டியிருந்தது.

ரிசர்வு பாங்கு இன்று பல புதுவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இந் நடவடிக்கைகள் கடந்த காலத்தில் ஒரு மைய பாங்கினுடைய செயலுக்குப் புறம்பானவை என்று கருதப்பெற்றது. நாட்டின் விவசாய வளர்ச்சியில் ரிசர்வுபாங்கு செய்திருக்கும் பணி சிறப்பான ஒன்று. ரிசர்வு பாங்கு விவசாயத் துறை என்று தனியாகத் திறம்பெற்ற ஊழியர்களைக் கொண்ட ஒரு துறையை நிர்வகித்துவருகிறது. இத் துறையின் பணிகள் இரண்டு (i) விவசாயக் கடன் பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அவை பற்றி மற்ற பாங்குகளுக்கு யோசனை கூறுவது. (ii) விவசாயக் கடனுதவி அளிப்பதைப் பரவலாக மேற்கொண்டு இத் துறையில் கூட்டுறவு பாங்குகளும் வாணிப பாங்குகளும் செய்துவரும் பணிகளை ஒருமுகப்படுத்துதல்; தொழில்களுக்குக் கடனுதவி அளிக்கும் துறையிலும் ரிசர்வுபாங்கு நல்ல பணியாற்றி இருக்கிறது. ரிசர்வு பாங்கு தொழில்களுக்கு நேரிடையாகக் கடனுதவி அளிப்பதில்லை. ஆனால், தொழிலுக்குக் கடனுதவி அளிப்பதற்காக என்று அண்மைக்காலத்தில் நிறுவப்பெற்றிருக்கும் கார்ப்பரேஷன்களில் அது முக்கியப் பங்கு கொண்டிருக்கிறது.

1939 ஆம் ஆண்டில் இந்தியாவில் அந்நியச் செலாவணி நடவடிக்கைகள் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப் பெற்றன. இக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் பொறுப்பு ரிசர்வு பாங்கிடம் ஒப்படைக்கப்பெற்றது. இன்றுவரை இப் பொறுப்பை ரிசர்வுபாங்கு திருத்தமான முறையில் நிறைவேற்றிவருகிறது. இதற்காக 'அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் துறை' (Exchange Control Department) என்று ரிசர்வு பாங்கில் ஒரு துறை இருக்கிறது.

ரிசர்வு பாங்கினுடைய வட்டி வீதம் நெடுங்காலமாக நிலையாக 3 சதவீத மட்டத்தில் இருந்துவந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாட்டில் பணவீக்கம் தோன்றியதால் முதன் முதலாக 1951 ஆம் ஆண்டில் வட்டி வீதம் $3\frac{1}{2}$ சத வீதத்திற்கு உயர்த்தப்பெற்றது. அதே நிலை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தோன்றியதால் மறுபடியும் 1957 மே மாதம் வட்டி வீதம் 4 சத வீதத்திற்கு உயர்த்தப்பெற்றது. 1963 ஜனவரி மாதத்தில் அது மீண்டும் $4\frac{1}{2}$ சத வீதத்திற்கு உயர்ந்தது. மூன்றும் திட்டத்தின் முடிவுக்காலத்தில் விலையேற்றம் மிக அதிகமாக இருந்ததால் அக் காலத்தில் வட்டி வீதம் இருமுறை உயர்த்தப் பெற்றது. இன்று ரிசர்வு பாங்கு விதிக்கும் வட்டிவீதம் 6 சத வீதமாகும்.

ஒரு நாட்டில் வாணிப வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் வாணிப உண்டியல்கள் (Bill of exchangc) துணையாக இருக்கின்றன என்று கண்டோம். வாணிப உண்டியல்களைப் பரவலாகக் கையாள வேண்டுமென்றால் அவற்றை வாங்கவும் விற்கவும் ஏதுவாக நாட்டில் 'உண்டியல் சந்தை' (Bill market) இருக்க வேண்டும். இந்தியாவில் முறையாக அமைந்த ஓர் உண்டியல் சந்தை (Organised Bill Market) இல்லை. இது பெருங் குறைபாடாகும். இக் குறையைப் போக்க ரிசர்வு பாங்கு முனைந்திருக்கிறது. இந் நோக்கம் கைகூட ரிசர்வு பாங்கு 1952-ல் ஒரு திட்டத்தை உருவாக்கியது. இதற்கு உண்டியல் சந்தை வளர்ச்சித் திட்டம் (Bill Market Scheme) என்று பெயர்.

இவ்வாறு ரிசர்வு பாங்கு பல புதுத் துறைகளில் ஈடுபட்டுப் பல புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. எல்லாத் திட்டங்களும் மிகவும் வெற்றிகரமாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. ஆனால், பொது நோக்கோடு பார்த்தால் ரிசர்வு பாங்கு தான் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புகளைத் திருப்திகரமாகச் செய்து வருகிறது என்று கூறலாம்.

# 19. பன்னாட்டு வாணிபம்
## (International Trade)

**விளக்கம்**

பொருளியல் துறையில் பன்னாட்டு வாணிபம் ஒரு முக்கியப் பிரிவாகும். பண்டங்கள் ஏன் நாடுகளிடையே ஏற்றுமதியும் இறக்குமதியுமாகின்றன? எந்த விகிதத்தில் இவைகள் மாற்றிக் கொள்ளப் பெறுகின்றன? நாடுகளிடையே நடக்கும் வாணிபத்தின் விளைவுகள் யாவை? என்பன போன்ற வினாக்களுக்குப் பன்னாட்டு வாணிபக் கோட்பாடு (International Trade Theory) விடை அளிக் கிறது. உள் நாட்டு வாணிபம், பன்னாட்டு வாணிபம் இரண்டும் பண்டங்களில் நடக்கும் வாணிபம்தான். இருப்பினும், பன்னாட்டு வாணிபத்தின் இயல்பையும் போக்கையும் விளக்க ஏன் தனியாக ஒரு கோட்பாடு இருக்கிறது? பன்னாட்டு வாணிபம் பல துறை களிலும் உள்நாட்டு வாணிபத்திலிருந்து பெரிதும் மாறுபட்டிருக் கிறது. எனவே, பன்னாட்டு வாணிபத்தை விளக்கத் தனியான தொரு கோட்பாடு தேவைப்படுகிறது என்று இங்கிலாந்தில் வாழ்ந்த கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் (Clasical Economists) என்றழைக்கப்பெறும் வல்லுநர்கள் கருதினார்கள். அவர்கள் தந்த கருத்தைப் பின்பற்றி உள்நாட்டு, பன்னாட்டு வாணிபம் இரண்டினுக்கும் உள்ள வேறுபாட்டினைக் காணலாம்.

**உள்நாட்டு வாணிபமும் பன்னாட்டு வாணிபமும்**

ஒரே அரசியல் எல்லைக் கோட்டிற்குள் வாழும் மக்களிடையே நடக்கும் வாணிபம் உள்நாட்டு வாணிபம். ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் பிரிவுகளில் வாழும் மக்களிடையே அல்லது அரசாங்கங் களிடையே நடந்தேறும் வாணிபம் பன்னாட்டு வாணிபம். இவை இரண்டுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் பின்வருமாறு:

(1) பொருளாதாரக் காரணிகள் (factors of production): குறிப்பாக மூலதனமும் (capital) உழைப்பும் (labour) உள் நாட்டில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எளிதான முறையிலும் தயக்கமின்றியும் பெயர்ந்து செல்கின்றன. ஆனால், அவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு அவ்வளவு எளிதாகப் பெயர்ந்து செல்வதில்லை. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த சீக்கியர் ஒருவர் ஆயிரம் மைல்களுக்குமேல் தடையின்றிக் கடந்து சென்னைக்கு வந்து ஒரு வேலையை ஏற்றுக்கொள்ளலாம்; அல்லது முதலீடு செய்து ஒரு தொழிலைத் தொடங்கலாம். ஆனால், இராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் நூறு மைல்களுக்கு உள்ளாக இருக்கும் அண்டை நாடான இலங்கைக்குச் சென்று வேலை ஏற்பதோ அல்லது வாணிபத்தை மேற்கொள்ளுவதோ அவ்வளவு எளிதன்று. இன்றையப் பன்னாட்டு அரசியலமைப்பில் அது முடியாத செயல் என்று கூறலாம்.

(2) பண்டங்களும் உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குத் தடையின்றிச் செல்லலாம். காஷ்மீர் பகுதியிலுள்ள கூலு பள்ளத்தாக்கில் விளையும் ஆப்பிள் பழத்தைச் சென்னைவாசிகள் எளிதில் தருவிக்கலாம். இதில் எந்தவிதமான தடையுமில்லை. ஆனால், தமிழ் நாட்டில் நெய்யப்பெறும் கைத்தறித் துணிகளை இலங்கையில் உள்ளவர்கள் பெறுவதில் எத்தனையோ தடைகள். இந்திய அரசாங்கம் விதிக்கும் தடைகள் சில. இலங்கை அரசாங்கம் விதிக்கும் விதிகள் பல. ஒவ்வொரு நாட்டின் அரசாங்கமும் அந் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதிகளில் தலையிட்டுப் பல வகையான தீர்வைகளை விதித்துப் பன்னாட்டு வாணிபத்தின் போக்கை முற்றிலும் மாற்றிவிடுகிறது.

(3) உள்நாட்டு வாணிபத்தில் ஒரே ஒரு நாணயம்தான் (அது ரூபாயாகவோ, டாலராகவோ, ஸ்டெர்லிங்காகவோ, பிராங்காகவோ இருக்கலாம்) ஈடுபடுகிறது. பன்னாட்டு வாணிபத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் ஈடுபடுகின்றன. சென்னையில் உள்ள ஒரு வணிகர் கல்கத்தாவிலிருந்து பண்டத்தைத் தருவித்தால், பண்டத்தின் கிரயத்தை இந்திய ரூபாயாக அனுப்பலாம். கல்கத்தா வாசியும் தயக்கமின்றி அதை ஏற்றுக் கொள்ளுவார். மாறாகச் சென்னை வணிகர் அமெரிக்காவிலிருந்து பண்டத்தைத் தருவித்தால் இவர் ரூபாயில்தான் கிரயத்தை அனுப்பமுடியும். ஆனால், அமெரிக்க வணிகர் டாலராக வேண்டுமென்று வற்புறுத்துவார். இந்திய ரூபாய்க்கு இந்திய எல்லைக்குள் தான் வாங்கும் சக்தி உண்டு. எனவே, ரூபாய் நாணயமும் டாலர்

நாணயமும் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளப் பெறவேண்டும். உள்நாட்டு வாணிபத்தில் இப் பிரச்சினை எழுவதில்லை.

(4) உள்நாட்டில் மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கம், வாணிப நிபந்தனைகள் இவை யாவும் நாடு முழுவதும் ஒரே வகையாக இருக்கின்றன. அப்படி மாறுபாடுகள் இருந்தாலும் அவற்றிற்கு மக்கள் அனைவரும் நன்றாக அறிமுகமாகிப் பழகி விடுகிறார்கள். ஆனால், ஒரு நாட்டு அரசியல் எல்லைக்கோட்டைக் கடந்தால் பழக்கமில்லாத, முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையைக் காண நேரிடுகிறது. இக் காரணமும் பன்னாட்டு வாணிபத்திற்கு ஓர் இடையூறாக அமைகிறது.

(5) ஒவ்வொரு நாட்டிலும் ஒரு மைய பாங்கு இருக்கிறது. ஒவ்வொரு மைய பாங்கும் கையாளும் பணக்கொள்கையும், பாங்கியல் கொள்கையும் தனித்தன்மை வாய்ந்தவை. அதே போன்று ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமான, சில சந்தர்ப்பங்களில் முரண்பாடான பொருளாதாரக் கொள்கையையும், நிதியியல் கொள்கையையும் கையாளுகின்றன. இக் கொள்கைகள் யாவும் அயல்நாட்டு வாணிபத்தை வெவ்வேறு வகையில் பாதிக்கும் தன்மையுடையவை. உள்நாட்டு வாணிபத்தில் இத்தகைய சிக்கல் எழவேண்டிய அவசியமில்லை.

**பன்னாட்டு வாணிபத்தின் முக்கியத்துவம்:** பன்னாட்டு வாணிபம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. நாகரிகம் தோன்றிய நாள் முதற்கொண்டு பன்னெடுங் காலமாகவே பன்னாட்டு வாணிபம் வழக்கில் இருந்து வந்திருக்கிறது. பன்னாட்டு வாணிபத்தில் பங்குபெறும் நாடுகள் பல பயன்களைப் பெறுகின்றன.

(1) முதலாவதாக, பன்னாட்டு வாணிபம் ஒரு நாட்டில் உற்பத்தியாகாத பண்டத்தை அந் நாட்டுக்குக் கிடைக்கும்படி செய்கிறது. உற்பத்தியானாலுங்கூட அந் நாட்டின் உற்பத்திச் செலவைவிடக் குறைந்த செலவில் பிற நாட்டிலிருந்து கிடைக்கும்படி செய்கிறது. இந்தியாவில் இன்றைய நிலையில் உற்பத்தி செய்யமுடியாத சில முக்கிய இரசாயனப் பொருள்களை மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. இங்கிலாந்து அங்கு உற்பத்தியாகாத தேயிலையை இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பெறுகிறது. பன்னாட்டு வாணிபம் இல்லாவிடில் ஒவ்வொரு நாட்டிலும் நுகர்வுக்குக் கிடைக்கும் பண்டங்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும்.

(2) ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகைப் பண்டங்களை உற்பத்தி செய்வதில் சில அனுகூலங்களைப் பெற்றிருக்கின்றன.

இந்த அனுகூலங்களை அந் நாடுகள் இயற்கையாகவே பெற்றிருக்கலாம்; அல்லது நீண்ட கால ஈடுபாட்டினால் அப் பண்டங்களில் நல்ல உற்பத்தித் திறனைப் பெற்றிருக்கலாம். இக் காரணத்தால் இத்தகைய பண்டங்களின் உற்பத்தியில் அந் நாடுகள் முனைப்பாக ஈடுபடுவதால் உற்பத்திச் செலவு குறைவதோடு அதன் பலனை மற்ற நாடுகளும் பகிர்ந்துகொள்ள ஏதுவாகிறது.

(3) ஒரு நாடு பஞ்சத்தால் இன்னலுறும்பொழுது பன்னாட்டு வாணிபம் மிக்க உதவியாக இருக்கிறது. இந்தியாவில் உணவுப் பற்றுக்குறை எழுந்துள்ள இன்றைய நிலையில் P.L. 480 சட்டத்தின் கீழ் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பண்டங்களின் முக்கியத்துவத்தை எளிதில் அறியலாம்.

(4) பன்னாட்டு வாணிபம் நடக்காவிட்டால் ஒரு நாட்டில் சில பண்டங்களில் அமித உற்பத்தி (over production) இருக்கும். அதே பண்டங்களுக்கு மற்றும் சில நாடுகளில் பற்றுக்குறை இருக்கும். ஒவ்வொரு நாடும் நுகர்வு போக எஞ்சிய பண்டத்தை மற்ற நாடுகளுக்கு அனுப்பி அதற்குப் பதில் மற்றப் பண்டங்களைப் பெறுகின்றன. இதனால் பண்டங்களின் விலைகள் எல்லா நாடுகளிலும் ஏறக்குறைய ஒரே சீராக அமையும். பன்னாட்டு வாணிபம் வழக்கில் இல்லாவிட்டால் பண்டங்களின் விலையில் நாடுகளிடையே பெருத்த ஏற்றத் தாழ்வுகள் இருக்கும்.

(5) தொழில் வளர்ச்சி பெற்றுள்ள சில நாடுகளில் மூலப் பொருள்கள் உற்பத்தியாவதில்லை அல்லது தேவையான அளவுக்கு உற்பத்தியாவதில்லை. பொருளாதார நிலையில் பின்தங்கிய சில நாடுகளில் தேவைக்கு மீறிய அளவில் மூலப்பொருள்கள் விளைகின்றன. பன்னாட்டு வாணிபத்தின்மூலம் பின்தங்கிய நாடுகள் மூலப்பொருள்களை முன்னேற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அவைகளுக்குப் பதிலாகச் செய்வினை முடிந்த பண்டங்களையும், தொழில் முதற் பொருள்களையும் எளிதில் பெற முடிகிறது.

(6) இன்றைய நிலையில் போக்குவரவுச் சாதனங்களில் மலைப் பூட்டும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய சாதனங்கள் காலத்தையும் தூரத்தையும் வென்றிருக்கின்றன. இந்த வளர்ச்சி பன்னாட்டு வாணிபம் செழித்து வளரத் துணையாகவும் இருக்கிறது. பன்னாட்டு வாணிபமும் போக்குவரவுச் சாதன வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று உதவியாக இணைந்து இருக்கின்றன. ஆனால், பன்னாட்டு வாணிபம் போக்குவரவுச் சாதன வளர்ச்சிக்குக் காரணமாயிருந்ததா அல்லது போக்குவரவுச் சாதனங்களில்

ஏற்பட்ட வளர்ச்சி வாணிபம் பெருகுவதற்குக் காரணமாயிருந்ததா என்றால் பன்னாட்டு வாணிபம்தான் காரணமாய் அமைந்தது என்று கூறலாம்.

(7) ஒருமைப்பாடு என்னும் கருத்து இன்று வலுப்பெற்று வருகிறது. நாட்டளவில் மட்டுமல்ல, பன்னாட்டுத் துறையிலும் கூட. பன்னாட்டுப் பொருளாதார ஒருமைப்பாட்டின் அவசியத்தை மிர்டால் (Gunnar Myrdal) என்னும் ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகிறார். இத்தகைய ஒருமைப்பாட்டினை வளர்க்கப் பன்னாட்டு வாணிபம் பெருந்துணையாக இருக்கும் எனலாம்.

பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளுக்கு நன்மைதான் உண்டு. தீமையே கிடையாது என்று கூறிவிட முடியாது. பன்னாட்டு வாணிபத்தால் எழக்கூடிய தீமைகள் பின் வருமாறு:

(1) வாணிபத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவதற்குத்தான் ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டுக்குச் செல்கின்றனர். ஆனால், அதைத் தொடர்ந்து ஒரு நாட்டை மற்றொரு நாடு அடிமைப்படுத்தித் தன்னாட்சிக்குள் கொண்டுவருவது வழக்கமாகி விட்டது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பை வளர்த்துப் பின்னர் இந் நாடுகளை அடிமைப்படுத்தித் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தது வரலாறு கண்ட அனுபவ உண்மை.

(2) பொருளாதாரத்துறையில் சமநிலையில் உள்ள நாடுகளிடையே வாணிபம் நடந்தால் எந்த நாடும் தீங்குறாது. ஆனால், உலகில் நாடுகளிடையே பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு சில நாடுகள் மட்டும் நன்றாக வளர்ச்சியடைந்திருக்கின்றன. பல நாடுகள் வளர்ச்சியே இல்லாமல் குன்றிப்போயிருக்கின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளின் போட்டியால் பின்தங்கிய நாடுகள் நலிந்து வளர்ச்சிபெற முடியாமல் இருக்கின்றன.

(3) பன்னாட்டு வாணிபத்தால் ஒரு நாடு மற்ற நாடுகளை நம்பி வாழும் நிலை ஏற்படுகிறது. உணவுப் பண்டங்கள், செய்வினை முடிந்த பண்டங்கள் அல்லது முக்கிய மூலப்பொருள்கள் இவற்றை ஒரு நாடு நெடுங்காலமாக வெளியிலிருந்து இறக்குமதி செய்து பழகிப்போயிருக்கும். இப் பழக்கத்தால் என்றென்றும் இறக்குமதியையே நம்பி வாழும் அவலநிலை ஏற்படும். போர் மூண்டாலோ அல்லது வாணிபத் தொடர்புடைய இருநாடுகளிடையே பிணக்கு

ஏற்பட்டாலோ இறக்குமதியைப் பெரிதும் நம்பிவாழும் நாடு கடும் இன்னல்களுக்குள்ளாகும்.

(4) வணிகர் கையாளும் 'பண்டங்களைக் குவித்தல்' (dumping) என்னும் தீமை பயக்கும் பழக்கம் பன்னாட்டு வாணிபத்தின் மூலம்தான் வழக்கிற்கு வந்தது. வணிகர்கள் தம் பண்டங்களை அயல் நாட்டுச் சந்தைகளில் உள்நாட்டுச் சந்தைகளைவிடக் குறைந்த விலையில் விற்பதுதான் 'பண்டங்களைக் குவித்தல்' என்றழைக்கப்பெறுகிறது. இப் பழக்கத்தால் பண்டங்கள் குவிக்கப்பெறும் நாட்டிலுள்ள தொழில்கள் நலிந்து ஒழியும்.

(5) ஒவ்வொரு நாடும் சில முக்கியப் பண்டங்களின் உற்பத்தியில் தன்னிறைவு நிலையை (self sufficiency) அடையவேண்டும் என்பது இன்று ஒரு முக்கியப் பொருளாதாரக் குறிக்கோளாகக் கருதப்பெறுகிறது. பன்னாட்டு வாணிப வளர்ச்சி இக் கருத்திற்கு முரண்பாடானது.

**ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு (Theory of Comparative Cost)**

பன்னாட்டு வாணிபம் ஏன் நடக்கிறது? நாடுகளிடையே ஏன் பண்டங்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகின்றன? இந்தியா ஏன் சணற் பண்டங்களை மிகுதியான அளவில் ஏற்றுமதி செய்கிறது? இங்கிலாந்து ஏன் தேயிலையை இறக்குமதி செய்கிறது? இவை ஓர் அடிப்படையான கேள்விகள். இரு நாடுகள் பண்டங்களைப் பரிமாறிக் கொள்ளுவதன்மூலம் இரு நாடுகளும் பயனடைகின்றன. இப் பயனைக் கருதியே பண்டங்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகின்றன என்று கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் (Classical Economists) கூறினர்கள். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கோட்பாடுதான் 'ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு' அல்லது 'ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு' (Theory of Comparative Cost) என்றழைக்கப்பெறுகிறது. இக் கோட்பாட்டினை முதன்முதலாக உருவாக்கியவர் இங்கிலாந்தில் வாழ்ந்த டேவிட் ரிகார்டோ (David Ricardo) என்னும் பொருளாதார வல்லுநர் என்ற எண்ணம் சாதாரண வழக்கில் இருந்து வருகிறது. பொருளியல் ஆராய்ச்சியாளர்கள் இக் கோட்பாட்டினைப் புனைந்தவர் ரிகார்டோ அல்லர் டார்ரென்ஸ் (Torrens) என்பவர்தாம் என்று கூறுவர். ரிகார்டோவின் பெயரே சாதாரண வழக்கில் இருந்து வருவதால் அப் பெயரையே நாமும் கையாளலாம்.

பண்டங்களின் உற்பத்திச் செலவில் (cost of production) இருக்கும் வேற்றுமையே பன்னாட்டு வாணிபத்திற்குக் காரணமாகு

அமைகிறது. ஒருசில நாடுகள் சில பண்டங்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடும். வேறுசில பண்டங்களின் உற்பத்திச் செலவு அல்லது கிரயம் மற்ற நாடுகளில் இருப்பதை விட அதிகமாக இருக்கும். இதைப் போன்றே மற்றும் சில நாடுகளில் சில பண்டங்களின் உற்பத்திச் செலவு குறைவாகவும், வேறுசில பண்டங்களில் உயர்வாகவும் இருக்கக்கூடும். உதாரணமாக, A, B என்று இரு நாடுகளை எடுத்துக்கொள்வோம். பல பண்டங்களில் இவ்விரு நாடுகளிலும் ஏறத்தாழ உற்பத்திச் செலவு ஒரே மட்டமாக இருக்கலாம். அப்படி ஏதாவது சிறு வேறுபாடு இருந்தாலும் பண்டத்தை ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு அனுப்பிவைப்பதற்காகும் செலவின் அளவுக்குத்தான் இருக்கலாம். ஆனால், வேறு சில பண்டங்களில் இரு நாடுகளின் உற்பத்தித் திறனும் ஒன்றுக்கொன்று பெருமளவில் மாறுபட்டிருக்கலாம். A சில பண்டங்களின் உற்பத்தியில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்கலாம். அதைப் போன்றே B நாடும் மற்றும் சில பண்டங்களில் தேர்ச்சி பெற்றிருக்கலாம். A, B இரு நாடுகளும் எல்லாப் பண்டங்களையும் தனித்தனியாக உள் நாட்டிலேயே உற்பத்தி செய்வதைவிட A தான் தேர்ச்சி பெற்றுள்ள பண்டங்களின் உற்பத்தியில் மேலும் முனைந்து ஈடுபட்டுத் தனக்குத் தேவையானது போக எஞ்சியதை B நாட்டுக்கு அனுப்பிவைத்து, அதற்கெதிராக B நாடு தேர்ச்சி யடைந்துள்ள பண்டங்களை மாற்றிக்கொள்ளலாம். A உள் நாட்டைவிடக் குறைந்த உற்பத்திச் செலவில் சில பண்டங்களை B யிடமிருந்து பெறலாம். அதே போல B உள்நாட்டைவிடக் குறைந்த உற்பத்திச் செலவில் A யிடமிருந்து பெறலாம். A, B இரு நாடுகளும் இலாபமடைகின்றன. ஒரு நாடும் நட்டத்திற்குள்ளாவதில்லை. சில பண்டங்களை A, B நாடுகள் தனித்தனியாக உற்பத்தி செய்வதைக்காட்டிலும், அவ்விரு நாடுகளிடையே வாணிபத் தொடர்பு ஏற்பட்டதும், அப் பண்டங்களின் மொத்த உற்பத்தி அதிகமாக இருக்கும். இந்த உற்பத்திப் பெருக்கத்தின் பலனை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளுகின்றன.

மேற்கூறிய தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததுதான் 'ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு'. ரிகார்டோ அவர்கள் முதன் முதலாகத் தீட்டிய இக் கோட்பாட்டை J. S. மில் (J.S. Mill), டாசிக் (Taussiq), மார்ஷல் (Marshall) போன்ற வல்லுநர்கள் திருத்தியமைத்துச் செப்பனிட்டு மெருகு பூசித் தந்துள்ளார்கள். பண்டங்களின் உற்பத்திச் செலவில் இருக்கும் வேறுபாட்டினால் தான் பன்னாட்டு வாணிபம் நடக்கிறது என்று மேலே கண்டோம். உற்பத்திச் செலவு என்று கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் கூறியது ஒரு குறிப்பிட்ட பொருளில்தான் என்பதை இங்குச்

சுட்டிக்காட்டவேண்டியது அவசியமாகும். உழைப்புச் செலவைத் தான் (labour cost of production) அவர்கள் உற்பத்திச் செலவு என்று குறிப்பிட்டார்கள். அஃதாவது, ஒரு குறிப்பிட்ட பண்டத்தைச் செய்துமுடிக்க இரண்டு ஆட்களின் உழைப்புத் தேவைப்பட்டால் அப் பண்டத்தின் உற்பத்திச் செலவு இரண்டு ஆட்களின் உழைப்புச் செலவாகும். ஓர் ஆட்கூலி ஐந்து ரூபாய் என்றால், அப் பண்டத்தின் கிரயம் பத்து ரூபாயாகும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் 'ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடு' வரையப் பெற்றிருக்கிறது. அடிப்படைக் கருத்துத் தவறானதால் 'ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாடும்' குறைபாடுடையது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இக் கோட்பாட்டின்படி பண்டங்களின் உற்பத்திச் செலவில் நாடுகளிடையே வேறுபாடுகள் இருக்கின்றன. உற்பத்திச் செலவில் இருக்கும் வேறுபாடுகள் மூன்று வகையாக இருக்கக் கூடும். அவையாவன: (1) முழுநிலைக் கிரய வேறுபாடு (Absolute difference in cost); (2) ஒப்பீட்டுக் கிரய வேறுபாடு (Comparative difference in cost); (3) சமநிலைக் கிரய வேறுபாடு (Equal difference in cost).

**முழுநிலைக் கிரய வேறுபாடு** (Absolute Difference in Cost)

A, B என்று இரு நாடுகளும், X, Y என்று இரு பண்டங்களும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். X, Y பண்டங்களின் உற்பத்திச் செலவு (கிரயம்) இரு நாடுகளிலும் கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கிறது என்றும் கற்பனை செய்துகொள்வோம்.

| **நாடு** | **பண்டம்** | **கிரயம்** |
|---|---|---|
| A | ஓர் அலகு X | 10 அலகு உழைப்பு |
| | ஓர் அலகு Y | 20 அலகு உழைப்பு |
| B | ஓர் அலகு X | 20 அலகு உழைப்பு |
| | ஓர் அலகு Y | 10 அலகு உழைப்பு |

இரு நாடுகளிலும் பண்டங்களின் உற்பத்திச் செலவு முற்றிலும் மாறுபட்டிருப்பதைத் தெளிவாகக் காணலாம். X பண்டத்தின் உற்பத்தியில் A நாடும், Y பண்டத்தில் B நாடும் நல்ல தேர்ச்சிபெற்றிருக்கின்றன. A, B இரு நாடுகளும் முறையே X, Y பண்டங்களின் உற்பத்தியில் முனைப்பாக ஈடுபட்டு, இவ் விரு பண்டங்களையும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்வதால் இரு நாடுகளும் பயனடைகின்றன.

**ஒப்பீட்டுக் கிரய வேறுபாடு** (Comparative Difference in Cost)

பன்னாட்டு வாணிபத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த முழுநிலை வேறுபாட்டை விளக்கிக் காட்டியவர் ஆடம் ஸ்மித் அவர்கள். அவருக்குப் பின்னர் வந்த டேவிட் ரிகார்டோ அவர்கள் அதற்கு ஒரு படி மேலே சென்று, இரு நாடுகளிடையே வாணிபம் நடக்க வேண்டுமானால் முழுநிலைக் கிரய வேறுபாடு இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒப்பீட்டுக் கிரய வேறுபாடு (comparative difference in cost) இருந்தாலே போதும் என்று விளக்கினர். ஒரு நாடு மற்றொரு நாட்டைவிட எல்லாப் பண்டங்களையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கலாம். இருந்தாலும்கூட ஒரு நாடு ஒருசில பண்டங்களின் உற்பத்தியிலும் மற்றொரு நாடு வேறு சில பண்டங்களின் உற்பத்தியிலும் முனைப்பாக ஈடுபடுவதால் இரு நாடுகளும் பயனடையும். ரிகார்டோ தந்த விளக்கம் இக் கருத்தைத் தெளிவாக்கும்.

ரிகார்டோவைப் பின்பற்றி இங்கிலாந்து, போர்ச்சுகல் இரு நாடுகளிலும் பண்டங்களின் உற்பத்திச் செலவு பின்வருமாறு அமைந்திருக்கிறது என்று நாமும் கற்பனை செய்துகொள்வோம். இங்கிலாந்தில் ஓர் அலகுத் துணியை உற்பத்தி செய்ய 100 அலகுகள் உழைப்பும், ஓர் அலகு மதுபானத்தைத் தயாரிக்க 120 அலகுகள் உழைப்பும் தேவைப்படுகின்றன. போர்ச்சுகல் நாட்டில் ஓர் அலகுத் துணியை உற்பத்தி செய்ய 90 அலகுகள் உழைப்பும், ஓர் அலகு மதுபானத்தைத் தயாரிக்க 80 அலகுகள் உழைப்பும் தேவைப்படுகின்றன. துணி, மதுபானம் இரு பண்டங்களின் உற்பத்தியிலும் போர்ச்சுகல் முழு நிலைத் தேர்ச்சி (absolute advantage) பெற்றிருக்கிறது. இருப்பினும், துணி உற்பத்தியை இங்கிலாந்துக்கு விட்டுவிட்டுத் தான் மதுபான உற்பத்தியில் முனைப்பாக ஈடுபடுவது போர்ச்சுகல் நாட்டுக்கு இலாபகரமாகவே இருக்கும்.

இதற்குக் காரணம் பின்வருமாறு: இவ்விரு நாடுகளிடையே வாணிபம் நடக்காவிட்டால், இங்கிலாந்தில் பண்டங்களின் மாற்று விகிதம் (exchange rate) 1 அலகு மதுபானம் = 1·2 அலகு துணி என்றிருக்கும். போர்ச்சுகல் நாட்டில் 1 அலகு மதுபானம் = ·88 அலகு துணி என்றிருக்கும். இங்கிலாந்தில் மதுபானத்தின் மதிப்பு உயர்மட்டத்திலும், போர்ச்சுகலில் துணியின் மதிப்பு உயர்மட்டத்திலும் இருக்கின்றன. இங்கிலாந்தில் உள்ளவர்கள் ஓர் அலகு மதுபானத்தைப் பெற 1·2 அலகு துணியை விட்டுக் கொடுக்கவேண்டும். போர்ச்சுகலில் உள்ளவர்கள் 1 அலகு மதுபானத்தைப் பெற ·88 அலகு துணியை விட்டுக்கொடுக்க

வேண்டும். இங்கிலாந்தில் உள்ளவர்கள் 1·2 அலகைவிடக் குறைந்த அளவுக்குத் துணியைக் கொடுத்து ஓர் அலகு மதுபானத்தையும், போர்ச்சுகலில் உள்ளவர்கள் 1 அலகு மதுபானத்தைக் கொடுத்து ·88 அலகுக்கு மேலான அளவில் துணியையும் பெறக்கூடிய நிலை ஏற்பட்டால், இரு நாடுகளுக்கும் அது இலாபகரமாகவே இருக்கும். இரு நாடுகளிடையே வாணிபத் தொடர்பு ஏற்பட்டு, இங்கிலாந்து துணியை ஏற்றுமதி செய்து, தனக்கு வேண்டிய மதுபானத்தைப் போர்ச்சுகல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து, அதே போல போர்ச்சுகல் தனக்கு வேண்டிய துணியை இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்தால், இரு நாடுகளும் பயனடையும். இரு நாடுகளும் துணி, மதுபானம் இரண்டையும் 1=1 என்ற விகிதத்தில் மாற்றிக்கொள்ளுகின்றன என்று வைத்துக் கொள்வோம். இரு நாடுகளுக்கும் அது இலாபகரமாகவே இருக்கும்.

இரு பண்டங்களின் உற்பத்தியிலும் போர்ச்சுகல் நாடு முழு நிலைத் தேர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால், இரு பண்டங்களின் உற்பத்தியையும் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, துணி உற்பத்தியைவிட மதுபான உற்பத்தியில் போர்ச்சுகல் நாட்டுக்கு இருக்கும் தேர்ச்சி அதிகமாக இருக்கிறது. அவ்வாறே இரு பண்டங்களின் உற்பத்தியிலும் இங்கிலாந்து தாழ்ச்சியுற்றிருக்கிறது. ஆனால், இரு பண்டங்களின் உற்பத்தியையும் ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, துணி உற்பத்தியை விட மதுபான உற்பத்தியில் இங்கிலாந்து அதிக அளவில் தாழ்ச்சியுற்றிருக்கிறது. இதன் காரணமாகத்தான் இந் நிலைக்கு ஒப்பீட்டுக் கிரய வேறுபாடு என்று பெயரிடப்பெற்றது.

**சமநிலைக் கிரய வேறுபாடு** (Equal Difference in Cost) : இரு நாடுகளிடையே பண்டங்களின் உற்பத்திச் செலவில் இருக்கும் வேறுபாடு சமநிலையில் இருந்தால், அந் நாடுகளிடையே வாணிபம் நடக்க முடியாது. ஏனெனில், அது ஒரு நாட்டுக்கும் இலாபகரமாக இருக்காது. உதாரணமாக, **A** என்னும் ஒரு நாட்டில் ஓர் அலகு **X** பண்டத்தை உற்பத்தி செய்ய 20 அலகுகள் உழைப்பும், ஓர் அலகு **Y** பண்டத்தை உற்பத்தி செய்ய 18 அலகுகள் உழைப்பும் தேவைப் படுகிறது என்று கற்பனை செய்துகொள்ளுவோம். அதே போல **B** என்னும் நாட்டில் ஓர் அலகு X பண்டத்தை உற்பத்தி செய்ய 10 அலகுகள் உழைப்பும், ஓர் அலகு Y பண்டத்தை உற்பத்தி செய்ய 9 அலகுகள் உழைப்பும் தேவைப்படுகிறது என்றும்

வைத்துக்கொள்வோம். இந்த நிலையில் A, B நாடுகளிடையே வாணிபம் இருக்க முடியாது. X, Y பண்டங்களின் மாற்று மதிப்பு A, B இரு நாடுகளிலும் ஒரே விகிதத்தில் இருப்பதுதான் (முறையே 18 : 20, 9 : 10) இதற்குக் காரணமாகும்.

**ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டிலுள்ள குறைபாடுகள்**

மேலே விளக்கிய ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டுக்கு அண்மைக் காலம் வரை நல்ல செல்வாக்கு இருந்துவந்தது. இன்றுங்கூட வைனர் (Jacob viner) போன்ற சில ஆசிரியர்கள் இக் கோட்பாட்டுக்கு நல்ல ஆதரவு தருகிறார்கள். ஆனால், ஹெக்ஷர் (Heckscher), ஓலின் (Bertil Ohlin) என்னும் இரண்டு ஆசிரியர்கள் இக் கோட்பாடு பன்னாட்டு வாணிபத் தன்மையை உண்மையான நிலையில் விளக்கிக் காட்டவில்லை என்று குற்றஞ் சாட்டி அதிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக அவர்கள் ஒரு புதிய கோட்பாட்டினைத் தந்திருக் கிறார்கள்; அவர்கள் தந்துள்ள கோட்பாட்டுக்குப் பொதுவான சமநிலைக் கோட்பாடு (General Equilibrium Theory) என்று பெயர்.

ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டில் காணக்கிடக்கும் குறைபாடுகளைச் சுருக்கமாக ஆராயலாம். இக் கோட்பாடு, ஒரு பண்டத்தின் மதிப்பு அப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்கான உழைப்புக்குச் சமனாக இருக்கும் என்று கூறும் உழைப்புக் கோட்பாட்டை (Labour Theory of Value) அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இது ஒரு பெருங் குறைபாடாகும். இரு நாடுகள், இரு பண்டங்கள் என்னும் உண்மைக்குப் புறம்பான ஓர் அனுமானத்தில் (assumption) இக் கோட்பாடு வரையப்பெற்றிருக்கிறது. நடைமுறையில் பன்னாட்டு வாணிபம் எண்ணிக்கையற்ற பண்டங்களில் நடக்கிறது; பல நாடுகளிடையே நடக்கிறது. இக் கோட்பாடு இத்தகைய உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லை. மேலும், இக் கோட்பாடு நாடுகளில் பண்டங்களின் உற்பத்தி மாறா விளைவு நிலையில் (constant returns) நடக்கிறது என்னும் அனுமானத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இதுவும் ஒரு தவறான கருத்தாகும். நடைமுறையில் மாறா விளைவு நிலையைக் காண்பது அரிது. உற்பத்தித்துறையில் சாதாரணமாகக் காணும் விதி குறைந்துசெல் விளைவு விதிதான் (Law of Diminishing Returns). நாடுகளிடையே பண்டங்களின் உற்பத்திச் செலவில் இருக்கும் வேறுபாடுதான் பன்னாட்டு வாணிபத்திற்குக் காரணம் என்று இக் கோட்பாடு கூறுகிறது. ஆனால், பண்டங்களை ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு அனுப்பிவைப்பதற்கு

ஆகும் தூக்குக் கூலியை (Transport Cost) இக் கோட்பாடு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. இக் குறைபாடுகளை நீக்கும் நோக்கத்துடன் பல ஆசிரியர்கள், குறிப்பாக ஹெபர்லர் (Heberler) —இக் கோட்பாட்டைத் திருத்தி அமைத்துள்ளனர். இவ்வாறு திருத்தியமைத்த கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. எனவே, புதிய கோட்பாடாகிய 'பொதுவான சமநிலைக் கோட்பாடு'தான் இன்று ஏற்றுக்கொள்ளப்பெறுகிறது.

# 20. வாணிபக் கைக்கோள் (Trade Policy) அல்லது வாணிபக் கொள்கை

பன்னாட்டு வாணிபம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று மேலே விளக்கினோம். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பன்னாட்டு வாணிபத்துறையில் அரசாங்கம் எத்தகைய கொள்கையைக் கையாளவேண்டும். அரசாங்கம் கையாளக்கூடிய கொள்கையை இரு பிரிவுகளாகக் கூறலாம். ஒன்று தடையிலா வாணிபக் கொள்கை (free trade policy), மற்றது தொழிற்காப்புக் கொள்கை (protection). இவை ஒவ்வொன்றுக்கும் ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் தரப்பட்டுள்ள வாதங்களின் எண்ணிக்கை மிக அதிகம். அவ் வாதங்களும் இன்று நேற்று முளைத்தவை அல்ல. நெடுங்காலமாகவே இருந்துவருகின்றன. இவை இரண்டில் எது சிறந்தது என்று திட்டமாகக் கூறமுடியாது. ஒரு நாடு கையாளக் கூடிய வாணிபக் கொள்கை அந் நாட்டுப் பொருளாதார நிலையைச் சார்ந்திருக்கிறது என்பது மட்டுமன்று இதற்குக் காரணம். நாடுகளின் பொருளாதார வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு கொள்கை நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது. என்பதை அறியலாம். பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுக் காலத்தில் மெர்கன்டலிசக் கொள்கை (Mercantalism) நிலவி வந்தது. அரசாங்கம் அயல்நாட்டு வாணிபத்தை முற்றிலும் கட்டுப்படுத்த வேண்டுமென்பது மெர்கன்டலிசக் கொள்கையின் அசைக்க முடியாத நம்பிக்கை. காலவாக்கில் நாடுகள் பலவும் மெர்கன்டலிசக் கொள்கையில் நம்பிக்கை இழந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதிலும் ஏறக்குறைய எல்லா நாடுகளும் தடையிலா வாணிபக் கொள்கையைப் பரவலாகக் கையாண்டன. இந் நூற்றாண்டின் தொடக்க நிலையில் தலையிடா வாணிபக் கொள்கையின் ஆணி வேர் ஆட்டம்கொள்ள ஆரம்பித்தது. முதல் உலகப் போரும், 1930 தொடங்கிப் பத்தாண்டுக் காலத்தில் எழுந்த 'மாபெரும் மந்தமும்' (Great Depression) அதை மேலும் ஆட்டி

அசக்கித் தடையிலா வாணிபக்கொள்கை முற்றிலும் மறைவதற்குக் காரணங்களாய் அமைந்தன. இன்றைய நிலையில் ஒவ்வொரு நாடும் அதன் அயல்நாட்டு வாணிபத்தில் தலையிட்டுப் பலவிதமான தடைகளை விதிப்பது சாதாரண வழக்கமாகிவிட்டது. வாணிபத் தடைகளைக் களைந்தெறிவதற்குப் பல சீரிய முயற்சிகள் இன்று நடந்துவருகின்றன. இந் நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பல பன்னாட்டு அமைப்புகளும் இயங்கிவருகின்றன. ஆனால், வாணிபத் தடைகளை நீக்கக்கூடிய அல்லது குறைக்கக் கூடிய அறிகுறிகள் இன்னும் தென்படவில்லை. ஒருவேளை எதிர் காலத்தில் தடையிலா வாணிபக் கொள்கை மீண்டும் மீட்சியுற்றுப் பழைய செல்வாக்கு நிலையை அடையலாம்.

### தடையிலா வாணிபமும் தொழிற்காப்புக் கொள்கையும்

தடையிலா வாணிபக் கொள்கை, தொழிற்காப்புக் கொள்கை இவ் விரண்டுக்கும் ஆதரவாகவும் எதிராகவும் பல காரணங்கள் எடுத்துக்காட்டப்பெறுகின்றன. தடையிலா வாணிபச் சார்பாக இருக்கும் வாதம், பன்னாட்டு வாணிபம் தடையின்றி நடந்து வந்தால் உலகில் பண்டங்களின் மொத்த உற்பத்திப் பெருக்க மடைந்து, அப் பெருக்கத்தால் கிடைக்கும் இலாபத்தை வாணி பத்தில் பங்கு பெறும் நாடுகள் அனைத்தும் பகிர்ந்துகொள்ளும் என்பதாகும். இது மறுக்க முடியாத உண்மை. ஒவ்வொரு நாடும் அதற்கு இயற்கையில் அனுகூலமாக அமைந்த பண்டங் களின் உற்பத்தியில் முனைப்பாக ஈடுபடுவதால் அத் துறைகளில் அந் நாடு சிறப்புத் தேர்ச்சி பெறுகிறது. இதனால் பண்டங்களின் மொத்த உற்பத்தி பெருகுவதோடு உற்பத்தியான பண்டங்கள் குறைந்த விலையில் கிடைக்கும். ஒவ்வொரு நாடும் தனக்குத் தேவையான பண்டங்கள் அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்ளும் நிலையைவிட வாணிபத்தில் ஈடுபடும்பொழுது மேம்பட்ட நிலையை அடையும்.

தடையிலா வாணிபத்திற்கு ஆதரவாகக் காட்டப்பெறும் காரணங்களைப் பின்வருமாறு கூறலாம். ஒரு நாட்டில் சில தொழில் களுக்குத் தேவையான இயற்கைவளம் இருக்கலாம். ஆனால், அத் தொழில்களைப் புதிதாக ஆரம்பிக்கும்பொழுது உற்பத்திச் செலவு சற்று உயர்வாகத்தானிருக்கும். தடையிலா வாணிபம் இருந்தால் இத் தொழில்களை முன்னதாகவே தொடங்கி நடத்தி வரும் நாடுகள் இந் நாடுகளுடன் போட்டியிடும். இள நிலையில் இருக்கும் தொழில்களுக்கு இந் நாடுகளிடும் போட்டியைச் சமா ளிக்கும் வன்மை இருக்காது. தேர்ச்சிபெற்ற மல்யுத்த வீரனுடன்

ஓர் இளம் பிள்ளை பலப் பரீட்சை பார்க்கமுடியுமா? இத் தொழில்கள் போட்டியால் நலிந்து அழிந்துவிடும். எனவே, நேரிடைப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெறும் வரையில், இத் தொழில்களை ஆதரவு காட்டி வளர்ப்பதற்குத் தொழிற்காப்புக் கொள்கை அவசியமாகிறது. தடையிலா வாணி பத்தில் ஒருசில நாடுகள் தங்களுக்குத் தேவையான சில முக்கியப் பண்டங்களுக்குப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியையே நம்பி வாழவேண்டிய நிலை ஏற்படும். ஒவ்வொரு நாடும் சில முக்கியப் பண்டங்களைப் பொறுத்த அளவிலாவது தன்னிறைவு (self-sufficiency) நிலையை அடையவேண்டும். இதற்குத் தொழிற் காப்புக் கொள்கை துணையாக இருக்கும். நாட்டின் தற்காப்புக்குத் தேவையான போர்த் தளவாடங்களுக்கும் கருவிகளுக்கும் பிற நாட்டை எதிர்பார்த்து இருப்பது தவறானது என்பது மட்டுமன்று, ஆபத்தானதுங்கூட. இத் துறையில் உற்பத்திச் செலவு அதிகமா, குறைவா என்பது நோக்கமாயிருக்கக்கூடாது. அவைகளை முடிந்தவரை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யவேண்டும். இதற்குத் தொழிற்காப்புக் கொள்கை அவசியமாகிறது.

மேலே கூறிய காரணங்களெல்லாம் எல்லா நாடுகளுக்கும் பொதுப்படையான காரணங்கள். இந்தியா போன்ற பொருளா தார வளர்ச்சியில் பின்தங்கிய நாடுகள் எத்தகைய வாணிபக் கொள்கையைக் கையாள வேண்டும் எனில், ஐயமின்றித் தொழிற் காப்புக் கொள்கையைக் கையாள வேண்டும் என்று கூறலாம். அதோடு இந்தியாவில் பொருளாதாரத் திட்டம் நடைமுறையில் இருந்துவருவதால் அயல்நாட்டு வாணிபத்தில் அரசாங்கம் தலையிட்டு ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் திட்டத்திற்கு ஏதுவாகக் கட்டுப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அவசியம்.

**அயல் நாட்டு வாணிப நிலை** (Balance of Trade)

பண்டங்களை ஏற்றுமதி செய்யும்பொழுது ஒரு நாடு பிற நாட்டிலிருந்து பணத்தைப் பெறுகிறது. இறக்குமதி செய்யும் பொழுது பணத்தைச் செலுத்தவேண்டியிருக்கிறது. பண்ட ஏற்றுமதி, இறக்குமதியைப் புலனாகும் ஏற்றுமதி இறக்குமதி (visible exports and visible imports) என்றழைப்பது வழக்கம். ஒரு குறிப்பிட்ட கால அளவில் ஒரு நாட்டிலிருந்து ஏற்றுமதி யாகும், புலனாகும் ஏற்றுமதி மதிப்பிற்கும், அந் நாடு இறக்குமதி செய்யும் புலனாகும் இறக்குமதி மதிப்பிற்கும் (value of visible imports) உள்ள வித்தியாசத்தை அயல் நாட்டு வாணிப நிலை (balance of trade) என்று கூறுவர். அயல் நாட்டு வாணிப

நிலையைக் கணக்கிடச் சாதாரணமாக ஓர் ஆண்டுக் காலத்தை எடுத்துக்கொள்வது வழக்கம். இறக்குமதி மதிப்பைவிட ஏற்றுமதி மதிப்பு அதிகமாக இருந்தால் அந் நிலைக்கு 'அயல்நாட்டு வாணிபச் சாதக நிலை' (Favourable Balance of Trade) என்றும், ஏற்றுமதி மதிப்பைவிட இறக்குமதி மதிப்பு அதிகமாக இருந்தால் அந் நிலைக்கு 'அயல்நாட்டு வாணிபப் பாதக நிலை' (Adverse Balance of Trade) என்றும் கூறுவர்.

**அயல்நாட்டுச் செலுத்து நிலை** (Balance of Payments)

புலனுகும் ஏற்றுமதி, இறக்குமதி இவைகளையன்றி வேறு பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால் ஒரு நாடு பிற நாடுகளிலிருந்து பணத்தைப் பெறுகிறது; பணத்தைச் செலுத்தவும் வேண்டியிருக்கிறது. உதாரணமாக, இந்தியாவிலிருந்து பொறியியல் துறை மாணவர் ஒருவர் மேற்படிப்புக்காக அமெரிக்க சர்வகலாசாலை ஒன்றில் இரண்டாண்டுக் காலம் தங்குவதற்கு 4,000 டாலர் செலவாகிறது என்று வைத்துக்கொள்வோம். அத் தொகையைப் பெறுவதற்காக அதற்கு ஈடான ரூ 20,000 (ஏறக்குறைய) தொகையை அவர் செலுத்த வேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து 4,000 டாலர் பெறுமானமுள்ள பண்டங்களின் இறக்குமதியைப் போன்றதுதான் இந் நடவடிக்கை. ஆனால், இந்த இறக்குமதி கண்ணுக்குப் புலனுவதில்லை. எனவே, இத்தகைய நடவடிக்கைகளைப் புலனுகா இறக்குமதிகள் (invisible imports) என்றழைக்கலாம். அதே போல, அமெரிக்கத் தம்பதிகள் இருவர் இந்தியாவைச் சுற்றிப் பார்ப்பதற்காக இங்கு வந்து சிறிது காலம் தங்கி மொத்தம் ரூ 10,000 செலவழிக்கிருர்கள் என்ருல், அத் தொகைக்கு ஈடான 2,000 டாலர் (ஏறக்குறைய) இந்தியாவுக்குக் கிடைக்கும். இந்தியா 2,000 டாலர் மதிப்புள்ள கைத்தறியாடைகளை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதைப் போன்றது இந் நடவடிக்கை. இதைப் புலனுகா ஏற்றுமதி (invisible export) என்றழைக்கலாம். இவ்வாறு பல நடவடிக்கைகள் இருக்கின்றன. புலனுகும் ஏற்றுமதி, இறக்குமதி, பலவகையான புலனுகா ஏற்றுமதி, இறக்குமதி இவை அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவில் ஒரு நாடு பிற நாடுகளுக்குச் செலுத்து செய்ய வேண்டியிருக்கிறதா அல்லது அந்நியச் செலாவணியைப் பெற வேண்டியிருக்கிறதா என்று அறிவிக்கும் ஒரு கணக்கு முறைதான் 'அயல்நாட்டுச் செலுத்து நிலை' என்பது. அயல்நாட்டுச் செலுத்து நிலையைச் சாதாரணமாக ஓர் ஆண்டுக் கால அளவுக்கு வகுப்பது வழக்கம். புலனுகும் ஏற்றுமதி, இறக்குமதி இவை இரண்டு மட்டும் அடங்கியது 'அயல்

நாட்டு வாணிப நிலை'. புலனாகும், புலனாகா இவ்விரு நடவடிக்கைகள் அனைத்தையும் அடக்கியது 'அயல்நாட்டுச் செலுத்துநிலை'. எனவே, அயல்நாட்டுச் செலுத்துநிலையின் ஒரு பெரும் பிரிவுதான் அயல்நாட்டு வாணிப நிலை என்பதை அறியலாம்.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் அடங்கியுள்ள மற்ற இனங்கள் பின்வருமாறு:

**போக்கு வரவு** (Transportation): ஒரு நாட்டுக் கப்பல், விமானம் இவற்றை மற்றொரு நாடு பயன்படுத்தும்பொழுது பயன்படுத்தும் நாடு உரிமையுள்ள நாட்டுக்குச் செலுத்துச் செய்ய வேண்டும். இந்திய விமானத்தைப் பிற நாட்டினர் உபயோகிக்கும்பொழுது அதன்மூலம் கிடைக்கும் ஊதியம் இந்தியாவுக்கு வரவு. பிற நாட்டுக் கப்பலை இந்தியா பயன்படுத்தும் பொழுது இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி செலவாகிறது.

**சுற்றுலாச் செலவு** (Tourist Expenditure): சுற்றுலாவுக்காக அந்நியர்கள் இந்தியாவுக்கு வரும்பொழுது இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இந்தியர்கள் அயல் நாட்டுக்குச் செல்லும்பொழுது இந்தியாவுக்கு அது செலுத்து இனம்.

**பாங்குகள், ஈட்டுறுதிக் கம்பெனிகள்:** இந்திய பாங்குகளும் ஈட்டுறுதிக் கம்பெனிகளும் பிற நாடுகளில் இயங்கி வருகின்றன. அதே போன்று பிற நாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் பணியாற்றி வருகின்றன. இவைகள் ஈட்டும் ஊதியங்கள் இந்தியாவுக்கு முறையே வரவு இனங்களும் செலவினங்களுமாகும்.

**முதலீடுகள்** (Investments): அயல்நாட்டு மூலதனம் இந்தியாவில் முதலீடு செய்யப்பெறுகிறது. இந்திய மூலதனமும் (சற்றுக் குறைந்த அளவில்) வெளி நாடுகளில் முதலீடு செய்யப் பெறுகின்றது. முதலீட்டின்மூலம் கிடைக்கும் இலாபமும் வட்டித் தொகையும் ஒவ்வொரு நாட்டின் வரவு இனமாகும்.

**தூதுவர் ஆலயங்கள்** (Embassies): ஏறக் குறைய எல்லா நாடுகளும் பிற நாடுகளில் தூதுவர் ஆலயங்களை வைத்திருக்கின்றன. ஒரு நாட்டின் தூதுவர் ஆலயச் செலவுத் தொகை அந்நாட்டின் செலுத்து இனமாகும்.

**மூலதன ஏற்றுமதி இறக்குமதி**: மூலதனம் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குச் செல்கிறது. மூலதனத்தை இறக்குமதி செய்யும் நாட்டுக்கு அது வரவு இனம்; ஏற்றுமதி செய்யும் நாட்டுக்கு அது செலுத்து இனம். உலக பாங்கிலிருந்து (World Bank) மூலதனத்தை இந்தியா கடனாகப் பெற்றால் அயல்நாட்டுச் செலுத்து நிலையைப் பொறுத்த அளவில் இந்தியாவுக்கு அது வரவு இனமாகும். இந்தியா அத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்பொழுது அது செலவினமாகும். இதைத் தெளிவாக அறியவேண்டும்.

**சமநிலை கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை** (Disequilibrium in Balance of Payments)

ஒரு நாட்டின் அயல்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் வரவும் செலவும் சமனாக இருந்தால், அந் நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையில் இருக்கும். வரவுத் தொகைக்கும் செலவுத் தொகைக்கும் வேறுபாடு இருந்தால் அதைச் 'சமநிலை கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்து நிலை' என்றழைக்கலாம். வரவை விடச் செலவு, செலவை விட வரவு இவ்விரு நிலைகளும் கேடுற்ற செலுத்துநிலைகள்தாம். வரவு, செலவைவிட அதிகமாக இருக்கும்பொழுது பிரச்சினை எழுவதில்லை. எனவே, நடைமுறையில் 'சமநிலை கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலை' என்பது வரவைவிடச் செலவு அதிகமாக இருக்கும் நிலையைத்தான் குறிக்கும்.

ஒரு நாட்டில் தோன்றும் பல பொருளாதாரப் பிரச்சினைகளுள் கேடுற்ற செலுத்துநிலை மிகவும் முக்கியம் வாய்ந்தது; கொடுமை செய்யக்கூடியது. ஒரு நாட்டில் ஒவ்வோர் ஆண்டிலும் செலுத்துநிலை சமநிலையில் இருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை; அப்படி இருக்கவும் முடியாது. ஓர் ஆண்டில் பற்றுக்குறை எழலாம். அடுத்த ஆண்டில் மிகுதியிருந்தால் அது முந்திய ஆண்டின் பற்றுக்குறைக்கு ஈடுசெய்யும். இத்தகைய கேடுற்ற நிலை தற்காலிகமாக இருப்பது. ஆனால், கேடுற்ற செலுத்துநிலை நீண்டகாலத்திற்கு நிலைத்துவிட்டால் அது பெரும் பிரச்சினையாகிவிடும். முடிவில் நாடு அயல்நாட்டுச் செலவைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். அந் நிலை ஏற்பட்ட பிறகு மீட்சியுறுவதும் எளிதன்று.

கேடுற்ற செலுத்துநிலை ஏற்படுவதற்குக் காரணம் என்ன? நாட்டின் மொத்த இறக்குமதி மதிப்பு மொத்த ஏற்றுமதி மதிப்பை விட (புலனாகும் ஏற்றுமதிகள், இறக்குமதிகள், புலனாகா ஏற்று

மதிகள், இறக்குமதிகள் இவை இரண்டையும் அடக்கிய மதிப்பு) அதிகமாக இருப்பதால்தான் கேடுற்ற செலுத்துநிலை ஏற்படுகிறது. அஃதாவது, ஒரு நாட்டில் இறக்குமதிகள் ஆண்டாண்டுக்குப் பெருகிக்கொண்டிருக்கவேண்டும்; அல்லது ஏற்றுமதிகள் குறைந்து கொண்டிருக்கவேண்டும்; அல்லது இறக்குமதிகளில் இருக்கும் அளவுக்கு ஏற்றுமதிகளில் பெருக்கம் இல்லாமல் இருக்கவேண்டும். சுருக்கமாகக் கூறினல் அந் நாட்டின் உற்பத்திப் பெருக்கத்தை விடத் தேவைப் பெருக்கம் அதிகமாக இருக்கிறது என்று பொருள். பொருளாதார வன்மையை இழந்துவரும் ஒரு நாட்டில்தான் இந் நிலையைக் காணலாம். ஒரு நாடு போதுமான அளவுக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை என்ருல், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அந் நாட்டுக்கு உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறது என்பதைத்தான் குறிக்கும்.

ஒரு நாட்டில் பண வீக்கம் இருந்து, பண்டங்களின் விலை மட்டம் உயர்ந்துவந்தால் அந் நாட்டுச் செலுத்துநிலை கேடுறும். ஒரு நாடு எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பது அந் நாடு ஏற்றுமதி செய்ய விரும்பும் பண்டங்களின் விலை மட்டத்தையும் தரத்தையும் பொறுத்துத்தானிருக்கிறது. குறைந்த விலையில் தரமுள்ள பண்டங்களை உற்பத்தி செய்தால் அப் பண்டங்களுக்கு அயல்நாடுகளில் நல்ல தேவை இருக்கும். நாட்டில் பணவீக்கம் இருந்தால் அதன் ஏற்றுமதி சக்தி குறைந்து விடுகிறது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. பண வீக்க காலத்தில் உள்நாட்டில் தேவைப் பெருக்கம் அதிகமாக இருப்பதால், பண்டங்களின் மொத்த உற்பத்தியில் உள்நாட்டு நுகர்வு போக எஞ்சி நிற்கும் உபரி குறைவாக இருக்கும் உபரியே இல்லாமல்கூட இருக்கும். அதே நேரத்தில் அயல்நாட்டுப் பண்டங்களுக்கு உள்நாட்டில் தேவை பெருகிக்கொண்டே இருக்கும்.

பொருளாதாரத் திட்டத்தைக் கையாளும் நாடுகளில் அயல் நாட்டுச் செலுத்துநிலை சாதாரணமாகக் கேடுற்றுத்தான் இருக்கும். இந்தியா இன்று இந்த நிலையில்தானிருக்கிறது. ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலை அந் நாட்டின் பொருளாதார நிலையைப் பிரதிபலிக்கும். இந்தியாவின் இன்றையச் செலுத்து நிலை கேடுற்றிருக்கிறது. எனவே, இந்தியா தன்னுடைய பொருளாதார வலியையும் திறனையும் இழந்துவிட்டது என்னும் முடிவுக்கு வருவது தவருன கருத்தாகும். கேடுற்ற செலுத்துநிலை திட்ட நாடுகளில் ஓரளவுக்குத் தவிர்க்கமுடியாத ஒன்ருகும். அந் நாடுகள் இந்த இன்னலை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். இதற்குக் காரணம் பின்வருமாறு:

பொருளாதாரத் திட்டத்தைச் செயற்படுத்தும்பொழுது, அரசாங்கம் நாட்டில் இதுவரை இல்லாத பல புதிய தொழில்களைத் தொடங்குவதில் ஈடுபடும். புதிய தொழில்களைப் பெருமளவில் ஆரம்பிக்கும்பொழுது அத் தொழில்களுக்குத் தேவையான தளவாடங்கள், முதற் கருவிகள் (capital goods), இரசாயனப் பொருள்கள், மூலப் பொருள்கள் இவற்றை அயல் நாடுகளிலிருந்துதான் தருவித்தாக வேண்டும். இதனால் நாட்டில் இறக்குமதி பெருக்கமடைவதில் வியப்பில்லை: ஏற்றுமதிகள் அந்த அளவுக்கு உடனடியாகப் பெருக முடியாது. புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற தொழில்கள் செயற்படத் தொடங்கி, வளர்ந்து பலவகையான பண்டங்களின் உற்பத்தி அளவைப் பெருக்கிய பிறகுதான் ஏற்றுமதிகளில் பெருக்கத்தைக் காணலாம். இதை உடனடியாக எதிர்பார்க்கமுடியாது. பத்துப் பதினைந்து ஆண்டுக் கால இடைவெளி அவசியமாகிறது. இந்த இடைவெளிக் காலத்தில் செலுத்துநிலை கேடுறுவது இயற்கையே.

**சமநிலை கேடுற்ற அயல்நாட்டுச் செலுத்துநிலையைத் திருத்தும் வழிகள்**

கேடுற்ற செலுத்துநிலையைத் திருத்த அரசாங்கம் சில வழிகளைக் கையாளலாம். முதலாவதாக இறக்குமதிகளைக் குறைக்க வேண்டும். அவசியமற்ற போகப் பொருள்களின் (luxuries) இறக்குமதியை முற்றிலும் தடை செய்யலாம். மற்றும் சில பண்டங்களின் மீது தீர்வைகளை விதித்து, அல்லது தீர்வைக் கட்டணத்தை உயர்த்தி அப் பண்டங்களின் இறக்குமதியை மட்டுப்படுத்தலாம். உரிமை (license) பெற்ற வணிகர்கள்தாம் இறக்குமதி செய்யலாம் என்று விதிப்பதன் மூலம் மொத்த இறக்குமதியை அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கலாம்.

இறக்குமதிகளைக் குறைப்பதுடன் ஏற்றுமதிகளையும் பெருக்க வேண்டும். ஏற்றுமதிகள் பெருகுவதற்கான வழி துறைகள் அனைத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். ஏற்றுமதியாளர்களுக்குப் பல சலுகைகளை அளிக்கலாம்; பண உதவி கொடுக்கலாம்.

நாட்டில் பணவீக்கம் இருந்தால் அதை உடனடியாகத் திருத்தி விலை மட்டம் மேலும் உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். செலுத்துநிலை மிகவும் கேடுற்றிருந்தால் அரசாங்கம் பணவாட்டக் கொள்கையைக்கூடக் கையாளலாம்.

மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு இணைப்பாக இருக்கும் வழியில் 'அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டை' (exchange control) நடைமுறைக்குக் கொண்டுவரலாம். நாட்டில் ஏற்றுமதியாளர்கள் பண்டங்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலாவணியைப் பெறுகிறார்கள். அவர்கள் ஈட்டிய அந்நியச் செலாவணியை அவர்கள் இச்சைபோல் செலவிடமுடியாது. அந்நியச் செலாவணித் தொகை அனைத்தையும் அரசாங்கத்திடம் அல்லது மைய பாங்கிடம் கொடுத்துவிட வேண்டும். நாட்டில் இருக்கும் நிலைக்கும் தேவைக்கும் ஏற்றாற்போல் அரசாங்கம் அத் தொகையை இறக்குமதியாளர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும். இத்தகைய ஒரு முறைக்குத்தான் 'அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு' என்று பெயர். இத்தகைய கட்டுப்பாடு இந்தியாவில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இவ் வழிகள் அனைத்தும் எதிர்பார்த்த பலனை அளிக்காவிட்டால் நாணய அயல்நாட்டு மதிப்பை (external value of money) குறைக்கும் முறையைக் கையாளலாம். அஃதாவது, நாட்டின் நாணய மாற்று மதிப்பைக் குறைக்கவேண்டும். உதாரணமாக, ரூபாய், டாலர் இவ்விரு நாணயங்களின் மாற்று விகிதம் 1$= ரூ. 5 என்றிருந்தால் அதை மாற்றி 1$ = ரூ. 6 என்று அமைத்துவிடுவது. இப்படிச் செய்வதால் அமெரிக்காவில் இந்தியப் பண்டங்களின் விலைமட்டம் குறையும். எனவே, இந்தியப் பண்டங்களுக்கு அமெரிக்காவில் இருக்கும் தேவை பெருகும். அதே போல இந்தியாவில் அமெரிக்கப் பண்டங்களின் விலை மட்டம் உயரும். இதனால் அமெரிக்கப் பண்டங்களுக்கு இந்தியாவில் இருக்கும் தேவை குறையும். இந்தியாவின் மொத்த இறக்குமதி குறையும், மொத்த ஏற்றுமதி பெருகும்.

மேற்கூறிய வழிகள் அனைத்தும் பயனுள்ளவை என்றாலும், ஒரு நாட்டின் கேடுற்ற செலுத்துநிலையை நிரந்தரமாகத் திருத்தியமைக்க வேண்டுமென்றால் நாட்டின் ஏற்றுமதிகளைப் பெருக்க வேண்டும். பண்ட ஏற்றுமதிகள் இயற்கையாகவே பெருக வேண்டுமானால் நாட்டில் பண்ட உற்பத்தி அளவும் பெருக வேண்டும்.

### இந்தியாவின் அயல்நாட்டு வாணிபப் போக்கு

திட்டகாலத்தில் இந்தியாவில் அயல்நாட்டு வாணிபம் பெரும் மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கிறது. இது இயற்கையே. பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் பொருளாதார வளர்ச்சியைப் பெற முயலும் நாடுகளின் அயல்நாட்டு வாணிபம்

பெரிதும் மாறுபடும். அண்மை ஆண்டுகளுக்கான இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிகளின் மதிப்பைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| ஆண்டு | ஏற்றுமதி கோடி ரூபாயில் | இறக்குமதி கோடி ரூபாயில் | வேறுபாடு |
|---|---|---|---|
| 1950—51 | 646·8 | 650·3 | — 3·5 |
| 51—52 | 730·1 | 962·9 | —232·8 |
| 56—57 | 635·2 | 1102·1 | —466·9 |
| 61—62 | 668·3 | 1006·0 | —337·7 |
| 62—63 | 682·2 | 1091·3 | —409·1 |

திட்டகாலம் முழுவதும் இந்தியாவின் வாணிபநிலை பாதகமாகவே (ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகமாக) இருக்கிறது என்பதைப் பட்டியலிலிருந்து அறியலாம். ஒரு நாட்டில் பாதக வாணிபநிலை, அந் நாட்டின் ஏற்றுமதிகள் குறைவதாலோ அல்லது இறக்குமதிகள் பெருகுவதாலோ எழலாம். இந்தியாவைப் பொறுத்த அளவில் இறக்குமதிப் பெருக்கத்தினாலேயே பாதக வாணிபநிலை தோன்றியிருக்கிறது. ஏற்றுமதிகளின் மொத்த மதிப்பு ஏறக்குறைய மாற்றமே இல்லாமல் ஒரு நிலையில் இருக்கிறது. இறக்குமதி பெருமளவில் உயர்ந்திருக்கிறது. 1950–51-ல் ரூ. 650·3 கோடியாக இருந்த இறக்குமதி 1962–63-ல் 1091·3 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. இதனால் ஒவ்வோர் ஆண்டிலும் இறக்குமதி உபரி (import surplus) இருந்துவருகிறது. இவ்வாறு பெருகிவரும் இறக்குமதி உபரிநிலை இந்தியாவில் இன்றுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுள் மிகவும் சிக்கலான ஒன்றாகும். நாட்டில் அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு இருப்பதற்கு இந்நிலைதான் மூலகாரணமாகும்.

இந்தியாவின் பாதக வாணிப நிலைக்குக் காரணம் என்ன? இறக்குமதிகள் உயர்ந்துகொண்டே வருவதும் ஏற்றுமதிகள் பெருகாமல் நிலையாக இருப்பதும்தான் காரணங்கள் என்பது வெளிப்படையானதாகும். இறக்குமதிகள் ஏன் உயர்ந்துகொண்டு வருகின்றன, ஏற்றுமதிகளில் ஏன் பெருக்கம் இல்லை என்னும் வினாக்களுக்கு விடை கண்டால் அதுவே இந்தியாவின் பாதக வாணிப நிலைக்கு விளக்கமாக அமையும். இறக்குமதிப் பெருக்கத்தை எளிதாக விளக்கலாம். ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்ததும் இறக்குமதிப் பண்டங்களுக்கு இருந்த

நம்முடைய தேவை (demand) பெருகத் தொடங்கியது. குறிப்பாக, இரண்டாம் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு முதலிடம் அளிக்கப் பெற்றது. பல புதிய தொழில்களை முதன்முறையாக நாட்டில் நிறுவும்போது இயந்திரக் கருவிகளையும், இரசாயனப் பொருள் களையும், உள் நாட்டில் கிடைக்காத கச்சாப் பொருள்களையும் பெருமளவில் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டி யிருக்கிறது. இப் பண்டங்களைப் பொறுத்த அளவில் நாடு தன்னிறைவு நிலையை (self sufficiency) அடைய வெகுகாலம் ஆகும். அதுவரை இப் பண்டங்களை இறக்குமதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இக் காரணத்தால்தான் இந்திய இறக்குமதி உயர்ந்துகொண்டே இருக்கிறது.

ஆனால், ஏற்றுமதிகள் உயரவே இல்லை. ஏற்றுமதிகளும் ஓரளவுக்கு உயர்ந்திருந்தால் இந்திய அயல்நாட்டு வாணிபம் பெரும் பிரச்சினையாக மாறியிருக்காது. சாதாரணமாகப் பொருளா தாரத் துறையில் பின்தங்கிய நாடுகளில் ஏற்றுமதிகளை உடனடி யாகப் பெருக்குவது அவ்வளவு எளிதான செயலன்று. ஏனெனில், இந்தியா போன்ற நாட்டின் ஏற்றுமதிகளுக்கு நல்ல தேவை இருப்பதில்லை. நம்முடைய மொத்த ஏற்றுமதியில் பெருமளவும் விவசாயப் பண்டங்களாகவும் கச்சாப் பொருள்களாகவுமே இருக் கின்றன. இப் பண்டங்களுக்கு உலகச் சந்தையில் அதிகமாகத் தேவை இல்லை.

மற்றொரு காரணத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும். பல ஏற்றுமதிப் பண்டங்களுக்கும் உள் நாட்டிலேயே நல்ல தேவைப் பெருக்கம் இருப்பதால் நம்முடைய உற்பத்தியாளர்களுக்கு அயல் நாட்டுச் சந்தைகளை நாடிப் போக வேண்டிய அவசியம் எழுவ தில்லை. அவர்கள் உள்நாட்டிலேயே அப் பண்டங்களை விலை யாக்கி இலகுவாக இலாபமடையலாம்.

மேலும், நாட்டில் பணவீக்கம் இருப்பதால் நம்முடைய பண்டங்களின் விலை உயர்வாக இருக்கிறது. இக் காரணத்தால் நம் நாட்டு வணிகர்கள் அயல்நாட்டுச் சந்தைகளில் போட்டியிடும் வலிமை இழந்திருக்கிறார்கள்.

மேற்கூறிய காரணங்களால் இன்று நம் நாட்டின் அயல் நாட்டு வாணிபம் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. பாதக வாணிப நிலையை போக்குவதற்கான வழிகள் யாவை? இறக்கு மதிகளைக் குறைத்தால் நிலைமை திருத்திவிடும். ஆனால், அது விவேகமான செயலாகாது. ஏனெனில், நம்முடைய இறக்குமதி களில் 90 சதவிகித அளவுக்கு இன்றியமையாத இறக்குமதிகளாக

இருக்கிறன. அவை நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமை யாதவை. இவ் இறக்குமதிகளைக் குறைத்தால் நாட்டின் தொழில் உற்பத்தியும் குறைந்துவிடும். இதனால் வேறு பல சிக்கல் களும் முளைத்தெழும். எனவே, இறக்குமதிகளைக் குறைக்கும் கொள்கையை மேற்கொள்ளக்கூடாது.

அப்படியானால் ஏற்றுமதிகளைப் பெருக்குவதுதான் ஒரே வழியாகும். ஏற்றுமதிகளைப் பெருக்குவதற்கு அரசாங்கம் பல வழிகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்றுமதிகளுக்கு ஊட்ட மளிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசாங்கம் எத்தனையோ சீரிய முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. ஆனால், அம் முயற்சிகள் எதிர்பார்த்த பலனை இன்னும் கொடுக்கவில்லை.

**இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை** (India's Balance of Payments)

இந்தியாவின் பாதக வாணிப நிலை அயல்நாட்டுச் செலுத்து நிலையையும் (balance of payments) கேடுறச் செய்திருக்கிறது. இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பல இனங்கள் இருந்தாலும் மிகவும் முக்கியம் வாய்ந்த இனங்கள் புலனாகும், இறக்குமதியும் ஏற்றுமதியும்தாம். எனவே, அயல்நாட்டுச் செலுத்துநிலையின் போக்குப் பெரும்பாலும் அயல்நாட்டு வாணிபத் தின் போக்கையே ஒட்டியிருக்கிறது. திட்டகாலத்தில் இந்தியா வின் செலுத்துநிலையைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| ஆண்டு | வரவு | செலுத்து கோடி ரூபாயில் | நிகர வேறுபாடு |
|---|---|---|---|
| 1950–51 | 786·3 | 747.4 | + 38·9 |
| 51–52 | 908·9 | 1071·5 | – 162·6 |
| 57–58 | 900·7 | 1213·5 | – 312·8 |
| 60–61 | 886·6 | 1275·0 | – 389·3 |
| 61–62 | 902·6 | 1209·0 | – 306·4 |
| 62–63 | 967·1 | 1312·6 | – 345·5 |

வாணிப நிலையைப் போலவே திட்டகாலம் முழுவதும் அயல் நாட்டுச் செலுத்துநிலையும் கேடுற்று இருக்கிறது என்பதை அறியலாம். முதல் திட்டம் நடைமுறைக்கு வந்த காலத்தில் நம்மிடம் அந்நியச் செலாவணி இருப்பு (foreign exchange reserve) ஓரளவுக்கு இருந்தது. ஆனால், இரண்டாம் திட்டம் தொடங்கிச் சில

ஆண்டுகளில் மிகுதியாக இருந்த இருப்பு முழுவதும் செலவளிக்கப் பெற்றுவிட்டது. அதன் பிறகு ஒவ்வோர் ஆண்டு எழும் பற்றுக் குறையையும் அயல்நாடுகளின் நிதியுதவியின் மூலமாகத்தான் சமாளித்து வருகிறோம். இதில் தவறொன்றுமில்லை என்றாலுங்கூட இந்த நிலை நீடிப்பது ஒரு நல்ல அறிகுறியாகாது.

அயல்நாட்டுச் செலுத்துநிலை கேடுற்றதைத் தனியாக விளக்கிக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்தியாவில் அயல்நாட்டுச் செலுத்துநிலையின் போக்கு அயல்நாட்டு வாணிப நிலையின் போக்கை ஒட்டியே இருக்கிறது.

# 21. பொது நிதியியல்
## (Public Finance)

**விளக்கம்**

அரசாங்கம் எவ்வாறு வருவாயைத் திரட்டுகிறது? திரட்டிய வருவாயை எவ் வழியில் செலவிடுகிறது என்னும் நடவடிக்கைகளை ஆராய்வதுதான் பொது நிதியியல். அரசாங்கம் சில முக்கிய மான பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இப் பணி களுக்காகும் செலவை ஏற்க அரசாங்கத்திற்கு வருவாய் வேண்டி யிருக்கிறது. அரசாங்கம் தேவையான வருவாயைப் பல வழி களிலும் திரட்டுகிறது. தனி நபர்கள் தங்களுடைய வருவாயைவிடச் செலவு அதிகமாக இருந்தால் அதைச் சமாளிக்கக் கடன் வாங்கு கிறார்கள். இதைப் போன்று அரசாங்கமும் கடன் வாங்குகிறது. அரசாங்க வருவாய், அரசாங்கச் செலவு, அரசாங்கக் கடன் இவை மூன்றும் பொது நிதியியல் என்னும் பகுதியின் கீழ் வருகின்றன.

**அரசாங்க வருவாய் :** ஓர் அரசாங்கம் பல வழிகளிலும் வருவாய் திரட்டுகிறது. ஓர் அரசாங்கத்தின் வருவாய் மூலங்களை (sources of public revenue) பின் வருமாறு கூறலாம்: (1) வரிகள்; (2) நிருவாகத் துறை வரவு இனங்கள்; (3) அரசாங்கத் தொழில் வணிக நிறுவனங்கள்; (4) உதவித் தொகை முதலியனவாகும்.

(1) **வரிகள் :** அரசாங்க வருவாயில் பெருமளவும் வரி விதிப்பு மூலமாகவே கிடைக்கிறது. வருமான வரி, விற்பனை வரி, சொத்து வரி, கேளிக்கை வரி, செலவு வரி, மரண வரி என்று எத்தனையோ வரிகளை அரசாங்கம் விதிக்கிறது. வரிகளில் பலவகை இருக்கின்றன. வரிகளை நேர்முக வரி (direct tax), மறைமுக வரி (indirect tax) என்று இருவகையாகப் பிரிக்கலாம். வரி யார் மீது விதிக்கப் பெறுகிறதோ அவரே அவ் வரியைச் செலுத்தினால் அது நேர்முக வரியாகிறது. மனிதன் தன்முனைப்புக் கொண்டவன்;

ஆகையால் அரசாங்கம் அவன்மீது வரி விதிக்கும்போது அவ் வரியை வேறு யார்மீதாவது சுமத்த முடியுமா என்று பார்க்கிறுன். சில சந்தர்ப்பங்களில் அவன் முயற்சி கைகூடும். மற்றும் சில சந்தர்ப் பங்களில் கைகூடாது. யார்மீது வரி விதிக்கப் பெறுகிறதோ அவனே அவ் வரியை ஏற்றுக்கொண்டால் அது நேர்முக வரி யாகிறது. நேர்முக வரிக்கு வருமான வரி (income tax) ஒரு சிறந்த உதாரணமாகும். வருமான வரி ஒருவனுடைய நிகர வருமானத்தின்மீது விதிக்கப் பெறுவதால் அவ் வரியை வேறு யார் மீதும் சுமத்த முடியாது. வரி ஒருவர்மீது விதிக்கப்பெற்று அவ் வரியை மற்ருெருவர் செலுத்திஞல் அது மறைமுக வரியாகிறது. மறைமுக வரிக்கு விற்பனை வரி (sales tax) ஒரு நல்ல உதாரண மாகும். விற்பனை வரியை அரசாங்கம் வர்த்தகர்கள்மீதுதான் விதிக்கிறது. ஆனல், வர்த்தகர்கள் அவ் வரியை வாங்குவோர் மீது சுமத்திவிடுகிருர்கள்.

வரிகளை வளர்வீத வரி (progressive tax), வீதமுறை வரி (proportionate tax), குறைவீத வரி (regressive tax) என்றும் வகைப்படுத்தலாம். உயர்ந்த வருமானம் உள்ளவர்கள் மீது உயர்ந்த வீதத்திலும், குறைந்த வருமானம் உள்ளவர்கள்மீது குறைந்த வீதத்திலும் வரி விதித்தால் அது வளர்வீத வரியாகும். உதாரணமாக, 5,000 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் மீது வருமானத்தில் 3 சதவீதத்தை வரியாகவும், 10,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் மீது 7 சதவீதத்தை வரியாகவும், 15,000 ரூபாய் வருமானமுள்ளவர்கள் மீது 12 சதவீதத்தை வரியாகவும் விதித்தால் அது வளர்வீத வரியாகும். செல்வர்களைவிட ஏழ்மை நிலையில் உள்வர்களை அதிகம் பாதிக்கும் வரி குறைவீத வரியாகும். உப்பு மீது வரி விதித்தால் அது குறைவீத வரியாகிறது. எல்லா வருமானங்களின் மீதும் ஒரேவித வரி விதித்தால் அது வீதமுறை வரியாகிறது.

(2) **நிருவாக வரவு இனங்கள்** (Administrative Revenues): அரசாங்கத்தின் நிருவாகத் துறையில் சில வரவு இனங்கள் இருக்கின்றன. அவையாவன, கட்டணங்கள், உரிமைக் கட்டணங் கள் (license fees), அபராதம் (fine), வாரிசு இல்லாமல் சொத்தை விட்டுச் செல்லுதல் போன்றவையாகும். வழக்குமன்றத்தில் வழக்காடவேண்டுமென்ருல் கட்டணம் கட்டவேண்டியிருக்கிறது. ஒரு கடன் பத்திரத்தையோ அல்லது ஒரு வீட்டையோ பதிவு செய்யவேண்டுமென்ருல் பதிவுக் கட்டணம் செலுத்தவேண்டி யிருக்கிறது. மோட்டார் ஓட்ட உரிமை (license) பெறவேண்டு மென்ருல் தனிக் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

இவ்வாறு செலுத்தப்பெறும் கட்டணங்கள் அரசாங்கத்தின் வருவாயாகிறது. சந்ததியார் யாரையும் நியமிக்காமல் யாரேனும் தம்முடைய சொத்தை விட்டுவிட்டுச் சென்றால், அத்தகைய சொத்துகள் அரசாங்கத்தைச் சேரும். ஓர் அரசாங்கத்தின் மொத்த வருவாயில் மேற்கூறிய இனங்களின்மூலமாகக் கிடைக்கும் தொகை மிகச் சொற்பமாகவே இருக்கும்.

(3) **தொழில், வணிக நிறுவனங்கள்:** இன்று பல நாட்டு அரசாங்கங்களும் தொழில் நிறுவனங்களையும் வணிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு நடத்துகின்றன. அந் நடவடிக்கைகளில் கிடைக்கும் இலாபம் அரசாங்கத்தின் வருவாயாகிறது. இரயில் வேக்கள், தபால்-தந்திப் பணிகள் இவற்றை ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் அரசாங்கமே மேற்கொண்டு நடத்துகின்றது. ஆனால், இலாபத்தை நோக்கமாகக்கொண்டு இந் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதில்லை. பொதுப்பணியே முதல் நோக்கமாகும். இத் துறைகள் அன்றி இலாப நோக்குடன் வேறு பல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்கிறது. உதாரணமாக, இந்தியாவில் பல தொழில் நிறுவனங்களை அரசாங்கம் மேற்கொண்டு நடத்துகிறது.

(4) **உதவித் தொகை (Grants):** குறிப்பிட்ட சில பணிகளை குறிப்பிட்ட வழிகளில் செய்வதற்காக ஓர் அரசாங்கம் மற்றோர் அரசாங்கத்திற்கு உதவித்தொகை கொடுக்கக் கூடும். உதாரணமாக, இந்தியாவில் மாநில அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவித்தொகை கொடுக்கிறது.

இவைதாம் சாதாரணமாக ஓர் அரசாங்கத்தின் வருவாய் மூலங்களாகும். இவை அனைத்துள் வரிமூலம்தான் மிகவும் முக்கியமானது. அரசாங்கங்களுக்கு வருவாயில் பெருமளவும் வரிகள் மூலம்தான் கிடைக்கிறது.

### இந்திய அரசாங்கத்தின் வருவாய்

இந்திய அரசாங்கத்தின் வருவாயில் பெருமளவும் வரி விதிப்பின் மூலமாகவே கிடைக்கிறது. இவ் வரிகளில் ஆயத் தீர்வைகள் (excise duty) மிகவும் முக்கியமானவை. உள்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரை, தீப்பெட்டி, புகையிலை, மண்ணெண்ணெய், காப்பி, டீ போன்ற பலவகைப் பண்டங்களின்மீது விதிக்கப்பெறும் வரிதான் ஆயத்தீர்வை என்றழைக்கப்பெறுகிறது. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஆயத்தீர்வைகள் பரவலாக விதிக்கப்பெற்றன. போருக்குப் பின்னரும் அத் தீர்வைகள்

உயர்த்தப்பெற்று இன்று அவை ஒரு மிக முக்கியம் வாய்ந்த இனமாக இருக்கின்றன. 1938-39ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்திற்கு ஆயத்தீர்வைகள்மூலம் கிடைத்த வருவாய் ரூ. 8.66 கோடியாகும். 1963-64ஆம் ஆண்டில் அவ் வருவாய் சுமார் 700 கோடி ரூபாய்க்கு உயர்ந்திருந்தது.

ஆயத்தீர்வைகளை அடுத்து வருமான வரி ஒரு முக்கிய இனமாக இருக்கிறது. இந்தியாவில் வருமான வரி முதன்முதலாக 1860ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. வருமான வரி மூலமாகக் கிடைக்கும் மொத்த வருவாயை மத்திய, மாநில அரசாங்கங்கள் இரண்டும் பகிர்ந்து கொள்கின்றன. தனி நபர்களுடைய வருமானங்களில் விதிக்கப்பெறும் வரி வருமான வரியாகும். கூட்டுப் பங்குக் கம்பெனிகள் (joint-stock companies) ஈட்டும் இலாபத்தின் மீது விதிக்கப்பெறும் வரி 'கார்ப்பரேஷன் வரி' (corporation tax) என்றழைக்கப் பெறுகிறது. இவ்விரு இனங்களின்மூலம் கிடைத்த மொத்த வருவாய் 1963-64ஆம் ஆண்டில் 390.71 கோடியாக இருந்தது.

அடுத்தபடியாக, சுங்க வரிகள் ஒரு முக்கிய இனமாகும். நாட்டின் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள்மீது விதிக்கப்பெறும் வரிகள்தாம் சுங்க வரிகள் ஆகும். 1963-64ஆம் ஆண்டில் சுங்க வரிகள்மூலம் மத்திய அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ. 320 கோடியாகும்.

1957-58ஆம் ஆண்டில் நிதிமந்திரியாக இருந்த திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் செல்வ வரி (wealth tax) என்று ஒரு புதிய வரியை அமலுக்குக் கொண்டுவந்தார். இரண்டு லட்சத்துக்கு மேலாகச் செல்வத்தை உடையவர்களே இவ் வரியைச் செலுத்த வேண்டியிருக்கிறது. 1963-64ஆம் ஆண்டில் செல்வ வரியின்மூலம் சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. இவையன்றிச் சொத்து வரி, கொடை வரி (gift tax), செலவு வரி (expenditure tax) போன்ற சில இனங்கள் இருக்கின்றன. இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய் மிகக் குறைவேயாகும். செலவு வரி இப்போது ரத்தாகிவிட்டது.

மேற்கண்டவை வரிவிதிப்பு மூலம் மத்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருவாயாகும். வரியில்லாத இனங்களிலிருந்தும் மத்திய அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது. அவையாவன:

**இரயில்வேக்கள் மூலம் கிடைக்கும் வருவாய்:** 1950ஆம் ஆண்டில் நடந்த ஒப்பந்தத்தின்படி (railway convention) மத்திய

அரசாங்கத்திற்கு இரயில்வேக்களிலிருந்து ஆண்டாண்டுக்கு இலாபம் கிடைக்கிறது. இவ்வாறு கிடைத்த இலாபம் 1963–64ஆம் ஆண்டில் ரூ. 31 கோடியாக இருந்தது.

**தபால்-தந்தி இலாக்கா:** தபால்-தந்தி இலாக்கா மூலமாகவும் மத்திய அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது. இத் துறையிலிருந்து 1963–64-ல் மத்திய அரசாங்கத்திற்கு 53·9 கோடி ரூபாய் கிடைத்தது.

**செலாவணி வெளியிடுதல், நாணயச்சாலை:** இந்தியாவின் மைய பாங்காகிய ரிசர்வு பாங்கு (Reserve Bank) 1949-ல் தேசியமயமாக்கப்பெற்றது. காகிதச் செலாவணியை வெளியிடுவதன் மூலம் ரிசர்வு பாங்குக்கு இலாபம் கிடைக்கிறது. இந்த இலாபம் மத்திய அரசாங்கத்திடம் போய்ச் சேருகிறது. மேலும், நாணயங்களை அச்சிடுவதன்மூலமாகவும் அரசாங்கத்திற்கு இலாபம் கிடைக்கிறது. இவ்விரு இனங்கள் மூலமாக 1963–64-ல் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ. 73.68 கோடியாகும்.

## அரசாங்கச் செலவு (Public Expenditure)

நாட்டில் சில முக்கியமான பணிகளை நிறைவேற்றி வைப்பது அரசாங்கத்தின் கடமையாக இருக்கிறது. இக் கடமையை நிறைவேற்ற அரசாங்கம் பெருமளவில் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அண்மைக் காலத்தில் உலகின் எல்லா நாடுகளிலும் அரசாங்கச் செலவு பெருகிக்கொண்டே இருக்கிறது. அரசாங்கச் செலவுப் பெருக்கத்திற்குப் பல காரணங்களைக் கூறலாம்.

அரசாங்கம் கையாளும் பொருளாதாரக் கொள்கையில் அண்மைக்காலத்தில் எழுந்த மாற்றமே முதற் காரணமாகும். பத்தொன்பதாம் நூற்றுண்டுக் காலத்தில் அரசாங்கச் செலவு ஒவ்வொரு நாட்டிலும் மிகக் குறைவாகவே இருந்தது. அரசாங்கச் செலவுபற்றிய ஆராய்ச்சியில் யாரும் முனைப்போடு ஈடுபடவில்லை. நாட்டில் சட்டத்தை நிலைநிறுத்துவதும் ஒழுங்கைப் பேணுவதுமே அரசாங்கத்தின் முக்கியப் பணிகள் என்னும் கருத்து நிலவிய காலம் அது. இதன் அடிப்படையில்தான் J. B. சே (J. B. Say) என்பவர் ‘அரசாங்கத் திட்டங்கள் எல்லாவற்றிலும் மிகக் குறைந்த செலவைக் கொண்ட திட்டமே சிறந்தது’ என்று கூறினர். H. பார்னல் (H. Parnell) என்பவர் ‘அரசாங்கச் செலவு நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், அந்நியப் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கும் ஆகக் கூடிய செலவைவிட அதிகமாக இருந்தால், அவ்வாறுகும் செலவில் ஒவ்வொரு துளியும்

விரயமான செலவாகும், நியாயமற்ற செலவாகும்' என்று கூறினர். இக் கருத்துகளை இருபதாம் நூற்றாண்டில் யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.

நலம் பெற்ற நாட்டை (welfare state) அமைப்பதையே இன்று எல்லா நாடுகளும் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. மக்களுடைய வாழ்க்கை நலத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் பல பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. கல்வி, சுகாதாரம், துப்புரவு, தொழில் பயிற்சி போன்ற துறைகளை அரசாங்கம் மேற்கொண்டு நடத்தவேண்டியிருக்கிறது. நாட்டில் கல்வியையும் மருத்துவ வசதிகளையும் தனியாரே அளிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்தால் நாட்டில் பெரும்பான்மையினரும் தற்குறிகளாகவும் நோயாளிகளாகவுமே இருப்பார்கள். இவை மனிதனுடைய அடிப்படைத் தேவைகள். மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வைக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு. எனவே, அரசாங்கம் பெருமளவில் செலவை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

இன்றைய அரசாங்கங்கள் மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருப்பதில்லை. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிட்டு, திட்டம் தீட்டி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதை மூச்சாகக் கொண்டிருக்கின்றன. எனவே தான் பொருளாதாரத் திட்டங்களைக் கையாளும் இந்தியா போன்ற நாடுகளில் அரசாங்கச் செலவு அண்மைக்காலத்தில் பெரிதும் வளர்ந்திருக்கிறது. அரசாங்கம் எத்தனையோ புதிய துறைகளைத் தொடங்கவிருக்கிறது. அணைக்கட்டுகள் கட்டுவதிலும், தொழிற்சாலைகளை அமைப்பதிலும், விவசாயிகளுக்குக் கடனுதவி அளிப்பதிலும் அரசாங்கம் மும்முரமாக ஈடுபாடு கொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கச் செலவும் ஆண்டாண்டுக்கு வளர்ந்து கொண்டே வருகிறது.

நாட்டின் பாதுகாப்புக்காகும் செலவையும் கவனத்தில் கொள்ள வேண்டும். நாகரிக வளர்ச்சி மிளிர்ந்து வரும் காலம் இது. ஆனால், போர், பொறாமை போன்ற அநாகரிகப் பண்புகளும் கூடவே இணைந்து வருகின்றன. இதனால் ஒவ்வொரு நாடும் நாட்டின் தற்காப்புக்காக அதிக அளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் இந்தியாவில் தற்காப்புச் செலவு பெருமளவுக்கு உயர்ந்துவிட்டது.

1958–59-ல் இவ்வினத்துக்கு ஆன செலவு ரூ. 266·88 கோடியாகும். 1963–64-ல் அது 708·51 கோடிக்கு உயர்ந்துவிட்டது.

**இந்திய அரசாங்கத்தின் செலவு**

மேற்கூறிய காரணங்கள் அனைத்தும் இந்தியாவுக்குப் பொருந்தும். 1950–51-ல் இந்தியாவில் மத்திய, மாநில அரசாங்கங்கள் எல்லாம் சேர்ந்து செய்த செலவு ரூ. 960 கோடிதான். 1955–56-ல் அது ரூ. 1,687 கோடியாக உயர்ந்தது. 1964–65-ல் மத்திய அரசாங்கத்தின் செலவுமட்டும் ரூ. 2,441 கோடியாகும். இவ்வாறு இந்திய அரசாங்கத்தின் செலவு பல மடங்காகப் பெருகியிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு ஆகும் செலவுதான் இச் செலவுப் பெருக்கத்திற்கு முக்கியக் காரணமாகும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குமட்டும் இந்திய அரசாங்கம் ரூ. 20,000 கோடியளவில் செலவிட்டிருக்கிறது. இதை அடுத்துப் பெருகிவரும் நாட்டின் தற்காப்புச் செலவைக் குறிப்பிட வேண்டும். சீன ஆக்கிரமிப்புக்கு முன்னர் இந்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவில் தற்காப்புச் செலவு 25 சதவிகிதத்திற்குக் குறைவாகவே இருந்தது. இன்று மொத்தச் செலவில் ஏறக்குறைய 50 சதவிகிதம் நாட்டின் தற்காப்புக்காகவே செலவிடுகிறது. மத்திய அரசாங்கத்தின் முக்கியச் செலவினங்களைக் கீழ்க்காணும் பட்டியலிலிருந்து அறியலாம்.

**மத்திய அரசாங்கச் செலவு**

| செலவினம் | 1962-63 ரூ. கோடியில் | 1963-64 ரூ. கோடியில் |
|---|---|---|
| வரி வசூலிப்புச் செலவு | 23·07 | 23·83 |
| கடன் பணிகள் | 246·03 | 280·24 |
| நிருவாகச் செலவு | 76·39 | 88·28 |
| சமூக நலப் பணிகள், வளர்ச்சித் திட்டங்கள் | 157·26 | 155·40 |
| நீர்த் திட்டங்கள் | 0·78 | 1·96 |
| பொதுப் பணிகள் | 23·71 | 20·94 |
| போக்குவரத்து, செய்தித்துறை | 8·75 | 9·79 |
| செலாவணி வெளியீடு நாணய அச்சீடு | 22·96 | 17·24 |
| சில்லறை வகை | 108·44 | 110·98 |
| செலுத்துகள் | 338·50 | 349·04 |
| எதிர்பாராத இனங்கள் | 64·61 | 86·19 |
| தற்காப்புப் பணிகள் | 451·81 | 708·51 |
| மொத்தம் | 1,522·31 | 1,852·40 |

# 22. பகிர்வு
## (Distribution)

**விளக்கம்**

பகிர்வு என்றதும் எதைப் பகிர்ந்து கொடுப்பது? யாரிடையே பகிர்ந்து கொடுப்பது? எதை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்து கொடுப்பது என்னும் வினாக்கள் எழுவது இயல்பே. நாட்டு வருமானத்தைத்தான் பகிர்ந்து கொடுக்கவேண்டும். நாட்டு வருமானம் என்றால் என்ன? நாட்டில் உற்பத்தி நடந்து கொண்டே இருக்கிறது. உணவுப் பண்டங்கள் உற்பத்தியாகின்றன. நுகர்வுப் பொருள்கள், தொழிற்பண்டங்கள், தொழில் முதற் கருவிகள், போர்த் தளவாடங்கள் இன்னோரன்ன பல பண்டங்கள் நாட்டில் உற்பத்தியாகின்றன. இவ்வாறு உற்பத்தியாகும் எல்லாப் பண்டங்களுடைய மொத்த அளவின் பண மதிப்புதான் நாட்டு வருமானம் (National Income). நாட்டு வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளந்து காட்டும் அளவுகோல். நாட்டு வருமானங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலமாகத்தான் நாடுகளிடையே இருக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கண்டறிகிறோம்.

நாட்டு வருமானத்தை யாரிடையே பகிர்ந்து கொடுப்பது? நாட்டில் வாழும் மக்களிடையே பகிர்ந்து கொடுப்பதா? இல்லை; உற்பத்திக் காரணிகளிடையே (Factors of production) பகிர்ந்து கொடுக்க வேண்டும். பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு நிலம், உழைப்பு, மூலதனம், தொழில்முயல்வோன் இவைகளுடைய ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இவை நான்கும் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதன் விளைவுதான் உற்பத்தி. பொருளாதாரச் சாதனங்களுக்கு ஊதியம் கொடுக்காவிட்டால் அவை பணி செய்ய முன்வரமாட்டா. எனவே, பொருளாதாரச் சாதனங்களிடையே, அவை ஒவ்வொன்றும் செய்து கொடுக்கும்

பணிகளின் அளவுக்கு ஏற்றுற்போல, நாட்டுவருமானம் பகிர்ந்து கொடுக்கப்பெற வேண்டும். நாட்டில் வாழும் மக்கள்தாம் இப் பொருளாதாரச் சாதனங்களின் உரிமையாளர்கள். ஒருவர் எங்ஙனம் ஊதியம் பெறுகிறுர் என்பதை யோசித்துப் பார்த்தால் இது தெளிவாகும். ஒன்று அவர் நிலக்கிழாராக இருக்கவேண்டும், மூலதனம் படைத்த கனவாஞக இருக்க வேண்டும், தொழில்முயல்வோஞக இருக்க வேண்டும், அல்லது அவர் உழைப்பைத் தருபவராக இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்களின் உரிமையாளராகவும் ஒருவர் இருக்கக் கூடும். எனவே, நாட்டு வருமானம் மக்களிடையே, அவர்கள் மக்கள் என்ற முறையில் அல்ல, பொருளாதாரச் சாதனங்களின் உரிமையாளர்கள் என்ற முறையில் பகிர்ந்து கொடுக்கப் பெறுகிறது.

எந்த அடிப்படையில் நாட்டு வருமானத்தை உற்பத்திக் காரணிகளிடையே பகிர்ந்து கொடுப்பது? நாட்டு வருமானத்தை நான்கு சம பங்குகளாக்கி அவை ஒவ்வொன்றையும் ஒரு காரணிக்கு ஊதியமாகக் கொடுப்பதா? இல்லை; உற்பத்திக் காரணிகள் ஒவ்வொன்றின் பணிக்கு ஏற்றுற்போல நாட்டு வருமானத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இதை விளக்கிக் காட்டும் ஒரு கோட்பாடுதான் ‘இறுதிநிலை ஆக்கக் கோட்பாடு’ **(Marginal Productivity Theory)**

### இறுதிநிலை ஆக்கக் கோட்பாடு (Marginal Productivity Theory)

இறுதிநிலை ஆக்கக் கோட்பாட்டின் சாரம், ஒவ்வோர் உற்பத்திக் காரணிக்குக் கிடைக்கும் ஊதியம் அந்த உற்பத்திக் காரணியின் இறுதிநிலை உற்பத்திக்கு **(Marginal Productivity)** சமமாக இருக்கும் என்பதாகும். இறுதிநிலை உற்பத்தி என்ருல் என்ன என்று அறியவேண்டும். நான்கு சாதனங்களையும் ஒன்ருக இணைப்பதால்தான் உற்பத்தி கிடைக்கிறது. உற்பத்தித் துறையில் இச் சாதனங்களின் விகிதத்தை மாற்றி அமைத்தால் உற்பத்தி அளவும் மாறும். ஏதாவது மூன்று காரணிகளின் அளவை நிலையாக வைத்துக்கொண்டு நான்காவது காரணியின் அளவை ஓர் அலகால் பெருகச் செய்வதால் மொத்த உற்பத்தியின் அளவில் கிடைக்கக்கூடிய பெருக்கந்தான் நான்காவது சாதனத்தின் இறுதிநிலை உற்பத்தியாகும். ஓர் எடுத்துக்காட்டின் துணைகொண்டு ஆராய்ந்தால் இது தெளிவாக விளங்கும். ஒருவர் 10 அலகுகள் நிலம், 20 அலகுகள் உழைப்பு, 5 அலகுகள் மூலதனம் என்ற விகிதத்தில் காரணிகளை இணைத்து விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு 100 அலகுகள் நெல்லைப் பெறு

கிறார் என்று கற்பனை செய்துகொள்வோம். மற்றக் காரணிகளின் அளவை அவர் நிலையாக வைத்துக்கொண்டு உழைப்பின் அளவைமட்டும் 20 அலகுகளிலிருந்து 21 அலகுகளுக்கு உயர்த்திஞல் நெல் உற்பத்தி 102 அலகுகளுக்குப் பெருகுகிறது என்றும் வைத்துக்கொள்வோம். இங்கு இறுதிநிலை உற்பத்தி 2 அலகுகளாகும். அதிகப்படியான ஓர் அலகு உழைப்பினுல் தான் 2 அலகுகள் நெல் கிடைத்திருக்கிறது. 1 அலகு நெல் விலை 1 ரூபாய் என்ருல் 1 அலகு உழைப்பின் கூலி 2 ரூபாயாக இருக்கும். இதைப் போலவே நிலம், மூலதனம் இவற்றின் இறுதிநிலை உற்பத்தியையும் கண்டறியலாம்.

உற்பத்தி இலாபம் கருதியே நடைபெறுவதால், ஒவ்வோர் உற்பத்தியாளரும் தன்னுடைய நிகர இலாபம் உச்சநிலையை **(maximum)** அடைவதற்கு ஏதுவான விகிதத்தில்தான் உற்பத்திக் காரணிகளை வேலைக்கு அமர்த்த முயல்வார். ஓர் அலகு உழைப்பை வேலைக்கமர்த்துவதைவிட ஓர் அலகு மூலதனத்தை அமர்த்துவதால் உற்பத்திப் பெருக்கம் அதிகமாக இருக்கும் என்ருல் அவர் மூலதனத்தை மேலும்மேலும் வேலைக்கு அமர்த்துவார். ஒரு நிலை வந்த பிறகு மூலதனத்தை மேலும் வேலைக்கமர்த்துவது இலாபகரமாக இருக்காது. அந்தக் கட்டத்தில் நிறுத்திவிடுவார். இவ்வாறு ஒவ்வொரு சாதனத்தையும் பரிட்சை செய்து பார்த்து முடிவில் உற்பத்திக் காரணிகளின் விகிதத்தை மாற்றுவது இலாபகரமாக இருக்காது என்ற நிலை வந்த பிறகு நிறுத்திக்கொள்வார். இக் கட்டத்தில்தான் ஒரு சாதனத்திற்குக் கிடைக்கும் ஊதியம் அதன் இறுதிநிலை உற்பத்திக்குச் சமமாக இருக்கும்.

இக் கோட்பாடு, உற்பத்தித் துறையில் குறைந்துசெல் வினைவு விதி **(Law of Diminishing Returns)** இயங்கும் என்னும் அடிப்படைக் கருத்தில் வரையப்பெற்றுள்ளது. உற்பத்தியில் ஒரு காரணியின் அளவைப் பெருக்கிக்கொண்டே போனுல் அக் காரணியின் இறுதிநிலை உற்பத்தியும் குறைந்துகொண்டே போகும். இறுதிநிலை உற்பத்தி பண்டத்தின் விலைக்குச் சமமாக இருக்கும் வரையில்தான் காரணிப் பெருக்கம் இலாபகரமாக இருக்கும்.

### இறுதிநிலைக் கோட்பாட்டில் காணும் குறைபாடுகள்

இக் கோட்பாடு சந்தையில் 'நிறைவுப் போட்டி' (Perfect competition) நடக்கிறது என்னும் அனுமானத்தை (assumption) அடிப்படையாகக்கொண்டிருக்கிறது. அன்ருட வாழ்க்கையில்

நிறைவுப் போட்டி என்பது இல்லாத ஒன்றாகும் என்பது நாம் அறிந்ததே. நடைமுறையில் நிறைகுறைப் போட்டிதான் (Imperfect competition) வழக்கில் இருந்து வருகிறது. இதனால் ஓர் உற்பத்திக் காரணிக்குக் கிடைக்கும் ஊதியம் அதன் இறுதி நிலை உற்பத்திக்குக் குறைவாகவும் இருக்கலாம்; அதைவிட அதிகமாகவும் இருக்கலாம்.

இக் கோட்பாடு கொண்டுள்ள மற்றொரு அனுமானம், உற்பத்திச் சாதனங்கள் ஒவ்வொன்றும் ஒரே சீராக, ஒரே வகையாக இருக்கின்றன என்பது. இது தவறான கருத்தாகும். எல்லா நிலமும் ஒரு வகையல்ல. இதைப் போன்றுதான் உழைப்பும் மூலதனமும். இறுதிநிலை உற்பத்தியை விளக்கிக் காட்ட நாம் மேலே எடுத்துக்கொண்ட உதாரணத்தில், உழைப்பின் அளவை 20 அலகுகளிலிருந்து 21 அலகுகளாகப் பெருகச் செய்யும்பொழுது நெல் உற்பத்தி 2 அலகுகள் அளவில் பெருகுகிறது என்று கண்டோம். 21ஆவது உழைப்பாளியின் உற்பத்தித் திறனும் முன்னமே வேலையில் இருக்கும் 20 உழைப்பாளிகளின் திறனும் ஒன்றாக இருக்கும் என்று எப்படிக் கூற முடியும்?

நான்கு காரணிகளுடைய ஒத்துழைப்பின் விளைவுதான் உற்பத்தி. அப்படி இருக்கும்பொழுது உற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒரு குறிப்பிட்ட காரணியால் ஆக்கப்பெற்றது என்று கூறுவது பொருத்தமாய் இருக்காது. மேலே கூறிய எடுத்துக் காட்டில் 21ஆவது அலகு உழைப்பின் உற்பத்தி 2 அலகுகள் என்று கண்டோம். 21ஆவது அலகு உழைப்பு, தன்னுடைய பணியால் மட்டுமா 2 அலகுகள் நெல் உற்பத்திக்குக் காரணமாயிருந்தது? 1 அலகு உழைப்பு மற்றக் காரணிகளின் சேர்க்கையினால்தான் 2 அலகுகள் நெல்லை உற்பத்தி செய்தது. எனவே, இவ் வுற்பத்தியில் ஒரு சிறிதளவாவது மற்றக் காரணிகளுக்கு அளிக்கப் பெறவேண்டும் என்பதைத் தெளிவாக அறியலாம்.

உற்பத்தித் துறையில் காரணிகளின் அளவு விகிதத்தை மாற்றுவதன்மூலம் ஒரு காரணியின் இறுதிநிலை உற்பத்தியைக் கண்டறியலாம் என்று விளக்கினோம். இப்படிச் செய்வது எழுத்தில் இருப்பதைப் போல நடைமுறையில் அவ்வளவு எளிதன்று. சாதனங்களை எந்த விகிதத்தில் இணைப்பது என்பது தொழில் நுணுக்கத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த விகிதத்தை வேண்டியபடி மாற்றியமைத்துக் காரணிகளின் இறுதிநிலை உற்பத்தியை அளந்து காட்டலாம் என்பது கற்பனையில்தான் முடியும்.

இக் கோட்பாடு, காரணிகளின் அளிப்புநிலை (Supply of factors of production) மாருமல் நிலையாக இருக்கும் என்னும் கருத்தைக் கொண்டிருக்கிறது. ஒரு காரணிக்குக் கிடைக்கும் ஊதியம் அதன் இறுதிநிலை உற்பத்திக்குச் சமமாக இருக்கும் என்று கூறுவதால், இது காரணிகளுக்கு இருக்கும் தேவையை (Demand for the factors of production) மட்டும்தான் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறது. உற்பத்திச் சாதனங்களின் அளிப்பு நிலை மாறுபட்டால் அவற்றின் விலைகளும் மாற்றமுறும் என்பதை விளக்கவேண்டிய அவசியமில்லை. எனவே, ஒரு சாதனம் பெறும் ஊதியம் (அல்லது அதன் விலை) அச் சாதனத்தின் அளிப்பு, அச் சாதனத்துக்கு இருக்கும் தேவை இரண்டையும் பொறுத்துத்தானிருக்கிறது.

பண்டங்களை உற்பத்தி செய்து தரும் உற்பத்திக் காரணிகளின் விலைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகின்றன என்பதை விளக்கிக் காட்டுகிறது இறுதிநிலை ஆக்கக் கோட்பாடு. பண்டங்களின் விலையை அப் பண்டங்களுக்கு இருக்கும் தேவையும் அளிப்பும் நிர்ணயிக்கின்றன என்று அறிந்தோம். அப்படியாஞல் பண்டங்களை உற்பத்தி செய்யும் உற்பத்திக் காரணிகளின் விலையை நிர்ணயிக்க ஏன் ஒரு புதிய கோட்பாடு தேவைப்படுகிறது? பண்டங்களின் விலை நிர்ணயத்தை விளக்கும் தேவை அளிப்புக் கோட்பாடே சாதனங்களின் விலை நிர்ணயத்தை விளக்க முடியாதா? விளக்க முடியும். இக் காரணத்திஞல்தான் இறுதிநிலைக் கோட்பாடு இன்று ஏற்றுக்கொள்ளப்பெறுவதில்லை.

# 23. வாரம்
## (Rent)

**விளக்கம்**

பொருளாதார ஆய்வில் வாரம் என்பது ஒரு சிறப்புச் சொல் (term). அதற்கு ஒரு குறிப்பிட்ட பொருள் இருக்கிறது. சாதாரண வழக்கில் வாரம் என்பது வீடு, வாகனம் போன்ற ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குப் பயன்படுத்துவதற்காக ஒருவர் கொடுக்கும் தொகையைத்தான் குறிப்பிடுகிறது. ஆனால், பொருளாதாரத்தில் அது வேறு பொருளைக் கொள்கிறது. உற்பத்தித் துறையில் நிலம் செய்யும் பணிக்காக அதற்குக் கொடுக்கப்பெறும் ஊதியம்தான் வாரம் என்று பொருளாதாரத்தில் குறிப்பிடப்பெறுகிறது. (வாரம் நிலத்திற்கு மட்டுந்தான் பொருந்துமா அல்லது எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் பொருந்துமா என்னும் பிரச்சினையில் நாம் ஈடுபடவேண்டா.) நில உரிமையாளுக்கு ஏன் வாரம் செலுத்தவேண்டும்? வாரமட்டம் (level of rent) எதைச் சார்ந்திருக்கிறது? இவ் வினாக்களுக்குப் பதிலிறுக்கும் வகையில், இங்கிலாந்தில் வாழ்ந்த கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினரைச் (Classical Economists) சேர்ந்த டேவிட் ரிகார்டோ (David Ricardo) அவர்கள் ஒரு கோட்பாட்டைத் தந்துள்ளார். அக் கோட்பாடு அவருடைய பெயரைக் கொண்டு, ரிகார்டோவின் வாரக் கோட்பாடு (Recardian Theory of Rent) என்றழைக்கப்பெறுகிறது.

**ரிகார்டோவின் வாரக் கோட்பாடு**

ரிகார்டோ புனைந்த வாரக் கோட்பாட்டின் சுருக்கம் பின்வருமாறு: 'மண்ணில் வளம் இருக்கிறது. இந்த வளம் இயற்கையாக அமைந்தது; அழிக்க முடியாதது. மண்ணுக்கு இருக்கும் இச் சக்திக்கு ஈடாக, மண்ணில் விளையும் விளைபொருள்களில் ஒரு பகுதியை, அம் மண்ணின் உரிமையாளரான நிலக்கிழாருக்குக் (landlord) கொடுக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறு செலுத்தப்

பெறுவதுதான் வாரம்' (Rent is that portion of the produce of the earth which is paid to the landlord for the original and indestructible powers of the soil). எல்லா நிலங்களும் ஒரே வகையாக இருப்பதில்லை. வளம், இட அமைப்பு (situation) இவற்றில் நிலங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கின்றன. சில நிலங்கள் நல்ல வளமுள்ளனவாக இருக்கின்றன. சில நிலங்கள் வளங் குன்றியிருக்கின்றன. சில நிலங்களின் இட அமைப்பு வேளாண்மைக்கு எளிதாக இருக்கின்றன. மற்றும் சில இருப்ப தில்லை. நிலத்தில் விளையும் உற்பத்தியின் அளவும் இந்த அனுகூலங்களைச் சார்ந்தே இருக்கும். தரம் குன்றிய நிலங்களில் இருப்பதைவிட தரம் உயர்ந்த நிலங்களில் உற்பத்தி மிகுதியாக இருக்கும். தரம் உயர்ந்த நிலங்களில் காணக்கிடக்கும் இந்த உற்பத்தி மிகுதியைத்தான் ரிகார்டோ அவர்கள் வாரம் என்று குறிப்பிடுகிறார். இக் கருத்தை விளக்க ரிகார்டோ தந்த எடுத்துக் காட்டு சுவையாக இருக்கும்.

ஒரு நாட்டிலிருந்து மனித சஞ்சாரமே இல்லாத ஒரு தீவுக்கு மக்கள் குடியேறுகிறார்கள் என்று கற்பனை செய்துகொள்வோம். அத் தீவில் உள்ள நிலங்களைத் தரத்துக்கு ஏற்றாற்போல A, B, C என்று வகைப்படுத்தலாம் என்றும் வைத்துக்கொள்வோம். முதன் முதலாகச் செல்லும் கூட்டம் வளம் நிறைந்த, விவசாயத்திற்கு ஏதுவான இட அமைப்பைக் கொண்ட A வகை நிலங்களில்தான் பயிர்த்தொழிலைத் தொடங்குவார்கள். இந் நிலங்களில் உற்பத்தி யாகும் உணவுப் பண்டங்கள் தேவையான அளவுக்கு இருந்தால் வாரம் எழவேண்டிய அவசியமே யில்லை. அத் தீவில் வாழ்க்கை நிலை மேம்பாடாக இருக்கிறது என்பதை அறிந்து மற்றொரு கூட்டம் அங்குக் குடியேறினால் உணவுப் பண்டங்களுக்குத் தேவை பெருகும். இத் தேவைப் பெருக்கத்தால் உணவுப் பண்டங்களின் விலையும் உயரும். விலை யேற்றத்தால் தரம் குறைந்த B வகை நிலங்களையும் சாகுபடியின்கீழ்க் கொண்டுவருவது இலாபகரமாக இருக்கும். எனவே, B வகை நிலங்களிலும் சாகுபடி நடக்கும். உணவுப் பண்டங்களின் விலை B வகை நிலங்களின் உற்பத்திச் செலவுக்கு ஈடாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந் நிலங்களில் சாகுபடி நடக்காது. ஆனால், A வகை நிலங்களில் அவை வளம் நிறைந்த காரணத்தால், உற்பத்திச் செலவு குறை வாக இருக்கும். A வகை நிலங்களின் உரிமையாளர்கள் தம் பண்டங்களை விலையாக்குவதன்மூலம் உற்பத்திச் செலவைவிட மிகுதியான ஒரு தொகையைப் பெறுவர். அவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருப்பதால் அம் மிகுதியை அவர்களே அனுபவிப்பார்கள். அத்தகைய நிலத்தை ஒருவர் குத்தகைக்கு

ஏற்றுக்கொண்டிருந்தால் அம் மிகுதியை அந்த நில உரிமையாளருக்கு வாரமாகச் செலுத்துவார். B வகை நிலங்களில் வாரம் இருக்காது. ஏனெனில், அந் நிலங்களின் சாகுபடிச் செலவும் விளைபொருள்களின் விலையும் சமனாக இருக்குமாதலால் மிகுதியான தொகை கிடைக்காது. அத் தீவில் மேலும் ஒரு கூட்டம் குடியேறினால் உணவுப் பண்டங்களுக்குத் தேவைப் பெருக்கம் ஏற்படும்; விலைமட்டம் உயரும். இதுவரை சாகுபடியின்கீழ் இல்லாத C வகை நிலங்களிலும் சாகுபடி செய்வது இலாபகரமாக இருக்கும். இந்த நிலையில் A, B இருவகை நிலங்களுக்கும் வாரம் கிடைக்கும். A வகை நிலங்களில் வாரமட்டம் B வகை நிலங்களை விட உயர்வாக இருக்கும். C வகை நிலங்களுக்கு வாரம் கிடைக்காது. எனவே, தரம் உயர்ந்த நிலங்களில் காணும் உற்பத்தி மிகுதியே வாரம் என்று ரிகார்டோ முடிவு கூறினார்.

வாரம் சம்பந்தமாக ரிகார்டோ தந்துள்ள மற்றொரு கருத்தையும் அறியலாம். A, B, C வகை நிலங்களில் சாகுபடி நடக்கும்பொழுது, C வகை நிலங்களுக்கு வாரம் கிடைப்பதில்லை என்று மேலே கண்டோம். உணவுப் பண்டங்களின் விலைமட்டம் C வகை நிலங்களின் உற்பத்திச் செலவுக்குக் கட்டி வரவேண்டும். அஃதாவது, C வகை நிலங்களில் 1 அலகு தானியத்தின் உற்பத்திச் செலவு 2 அலகுகள் பணம் என்றால், சந்தையில் தானியத்தின் விலையும் 2 அலகுகள் பணமாக இருக்கவேண்டும். C வகை நிலங்களுக்கு வாரம் கிடைப்பதில்லை. எனவே, தானியத்தின் விலையில் வாரம் அடங்கியிருக்காது! என்று முடிவு கட்டினார் ரிகார்டோ. A, B வகை நிலங்களில் உற்பத்தியாகும் தானியங்களும் ஓர் அலகு தானியம்=2 அலகுகள் பணம் •என்ற விலையில்தான் விற்பனையாகும். ஆனால், அந் நிலங்களில் உற்பத்திச் செலவு C வகை நிலத்தைவிடக் குறைவாக இருப்பதால் அந் நில உரிமையாளர்கள் மிகுதியான தொகையைப் பெறுவார்கள். A, B, C மூன்று வகை நிலங்களும் ஒன்றன்பின் ஒன்றாகச் சாகுபடியின்கீழ் வரும்பொழுது வாரம் எழுகிறது, தானியங்களின் விலைமட்டம் உயருகிறது என்று மேலே கண்டோம். வாரம் எழுவதால் விலைமட்டம் உயருகிறதா அல்லது விலைமட்டம் உயருவதால் வாரம் எழுகிறதா? எது காரணம்? எது விளைவு? விலைமட்டம் தான் காரணம்; வாரம்தான் விளைவு என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார் ரிகார்டோ. அவர் கருத்து 'வாரம் செலுத்தப்பெறுவதால் தானியத்தின் விலை உயர்வாக இல்லை. ஆனால், தானியத்தின் விலை உயர்வாக இருப்பதால்தான் வாரம் செலுத்தப்பெறுகிறது' என்பதாகும் (Corn is high not because rent is paid, but rent is paid because corn is high ).

**ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டில் காணக்கிடக்கும் குறைபாடுகள்**

ரிகார்டோ தந்துள்ள கோட்பாடு பொருத்தமான ஒன்ருகத் தோன்றும். அவர் கூறிய விளக்கம் அழகாகவும், தன்னுடைய கோட்பாட்டை வலியுறுத்த அவர் மேற்கொண்ட வாதம் கோவையாகவும் இருக்கின்றன. ஆனால், அவருடைய கோட்பாடு இன்று ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

நிலத்திற்கு இயற்கையான, அழிக்க முடியாத வளம் இருக்கிறது. இதனால்தான் வாரம் கொடுக்கவேண்டியிருக்கிறது என்ருர் ரிகார்டோ. இக் கருத்தை எல்லோரும் அப்படியே ஏற்றுக் கொள்வதில்லை. வளம் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில்கூட மனித முயற்சியே இல்லாமலா உணவு உற்பத்தி மிகுதியாக இருக்கிறது? மண்ணில் இருக்கும் வளம் அழிக்க முடியாதது என்று கூறுவதும் பொருத்தமில்லாதது. அணுகுண்டு விழுந்த ஹிரோஷிமாப் பகுதியில் நிலம் வளம் குன்றிவிடவில்லையா?

ரிகார்டோ வாரம் இல்லாத நிலம் (no rent land) ஒன்றைக் குறிப்பிடுகிருர். மேலே கண்ட விளக்கத்தில் C வகை நிலம் வாரம் இல்லாத நிலமாகும். வாரம் இல்லாமல், ஆனல், சாகுபடியின்கீழ் இருக்கும் நிலத்தை நாம் வழக்கில் காணமுடியுமா?

பலவகையான தரத்தைக்கொண்ட நிலங்கள் இருப்பதால் தான் வாரம் எழுகிறது என்ருர் ரிகார்டோ. எல்லா நிலங்களும் ஒரே வகையாக, A வகை நிலங்களாக இருந்தால்கூட வாரம் எழும் என்று இன்றைய பொருளாதாரக் கருத்தினர் கூறுகிருர்கள். அவர்கள் கருத்துப்படி நிலத்தினுடைய விளைபொருள்களுக்கும் தேவை அளிப்பைவிட அதிகமாக இருப்பதால்தான் நிலத்திற்கு வாரம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

இக் கோட்பாட்டின் பெருங் குறைபாடு தானியத்தின் விலையில் வாரம் அடங்காது என்று கூறுவதுதான். மேலும், இன்றைய பொருளாதார ஆசிரியர்கள் வாரத்தை விளக்க வாரக் கோட்பாடு என்று தனியாக ஒன்று தேவையில்லை. பண்டங்களின் விலை நிர்ணயத்தை விளக்கிக்காட்டும் பொதுப்படையான கோட்பாட்டைக் கொண்டே வாரத்தையும் விளக்கலாம் என்று அவர்கள் கருதுகிருர்கள்.

# 24. கூலிகள்

## (Wages)

பொருளாதாரத்தில் உழைப்பு ஓர் உற்பத்திக் காரணி; உழைப்புக்கு அளிக்கப்பெறும் ஊதியம்தான் கூலி. பொருளாதாரத்தில் கூலி என்பது பொதுச் சொல். எந்தவிதத் தாழ்வான பொருளையும் அது குறிப்பதில்லை. கழனியில் வேலை செய்யும் உழவன் பெறுவதும் கூலிதான். உடல் வருந்த வேலை செய்யும் ஆலைத் தொழிலாளி பெறுவதும் கூலிதான். பொறியியல் நிபுணர் பெறுவதும் கூலிதான். தலைசிறந்த மருத்துவர் பெறுவதும் கூலி தான். ஆசிரியன் பெறுவதும் கூலிதான். கூலி நிர்ணயத்தை விளக்கப் பல கோட்பாடுகள் வெகுகாலமாக இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றை அறியலாம்.

**பராமரிப்புக் கூலிக் கோட்பாடு** (Subsistence Theory of Wages)

இக் கோட்பாட்டைத் தோற்றுவித்தவர் 18ஆம் நூற்றுண்டில் ஃபிரான்சு நாட்டில் வாழ்ந்த பிசியோகிராட்ஸ் (Physiocrates) என்றழைக்கப்பெறும் பொருளாதாரக் கருத்தினர். லஸ்ஸேல் (Lassale) என்னும் ஜெர்மானியப் பொருளாதார நிபுணர் இக் கோட் பாட்டுக்குக் 'கூலி நிர்ணய இரும்பு விதி' (Iron law of wages) என்று பெயரிட்டார். கார்ல் மார்க்ஸ் அவர்கள் முதலாளித்துவ முறையைக் (capitalism) கண்டிக்க இக் கோட்பாட்டைத் துணையாக வைத்துக்கொண்டார்.

ஒரு நாட்டில் கூலிமட்டம் அந் நாட்டுத் தொழிலாளர்களைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கும் என்பது இக் கோட்பாட்டின் கருத்து. பராமரிப்பதற்குத் தேவையான என்பது, உழைப்பாளியும் அவரது குடும்பமும் உயிர் பிழைத்திருப்பதற்குத் தேவையான அளவைத்தான் குறிக்கிறது. அத்தகைய கூலிமட்டத்தைப் பராமரிப்பு மட்டம் (subsistence

level) என்றழைக்கலாம். இக் கருத்தின் விளக்கத்தைக் காணலாம். நாட்டில் நிலவும் கூலிமட்டம் பராமரிப்பு மட்டத்தை விட உயர்வாக இருந்தால் தொழிலாளர்கள் இளம் வயதிலேயே மணம்புரிந்துகொண்டு அதிகமாகப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பார்களாம். இதனால் நாட்டில் மக்கள்தொகை பெருகும்; வேலைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர்களிடையே போட்டி ஏற்படும்; போட்டியின் விளைவால் கூலிகள் தாழ்ச்சியுற்றுப் பராமரிப்பு மட்டத்தை வந்தடையுமாம். அதே போன்று, நாட்டில் நிலவும் கூலிமட்டம் பராமரிப்புமட்டத்திற்குக் குறைவாக இருந்தால், பற்றுக்குறையும் பட்டினியும் தலைதூக்கித் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்குமாம். இதனால் கூலிமட்டம் உயர்ந்து பராமரிப்புமட்டத்தை வந்தடையுமாம்.

இக் கோட்பாடு எவ்வளவு பொருத்தமற்றது என்பது எளிதில் விளங்கும். கூலிகள் உயர்ந்தால் நாட்டில் பிறப்பு வீதமும் (birth rate), அதனால் மக்கள்தொகையும் பெருகும் என்று எண்ணுவது தவறானதாகும். மக்கள்தொகை வளர்ச்சிபற்றி நடந்துவரும் ஆராய்ச்சிகள் மக்களுடைய வாழ்க்கைத் தரம் குறைவாக இருந்தால் பிறப்பு வீதம் அதிகரித்திருப்பதாகவும், வாழ்க்கைத்தரம் உயர்வாக இருந்தால் பிறப்பு வீதம் குறைந்திருப்பதாகவும் எடுத்துக்காட்டுகின்றன.

தொழிலாளர்களிடையே காணக்கிடக்கும் கூலி வேறுபாட்டினைக் இக் கோட்பாடு விளக்குவதாக இல்லை. பராமரிப்பு மட்டம் என்பது எல்லோருக்கும் பொதுப்படையானதுதான். அப்படியானால் ஏன் கூலியில் வேற்றுமை இருக்கிறது? மேலும், ஒவ்வொரு நாட்டிலும் இன்று தொழிலாளர் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கூலிக் குறைப்பை இச் சங்கங்கள் கடுமையாக எதிர்த்துப் போரிடுகின்றன.

**கூலி நிதிக் கோட்பா (Wages Fund Theory)**

இக் கோட்பாட்டை வரைந்தவர் J. S. மில் (John Stuart Mill) என்பார். இக் கோட்பாட்டின் சுருக்கம் பின்வருமாறு: தொழிலதிபர்கள் தொழில் மூலதனத்தில் ஒரு பகுதியைக் கூலிகள் வழங்குவதற்காக ஒதுக்கி வைப்பார்கள். இவ்வாறு ஒதுக்கி வைக்கப் பெற்ற தொகை கூலி நிதியாகிறது. தொழிலாளர்களுக்கு இருக்கும் தேவை இந் நிதியின் அளவைப்பொறுத்திருக்கிறது. இக் கூலி நிதி குறைந்த கால அளவில் மாறக்கூடியது அன்று. எனவே, தொழிலாளர்கள் பெறக்கூடிய சராசரிக் கூலிமட்டம் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப்பொறுத்து இருக்கிறது.

எண்ணிக்கை உயர்ந்தால் கூலி குறையும், எண்ணிக்கை குறைந்தால் கூலி உயரும்.

இக் கோட்பாடும் குறைபாடுடையதே. கூலி நிதி என்று தனியாக ஒரு நிதி எங்கும் இல்லை. எந்த ஒரு நிலையான நிதியி லிருந்தும் கூலிகள் வழங்கப்பெறுவதில்லை. கூலி நிதி நிலையாக இருக்கும் என்றால், தொழிலாளர்களுக்கு இருக்கும் தேவையும் நிலையாக இருக்கும் என்றுதான் பொருள். உண்மையில் தொழிலா ளர்களுக்கு இருக்கும் தேவை மாறுந்தன்மையுடையது. கூலிகளில் இருக்கும் வேறுபாட்டினை இக் கோட்பாடு விளக்குவதாக இல்லை. இக் கோட்பாட்டில் இன்னும் எத்தனையோ குறைபாடுகள் இருக் கின்றன. இக் காரணத்தால் இக் கோட்பாடு பெருங் குற்றச் சாட்டுகளுக்குள்ளாகியது. கடுங் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்க முடியாமல் மில் அவர்களே பின்னர் இக் கோட்பாட்டைக் கை விட்டார்.

**இறுதிநிலை ஆக்கக் கூலிக்கோட்பாடு** (Marginal Productivity Theory of Wages): பகிர்வு என்ற தலைப்பில் இறுதிநிலை ஆக்கக் கோட்பாட்டைத் தெளிவாக விளக்கினோம். இக் கோட்பாட்டைப் பொதுவாகப் பகிர்வுக்கும் மற்றச் சாதனங்கள் ஒவ்வொன்றுக்கும் கையாளலாம். இக் கோட்பாட்டைக் கூலிகளை நிர்ணயிப்பதற்கு அனுசரிக்கும்பொழுது உழைப்புக்குக் கிடைக்கும் கூலி அதன் இறுதிநிலை உற்பத்திக்குச் சமமாக இருக்கும். இக் கோட்பாட்டின் விரிவான விளக்கத்தையும் இக் கோட்பாட்டில் உள்ள குறைபாடு களையும் பகிர்வு என்ற தலைப்பில் காணலாம். அவை முற்றிலும் இங்கும் பொருந்தும்.

**கூலியின் தேவை அளிப்புக் கோட்பாடு** (Demand and Supply Theory of Wages): பொருளாதாரப் புதுமைக் கருத்தினர் பண்டங் களின் விலை நிர்ணயத்தை விளக்கும் தேவை, அளிப்புக் கோட்பாடே கூலி நிர்ணயத்தையும் விளக்கும் என்று கருதுகின் றனர். பண்டத்தின் விலையைப் போல, கூலியும், உழைப்புக்கு இருக்கும் தேவையும், அதன் அளிப்பும் நிர்ணயிக்கும். உழைப் புக்கு எப்படித் தேவை தோன்றுகிறது? பண்டங்களுக்கு எழும் தேவைமூலமாகத்தான் பண்டங்களை உற்பத்தி செய்யும் உழைப் புக்கும் தேவை எழுகிறது. எனவே, பண்டங்களுக்கு இருக்கும் தேவையைப் பொறுத்துத்தான் உழைப்புக்கும் தேவை இருக்கும். உழைப்பின் அளிப்பு, தொழிலாளர்கள் பழக்கப்பட்டிருக்கும் வாழ்க் கைத்தரம் (Standard of living), மக்கள்தொகை வளர்ச்சி, தொழி லாளர்களுடைய உற்பத்தித் திறன் இவற்றைச் சார்ந்திருக்கும்.

# 25. வட்டி

## (Interest)

உற்பத்திச் சாதனங்களில் ஒன்ருகிய மூலதனத்திற்கு அல்லது முதலுக்குக் கிடைக்கும் ஊதியம்தான் வட்டியாகும். பொருளாதாரத்தில் சாதாரணமாக வட்டி என்பது நிகர வட்டியைத்தான் (net interest) குறிக்கும். சாதாரண வழக்கில் நாம் வட்டி என்று கூறுவது மொத்த வட்டியைக் (gross interest) குறிக்கும். எனவே, நிகர வட்டி, மொத்த வட்டி இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டறியவேண்டும்.

மொத்த வட்டியில் மூலதனத்திற்குக் கிடைக்கும் ஊதியத்தோடுகூட வேறு சில இனங்களும் அடங்கியிருக்கின்றன. பின்வரும் இனங்களை அடக்கியதுதான் மொத்த வட்டி. ஒருவர் மற்ெருருவருக்குப் பணத்தைக் கடனுகக் கொடுப்பதில் சில இடர்ப்பாடுகள் (risks) இருக்கின்றன. பணத்தைப் பெற்றவர் திருப்பிக் கொடுக்கும் வரையில் திருப்பிக் கொடுப்பார் என்ற நிச்சயமில்லை. கடன் வாங்கியவர் நாணயக் குறைவுடையவராக இருக்கலாம் அல்லது திருப்பிக் கொடுக்கும் சக்தியை இழந்திருக்கலாம்; காரணம் எதுவாஞலும் கடன் கொடுப்பவர் இந்த இடர்ப்பாட்டுக்கு ஈடு செய்யும் வகையில் வட்டித் தொகையைச் சற்று உயர்த்தி வசூலிப்பதை அன்ருட வாழ்க்கையில் காணலாம். மேலும், கடன் கொடுப்பவர் சில அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிடும். அவருக்குப் பணம் தேவைப்படும்பொழுது கடன் வாங்கியவர் திருப்பிக் கொடுக்கமாட்டார். இதற்கு அவர் ஒரு கட்டணத்தை வசூலிக்கலாம். கடன் கொடுத்தவர் கணக்கு வைத்திருக்க வேண்டியிருக்கிறது. கடன் வாங்கியவரிடம் அடிக்கடிச் சென்று கடன் தொகையைக் கேட்க வேண்டியிருக்கிறது. இவைகளுக்கு ஆகும் செலவுக்காக வட்டியுடன் ஒரு தொகையைக் கடன் கொடுத்தவர் வசூலிக்கலாம். இவ்வாறு நிகர வட்டியுடன் வேறு சில இனங்களையும் உள்ளடக்கியதுதான் மொத்த வட்டி.

வட்டி நிர்ணயத்தைப்பற்றிப் பல கோட்பாடுகள் இருக்கின்றன. இவற்றுள் பலவும் குறைபாடுகள் உடையனவே. வட்டியின் இயல்பு திருத்தமாக விளக்கக்கூடியதாக இல்லை. திருத்தமான ஒரு வட்டிக் கோட்பாடு, வட்டிப் பணத்தை ஏன் கொடுக்கவேண்டும்? அவ்வாறு கொடுக்கப்பெறும் வட்டிவீதம் (rate of interest) எவ்வாறு நிர்ணயிக்கப்பெறுகிறது? என்னும் இரு வினாக்களுக்கும் விடையளிக்கவேண்டும். இவைகளைக் கருத்தில் கொண்டு முக்கியமான சில வட்டிக் கோட்பாடுகளைக் கண்டறியலாம்.

**உற்பத்தித்திறன் கோட்பாடு** (Productivity Theory)

மூலதனத்திற்கு (அல்லது முதலுக்கு) உற்பத்தித் திறன் இருக்கிறது. எனவே, அதற்கு ஊதியமாக வட்டித்தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது என்று கூறுவதுதான் 'உற்பத்தித்திறன் கோட்பாடு'. உற்பத்தித்துறையில் மூலதனத்தைப் பயன்படுத்தும் பொழுது உற்பத்தியின் அளவு பெருக்கமடைகிறது. முதலீடு செய்வதால் கிடைக்கும் உற்பத்திப் பெருக்கத்தில் ஒரு பகுதியை மூலதனத்திற்கு ஊதியமாகக் கொடுக்கவேண்டியது நியாயமானது, பொருத்தமானது என்று இக் கோட்பாடு கருதுகிறது. வட்டியை ஏன் கொடுக்கவேண்டும் என்பதைமட்டுந்தான் இக் கோட்பாடு விளக்குகிறது; வட்டிவீதம் எவ்வாறு நிர்ணயிக்கப் பெறுகிறது என்பதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. மேலும், முதலுக்கு இருக்கும் உற்பத்தித் திறனுக்காக வட்டி செலுத்தவேண்டுமென்றால் முதலீடு செய்வதற்காக வாங்கப்படும் கடனுக்குமட்டும் தான் வட்டி கொடுக்கவேண்டியிருக்கும். ஒருவர் நுகர்வுச் செலவுக்காகக் கடன் வாங்கினால் இக் கோட்பாட்டின்படி வட்டி கொடுக்கவேண்டிய அவசியமில்லை. இது பொருத்தமில்லாதது. இக் காரணங்களால் இக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப் பெறுவதில்லை.

**துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு** (Abstinence Theory)

ஒருவரிடம் முதல் இருந்தால் அதைத் துய்ப்புக்காகச் (அல்லது நுகர்வுக்காக) செலவளிக்கலாம் அல்லது பிறருக்குக் கடனாகக் கொடுக்கலாம். எனவே, அவர் தன்னிடம் உள்ள முதலைக் கடனாகக் கொடுக்கும்பொழுது அவர் அனுபவிக்கக்கூடிய துய்ப்பைத் (consumption) தவிர்க்க வேண்டியிருக்கிறது. துய்ப்பைத் தவிர்ப்பது அவ்வளவு எளிதான செயலன்று. கடன் கொடுப்பவர் துய்ப்பின்மூலம் தான் உடனடியாகப் பெறக்கூடிய இன்பத்தைத் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. இத் தியாகத்திற்கு ஈடு செய்யும் வகையில்தான் கடனாளி கடன் கொடுத்தவருக்கு வட்டி

கொடுக்கிறார். வட்டியை இவ்வாறு விளக்குவதுதான் 'துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு'. இக் கோட்பாடும் குறைபாடுடையது என்பதை எளிதில் அறியலாம். பணத்தைச் சேமிப்பவர் துய்ப்பைத் தவிர்க்கவேண்டியிருக்கிறது, தியாகம் செய்யவேண்டியிருக்கிறது என்றால் பெரும் தனவான்கள் கடன் கொடுக்கும் பொழுது வட்டி வசூலிக்கவேண்டிய அவசியமில்லை. லட்சாதிபதிகள் கடன் கொடுப்பதால் துய்ப்பைத் தவிர்க்கவேண்டியிருக்கிறது? இல்லை, உடனடியாகப் பெறக்கூடிய இன்பத்தைத்தான் தியாகம் செய்கிறார்களா? இரண்டுமில்லை. மேலும், துய்ப்புத் தவிர்ப்பு என்பது ஒருவருக்கொருவர் மாறுபடுகிறது. அப்படியானால் வட்டிக் கட்டணமும் மாறுபட வேண்டும். ஆனால், உண்மையில் வட்டிக் கட்டணம் ஒரே மட்டத்தில்தான் இருக்கிறது.

## கால விருப்பெச்சக் கோட்பாடு (Time Preference Theory)

ஒரே அளவு, ஒரே தன்மை உடைய உடனடியாகக் கிடைக்கும் வருவாய் (income), மன நிறைவு (satisfaction); அதே அளவு, அதே தன்மை உடைய, ஆனால், எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய வருவாய், மன்நிறைவு இவ்விரு நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஒருவர் உடனடியாகக் கிடைக்கக்கூடிய நிலையைத்தான் விரும்புவார். இவ்வாறு அவர் விரும்புவது கால விருப்பெச்சம் (time preference) என்றழைக்கப்பெறுகிறது. இவ்வாறு இருக்கும் கால விருப்பெச்சத்தால் எல்லோரும் தங்களுடைய வருவாயை உடனடியாகச் செலவழிக்கத் துடிக்கிறார்கள். கால விருப்பெச்சம் எல்லோருக்கும் ஒரு வகையாக இருப்பதில்லை. கால விருப்பெச்ச அளவு ஒவ்வொருவருடைய மன இயல்பு, பழக்க வழக்கங்களுக்கு ஏற்றாற்போல மாறுதலடைகிறது. ஒருவரிடமிருந்து கடன் வாங்கவேண்டுமானால் அவருக்கு இருக்கும் கால விருப்பெச்சத்தை வெல்லவேண்டும். கால விருப்பெச்சத்தை வெல்வதற்காகக் கொடுக்கப்பெறும் ஊதியம்தான் வட்டி என்று கால விருப்பெச்சக் கோட்பாடு கூறுகிறது. இக் கோட்பாடு மூலதனத்தின் அளிப்பைமட்டுந்தான் விளக்குகிறது. மூலதனத்திற்கு இருக்கும் தேவையை இக் கோட்பாடு கவனத்தில் எடுத்துற கொள்ளவில்லை.

## இறுதிநிலை உற்பத்திக்கோட்பாடு (Marginal Productivity Theory)

இறுதிநிலைக் கோட்பாட்டின் விளக்கத்தையும் குறைபாடுகளையும் முன்னமே விளக்கியிருப்பதால் இங்கு ஒரு முறை விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

**நீர்மை விருப்பக் கோட்பாடு** (Liquidity Preference Theory)

பொருளாதாரக் கருத்துகளில் புரட்சியை உண்டாக்கிய கீன்சு (Keynes) என்பவர்தாம் நீர்மை விருப்பக் கோட்பாட்டை வரைந்தவர். பணத்தின் பணிகளை விளக்கும்பொழுது பணத்திற்கு நீர்மைத் தன்மை (liquidity) இருப்பதாகக் கூறினோம். ஒருவர் தம்முடைய செல்வத்தைப் பணமாக வைத்திருப்பதில் சில அனுகூலங்கள் இருக்கின்றன. அவர் வேண்டும்பொழுது உடனடியாகப் பணத்தைப் பண்டமாக மாற்றிக்கொள்ளலாம். இதைத்தான் பணத்திற்கு இருக்கும் நீர்மைத் தன்மை என்கிறோம்.

தன்னுடைய வருவாயிலிருந்து எவ்வளவு பணத்தை நுகர்வுக்காகச் செலவழிக்க வேண்டும், எவ்வளவு பணத்தைச் சேமிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. பிறகு, சேமித்த தொகையில் எவ்வளவு பணத்தை ரொக்க நிலையில் (liquid cash) வைத்திருக்க வேண்டும்? எவ்வளவு பணத்தைப் பிறருக்குக் கடனாகக் கொடுக்கலாம் (பாங்கில் போடுவது உட்பட) என்று முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவர் எவ்வளவு பணத்தைக் கடனாகக் கொடுப்பார் என்பது அவருக்கு இருக்கும் நீர்மை விருப்பத்தைப் (liquidity preference) பொறுத்திருக்கிறது என்று கூறுகிறார் கீன்சு. பணத்தை ரொக்கமாக வைத்திருக்க இருக்கும் விருப்பம்தான் 'நீர்மை விருப்பம்' என்பது. பணத்தை ரொக்க நிலையில் வைத்திருந்தால் அதற்கு ஊதியம் கிடைக்காது. ஆனால், பணத்தை உடனடியாகப் பண்டமாக மாற்றிக்கொள்ளும் சௌகரியம் இருக்கிறது. பணத்தைக் கடனாகக் கொடுத்தால், அதாவது, நீர்மை விருப்பத்தை விட்டுக் கொடுக்க முன் வந்தால் பணத்திற்கு ஊதியம் கிடைக்கும். ஆனால், பணத்தை உடனடியாகப் பண்டமாக மாற்றிக்கொள்ளும் சௌகரியத்தை இழக்க நேரிடும். ஒருவர் நீர்மை விருப்பத்தை ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு விட்டுக்கொடுப்பதற்காக அவருக்கு அளிக்கப்பெறும் வெகுமதிதான் வட்டி என்பது கீன்சு அவர்களின் கருத்து. எனவே, மக்களுக்கு நீர்மை விருப்பம் அதிகமாக இருந்தால் வட்டி வீதமும் உயர்வாக இருக்கும்.

# 26. இலாபம்

## (Profit)

தொழில்முயல்வோனுக்குக் (Entrepreneur) கிடைக்கும் ஊதியம்தான் இலாபம். பொருளாதாரத்தில் இலாபம் ஒரு சிக்கலான பிரிவாகும். தொழில்முயல்வோனுக்கு ஊதியம் கொடுக்கப்பெற வேண்டும் என்பதில் பொருளாதார வல்லுநர்கள் அனைவரும் (மார்க்ஸ் நீங்கலாக) ஒருமுகமான கருத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தொழில்முயல்வோனுடைய இயல்பை விளக்கும்பொழுது அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்தைக்கொண்டிருப்பதால் இலாபத்தின் தன்மையை விளக்குவதில் அவர்களிடையே எண்ண வேறுபாடு இருக்கிறது. எனவே, இலாபத்தைப்பற்றி முழு விளக்கம் தரக்கூடிய கோட்பாடு ஒன்றுமே இல்லை என்றுகூடக் கூறலாம். இருந்தாலும் வழக்கில் இருக்கும் சில முக்கியக் கோட்பாடுகளை ஆராய்வதன்மூலம் இலாபத்தின் இயல்பைக் கண்டறியலாம். இலாபக் கோட்பாடுகளை விளக்குமுன்னர் நிகர இலாபம், மொத்த இலாபம் இவை இரண்டுக்கும் உள்ள வேற்றுமையை அறியலாம்.

உற்பத்தியின்மூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து நிலம், உழைப்பு, மூலதனம் இவைகளுக்கு அளிக்கப்பெறும் ஊதியம் போகத் தொழில்முயல்வோனுக்கு எஞ்சி நிற்கும் தொகைதான் இலாபம் என்னும் கருத்துச் சாதாரண வழக்கில் நிலவுகிறது. இது சரியன்று. ஏனெனில், இங்கு இலாபம் என்பது மொத்த இலாபத்தைத்தான் (gross profit) குறிக்கிறது. மொத்த இலாபத்தில் நிகர இலாபத்துடன் (net profit) கூட வேறு சில இனங்களும் அடங்கியிருக்கின்றன. மொத்த இலாபத்தில் பின்வரும் இனங்களும் அடங்கியிருக்கும்: (i) தொழில்முயல்வோன் தான் மேற்கொண்டுள்ள தொழிலில் தன்னுடைய சொந்த மூலதனத்தையும் முதலீடு செய்திருக்கலாம். அந்த முதலுக்குக் கிடைக்கக்கூடிய வட்டியும்

மொத்த இலாபத்தில் அடங்கியிருக்கும். (ii) தொழில்முயல்வோன் தன்னுடைய சொந்த உழைப்பையும் அவர் மேற்கொண்டுள்ள தொழிலுக்குக் கொடுத்திருக்கலாம். அவருக்கு ஊதியமாகக் கிடைக்கக்கூடிய தொகையும் மொத்த இலாபத்தில் அடங்கி யிருக்கும். (iii) தொழில்முயல்வோனுக்கு நிலம் இருந்து அந் நிலத்தைத் தொழிலில் ஈடுபடுத்தி இருந்தால், அந் நிலத்துக்குக் கிடைக்கக்கூடிய வாரமும் மொத்த இலாபத்தில் அடங்கியிருக்கும். மொத்த இலாபத்திலிருந்து மேற்கூறிய இனங்களைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகைதான் நிகர இலாபம்.

## இடர் தாங்கு கோட்பாடு (Risk-taking Theory)

இக் கோட்பாட்டை வரைந்தவர் ஹாலே (Hawley) என்பவர். தொழிலை மேற்கொள்ளுவதில் பல இடர்ப்பாடுகள் (risks) இருக் கின்றன. இந்த இடர்பாடுகளைத் தொழில்முயல்வோன் தாங்கி, சமாளித்து, மீண்டுவர வேண்டியிருக்கிறது. இடர்ப்பாடுகளைத் தாங்குவதற்காகத் தொழில்முயல்வோன் பெறும் ஊதியம்தான் இலாபம் என்று கூறுகிறார் ஹாலே. தொழிலில் ஈடுபடும் மற்ற மூன்று உற்பத்திக் காரணிகளுக்கும் நிலையான வருமானங்கள் இருக்கின்றன. தொழிலில் இலாபம் கிடைக்கிறதோ இல்லையோ மற்றக் காரணிகளுக்கு ஊதியம் கொடுக்கப்பெற வேண்டும். தொழில்முயல்வோனுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய்தான் நிலையாக இருப்பதில்லை. தொழிலில் இருக்கும் இடர்ப்பாடுகளைத் தாங்குவது கவலைக்கிடமானது, தொல்லைக்குள்ளானது. இவை களுக்குக் கிடைக்கும் வெகுமதிதான் இலாபம். இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் ‘இடர் தாங்கு கோட்பாடு’.

தொழில்முயல்வோன் ஈட்டும் இலாபத்தில் ஓரளவுக்காவது இடர்பாட்டைத் தாங்குவதற்கான வெகுமதி இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால், இலாபம் முழுவதும் இடர்ப்பாட்டைத் தாங்குவதற்காகக் கிடைக்கும் வெகுமதி என்பது தவறான கருத்தாகும். தொழில்முயல்வோன் பல பணிகளை மேற் கொள்கிறான். அவற்றுள் ஒன்றுதான் இடர்ப்பாட்டைத் தாங்குவது. மேலும், இடர்ப்பாடுகளில் சிலவற்றை முன்கூட்டியே அறியக்கூடும். மேலும் சிலவற்றை, ‘ஈட்டுறுதி’ (Insurance) செய்வதன்மூலம் தவிர்த்துவிடலாம்.

## உறுதியின்மை தாங்கு கோட்பாடு (Uncertainty-bearing Theory)

இக் கோட்பாட்டை வரைந்தவர் பேராசிரியர் நைட் (Prof. Knight) என்பவர். உறுதியின்மையைத் தாங்குவதுதான்

தொழில்முயல்வோனுடைய முக்கியப் பணி என்று கூறுகிறார் நைட். எதிர்காலம் உறுதியில்லாதது. எதிர்காலத்தில் எத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கும் என்று திண்ணமாகக் கூற முடியாது. ஆனால், எதிர்கால நிகழ்ச்சிகளில் சிலவற்றை ஓரளவுக்கு முன் கூட்டியே அறியலாம். இவ்வாறு முன்கூட்டி அறியக்கூடிய இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக ஈட்டுறுதி செய்துகொள்ளலாம். இவ்வகை இடர்ப்பாடுகளை நைட் அவர்கள் ஈட்டுறுதிமூலம் தவிர்க்கக்கூடிய இடர்ப்பாடுகள் (Insurable risks) என்றழைக்கிறார். உண்மையில் இவை இடர்ப்பாடுகள் அல்ல என்றும் கூறுகிறார். எதிர்கால நிகழ்ச்சிகளில் சிலவற்றை முன்கூட்டி அறியமுடியாது. ஆகையால், அவைகளுக்கு எதிராக ஈட்டுறுதி செய்துகொள்ளவும் முடியாது. உதாரணமாக, தொழில்முயல்வோன் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு எதிர்காலத்தில் தேவை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. இந்த நிலையை இடர்ப்பாடு என்பதைவிட உறுதியின்மை என்றழைக்கலாம் என்கிறார் நைட். இத்தகைய எதிர்கால உறுதியின்மையைத் தாங்குவதற்கு ஊதியமாகத்தான் தொழில்முயல்வோனுக்கு இலாபம் கிடைக்கிறது. இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் 'உறுதியின்மை தாங்கு கோட்பாடு' என்பதாகும்.

இக் கோட்பாடு 'இடர் தாங்கு கோட்பாட்டை'விடச் சற்றுத் திருத்தமானது என்று கூறலாம். ஆனால், உறுதியின்மையைத் தாங்குவது மட்டுந்தான் தொழில்முயல்வோனுடைய பணி என்று கூறுவது தவறாகும்.

**இலாபத்தின் வாரக் கோட்பாடு** (Rent Theory of Profit)

வாக்கர் (Walker) என்பவருடைய கருத்துப்படி இலாபத்திற்கு வார இயல்பு இருக்கிறது. எப்படித் தரம் உயர்ந்த நிலத்திற்கு வாரம் கிடைக்கிறதோ அதேபோலத் திறன்வாய்ந்த தொழில் முயல்வோனுக்கு இலாபம் கிடைக்கிறது. நிலத்தில் எப்படி வாரம் பெறாத இறுதிநிலை நிலம் (Marginal Land) இருக்கிறதோ அதே போல் தொழில்முயல்வோர்களிடையேயும் இலாபம் கிடைக்காத இறுதிநிலைத் தொழில்முயல்வோன் (Marginal Entrepreneur) இருக்கிறான். அவனுக்கு இலாபம் கிடைக்காது; அவனுடைய உழைப்புக்கு ஊதியம்தான் கிடைக்கும். இவ்வாறு விளக்கும் ஒரு கோட்பாடுதான் 'இலாபத்தின் வாரக் கோட்பாடு' ஆகும்.

இக் கோட்பாடு இலாபத்தின் உண்மையான இயல்பை விளக்குவதாக இல்லை. மேலும், அதிக இலாபம் பெறும் தொழில்

முயல்வோர்கள் எல்லோருக்கும் தொழில்திறன் அதிகமாக இருக்கிறது என்று கூறவும் முடியாது. இலாபத்தை நிலத்துக்குக் கிடைக்கும் வாரத்தோடு ஒப்பிடுவது பொருத்தமாக அமையாது. ஒரு நிலத்திற்கு வாரம் கிடைக்கலாம், வாரம் கிடைக்காத நிலம் இருக்கலாம், நட்டமடையும் நிலம் இருக்க முடியாது. ஆனால், ஒரு தொழில்முயல்வோன் இலாபம் ஈட்டலாம், இலாபம் கிடைக்காமல் இருக்கலாம், நட்டத்தையும் அடையலாம்.

**இலாபத்தின் கூலிக் கோட்பாடு** (Wages Theory of Profit)

டாசிக் (Taussig), தாவன்போர்ட் (Davenport) இவ்விரு ஆசிரியர்களுடைய பெயர்களும் இக் கோட்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. கூலிகளைப் போன்றதுதான் இலாபங்களும் என்று கூறுகிறது இக் கோட்பாடு. தொழிலாளிக்கு வழங்கப்பெறும் கூலியிலிருந்து தொழில்முயல்வோனுக்குக் கிடைக்கும் ஊதியத்தை வேற்றுமைப்படுத்திக் காட்டவேண்டிய அவசியமே இல்லை. ஒருவருடைய உழைப்பு உடலுழைப்பாக இருக்கலாம். மற்றொருவருடைய உழைப்பு மூளையையும் சிந்தனையையும் சார்ந்ததாக இருக்கலாம். இக் காரணத்தால் இருவகை உழைப்புகளையும் வேற்றுமைப்படுத்த வேண்டியதில்லை. இதுதான் இலாபத்தின் கூலிக் கோட்பாடு.

தொழில்முயல்வோனுடைய பணியையும், தொழிலாளி ஒருவனுடைய பணியையும் ஒன்றாகக் கருதுவது தவறாகும். சாதாரணத் தொழிலாளி ஏற்றுக்கொள்ள முடியாத பணிகளைத் தொழில்முயல்வோன் மேற்கொள்கிறான். தொழில்முயல்வோனுக்குக் கிடைக்கக்கூடிய ஊதியம் சுன்னமாகக்கூட இருக்கலாம். ஆனால், கூலிகள் ஒரு மட்டத்திற்குக் கீழாகக் குறைய முடியாது.

# 27. பொருளாதாரத் திட்டம் வகுத்தல்
## (Economic Planning)

**விளக்கம்**

திட்டமிட்டுச் செயல்படுவதைத்தான் சாதாரணமாகத் திட்டம் என்றழைக்கிறோம். துறை எதுவாக இருந்தாலும், குறிப்பிட்ட ஒரு குறிக்கோளை வரையறுத்துக்கொண்டு, அக் குறிக்கோள் கைவரத் தேவையான வழிதுறைகளை வகுத்துச் செயல்படத் தொடங்குவதுதான் திட்டம். இந்த விளக்கம் பொருளாதாரத் திட்டத்திற்கும் பொருந்தும். நாடுகளின் பொருளாதாரக் கொள்கையில் இருக்கும் பெருங் குறிக்கோள் வளர்ச்சி. வளர்ச்சி தான் குறிக்கோள் என்றாலும் எத்தகைய வளர்ச்சி என்று திருத்தமாகக் கூற வேண்டும். அமெரிக்க நாட்டைவிட, ஜப்பான் நாட்டைவிட நாம் வளர்ந்துவிட வேண்டும் என்று விரும்பலாம். ஆனால், அது வெறும் ஆசையாகவே இருக்கும், எண்ணம் கைகூடாது. ஏனெனில், விரும்பினால்மட்டும் கிடைக்கக் கூடியது அன்று வளர்ச்சி. ஒரு நாடு வளர்ச்சியைப் பெறுவதற்கு எத்தனையோ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, வளர்ச்சி என்று பொதுப்படையாகக் கூறினால் அது ஒரு கானல் நீராகத்தான் இருக்கும். ஒரு நாடு தனக்கு இருக்கும் சக்திகளைப் பயன்படுத்திப் பெறக்கூடிய வளர்ச்சி என்று அவ் வளர்ச்சியை வரையறுக்க வேண்டியிருக்கிறது. இக் கண்ணோட்டத்தில் நோக்கினால் பொருளாதார வளர்ச்சி என்பது, ஒரு நாடு குறிப்பிட்ட அளவு வளர்ச்சியைக் குறிப்பிட்ட கால அளவுக்குள் அடையும் நோக்கத்துடன் உற்பத்தி, நுகர்வு, பங்கீடு, சேமிப்பு, முதலீடு போன்ற பல பொருளாதார நடவடிக்கைகளை ஏதுவான வழியில் செயற்படுத்துவது என்று விளக்கலாம்.

இதனால் திட்டமில்லாத நாடுகளில் வளர்ச்சி இருக்காது என்று கூற முடியாது. பொருளாதாரத் துறையில் பின் தங்கிய

நாடுகளில் திட்டமில்லாத வளர்ச்சியைவிடத் திட்டத்துடன் கூடிய வளர்ச்சி அதிகமாக இருக்கும் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். பின் தங்கிய நாடுகளில் விரைவான வளர்ச்சிக்குவேண்டிய சூழ்நிலை இருப்பதில்லை. இந் நாடுகளில் நாட்டு வருமானமும், தலா வருமானமும் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நத்தை வேகத்தில்தான் வளர்ந்து வருகின்றன. மக்கள்தொகை வெள்ளமாகக் கரைபுரண்டோடு கிறது. பெரும்பான்மை மக்களும் விவசாயத்தையே நம்பி வாழ் கின்றனர். தொழில் வளர்ச்சியே இல்லை என்றுகூடக் கூறலாம். விவசாயம், தொழில் எல்லாத் துறைகளிலும் உற்பத்திமுறை பழமையாகவே இருக்கிறது. மக்களுடைய வாழ்க்கைத்தரம் குன்றியிருப்பதால் தொழிலாளர்களுடைய உழைப்புத்திறனும் மிகக் குறைவாகவே இருக்கிறது. நலிந்த வாழ்க்கை, வேலை யில்லாத் திண்டாட்டம், தலைவிதிக் கோட்பாடு இவையும் பின் தங்கிய நாடுகளில் காணக்கிடக்கும் இயல்புகள். சுருக்கமாகக் கூறினால், இயற்கையான பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் சூழ்நிலையை இந் நாடுகள் கொண்டிருக்கின்றன. சூழ்நிலை என் பதைவிட வளர்ச்சியைத் தடுக்கும் ஒரு சுழலில் இந் நாடுகள் சிக்கிக்கொண்டிருக்கின்றன என்று கூறலாம். இச் சூழ்நிலையைத் தகர்த்தெறிந்துவிட்டு, சுழலிலிருந்து மீள வேண்டுமானால் பொருளாதாரத் திட்டத்தைக் கையாளுவதுதான் ஒரே வழி.

இந்த நூற்றாண்டில்தான் திட்டமிட்டுச் செயலிடுவது வழக் கிற்கு வந்தது. கடந்த நூற்றாண்டில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதேயில்லை. இத்தகைய 'தலையிடாக் கொள்கையே' (Laissez faire) சிறந்தது என்ற கருத்தும் நிலவி வந்தது. முதல் உலகப் போரும், 1929-க்கும் 1933-க்கும் இடைக்காலத்தில் தோன்றிய மாபெரும் மந்தமும் (Great Depression) இத்தகைய ஒரு கொள்கை தவறென்று புலப்படுத்தின. பொருளாதாரத் திட்டத்தை முதன்முதலாகக் கையாண்டு வெற்றிகண்ட நாடு ருஷ்யாவாகும். பிற நாடுகள் நூறு, இருநூறு ஆண்டுகளில் பெற்ற பொருளாதார வளர்ச்சியை ருஷ்யா திட்டத்தின்மூலம் ஒரு கால் நூற்றாண்டுக் காலத்திற்குள் ளாகக் கைவரப்பெற்றது. ருஷ்யா கண்ட வெற்றி பிற நாடு களையும் இயங்கவைத்தது. இன்று பல நாடுகளும் பொருளா தாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டிருக் கின்றன. பொருளாதாரத் துறையில் திட்டம் தீட்டுவதை இந் நூற்றாண்டின் சிறப்பியல் என்று சொல்லலாம்.

**இந்தியாவில் திட்ட முயற்சி**

பொருளாதாரத் துறையில் இந்தியா ஒரு பின்தங்கிய நாடாக இருந்துவந்தது; இன்றும் இருந்துவருகிறது. மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது பொதுவாக நம்முடைய பொருளாதார நிலையும் குறிப்பாக மக்களின் வாழ்க்கை நிலையும் மிகவும் கீழ் நிலையில் இருக்கின்றன. நாம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பதைப் பல நாடுகளில் இருக்கும் தலா வருமானத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதன்மூலம் அறியலாம். இந்த விவரத்தைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

**1953-ல் நாடுகளில் தலா வருமானம் (ஓர் ஆண்டுக்கு)**

| நாடு | தலா வருமானம் | நாடு | தலா வருமானம் |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | ரூ. 9,540 | ஜப்பான் | ரூ. 985 |
| கனடா | ,, 6,590 | எகிப்து | ,, 560 |
| இங்கிலாந்து | ,, 4,650 | இலங்கை | ,, 540 |
| ஆஸ்திரேலியா | ,, 4,605 | இந்தோனீசியா | ,, 475 |
| ஃபிரான்சு | ,, 3,000 | பாகிஸ்தான் | ,, 300 |
| ருஷ்யா | ,, 2,200 | இந்தியா | ,, 200 |

நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த ஒரு பொருளாதாரத் திட்டத்தைக் கையாளவேண்டியது அவசியம் என்னும் கருத்து நம் நாட்டில் நீண்ட காலமாகவே இருந்துவந்தது. மைசூரைச் சேர்ந்த சர் எம். விஸ்வேஸ்ரய்யா அவர்கள் 1934ஆம் ஆண்டிலேயே ஒரு பத்தாண்டுக்கால வளர்ச்சித் திட்டத்தை வகுத்துத் தந்தார். இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி 1938ஆம் ஆண்டில், இந்தியாவுக்குப் பொருத்தமான ஒரு பொருளாதாரத் திட்டத்தை வரைந்து தருவதற்காக மறைந்த பண்டித நேரு அவர்களின் தலைமையின்கீழ்த் திட்டக் குழு ஒன்றை நியமித்தது. ஆனால், இரண்டாம் உலகப் போர், இந்தியாவின் அரசியல் சூழ்நிலை இரண்டின் காரணமாகவும் இத் திட்டக் குழு இயங்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து பம்பாய் திட்டம் (Bombay Plan), மக்களின் திட்டம் (People's Plan), காந்தீயத் திட்டம் (Gandhian Plan) என்று பல திட்டங்கள் வரையப்பெற்றன. ஆனால், அரசியல் காரணத்தால் இவற்றுள் ஒன்றுகூட நிறைவேறவில்லை. போர் முடிந்ததும் திட்டத்திற்கான பல நடவடிக்கைகளை அரசாங்கம்

மேற்கொண்டது. நாட்டுப் பிரிவினையால் இவை அனைத்தையும் கைவிடவேண்டியிருந்தது. நாடு விடுதலை அடைந்ததும் பண்டித நேரு அவர்களைத் தலைவராகக் கொண்ட 'திட்டக் கமிஷன்' (Planning Commission) ஒன்று 1950 மார்ச்சு மாதத்தில் நியமிக்கப்பெற்றது. திட்டக் கமிஷன் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை 1952 டிசம்பர் மாதம் வெளியிட்டது. முதல் திட்டம் 1956ஆம் ஆண்டு, மார்ச்சு 31ஆம் தேதியோடு முடிவுக்கு வந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைகு வந்தது. மூன்றும் திட்டம் 1961 ஏப்ரல் முதல் தேதி நடைமுறைக்கு வந்தது. இன்று மூன்று திட்டங்களை நிறைவேற்றிய நிலையில் இருக்கிறோம்.

நமது திட்டங்களும் விரைவான பொருளாதார வளர்ச்சி அடைவதையே குறிக்கோளாக் கொண்டவைதாம். ஆனால், எந்த அளவு வளர்ச்சி என்பதை முதலில் அறியவேண்டும். இதை அறியாவிட்டால் திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் நாட்டில் காணும் இன்னல்கள் யாவும் மறையும், செல்வம் செழிக்கும் என்னும் தவறான கருத்துகள் எழுவதற்கு ஏதுவாகும். 1950-51 ஆம் ஆண்டினை அடிப்படையாகக்கொண்டு, நாட்டு வருமானத்தைப் பதினேழு ஆண்டுக் காலத்திலும், தலா வருமானத்தை 23 ஆண்டுக் காலத்திலும் இரட்டிக்கச் செய்யவேண்டும் என்பது தான் நமது பொருளாதாரத் திட்டத்தின் நெடுங்காலக் குறிக்கோள். 1950-51 ஆம் ஆண்டின் நாட்டு வருமானம் ரூ. 8650 கோடி, தலா வருமானம் ரூ. 249. திட்டத்தின்படி ஒரு சராசரி இந்தியனுடைய ஆண்டுத் தலா வருமானம் 1973-74ஆம் ஆண்டு வாக்கில் ரூ. 498-க்கு உயரவேண்டும். இக் குறிக்கோள் கைகூடுமா என்பது பல காரணங்களைப் பொறுத்திருக்கிறது. திட்டம் தீட்டுவதும் தீட்டிய திட்டத்தை நிறைவேற்றுவதும் அவ்வளவு எளிதான செயலன்று. நமது சக்திகளுக்கு அப்பாற்பட்ட சில நிகழ்ச்சிகளும் காரணங்களும் திட்டத்தின் போக்கை மாற்றிவிடக்கூடும். இந்தியாவைப்பற்றிய அளவில் இஃது முற்றிலும் உண்மை. சீனப் பயமுறுத்தலும், பாகிஸ்தானிய ஆக்கிரமிப்பும் நமது திட்டங்களின் போக்கை மாற்றிவிட்டன. மக்கள்தொகைப் பெருக்கமும் பெருந் தடையாக இருக்கிறது. இதனை மனத்தில் கொண்டு இதுவரை நடந்தேறிய மூன்று திட்டங்களையும் சற்று விரிவாக ஆராயலாம்.

## முதல் ஐந்தாண்டுத் திட்டம்

இரண்டாவது உலகப் போர், நாட்டு விடுதலை இரண்டும் இந்தியாவின் பொருளாதார நிலை, அமைப்பு இரண்டினையும்

பெரிதும் பாதித்திருந்தன. இவற்றால் எழுந்த குறைகளைப் போக்கி நாட்டுக்குப் பொருளாதார வலிமை ஊட்டுவதில் முதல் திட்டம் முனைப்பாக ஈடுபட்டது. குறிப்பாகக் கூறினல் பின்னர் வர இருக்கும் திட்டங்களுக்குத் துணையாக உறுதியான ஓர் அடிக் கல் நாட்டுவதை முதல் திட்டம் குறிக்கோளாகக் கொண்டது. நாட்டு வருமானம் 12 சதவீதத்தில் உயரும் என்று முதல் திட்டம் எதிர்பார்த்தது. விவசாய வளர்ச்சிக்கு முதலிடம் அளிக்கப் பெற்றது. மொத்த முதலீடான ரூ. 2356 கோடியில் 44 சதவீதம் விவசாயம், நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரம் இவைகளின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பெற்றது.

## முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகள்

முதல் திட்டம் ஒரு வெற்றிகரமான திட்டம். எதிர்பார்த்த அளவுக்குமேல் பலன் கிடைத்தது என்று கூறவேண்டும். திட்ட தொடக்க காலத்திற்கும் திட்ட முடிவு காலத்திற்கும் நாட்டின் பொருளாதார நிலையில் நல்ல வேறுபாடு தெரிந்தது. நாட்டு வருமானத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி 12 சதவீதம். கிடைத்தது 18 சதவீதம். நாட்டின் மொத்த வருமானம் ரூ. 9,990 கோடியி லிருந்து 1955–56ஆம் ஆண்டில் ரூ. 10,170 கோடிக்கு உயர்ந்தது.

விவசாயத்துறையில் நல்ல வளர்ச்சியிருந்தது. விவசாயப் பண்டங்களின் உற்பத்தியில் 19 சதவீதப் பெருக்கம் இருந்தது. திட்டத்தின் தொடக்க ஆண்டில் 51 மில்லியன் டன்களாக இருந்த உணவுப் பண்ட உற்பத்தி முடிவு ஆண்டில் 64 மில்லியன் டன்களுக்கு உயர்ந்தது. உணவுப் பண்டத்தில்மட்டும் ஏறக் குறைய 30 சதவீத வளர்ச்சி இருந்தது. பருத்தி, எண்ணெய் வித்துகள், சணல் இவற்றின் உற்பத்தியிலும் நல்ல பெருக்கம் இருந்தது.

நீர்ப்பாசனத் திட்டங்களிலும், மின்சார உற்பத்தியிலும் நல்ல அபிவிருத்தி இருந்தது. தொழில் உற்பத்தியிலும் நல்ல பெருக்கம் இருந்தது. தொழில் மொத்த உற்பத்தி 25 சதவீதத்தில் உயர்ந்தது. சிமெண்டு உற்பத்தி பிரமிக்கவைக்கும்படி உயர்ந்தது. துணி உற்பத்தியில் பெருக்கம் எதிர்பார்த்ததற்கு மேலாக இருந்தது. வேலை வாய்ப்பு வசதிகளும் பெருகின. முதல் திட்டத் தின்மூலம் 6·7 மில்லியன் மக்களுக்குப் புதிதாக வேலைகிடைத்தது என்று கணக்கிடப்பெற்றது. நாட்டில் எல்லாத் துறைகளிலும் உற்பத்திப் பெருக்கம் இருந்ததால் பொதுவான விலைமட்டத்திலும் ஏற்றமில்லை.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்**

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956 ஏப்ரல் முதல் தேதி நடைமுறைக்கு வந்தது. இத் திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

(1) மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு ஏதுவாகக் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு நாட்டு வருமானம் உயர வேண்டும்.

(2) தொழில் துறையில் விரைவான வளர்ச்சி இருக்க வேண்டும்.

(3) வேலை வாய்ப்புகள் (Employment opportunities) அதிக அளவில் பெருகவேண்டும்.

(4) மக்களுடைய வருவாயில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவேண்டும்.

இரண்டாவது திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 4,800 கோடி ஆகக் கணக்கிடப்பெற்றது. பின்னர் இத் தொகை ரூ. 4,500 கோடிக்குக் குறைக்கப்பெற்றது. திட்டகாலத்தில் முடிவாக முதலீடு செய்யப்பெற்ற தொகை ரூ. 4,600 கோடி ஆகும்.

**இரண்டாம் திட்டத்தின் சாதனைகள்**

இத் திட்டகாலத்தில் நாட்டு வருமானம் ரூ. 10,800 கோடியிலிருந்து ரூ. 13,480 கோடியாக, அதாவது, 25 சதவீதத்தில் உயரும் என்று எதிர்பார்க்கப்பெற்றது. ஆனால், உண்மையில் கிடைத்த வளர்ச்சி 19·6 சதவீதம்தான் இருந்தது. முதல் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இரண்டாவது திட்டம் அவ்வளவு வெற்றிகரமாக இல்லை. முதல் திட்டத்தின் வெற்றிக்கு இயற்கையின் ஒத்துழைப்பும் ஒரு முக்கியக் காரணமாகும். இரண்டாவது திட்டகாலத்தில் இயற்கை அவ்வளவு அனுகூலமாக இல்லை. பருவ மழை தவறியது. இதனால் விவசாயத் துறையில் எதிர்பார்த்த அளவுக்கு வளர்ச்சி இல்லாமல் போய்விட்டது. விவசாயத்தையே மூலத் தொழிலாகக்கொண்ட இந்தியா போன்ற நாட்டில் மற்றத் துறைகளின் வளர்ச்சியும் விவசாய வளர்ச்சியைச் சார்ந்தே இருக்கும். இரண்டாம் திட்டகாலத்தில் நாட்டில் சிறப்பான பொருளாதார வளர்ச்சி இல்லாததற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும்.

மேலும், திட்டம் செயல்படத் தொடங்கிய சிறிது காலத்திற்குள் வேறு சில இடையூறுகளும் தலை தூக்கின. குறிப்பாக நாட்டின் அந்நியச் செலுத்து நிலை (Balance of payments position) மிகவும் கேடுற்ற நிலையை அடைந்தது. இதனால் எழுந்த அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை (Foreign exchange shortage) நாட்டின் தொழில் வளத்தைப் பாதித்தது. அயல் நாடுகளிலிருந்து கிடைத்த மூலதனம் (Foreign capital) அரசாங்கம் நிலைமையை ஒருவாறு சமாளிப்பதற்கு உதவியாக இருந்தது.

இடையூறுகள் பல தலையிட்டாலும்கூட, இத் திட்ட காலத்தில் தொழில் உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் இருந்தது. துர்க்காபூர், பிலாய், ரூர்கேலா இம் மூன்று இடங்களிலும் நிறுவப் பெற்ற இரும்புத் தொழிற்சாலைகள் செயல்படத் தொடங்கின. இவை இரண்டாம் திட்டத்தின் மாபெரும் சாதனையாகும். பல இனங்களிலும் தொழில் உற்பத்தி நல்ல வளர்ச்சியடைந்தது. 1950–51ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டால் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள் (Index of industrial production) 1955–56-ல் 139 எண்ணாகவும், 1960–61-ல் 194 எண்ணாகவும் உயர்ந்தன. இயந்திர உற்பத்தி (machinery), இரசாயனப் பொருள்கள் (chemicals) உற்பத்தி இத் துறைகளில் நல்ல வளர்ச்சி இருந்தது.

தொழில் துறையில் இருந்த அளவுக்கு விவசாயத் துறையில் முன்னேற்றம் இல்லை. இரண்டாம் திட்டகால விவசாய வளர்ச்சியைக் கீழே உள்ள பட்டியலில் அறியலாம்.

**விவசாய உற்பத்திக் குறியீட்டு எண் 1949–50 = 100**
(Index of Agricultural Production)

| | 1950–51 | 1955–56 | 1960–61 |
|---|---|---|---|
| உணவுப் பொருள்கள் | 91 | 115 | 135 |
| மற்ற விளைபொருள்கள் | 106 | 120 | 142 |

உணவு உற்பத்தியில் எதிர்பார்த்த இலக்குகளை (targets) அடைய முடியவில்லை. திட்ட முடிவு காலத்தில் எதிர்பார்த்த இலக்குகள் 80·5 மில்லியன் டன். ஆனால், முதல் திட்ட முடிவு காலத்தில் 64 மில்லியன் டன்னாக இருந்த உணவு உற்பத்தி இரண்டாம் திட்ட முடிவு காலத்தில் 76 மில்லியன் டன்னுக்குத் தான் உயர்ந்தது.

இரண்டாம் திட்டத்தின் மூன்றுவது நோக்கம் நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதாகும். இந் நோக்கமும் எதிர்பார்த்த அளவுக்குக் கைகூடவில்லை. திட்டகாலத்தில் 10·5 மில்லியன் நபர்களுக்குப் புதிதாக வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் பெற்றது. ஆனால், உண்மையில் புதிதாக வேலைக்கு அமர்த்தப் பெற்றவர்களின் எண்ணிக்கை 8 மில்லியன்தான் இருந்தது.

திட்டத்தின் நான்காவது நோக்கம் கைகூடியதா என்பதை எளிதில் கணக்கிட முடியாது. நாட்டில் இருக்கும் பொருளாதாரச் சூழ்நிலையை வைத்துப் பார்த்தால், இந்த முயற்சியில் அவ்வளவு வெற்றி கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

**மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்**

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றப் பாதையில் மூன்றுவது திட்டம் ஒரு முக்கியக் கட்டமாகும். ஏனெனில், முதலிரண்டு திட்டகாலத்தில் கிடைத்த வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்துவதில் மூன்றும் திட்டம் முனைந்திருக்கிறது. மூன்றும் திட்டம் மேற்கொண்ட முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு:

(1) நாட்டு வருமானத்தில் ஆண்டாண்டுக்கு 5 சதவீத அளவுக்குக் குறைவில்லாத வளர்ச்சியைப் பெறவேண்டும். பிந்திய ஆண்டுகளிலும் இந்த அளவுக்கு வளர்ச்சி கிடைக்கும்படியான வழியில் மூன்றும் திட்டகாலத்தில் முதலீடு செய்யப்பெறும்.

(2) உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு நிலை அடைய வேண்டும். தொழில்கள், ஏற்றுமதி இவற்றில் இருக்கும் தேவையைச் சமாளிக்கும் அளவுக்குப் பொதுவான விவசாய முன்னேற்றம் வேண்டும்.

(3) எதிர்காலத் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொருள்களை அடுத்த பத்தாண்டுக் காலத்திற்குள்ளாக உள்நாட்டிலேயே தயாரிக்கும் நிலை ஏற்படவேண்டும். இதற்கு ஆதாரமாக உள்ள இரும்பு, இரசாயனப் பொருள்கள், எரிபொருள் (fuel) போன்ற மூலத் தொழில்களை மூன்றும் திட்டகாலத்தில் பெருக்க வேண்டும்.

(4) நாட்டில் இருக்கும் மனித சக்தியை முழு அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவுக்குப் பெருக்கவேண்டும்.

(5) மக்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவேண்டும்.

இந் நோக்கங்கள் அனைத்தும் சிறந்த நோக்கங்களாகும். குறிப்பாக, உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு நிலை அடைய வேண்டுமென்று திட்டக் கமிஷன் வலியுறுத்தி யிருக்கிறது. இது மிக்க அவசியமாகும். விவசாயத் துறை உண்டாக்கிய தடையே இரண்டாம் திட்டகாலத்தில் எதிர்பார்த்த பலன் கிடைக்காததற்குக் காரணமாகும். இவ் வுண்மை உணரப்பெற்று விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பெற்றிருக்கிறது. உணவுப் பண்டங்களுக்கு இறக்குமதியை நம்பி இருப்பது விரும்பத்தக்கதன்று என்பதோடு, இதனல் அந்நியச்செலாவணித் தட்டுப்பாடும் ஏற்படுகிறது.

திட்டத்தின் நான்காவது நோக்கம் மிகவும் முக்கியமானதொன்று என்று குறிப்பிடவேண்டும். இந்தியாவில் அதிக அளவில் கிடைக்கும் பொருளாதாரச் சாதனம் மனித சக்திதான். மற்றச் சாதனங்களாகிய நிலமும் மூலதனமும் தேவையான அளவுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலையை உணர்ந்து பெருமளவில் கிடைக்கும் சாதனத்தை முழு அளவுக்கும் பயன்படுத்திக் கொள்வதுதான் சிறப்பான செயலாகும்.

ஐந்தாவது நோக்கம் ஒரு புதிய நோக்கமன்று. இந்தியாவின் ஆளுங்கட்சியும் அரசாங்கமும் நாட்டில் ஜனநாயக சோஷியலிசத்தை அமைப்பதைப் பெருங் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன. ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமை இல்லாத ஒரு சமுதாயத்தை ஜனநாயக முறையில் அமைக்கவேண்டுமானல் மக்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கவேண்டியது அவசியமாகும்.

மூன்றும் திட்டத்தின் முதலீடு மொத்தம் ரூ. 10,400 கோடியாகும். அதில் அரசினர் முதலீடு ரூ. 7,500 கோடி; தனியார்

முதலீடு ரூ. 4,100 கோடியாகும். அரசினர் முதலீட்டில் விவசாய வளர்ச்சி, நீர்ப்பாசனத் திட்டங்கள் இவற்றிக்காக ஒதுக்கப்பெற்ற மொத்தத் தொகை ரூ. 1,718 கோடியாகும். மொத்த முதலீட்டில் இத் தொகை 23 சதவீதமாகும். திட்டகாலத்தில் உணவு உற்பத்தியில் 30 சதவீதப் பெருக்கம் இருக்குமென்று எதிர்பார்க்கப் பட்டது. நீர்ப்பாசன விஸ்தரிப்புத் திட்டத்தால் புதிதாக 20 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கு நீர் வசதி கிடைக்குமென்றும், இதனால் நீர்ப்பாசன வசதியின்கீழ்க் கொண்டுவரப்பட்ட நில அளவு 90 மில்லியன் ஏக்கருக்கு உயரும் என்றும் எதிர்பார்க்கப்பெற்றது. தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பெற்ற தொகை ரூ. 1,520 கோடியாகும். இத் தொகை மூன்றும் திட்டத்தின் மொத்த முதலீட்டில் (அரசினர் துறைமட்டும்) 20 சதவீதமாகும்.

# கலைச்சொற்கள்

## ( ஆங்கிலம் — தமிழ் )

### A

Abstinence theory — துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு
Agents of production — உற்பத்திக் காரணிகள்
Assets — சொத்துகள்
Assumption — எடுகோள்
Average revenue — சராசரி வரவு

### B

Balance of payments — அயல்நாட்டுச் செலுத்துநிலை
Balance of trade — அயல்நாட்டு வாணிப நிலை
,, favourable — அயல்நாட்டு வாணிபச் சாதக நிலை
,, unfavourable — அயல்நாட்டு வாணிபப் பாதக நிலை
Bank — பாங்கு
Bank, commercial — வணிக பாங்குகள்
,, credit — பாங்குக் கடன் செலாவணி
,, deposit — பாங்கு வைப்பு
,, money — பாங்குப் பணம்
,, notes — பாங்கு நோட்டுகள்
,, rate — மைய பாங்கு வீதம் அல்லது பாங்கு வீதம்
Barter — பண்டமாற்று
Bills of exchange — வாணிப உண்டியல்கள்
Budget — வரவுசெலவுத் திட்டம்

## C

Capital — முதல், மூலதனம்
Capital formation — முதலாக்கம்
Capital goods — முதற்பொருள்கள்
Capitalism — முதலாளித்துவம்
Capitalistic method of production — முதலாட்சி உற்பத்தி முறைகள்
Cheques — செக்குகள்
Circulating or working capital — சுழல் முதல்
Classical Economists — கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் அல்லது பூர்வ—பொருளாதார அறிஞர்கள்
Clearing House — செக்குத் தீர்வகம்
Coins — நாணயங்கள்
Combination — கலப்புக் கூட்டு
Comforts — வசதிப் பொருள்கள்
Commodity — பண்டம்
Comparitive cost — ஒப்பீட்டுக் கிரயம்
Competition — போட்டி
,, perfect — நிறைவுப் போட்டி
,, pure — தூய போட்டி
Constant cost — மாருச் செலவு
,, returns, law of — மாரு விளைவு விதி
Consumer — நுகர்வோன், துய்ப்போன்
Consumer's surplus — நுகர்வோர் எச்சப்பாடு
Consumption — நுகர்வு, துய்ப்பு
Control — கட்டுப்பாடு
Co-operation — கூட்டுறவு
Cost — கிரயம், செலவு, அடக்கச் செலவு
,, average — சராசரிச் செலவு
,, of living — வாழ்க்கைச் செலவு
,, fixed — மாருச் செலவுகள்
,, marginal — இறுதிநிலைச் செலவு
,, money — பணச்செலவு
,, prime — முதன்மைச் செலவுகள்
,, of production — உற்பத்திச் செலவு
,, real — உண்மைச் செலவு
,, supplementary — துணைச்செலவுகள்

| | | |
|---|---|---|
| Costs, variable | — | மாறும் செலவுகள் |
| Currency system | — | பணத்திட்ட முறை |
| Curve | — | வளைகோடு |

**D**

| | | |
|---|---|---|
| Demand | — | தேவை |
| ,, curve | — | தேவை வளைகோடு |
| ,, Law of | — | தேவை விதி |
| ,, Price | — | தேவை விலை |
| ,, Schedule | — | தேவைப் பட்டியல் |
| Depression | — | மந்தம் |
| Desire | — | வேட்கை |
| Diminishing returns | — | குறைந்துசெல் விளைவு |
| Direct tax | — | நேர்முக வரி |
| Discount House | — | தள்ளுபடி நிலையம் |
| Disequilibrium | — | சமநிலைக்கேடு |
| Distribution of income | — | வருமானப் பகிர்வு, வருபானப் பங்கீடு |
| Disutility | — | பயன்கேடு |
| Division of labour | — | வேலைப்பகுப்பு |
| Dumping | — | பண்டங்களைக் குவித்தல் |
| Durable goods | — | உறுதிப் பொருள்கள் |

**E**

| | | |
|---|---|---|
| Earnings | — | சம்பாத்தியங்கள் |
| Economic principles | — | பொருளாதாரத் தத்துவங்கள் |
| Economic system | — | பொருளாதார அமைப்பு |
| Economies | — | சிக்கனங்கள் |
| ,, external | — | புறச்சிக்கனங்கள் |
| ,, internal | — | அகச்சிக்கனங்கள் |
| Effective demand | — | உறுதித் தேவை |
| Elasticity | — | நெகிழ்ச்சி |
| ,, of demand | — | தேவை நெகிழ்ச்சி |
| Enterprise | — | தொழில்துணிவு |
| Entrepreneur | — | தொழில்முயல்வோன் |
| Equilibrium | — | சமநிலை |
| Equilibrium price | — | சமநிலை விலை |
| Equi-marginal utility | — | சமநிலை இறுதிநிலைப் பயன்பாடு |
| Exchange | — | மாற்று |
| ,, control | — | நாணயமாற்றுக் கட்டுப்பாடு |
| ,, rate | — | நாணயமாற்று வீதம் |

## F

Factors of production — உற்பத்திக் கர்த்தாக்கள்
Fertility — கருவளம்
Fiduciary note issue — நப்பிக்கை வெளியீடு
Finished product — முடிவுப் பண்டம்
Firm — நிறுவனம்
,, optimum — உத்தம அளவு நிறுவனம்
Fixed capital — நிலைமுதல்
Free goods — இலவசப் பொருள்கள்
Full employment — வேலைநிறைவு

## G

Gold standard — பொன் திட்டம்
Goods — பொருள்கள்
Gross income — மொத்த வருமானம்
,, interest — மொத்த வட்டி
,, profit — மொத்த இலாபம்

## H

Hoarding — பதுக்குதல்

## I

Imperfect competition — நிறைகுறைப் போட்டி
Income — வருமானம்
,, money — பணவருமானம்
,, real — மெய்வருமானம்
Increasing returns — வளர்ந்துசெல் விளைவு
Index — குறியீடு
,, numbers — குறியீட்டு எண்கள்
Indiffernce curves — சமநோக்குக் கோடுகள்
Indivisibility — பகுபடாத்தன்மை
Inflation — பணவீக்கம்
Innovation — புத்தாக்கம்
Input — உள்ளிடுகை
Interest — வட்டி
International trade — பன்னாட்டு வாணிபம்
Iron Law of Wages — கூலிநிர்ணய இரும்பு விதி

## J

Joint costs — கூட்டுச் செலவுகள்
,, demand — கூட்டுத் தேவை
,, products — கூட்டுப் பண்டங்கள்
,, supply — கூட்டு அளிப்பு

## L

Labour — உழைப்பு
Labour theory of value — உழைப்பளவை மதிப்புக் கோட்பாடு
Laissez faire — தலையிடாக் கொள்கை
Large-scale industry — பேரளவுத் தொழில்
Law of diminishing marginal utility — குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி
Law of diminishing returns — குறைந்துசெல் விளைவு விதி
Law of diminishing utility — குறைந்துசெல் பயன்பாட்டு விதி
Liquidity — நீர்மை
Localisation — தொழிற் செறிவு
Luxuries — போகப்பொருள்கள்

## M

Macro-Economics — பேரியல் பொருளாதாரம்
Margin — எச்சநிலை, இறுதிநிலை
Market — சந்தை
,, imperfact — நிறைவற்ற சந்தை
,, perfect — நிறைவுள்ள சந்தை
,, price — சந்தை விலை
Mercantalism — மெர்க்கன்டலிசம்
Micro-Economics — நுண்ணியல் பொருளாதாரம்
Mixed Economy — கலப்புப் பொருளாதாரம்
Mobility — பெயர்ச்சி
Mobility of labour — தொழிலாளர் இடப்பெயர்ச்சி
Money — பணம்
Monopoly — சர்வாதீனம்
,, price — சர்வாதீன விலை
Monopolistic competition — சர்வாதீனப் போட்டி

## N

National income — நாட்டு வருமானம்
Nominal income — பெயரளவு வருமானம்
Normal price — இயல்பான விலை
,, profit — இயல்பான இலாபம்

## O

Optimum — உத்தமம்
,, population — உத்தம மக்கள்தொகை
,, size — உத்தம அளவு
,, firm — உத்தம அளவு நிறுவனம்
Ouput — வெளிப்பாடு

## P

Partnership — கூட்டு வாணிபம், கூட்டாளி முறை
Payment — செலுத்து
Percapita income — தலாவருமானம், தலைவீத வருமானம்
Population — மக்கள்தொகை
Premium — மதிப்பெச்சம்
Productivity — உற்பத்தித்திறன்
Profit — இலாபம்
Protection — தொழிற்காப்பு
Purchasing power — வாங்கும் சக்தி, வாங்கும் திறன்

## Q

Quantity theory of money — பண அளவுக் கோட்பாடு

## R

Rate — வீதம்
Real cost — உண்மைச் செலவு
Real value — உண்மை மதிப்பு
Real wage — உண்மைக் கூலி
Relative value — தராதர மதிப்பு
Rent — வாரம்
Risk — இடர்
Risk-taking — ஆபத்து ஏற்பு

## S

Saving — சேமிப்பு
Selling cost — விற்பனைச் செலவு
Small-scale production — சிற்றளவு உற்பத்தி
Specialisation — சிறப்புத் தேர்ச்சி
Speculation — ஊகவாணிபம்
Standard of life — வாழ்க்கைத் தரம்
Subsistence theory of wages — பராமரிப்புக் கூலிக் கோட்பாடு
Substitute — பதிலீடு, பதிலி
Substitution, law of — பதிலீட்டு விதி
Supply — அளிப்பு

## T

Tariff — சுங்க வரி
Tax, direct — நேர்முக வரி
Time preference — கால விருப்பெச்சம்

## U

Unemployment — வேலையின்மை
Unit — அலகு
Utility — பயன்பாடு
,, marginal — இறுதிநிலைப் பயன்பாடு

## V

Value — மதிப்பு
Variable cost — மாறுஞ் செலவு
Velocity of circulation — சுழல் வேகம்

## W

Wages — கூலிகள்
Wage fund theory — கூலி நிதிக் கோட்பாடு
Wants — விருப்பங்கள்
Wealth — செல்வம்
Weighted index number — நிறையிட்ட குறியீட்டெண்கள்

# கலைச்சொற்கள்

(தமிழ் — ஆங்கிலம்)

### அ

| | | |
|---|---|---|
| அங்காடி, சந்தை | — | Market |
| அயல்நாட்டுச் செலுத்துநிலை | — | Balance of payments |
| அயல்நாட்டு வாணிபநிலை | — | Balance of Trade |
| அலகு | — | Unit |
| அளிப்பு | — | Supply |

### இ

| | | |
|---|---|---|
| இடர் தாங்குகை | — | Risk-bearing |
| இயல்பான இலாபம் | — | Normal profit |
| இயல்பான விலை | — | Normal price |
| இலவசப் பொருள்கள் | — | Free goods |
| இலாபம் | — | Profit |
| இறுதிநிலை, எச்சநிலை | — | Margin |
| இறுதிநிலை ஆக்கப்பாடு | — | Marginal productivity |
| இறுதிநிலைப் பயன்பாடு | — | Marginal utility |

### உ

| | | |
|---|---|---|
| உத்தமம் | — | Optimum |
| உத்தம மக்கள்தொகை | — | Optimum population |
| உழைப்பின் பகுப்பு, வேலைப் பகுப்பு | — | Division of labour |
| உழைப்பு | — | Labour |
| உழைப்பளவை மதிப்புக் கோட்பாடு | — | Labour theory of value |
| உற்பத்திக் கர்த்தாக்கள் | — | Factors of production |

உற்பத்திச் செலவு — Cost of production
உற்பத்தித்திறன் — Productivity
உறுதித் தேவை — Effective demand

ஊ

ஊகவாணிபம் — Speculation

எ

எச்சநிலை — Margin

ஒ

ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு — Theory of comparitive cost

க

கலப்புப் பொருளாதாரம் — Mixed Economy
காப்பு நிதிகள் — Reserves
கால விருப்பெச்சம் — Time preference
கிளாசிகல் பொருளாதாரக் கருத்தினர் அல்லது பூர்வ பொருளாதார அறிஞர்கள் — Classical Economists
குறியீடு — Index
குறியீட்டு எண்கள் — Index numbers
குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதி — Law of diminishing utility
குறைந்துசெல் பயன்பாடு — Diminishing utility
குறைந்துசெல் விளைவு — Diminishing returns
குறைந்துசெல் விளைவு விதி — Law of diminishing returns
கூட்டாளி அமைப்புகள் — Partnerships
கூட்டு அளிப்பு — Joint supply
கூட்டுச் செலவுகள் — Joint costs
கூட்டுத் தேவை — Joint demand
கூலி — Wage
கூலி நிதிக் கோட்பாடு — Wage fund theory
கூலிநிர்ணய இரும்பு விதி — Iron Law of Wages

ச

சதவீதம் — Percentage
சம இறுதிநிலைப் பயன்பாடு — Equi-marginal utility
சமநிலை — Equilibrium

சமநிலைக் கேடு — Disequilibrium
சமநிலை விலை — Equilibrium price
சமநோக்குக் கோடுகள் — Indifference curves
சர்வாதீனம் — Monopoly
சர்வாதீனப் போட்டி — Monopolistic competition
சர்வாதீன விலை — Monopoly price
சராசரிச் செலவு — Average cost
சிறப்புத் தேர்ச்சி — Specialisation
சுங்க வரி — Tariff
சுழல் முதல் — Circulating capital
செக்குகள் — Cheques
செல்வம் — Wealth
சேமிப்பு — Savings

### த

தலாவருமானம், தலைவீத வருமானம் — Per capita income
தலையிடாக் கொள்கை — Leissez faire
தராதரமதிப்பு — Relative value
துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு — Abstinance theory
துய்ப்போன், நுகர்வோன் — Consumer
தூய போட்டி — Pure competition
தேவை — Demand
தேவைப் பட்டியல் — Demand schedule
தேவை வளைகோடு — Demand curve
தேவை விதி — Law of demand
தொழில் இடஅமைப்பு — Location of industry
தொழிற் செறிவு — Localisation
தொழிற் காப்பு — Protection
தொழில்முயல்வோன் — Entrepreneur
தொழிலாளர் இடப்பெயர்ச்சி — Mobility of labour

### ந

நம்பிக்கை வெளியீடு — Fiduciary note issue
நாட்டு வருமானம் — National income
நாணயங்கள் — Coins
நாணயத் திட்ட முறை — Monetary system
நாணய மாற்றுக் கட்டுப்பாடு — Exchange control
நாணய மாற்றுவீதம் — Exchange rate

நிறுவனம் — Firm
நிறைவுப் போட்டி — Perfect competition
நிறையிட்ட குறியீட்டு எண்கள் — Weighted index numbers
நீர்மை — Liquidity
நுகர்வு, துய்ப்பு — Consumption
நுகர்வோர் எச்சப்பாடு — Consumers' surplus
நெகிழ்ச்சி — Elasticity
நேர்முக வரி — Direct tax
நுண்ணியல் பொருளாதாரம் — Micro-Economics

ப

பண்டம் — Commodity
பண்டமாற்று — Barter
பணம் — Money
பண அளவுக் கோட்பாடு — Quantity theory of money
பணவீக்கம் — Inflation
பதிலீடு — Substitution
பதிலீட்டு விதி — Law of substitution
பயன்பாடு — Utility
பராமரிப்புக் கூலிக் கோட்பாடு — Subsistence theory of wages
பன்னாட்டு வாணிபம் — International trade,
பாங்கு நோட்டுகள் — Bank notes
பாங்குப் பணம் — Bank money
பாங்கு வைப்பு — Bank deposit
புறச்சிக்கனங்கள் — External economies
பெயரளவு வருமானம் — Nominal income
பேரளவுத் தொழில் — Large-scale industry
பொருளாதாரக் கோட்பாடு — Economic principle
பொருளாதார வீக்கம் — Economic boom
பொன் திட்டம் — Gold standard
போகப்பொருள்கள் — Luxuries
போட்டி — competition
போட்டி, நிறைவு — Perfect competition

ம

மக்கள்தொகை — Population
மதிப்பு — Value
மதிப்புக் கோட்பாடு — Theory of value

| | |
|---|---|
| மந்தம் | — Depression |
| மாறாச் செலவு | — Constant cost |
| மாறா விளைவு விதி | — Law of constant returns |
| மாறுஞ் செலவு | — Variable cost |
| முதல், மூலதனம் | — Capital |
| முதலாக்கம் | — Capital formation |
| முதலாளித்துவம் | — Capitalism |
| முதலீட்டின் இறுதிநிலைத் திறன் | — Marginal efficiency of capital |
| முதற் பொருள்கள் | — Capital goods |
| மெய் வருமானம் | — Real income |
| மெர்கன்டலிசம் | — Mercantalism |
| மொத்த இலாபம் | — Gross profit |
| மொத்த வட்டி | — ,, interest |

### வ

| | |
|---|---|
| வட்டி | — Interest |
| வணிக பாங்குகள் | — Commercial Banks |
| வரவு-செலவுத் திட்டம் | — Budget |
| வளர்ந்துசெல் விளைவு | — Increasing returns |
| வளைகோடு | — Curve |
| வாங்கும் சக்தி, வாங்குந் திறன் | — Purchasing power |
| வாங்கல் சர்வாதீனம் | — Monopsony |
| வாரம் | — Rent |
| வாரமற்ற நிலம் | — No rent land |
| வாழ்க்கைத் தரம் | — Standard of life |
| வாழ்க்கைச் செலவு | — Cost of living |
| விருப்பங்கள் | — Wants |
| வீதம் | — Rate |
| வேட்கை | — Desire |
| வேலைப் பகுப்பு முறை | — Division of labour |
| வேலைநிறைவு | — Full employment |
| வேலையின்மை | — Unemployment |

# தமிழ் வெளியீட்டுக் கழகம்

**சென்னை-9**

## 1965வரை வெளியிட்டுள்ள நூல்கள்

**பொருளாதாரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| *1. | பொருளாதாரம் - II | ... சி. வேலாயுதம் | ... | 9 00 |
| 2. | புதுமைப் பொருளாதாரக் கூறுகள் | ... திருமதி ஆர். தாமரஜாட்சி | ... | 12 00 |
| 3. | பொருளாதாரம் ஓர் அறிமுகம் - I | ... தி. சி. மோகன் | ... | 12 00 |
| 4. | பொருளாதாரம் ஓர் அறிமுகம் - II | ... எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன் | ... | 10 75 |
| 5. | பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு | ... க. முத்தையன் | ... | 7 00 |
| *6. | பணவியலும் பாங்கியலும் - II | ... சி. வேலாயுதம் | ... | 11 50 |
| 7. | நவீன பாங்கு இயல் | ... க. வெற்றிவேல் | ... | 7 50 |
| *8. | இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும் | ... பி. வி. ஸ்ரீநிவாசன் | ... | 5 50 |
| *9. | அரசாங்க நிதியியல் | ... அர. சேஷாசலம் | ... | 4 75 |
| 10. | இந்தியப் பொருளியல் - I | ... எம். பாலசுப்பிரமணியன் | ... | 10 00 |
| 11. | இந்தியப் பொருளியல் - II | ... எம். லூர்துநாதன் | ... | 4 25 |
| 12. | நமது பொருளாதாரப் பிரச்சினை - I | ... சி. சுந்தரராஜன் | ... | 10 75 |
| 13. | நமது பொருளாதாரப் பிரச்சினை - II | ... எஸ். குழந்தைநாதன் | ... | 10 50 |
| 14. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு - I | ... கீ. சீ. இராமசாமி | ... | 6 00 |
| 15. | இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு - II | ... ,, | ... | 6 00 |

*மூல நூல் (Original Book)

| | | | |
|---|---|---|---|
| 16. | அமெரிக்காவின் நவீன பொருளாதார் வளர்ச்சி... | தி. சி. மோகன் | ... 5 00 |
| 17. | அமெரிக்கப் பொருளாதார வரலாறு - I ... | மு. க. சுப்பிரமணியம் | ... 11 00 |
| 18. | அரசாங்க நிதியியலின் பொருளாதாரம் - I ... | மா. குமாரசாமி | ... 10 00 |
| 19. | இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I ... | தே. வேலப்பன் | ... 10 00 |
| 20. | பணம் - சிறு விளக்கம் ... | கோ. இராதாகிருஷ்ணன் | ... 10 00 |
| *21. | வணிக இயலின் தத்துவங்கள் ... | கு. ஆளுடையபிள்ளை | ... 9 50 |
| 22. | பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி... | சு. ரா. கறுப்பண்ணன் | ... 11 00 |

**வரலாறு**

| | | | |
|---|---|---|---|
| *23. | பிரிட்டன் வரலாறு - I ... | கி. ர. அனுமந்தன் | ... 10 00 |
| *24. | பிரிட்டன் வரலாறு - II ... | ,, | ... 9 75 |
| *25. | ஐரோப்பிய வரலாறு - I ... | டி. வி. சொக்கப்பா | ... 4 50 |
| 26. | ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம் ... | வை. விருத்தகிரீசன் | ... 15 00 |
| 27. | இங்கிலாந்து வரலாறு - I ... | இரா. அண்ணாமலை | ... 13 00 |
| 28. | இங்கிலாந்து வரலாறு - II ... | பா. மாணிக்கவேலு | ... 13 00 |
| 29. | இங்கிலாந்தின் வரலாறு - I ... | க. த திருநாவுக்கரசு | ... 15 00 |
| 30. | இந்தியாவின் சிறப்பு வரலாறு - I ... | தி. வெ. குப்புசாமி | ... 7 50 |

**அரசியல்**

| | | | |
|---|---|---|---|
| *31. | இந்திய அரசியலமைப்பு ... | வீ. கண்ணையா | ... 4 75 |
| 32. | அரசியலுக்கு ஓர் அறிமுகம் ... | டி. செல்லப்பா | ... 8 50 |
| 33. | தற்கால அரசியல் அமைப்புகள் ... | மோ. வள்ளுவன் கிளாரன்சு | ... 8 50 |
| 34. | பன்னுட்டு அரசியல் - I ... | திருமதி நூர்ஜஹான்பாவா | ... 16 00 |
| 35. | பொதுத்துறை ஆட்சி இயல் - I ... | வீ. கண்ணையா | ... 9 00 |
| 36. | பொதுத்துறை ஆட்சி இயல் - II ... | அ. ஜெகதீசன் | ... 7 25 |

| | | | |
|---|---|---|---|
| **உளவியல்** | | | |
| 37. | குழந்தை உளவியல் - I | கி. ர. அப்புள்ளாச்சாரி | 8 00 |
| 38. | குழந்தை உளவியல் - II | ,, | 7 00 |
| 39. | உட்கவர் மனம் | சி. ந. வைத்தீஸ்வரன் | 7 00 |
| 40. | இளையோர் உளவியல் - I | தி. இரா. அரங்கராசன் | 12 00 |
| 41. | இளையோர் உளவியல் - II | ,, | 9 00 |
| 42. | சமூக உளவியல் | என். வேதமணி மானுவேல் | 9 25 |
| 43. | பிறழ்நிலை உளவியல் | அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ் | 11 00 |
| 44. | பித்தரின் உள்ளம் | ,, | 3 00 |
| **தத்துவம்** | | | |
| 45. | இந்து சமயத் தத்துவம் | ஞா. ராஜாபகதூர் | 5 50 |
| **அறவியல்** | | | |
| 46. | அறவியல் - ஓர் அறிமுகம் | கோ, மோ. காந்தி | 8 50 |
| **அளவையியல்** | | | |
| 47. | அளவை இயல் - தொடக்க நூல் | கி. ர. அப்புள்ளாச்சாரி | 2 50 |
| **மானிடவியல்** | | | |
| *48. | மானிடவியல் | ம. சு. கோபாலகிருஷ்ணன் | 4 75 |
| 49. | பண்பாட்டுக் கோலங்கள் | கி. பூ. சுப்பிரமணியன் | 5 50 |
| **சமூகவியல்** | | | |
| 50. | சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் | ஜெ. நாராயணன் | 10 00 |
| **புவியியல்** | | | |
| *51. | ஆசியா - I | கொ. சேஷ. நரசிம்மன் | 9 50 |
| *52. | ஆசியா - II | ,, | 8 75 |

*மூல நூல் (Original Book)

*53. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல் ... ஏ. எஸ். நாராயணன் ... 8 50
*54. வட அமெரிக்கா ... குமாரி இரா. அலமேலு ... 8 25
*55. தென் கண்டங்கள் - ஆஸ்திரேலியா ... திருமதி எச். நியூமன் ... 4 00
*56. புவிப்புறவியல் - II ... நா. அனந்தபத்மநாபன் ... 6 00
*57. செய்முறைப் புவியியல் ... சு. ஜெயச்சந்திரன் ... 9 00
*58. மக்கட் பரப்பியல் ... வி. எஸ். அனந்தபத்மநாபன் ... 6 25
*59. சமுத்திரவியல் ... கோ. இராமசுவாமி ... 6 50
60. காலநிலை இயல் - I ... கொ. சேஷ. நரசிம்மன் ... 10 00
61. வளியியலுக்கு ஓர் அறிமுகம் ... கோ. இராமசாமி ... 11 00
*62. புவி அமைப்பு இயல் ... சி. விசுவநாதன் ... 4 75

**புள்ளியியல்**

*63. புள்ளியியல் - அறிமுகம் ... சு. வைத்தியநாதன் ... 10 00
64. புள்ளியியல் முறைகள் - I ... கோ. சண்முகசுந்தரம் ... 10 00
65. நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம் ... தி. வி. லட்சுமிநரசிம்மன் ... 6 50

**விலங்கியல்**

*66. விலங்கியல் ... பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன் ... 12 00

**பௌதிகவியல்**

67. ஒளி நூல் ... ச. சம்பத்து ... 10 00

**பொது நூல்கள்**

68. மகாத்மா காந்தி ... சரஸ்வதி தங்கையன் ... 3 25
69. இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை ... எஸ். இலட்சுமி ... 3 50
70. விவசாயப் புரட்சி ... வி. கார்த்திகேயன் ... 8 00
71. சேமக் கை-நூல் ... ஆ. சுப்பிரமணியன் ... 2 50
*72. நீரிழிவு - க்ஷயரோகம் ... ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன் ... 2 50

*மூல நூல் (Original Book)

## ...ப் புதிய வெளியீடுகள், 1966

I — ஜே. பி. ப்யூரி

— பிளமனட்ஸ்

ர்

— லியனர்ட் டீ. ஒயிட்

— ஃபிரெடெரிக் பென்ஹாம்

— ஆர். ரங்காச்சாரி

— ஆர். இராமானுஜாச்சாரி

— ஆர். எஸ். தேசிகன்

— டி. எம். பி. மஹாதேவன்

— டாக்டர் எம். அறம்

— எம். என். பத்மநாபன்

— எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்

— ஜி. கிருஷ்ணமூர்த்தி

— டி.கே. மாணிக்கவாசகம் பிள்ளை

— தி. கோவிந்தராசன்

— டி.கே. மாணிக்கவாசகம் பிள்ளை

— டாக்டர் எம். ஏ. தங்கராஜ்

— டாக்டர் பி. திருஞானசம்பந்தம்

— பெ. நா. அப்புசாமி

— பெ. மா. அண்ணாமலை

— டாக்டர் சி. சீனிவாசன்

— ஏ. கப்ளான்

— சு. சுந்தரம்

— ஆர். எஸ். தேஷ்பாண்டே

— எம். சண்முகசுப்பிரமணியம்

— கு. பெரியசுவாமி

— தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்

— எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

...ூல்களும் ஆக 42 நூல்கள்